உ

சிவமயம்

"மக்களது தொண்டு மகாதேவன் தொண்டுடனே
மிக்கசெய்ய வேட்பாம் அருள்."

— குறள்நானூறு



# இராசநாயக பிரபந்தம்

இது

வயாவிளான் சட்டநூலறிஞரும் சமாதான நீதிபதியும் ஆகிய

**திரு. வல்லிபுரம் இராசநாயகம் அவர்கள்**

காலத்துக்குக் காலம் வெளியிட்டுள்ள நானாவித கட்டுரைகளையும்,
பல பொதுநலப் பாக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

வயாவிளான்-பலாலி

ஸ்ரீ தம்பையா தருமப்பணியினரினதும்

வயாவிளான்-பலாலி

கூத்தபிரான் அறங்காவல் மன்றத்தாரினதும்

கூட்டு வெளியீடு

1982

University of Jaffna
954.93
IRA
201259(S; Main)


AR
954.93
IRA

உ

சிவமயம்

'' மக்களது தொண்டு மகாதேவன் தொண்டுடனே
மிக்கசெய்ய வேட்பாம் அருள். ''

— குறள்நானூறு



UNIVERSITY OF JAFFNA
AR
S
LIBRARY

# இராசநாயக பிரபந்தம்

STACKS

இது
வயாவிளான் சட்டநூலறிஞரும் சமாதான நீதிபதியும் ஆகிய

**திரு. வல்லிபுரம் இராசநாயகம் அவர்கள்**

காலத்துக்குக் காலம் வெளியிட்டுள்ள நானாவித கட்டுரைகளையும்,
பல பொதுநலப் பாக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**வயாவிளான்-பலாலி**

ஸ்ரீ தம்பையா தருமப்பணியினரினதும்

**வயாவிளான்-பலாலி**

கூத்தபிரான் அறங்காவல் மன்றத்தாரினதும்

**கூட்டு வெளியீடு**

201259

**1982**

201259
ARCHIVES
University of Jaffna
201259
Library

தந்தையார்,

திரு. நீலப்பிள்ளை வல்லிபுரம் அவர்களுக்கு
நன்றியறிதலோடு செய்யப்படும்

# சமர்ப்பணம்

நேரிசை வெண்பா

இந்துமதம் ஆங்கிலம் (இ)லத்தீன் கணிதவகை
செந்தமிழ் விஞ்ஞானம் கற்கவைத்து — முந்தெம்
தமிழ்மொழியைக் கற்கநன்கு தூண்டுதந்தை யார்க்குச்
சமர்ப்பணம் செய்கிறேனிந் நூல்.

—வ. இராசநாயகம்

ARCHIVES

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
**பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள்**
**வழங்கிய**

# முன்னுரை

செய்யுட்களைத் தொகுத்து நூலாக வெளியிடும் வழக்கம் தமிழ் மொழியிலே உண்டு. அதுபோல் உரைநடையிலான கட்டு ரைகள் பலவற்றைத் தொகுத்துத் தனியான நூலாக வெளியிடும் வழக்கமும் தமிழிலேயுண்டு. திரு. வ. இராசநாயகம் அவர்க ளுடைய இந்நூல் இவற்றினின்று வேறுகிப் புதுமையான வடிவ முடையதாயுள்ளது. இந்நூலிலே பல்வேறு பொருளிலே அமைந்த செய்யுட்களும், கட்டுரைகளும், அறிக்கைகளும் இடம் பெற்றுள்ளன. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையை அறியாதார் யாருமிலர். அத்தகைய சிறப்புடையவர் மரபிலே வந்தவர் இந் நூலாசிரியர். ஆசுகவியிடம் காணப்பட்ட புலமை, விவாதச் சிறப்பு, வரலாற்றுணர்வு, தன்னுட்டுணர்வு ஆகியனவெல்லாம் இவ்வாசிரியரிடமும் செறிவுற்றுள்ளன. இந்நூலிலுள்ள விடயங் களைப் படிப்பவர் இவ்வுண்மையினை உணர்வர்.

இந் நூலிலே காணப்படும் செய்யுட்களை முதற்கண் நோக்கு வாம். தமிழிலே 'கலம்பகம்' என்றெரு இலக்கிய வடிவம் உண்டு. பலவகையான தமிழ்ச் செய்யுள் வடிவங்களாலே ஆயது இவ்விலக் கியம். இந்நூலிலுள்ள செய்யுட்களை நோக்குமிடத்துக் கலம்பக இலக்கிய வடிவமே நினைவுக்கு வருகின்றது. ஆசிரியப்பா, நேரிசை வெண்பா, குறள்வெண்பா, கலிவெண்பா, பலசீர் ஆசிரிய விருத் தங்கள், கலிவிருத்தம், கலித்துறை, கட்டளைக் கலித்துறை முத லாய பல செய்யுள் வடிவங்களாலான பாக்கள் இந்நூலிலே இடம்பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்துத் தொடக்கம் கண்டனம் வரையிலான விடயங்கள் பாடற் பொருள்களாயமைந்துள்ளன. கடவுள் வாழ்த்தினையும் உலகியலொடு நன்கு தொடர்புறுத்தி ஆசிரியர் பாடுகிறுர்.

சற்றே அசண்டைத் தனமாகத்
    தந்தை இருந்த போதுந்தான்
பெற்ற பிள்ளை வருந்தாமற்
    பேணி வளர்க்குந் தாயவள்போல்
முற்றும் எம்மைக் காத்தருளும்
    முத்து மாரி என்னுமுமை
உற்ற காந்தன் நல்வரவால்
    உள்ளம் பூத்தாள் ஒன்றுளள்,

UNIVERSITY OF JAFFNA LIBRARY
STACKS

'தென்பலவைக் கூத்தபிரானைத் தெரியாதார்க்கு அறிமுகம் செய்தல்' என்னும் பகுதியிலுள்ள மேற்படி பாடலை உதாரணமாகக் காட்டலாம். ஓர் உலகியற் தாயைக் காட்டி முத்துமாரியின் அருளைப் புலப்படுத்துகின்றார் ஆசிரியர். எங்கள் நாட்டின் பலதரப்பட்ட பிரமுகர்களைப் பற்றியெல்லாம் இயற்றப்பட்டுள்ள பாக்கள் இந் நூலிலே காணப்படுகின்றன. பழைய பா வடிவங்களை உபயோகித்த போதிலும் இன்றைய நடைமுறைப் பேச்சோசையும், சொற்களும் இடம்பெறுகின்ற காரணத்தாலே, அவை இலகுவான பாக்களாக அமைந்து விடுகின்றன. ஆசிரியரின் பலதரப்பட்ட ஈடுபாட்டினை யும் உணர்வுகளையும் இப்பாடல்கள் மூலம் உணரமுடிகின்றது. தம் மனத்திலே தோன்றும் மகிழ்ச்சி, கண்டிப்பு, சந்தேகம், வியப்பு, துக்கம் ஆகியனவற்றையெல்லாம் ஒளிக்காது, பாட்டின் மூலம் புலப்படுத்திவிடுகின்றார்.

உரைநடையிலே அமைந்த பகுதிகளும் பல்வேறு தரத்தன; முகவுரைகள் சில; விண்ணப்பங்கள் சில; பகிரங்கக்கடிதங்கள் சில; கட்டுரைகள் சில. ஆசிரியர் தான் பொழிப்புரை எழுதி வெளி யிட்ட "திருவெம்பாவையும் ; திருப்பள்ளியெழுச்சியும்" என் னும் பிரசுரத்துக்கு வழங்கிய முகவுரை முதலிலே இடம் பெறு கின்றது. இப்பாசுரங்களின் சிறப்புக்களைக் கூறி, இவற்றின் பொருளை இலகுவான முறையிலே எழுதவேண்டிய அவசியத்தினை யும் ஆசிரியர் இம்முகவுரையிலே வற்புறுத்தியுள்ளார். ஆசிரிய ருடைய சமூக, சமய, அரசியல் ஈடுபாடுகளை உரைநடைப் பகுதிகள் நன்கு வெளிப்படுத்துகின்றன. ஆலயப்பிரவேசம் பற்றிய கட்டு ரைப் பகுதிகள் ஆசிரியரின் சமூக, சமய தீவிரத்தை நன்கு உணர்த்துகின்றன. ஆசிரியருடைய நாட்டுப்பற்றும் இனப்பற் றும் பல கட்டுரைகள் வாயிலாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன. "தமிழினம் அழிந்து ஒழியாது நன்னிலை அடையவேண்டுமாயின் ......" என்னும் பகிரங்கக் கடிதம் நாம் சிந்திப்பதற்கு நல்ல பல கருத்துக்களைக் கூறுகின்றன. யாழ்ப்பாண வளாகம் பற்றியும் கூறி யுள்ளார்.

> "இப்போதுள்ள இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத் தைத் தமிழ் வளாகமாக்கி, சகல கல்வித் துறைகளையும் இவ் வளாகத்திலும், கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட இருக்கும் புதிய வளாகத்திலும் உண்டுபண்ணுதல்."

என்னும் பகுதியில் யாழ்ப்பாண வளாகத்தில் சகல கல்வித்துறை களும் அமையவேண்டு மென்னும் ஆசிரியருடைய நியாயமான கோரிக்கையும் ஆவலும் நிறைவேற வேண்டுமென்பதே எம் முடைய ஆசையுமாகும்.

ஆசிரியருடைய சட்ட அறிவினைப் பிரதிபலிப்பனவாகப் பல உரைநடைப் பகுதிகள் அமைகின்றன. "தேச வழமைச் சட்டத்தில்

STACKS

சில திருத்தங்கள்'' என்னுங் கட்டுரை ஓர் உதாரணம். ''தமிழ் நெடுங்கணக்கில் சில திருத்தங்களும் நீக்கங்களும்'' என்பது போன்ற உரைநடைப் பகுதிகள் ஆசிரியருடைய தமிழ்மொழி அறிவினைப் புலப்படுத்துகின்றன.

பலதுறை சார்ந்த மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்நூல் பயன்படத்தக்கது. வரலாறு, அரசியல், சமூகம், சமயம், சட்டம், இலக்கணம் பற்றிய பலதுறை சார்ந்த விடயங்கள் இந் நூலிலே இடம்பெற்றுள்ளன. தமிழுலகம் இந்நூலை வரவேற்று ஆசிரியருக்கு ஊக்கத்தினை வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி **பேராசிரியர் சு. வித்தியானந்தன்**
*6-4-1982*

---

முன்னாள் மோட்டோர்ப் போக்குவரத்து ஆணையாளரும்
பின்னாள் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் ஆகிய
**திரு. பொ. சங்கரப்பிள்ளை, M. Sc. அவர்கள் வழங்கிய**

# அணிந்துரை

திருவாளர் வ. இராஜநாயகம் அவர்கள் என்னுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிற் படித்தவர். தமிழ்ப்புலமையிலும் கவித்திறனிலும் சிறந்து விளங்கிய குடும்பத்திற் பிறந்தவர். (கல்லடி வேலுப்பிள்ளையை அறியாதவர் யாழ்ப்பாணத்திலில்லை.) மாணவனாக இருந்த காலத்திலேயே சைவப்பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றும் சமூகத் தொண்டுகளில் ஆர்வமும் உடையவராக இருந்தார். இளம்வயதிலேயே சமூக, சமயத் தொண்டுகளில் ஈடுபட்டிருந்தார். இப்பற்றுக்கள் வளர்ந்து, முதிர்ந்து இன்று இந் நூலாக வடிவெடுத்திருக்கின்றன.

இந்நூலிற் கட்டுரைகளும் பாக்களும் உள. திருவாளர் இராஜநாயகத்தின் கவித்திறனைப்பற்றிக் கூற எனக்குத் தகுதியில்லை. எனினும், அவருடைய பாடல்கள் தோத்திரங்களாகத் தேவார திருவாசக அமைப்பில் இருப்பதனால் அவற்றைப் பல முறை படித்து இன்புற்றேன். திருவாளர் இராஜநாயகத்தின் பக்தியையும், சைவப்புலமையையும் இப்பாக்கள் காட்டுகின்றன.

நூல் முழுவதிலுந் தமிழ் மணம் வீசுகிறது—எங்குந் தமிழ்; எல்லாந் தமிழ்; செந்தமிழைக் காண்கிறோம்; அன்புத் தமிழைக் காண்கிறோம்; இன்பத் தமிழைக் காண்கிறோம்; பக்தித் தமிழைக் காண்கிறோம்; வீரத்தமிழைக் காண்கிறோம்; தமிழ்அன்னையைக் காண்கிறோம்.

" இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையவர்தம்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் ''

என்பது தமிழ்விடு தூது. நாம் தமிழர்; எமது மொழி தமிழ். தமிழ் வாழ்ந்தாற்ருன் நாம் வாழலாம். நாம் வாழ்ந்தாற்ருன் தமிழ் வாழும். இந்த உண்மையை நாம் உணர வேண்டும். பழமையைப் பேணவேண்டும். அதே வேளையிற் காலத்துக்கேற்ற புதுமைகளையும் வரவேற்க வேண்டும். திருவாளர் இராஜநாயகம் குறிப்பிடும் தமிழ்மொழி இலக்கண, நெடுங்கணக்குச் சீர்திருத்தங்கள் யாவும் கற்கத்தக்கவையாகும்.

பெரும்பாலான பாக்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் எமது சமுதாயத்துக்கும் தொண்டாற்றி மறைந்த தலைவர்களைப்பற்றியவைகளாகும். இவர்களுடைய சேவைகளை நண்பர் எமக்கு ஞாபகப்படுத்துகிருர்.

திருவாளர் இராஜநாயகம் அரசியல்வாதியல்லராயினும், அரசியல் ஞானியாவர். இவருடைய இலட்சியம் சாதி மத பேதங்களற்றதும், அன்பு சமத்துவம் சகோதரத்துவம் அடிப்படையானதுமான சமதர்மச் சமுதாயமாகும். இன்று இந்நாட்டில் தமிழராகிய நாம் அடிமைகளாகிவிட்டோம். எமக்கு இழைக்கப்படும் தீங்குகளும் அநீதிகளும் பல. தமிழையுஞ் சைவத்தையும் இந்நாட்டில் அழிப்பதற்குச் சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் மறைமுகமாக நடவடிக்கைகள் எடுக்கிருர்கள். அதிகாரம் அவர்கள் கையில்; வானெலி தினசரிகள் அவர்கள் கையில். எனினும், உண்மையை நெடுங்காலம் மறைக்க முடியாது. தமிழ் மக்களின் அடிமைநிலையைக் கண்டு திருவாளர் இராஜநாயகம் கண்கலங்குகிருர்; பரிதவிக்கிருர். சிங்களத் தலைவர்களை விளித்துத் துணிவுடன் உரிமைகளைக் கேட்கிருர்; இடித்து நீதியை உரைக்கிருர்.

ஒன்றுக்குப்பின் ஒன்ருக இந்நாட்டில் பதவிக்குவரும் இரண்டு சிங்களக் கட்சிகளும் இன மதத் துவேஷ மரபுக்குழுச் சர்வாதிகார முதலாளித்துவக் கட்சிகளாகும். தர்மம், சனநாயகம், சோஷலிசம் முதலியவைபற்றிய பேச்சுக்கள் போலி நாடகங்களாகும். தங்கள் மக்களையே சுரண்டுவோர் எமக்கு நீதிவழங்கப்போவதில்லை.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பற்றிய ஆசிரியரின் கருத்தை வாசக நேயர்கள் நன்கு படிக்கவேண்டும்.

இந்நூலில் திருவாளர் இராஜநாயகம் பல முக்கிய பிரச்சனைகள் பற்றித் தமது கருத்துக்களைக் கூறுகிருர். தமிழ் மக்கள் யாவரும் இந்நூலைப் படித்துப் பயனடையவேண்டும்; இன்புறவேண்டும்.

இராஜநாயகம் அவர்களின் தொண்டு மேலும் பல காலம் நீடிக்க அம்பாள் திருவருள்புரிவாளாக! புலவன் வாழ்க! அறிஞன் வாழ்க!!

33, உருத்திரவீதி,
கொழும்பு 6

**பொ. சங்கரப்பிள்ளை**

உ

சிவமயம்

# முகவுரை

''யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பது புற நானூறு. இந்த ஆன்ருேர் வாக்கைச் சிரமேற்கொண்டு, தமியேன் சிறுபராயம் தொட்டு இதுகாலவரை கற்ற, கேட்ட, சிந்தித்துத் தெளிந்தவற்றை யெல்லாம் பொதுநலங் கருதி மற்றும் என் உடன் மாந்தர்கள் அறியும் பொருட்டுக் கட்டுரைகளாகவும், கவிகளாக வும், கடிதங்களாகவும் தயாரித்துப் பத்திரிகைகளுக்கும், மற்றும் சஞ்சிகைகட்கும் விடயதானம் செய்தால், சில வெளியிடப்படும்; சில பிரசுரிக்கப்படாது கைவிடப்படும். குறித்த பிரசுர மறுப்புக்கு ஒரோவழி எனது புத்தம் புதிய புரட்சிகரமான கருத்து காரணமா யிருப்ப, பெரும்பாலும் ஆசிரியர்களின் பொதுநல ஆர்வக் குறைவும், பொது மக்கட்கும் அரசாங்கத்துக்கும் அளவுகடந்து அஞ்சும் கோழைத்தனமும், பல கோண அபிப்பிராயங்களையும் வெளியிடவேண்டு மென்னும் பத்திரிகாதர்ம உணர்ச்சியின்மையும் ஏதுவாயிருக்கக் காண்போம். காரணம் எதுவாயினும், மிகவும் சிரமப்பட்டு எழுதிய விடயங்கள் வெளிவராதபோது யான் மன விழுக்காடு அடையினும், திடசித்தம் குன்ருது அவற்றைத் துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு வெளியிடுவதுண்டு.

மேற்கூறிய துண்டுப் பிரசுரங்களை நயந்த புருடோத்தமர்களுள் ஒருவரான எங்கள் நாடாளுமன்ற முன்னுள் கோப்பாய்ப் பிரதிநிதி அமரர் சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் தனிநாட்டு இலட்சியராய் இருந்தபோதிலும், குறித்த பிரசுரங்களை யெல்லாம் ஒருங்கு தொகுத்துப் புத்தக ரூபமாக வெளியிடும்படி புத்திமதி கூறினுர். இது ஒருபுறமிருப்ப, எனது செய்யுட்களை வியந்து பாராட்டிய ஆனைக்கோட்டை நண்பன், திரு. சோ. திருநாவுக்கரசு அவர்களும், இதர சினேகிதர்களும், மற்றும் எனது மருமக்களும், பெருமக்க ளும் எனது செய்யுட்களையெல்லாம் ஒருங்கு சேர்த்துப் பிரசுரிக்க வேண்டுமென நல்லாலோசனை கூறினர். ஆகவே, மேற்சொல்லிய துண்டுப் பிரசுரங்களையும், பாக்களையும் ஒருங்கு தொகுத்து இப் பிரபந்தத்தை வெளியிடுகின்றேன்.

யான் யாத்தவற்றையெல்லாம் அச்சிடுவதாயின் ஏறக்குறைய 500 பக்கம் வ்ரும்; கட்டணம் சுமார் 25,000 ரூபாவாகும். எனவே, திருக்குறளில் இடம்பெருத அரசியற் சுதந்திரம், பொருளாதார சமதர்மம் முதலிய விடயங்களையிட்டு யான் பாடிய ''குறள் நானூறு'' என்பதையும், சமூகத்தில் ஏற்படும் சொத்துப் பிரச்சினை களை வரமுன் காத்தல் வேண்டும் என்னும் கருத்துடன் யான்

எழுதிவைத்திருக்கும் "உறுதிவரைஞர் கைநூல்" என்பதையும் பின்னர் தனிநூல்களாக வெளியிடலாமென எண்ணி, அவற்றை யும், திருமண வாழ்த்துக்கள் போன்ற முக்கியத்துவம் குறைந்த வற்றையும் தவிர்த்துப் பொதுநலத்துக்குரியவற்றை மாத்திரம் வெளியிடுகின்றேன்.

பத்தும் பலவுமாய் இருக்கும் விடயங்களையெல்லாம் பகுதி பகுதியாகப் பிரிப்பதிலும், இந் நூலின் உள்ளுறையைத் தயாரிப் பதிலும் அளவிறந்த வில்லங்கம் உண்டெனினும், நான் மேற் குறித்த விடயங்களைச் சமயப்பகுதி, அரசியற்பகுதி, கல்விப்பகுதி, புலவர்பகுதி, பொதுநலம் போற்றுநர்பகுதி, இனத்தவர்பகுதி, பொதுப்பகுதி என ஓரளவு பிரித்திருப்பினும் சில விடயங்களைப் பொறுத்தவரையில் பகுதி மயக்கம் தவிர்க்கமுடியாததாயிற்று.

சமயப்பகுதியில் தமியேன் பிரதான தெய்வஸ்தலங்களில் பாடிய தோத்திரப் பாக்களை வெளியிடுவதுடன், நம் சைவால யங்களெல்லாம் ஊ ர் ப் பொ து வாக்கப்பட்டு, சனநாயக முறையில் நடாத்தப்பட வேண்டுமெனவும், அரிசனங்களுக் கெல்லாம் திறந்துவிடப்பட வேண்டுமெனவும் கிறிஸ்தசமயத்திற் போல் ஏறக்குறைய ஐந்துவருடம் சமயக் கல்லூரி ஒன்றில் பயிற்றப்பட்டவர்களே கோயில் குருக்கள்மாராக நியமிக்கப்பட வேண்டுமெனவும், அவர்களுக்குச் சம்பளம் மாதமொன்றுக்குச் சுமார் 600 ரூபா வீதம் கொடுக்கப்படவேண்டுமெனவும், தொன்று தொட்டுச் சோடோபசாரத்துடன் செய்யப்பட்டுவரும் பூசையுடன் கிறிஸ்த சமயத்திற்போல பிரசங்கம், கீர்த்தனை, செபம் (கூட்டுத் தியானம்) என்பவற்றைக்கொண்ட பிரமசமாஜ வணக்க முறை யையும் அனுசரிக்கவேண்டுமெனவும், குறித்த பூசையில் வட மொழியில் மாத்திரமன்றி எல்லவர்க்கும் விளங்கும் எமது தாய் மொழியிலும் திருக்கைலாசம், போற்றிவிருத்தம், சிவபுராணம், போற்றித்திருவகவல், திருவெழுகூற்றிருக்கை முதலியனஓதித் தோத் திரம் செய்யப்படவேண்டுமெனவும், இந்திய அரசாங்கத்திடமிருந்து புத்தர்கள் புத்தகாயாவைப் பெற்றதுபோல, இலங்கை அரசாங்கத் திடமிருந்தும் கதிர்காமத்தை இந்துக்கள் பெறமுயலவேண்டுமென வும் நன்குகாட்டி இருப்பதுடன், சமூகத்தாழ்வு கற்பிக்கும் செயல் களைத் தடுக்கும் (Prevention of Social Disabilities Act) சட் டத்தையும் அது சம்பந்தமாக ஏற்பட்டுள்ள வழக்கின் சீமை மேன் முறையீட்டுத் தீர்ப்பையும் நன்கு விபரமாக விளக்கியுள்ளேன்.

அரசியற்பகுதியில் சேர் பொன். இராமநாதன் அவர்களும், சேர் பொன். அருணசலம் அவர்களும் மற்றும் பல தமிழ்ப் பெரி யோர்களும் இலங்கை படிப்படியாக அரசியல் சுதந்திரமடையவும், மற்றும் நானவித வழிகளிலும் நன்கு முன்னேறவும் பெரும் சேவை

செய்துள்ளனரென்றும், பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற உதவிசெய்த தமிழருக்கு மாறுகச் சிங்களர் அச்சுதந்திரத்தைத் துர்ப்பிரயோகம் செய்வரெனத் தமிழர்கள் சிறிதும் எண்ணி நிற்க வில்லையென்றும், அங்ஙனம் அச்சுதந்திரத்தைத் தமிழருக் கெதிராகத் துர்ப்பிரயோகம் செய்தல் பொல்லாத் துரோகமான செயலாகுமென்றும், ஒருமுறையன்றி எழுமுறை சிங்களர், கொள்ளை, கடை, வீடெரிப்பு, கற்பழிப்பு, கொலை முதலிய அக்கிரமங்கள் செய்து தமிழரைப் பெரிதும் துன்புறுத்தியுள்ளனராதலால் போதியளவு மெய்ப்பாதுகாப்பில்லாத தமிழினம் ஒற்றையாட்சியின் கீழ் இருக்க இயலாதென்றும், ஆகவே பிரிந்தும் பிரியாமல் சமாதானமாக வாழச் சமஷ்டியரசு அமைக்கவேண்டுமெனவும், அங்ஙனமன்றி தனித்தமிழ் நாடு கோருவது புத்தியாகாதென்றும், அதனை அமைப்பதும், பின்னர் பாதுகாப்பதும் மிகவும் வில்லங்கமாகுமென்றும், வல்லரசுகளின் கவனத்தை ஈர்த்து நிற்கும் இந்து சமுத்திரத்தில் இலங்கை ஒரு கேந்திரஸ்தானத்தி லிருப்பதினுலும் தன்னைத்தானே பாதுகாக்க இயலாத ஒரு சிறிய தீவாக இருப்பதினுலும் அதனை அமெரிக்கா உருசியா போன்ற வல்லரசுகள் மட்டுமன்றித் தற்பாதுகாப்புக்காக இந்தியா தானும் இலங்கையைக் கைப்பற்றக்கூடுமாதலாலும், இப்போது சமஷ்டி அரசு அமைக்கச் சம்மதிக்காத சிங்களர் வகுப்பு ஒற்றுமை நாடிக் குறித்த சமஷ்டி அரசு அமைக்க விரைவில் இசைவார்கள் என்றும், எனவே நித்தமும் கழுத்தறு சண்டையிலீடுபடாது ஈரினமும் சமாதானமாக வாழச் சமஷ்டி அரசே உகந்ததென்னச் சிங்களப் பொதுமக்களுக்குச் செவ்வனே பிரசாரம் செய்யச் சிங்களத்திலும் தமிழராகிய நாம் ஒரு வாரப் பத்திரிகை நடாத்துதல் அத்தியாவசியமென்றும் எடுத்துக்காட்டியதுடன், சமஷ்டி அரசியலைப்பற்றி நன்கு விளக்கியுள்ளேன். அது மாத்திரமன்றி, மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டத்திற்குச் செய்யவேண்டிய திருத்தங்களையும் எடுத்துக்காட்டியுள்ளேன்.

கல்விப்பகுதியில், தமிழ்பேசும் மக்கள் யாழ்ப்பாண வளாகத்துடன் மட்டக்களப்பு வளாகத்தையும் ஒருங்குசேர்த்து மற்றும் பல கலைகளுடன் மொழி, சமயம், கலாச்சாரம் என்பவற்றை வளர்க்கும்பொருட்டுத் தமிழருக்கெனப் பல்கலைக்கழகமொன்று அமைக்கப்படவேண்டுமென்னும் உண்மையையும், உயர்தரக்கல்வியில் மட்டுமன்றி ஆரம்பக் கல்வியிலும், கல்லூரிக் கல்வியிலும் போதியளவு கவனம் செலுத்தவேண்டுமென்னும் உண்மையையும் நன்கு புலப்படுத்தியுள்ளேன். அது மாத்திரமன்றி,

இலவசக் கல்வி எவ்விதத்திலாயினும் பாதிக்கப்படாது தொடர்ந்திருக்க வேண்டுமென்றும், தரப்படுத்துதல் என்னும் இழிந்தமுறை முற்றுகக் கைவிடப்பட வேண்டுமென்றும்,

இப்போதைய வெள்ளையறிக்கையில் சொல்லப்படும் கொத்தணிப் பாடசாலை மேற்பார்வை முறை நடைமுறையில் சரிவராதென்றும், அமைச்சர் இரியகொல்லை காலத்தில் பொதுநலம் கருதி ஐக்கியதேசியக் கட்சியால் மாகாண ரீதியில் அமைக்கப்பட்ட இளம் பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறக்கப்படவேண்டுமென்றும், விசேட ஆசிரிய கல்லூரிகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் விசேட பயிற்சி அளிக்கப்படுவது போன்று தமிழ் இலக்கண இலக்கியத்துறையிலும் விசேட பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்றும், மேற்படி கல்லூரிகளில் உள்ள பயிற்சிக் காலத்தை மூன்று வருடமாக்கி அங்கிருந்து கற்றுத்தேறி வெளியேறும் விசேட ஆசிரியர்கட்கு விசேட சம்பளம் கொடுபடவேண்டுமென்றும், மகாவித்தியாலயங்களில் உயர்தர மாணவர்கட்கு ஆங்கிலத்தைச் செவ்வனே கற்பிக்க அரசினர் கூடிய சம்பளம் தரலாமெனக் கூறி நல்லாசிரியர்களைப் பல்கலைக்கழகத்தில் பயிற்றவேண்டுமென்றும் கூறியுள்ளேன்.

புலவர்பகுதியில், நவாலி சோமசுந்தரப்புலவர் அவர்கள், வயாவிளான் வரகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள், வருத்தலைவிளான் வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்கள், நல்லூர் சுவாமி ஞனப்பிரகாசர் அவர்கள், நவாலி பண்டிதர் சோ. இளமுருகனார் அவர்கள், நவாலி திரு. சோ. நடராசா அவர்கள், மேலைக்கரம்பன் முதலியார் குல. சபாநாதன் அவர்கள், தெல்லிப்பழை கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள், கொழும்பு திரு. பொ. சங்கரப்பிள்ளை அவர்கள், வண்ணார்பண்ணை கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்கள், தென்மயிலை பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள் என்போரைப் போற்றிப் பாடியுள்ளேன்.

அடுத்தபடியாக, எமது கிராமப்பகுதியில் முன்னே ஊர்நலம் போற்றி உழைத்தவர்களையும், இன்னே உழைக்கின்றவர்களையும் பாராட்டிப் பாடியதுடன், மற்றும் என் நெருங்கிய இனத்தவர்களையும் இதர அன்பர்களையும் பாடியுள்ளேன்.

இறுதியாக, குன்றக்குடி அடிகளைப்பற்றியும், திரு. சி. வேலாயுதபிள்ளை அவர்களைப்பற்றியும், தக்க தகாத விவாகங்களைப் பற்றியும், பொய்க் காதற் தொடர்புகள் பற்றியும், கற்பகதருவாகிய பனையுடன் மற்றும் பயன்தரு விருட்சங்களையும் அபிவிருத்தி செய்தல் பற்றியும், புதிய சுலப திகதி அமைப்பு முறை பற்றியும், தமிழ் நெடுங் கணக்கில் செயற்பால திருத்த நீக்கங்கள் பற்றியும் கட்டுரைகளும், கவிகளும் அமைத்துள்ளேன்.

மேற்கூறியாங்கு பகுதி ரீதியாக வெளியிடப்படுவன மட்டுமன்றி, இறுதி மூன்றுபகுதிகளிலும் இடைக்கிடை அடியேன் இக்காலத் தமிழிலக்கணத்தில் அத்தியாவசியம் இடம்பெற வேண்டிய சில திருத்தங்களை என்னைப்பார்க்கினும் அறிவு வாய்ந்த தமிழ்ப் பேரறிஞர்களின் திவ்விய கரிசனைக்குச் சமர்ப்பித்துள்ளேன்.

மேற்கூறியவற்றை எல்லாம் வாசக நேயர்கள் படிப்பதுடன் மற்றவர்களுக்கும் அக்கருத்துக்களை எடுத்துக் காட்டி நமது நாட்டுக்கும், இனத்துக்கும், மொழிக்கும், சமயத்துக்கும் ஆகவேண்டியவற்றையெல்லாம் செய்யும்வண்ணம் வேண்டுகின்றேன்.

ஈற்றில், இந்நூலுக்கு நல்ல அணியுரைகள் வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், நனி சிறந்த தமிழறிஞரும், இனபிமானியுமாகிய கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்களுக்கும், முன்னாள் மோட்டோர்ப் போக்குவரத்து ஆணையாளரும், பின்னாள் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் ஆகிய பேரறிஞர் திரு. பொ. சங்கரப்பிள்ளை அவர்களுக்கும், இயன்றளவு பிழையின்றி இந்நூலை அழகுற அச்சடித்துத்தந்த சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினருக்கும், சிறப்பாக ஒப்புமைப் பிரதிகளைச் சரி பிழை பார்த்த எம் உடன் மாணவனும், நீண்டகால அன்பனுமாகிய குரும்பசிட்டி, திரு. மு. சபாரத்தினம் அவர்களுக்கும், கிராம முன்னேற்றம் கருதி யான் செய்யும் தொண்டுகளிலெல்லாம் ஈடுபட்டுத் தன்னால் இயன்ற உதவி செய்து வரும் ஊரபிமானியும், மேற்படி அச்சக வினையாளர் முதல்வருமாகிய வயாவிளான், திரு. செ. சின்னத்துரை அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியை இனிது கூறுகின்றேன்.

''கூத்தனகம்'',
வயாவிளான்,
*11-4-1982.*

**வ. இராசநாயகம்**
சட்டநூலறிஞரும்,
உறுதி வரைஞரும்

---

## கிறீஸ்து போதம்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

அறத்தினுக் குரைகல் என்கோ! அறவுரைச் சுருக்கம் என்கோ!
பிறருனக் கென்ன செய்யப் பெரிதும்நீ வேண்டு வாயோ
பிறரினுக் கவற்றைச் செய்வாய் பிறர்செய வேண்டா வற்றைப்
பிறருக்கும் செய்யாய் என்னும் பெம்மானர் கிறீஸ்து போதம்.

## கிறீஸ்துவ இஸ்லாமியக் குறைபாடு

### கலிவிருத்தம்

சகோதரதத் துவத்தோடு சமத்துவமும் போதிக்கும்
மகம்மதீயம் கிறீஸ்துமதம் எனுமிரண்டும் இறைக்கொள்கை
உகந்துநன்கு போற்றிடினும் மறுபிறப்புக் கன்மமென்ப
செகத்தினிலே போற்றுமை செப்பவொண்ணுக் குறைகாண்மின்!

## மறுமதங்களில் இல்லாப் புத்தமதக் குறைபாடு

### நேரிசை வெண்பா

புத்தமதம் போதிக்கும் அஷ்டமார்க்கம் பஞ்சசீலம்
மித்திரேயம் என்பநல்ல வாயிடினும் — நித்தன்
ஒருவன் உளனென்னும் உண்மையை ஏற்காப்
பெருங்குறை பாடுடைத்துக் காண்.

சோற்ப காலத்துள் அவசரமவசரமாக அச்சிடுங்கால் ஏற்பட்ட

## சில பிழைகளும் அவற்றின் திருத்தங்களும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 22 | வைத்தாய் | வைத்தார் |
| 17 | 20 | இாவீந்திரநாததாகூர் | இரவீந்திரநாததாகூர் |
| 20 | 2 | பூரணேத்தினங்களிலும். | பூரணேத்தினங்களிலும், |
| 25 | 30 | நாடாசிய | நாடாகிய |
| 43 | 27 | பன்னரியவிவேகானந்த | பன்னுவிவே கானந்த |
| 49 | 4 | ஙெண்பா | வெண்பா |
| 68 | 4 | சரிததிரமும் | சரித்திரமும் |
| 73 | 16 | காலத்துக்கேற்பச் | காலத்துக்கேற்ப |
| 79 | 7 | வருத்தச் | வருத்த! |
| 84 | 30 | திருஷ்டி. | திருஷ்டி, |
| 87 | 29 | போது. | போது, |
| 90 | 25 | இக். | இக் |
| 104 | 19 | மேற்செல்லியவாறு | மேற்சொல்லியவாறு |
| 105 | 15 | அதிகாரகங்ளில்லே | அதிகாரங்களில்லே |
| 107 | 28 | இயக்கத்துச்கு | இயக்கத்துக்கு |
| 109 | 12 | விய | லிய |
| 114 | 11 | ஒழுங்கையையும் | ஒழுங்கையையும் |
| 116 | 6 | மிசுவும் | மிகவும் |
| 120 | 4 | ெசய்துள்ளமைகாரணமாக | செய்துள்ளமைகாரணமாக |
| 125 | 37 | அனுமதியளிக்கின்றது, | அனுமதியளிக்கின்றது. |
| 145 | 27 | M. A. | M. Sc. |
| 146 | 26 | வினேச்சொல்லென்றும் | வினேச்சொலென்றும் |
| 159 | 33 | வாழ்ந்நாலும் | வாழ்ந்தாலும் |
| 160 | 15 | வேண்டி | வேண்டும் |
| 160 | 27 | ஆள் | ஆன் |
| 169 | 7 | வைகுசின்னன் | வைகசின்னன் |
| 169 | 8 | நன்றி | நன்கு |
| 176 | 21 | இலக்கணநுணுக்கா | இலக்கணநுணுக்கர் |
| 178 | 11 | மேற்சபைதனிலிருந்தும் | மேற்சபையில் இருந்து கொண்டும் |
| 180 | 24 | நெருப்பும் | நெருப்புப் |
| 181 | 10 | டிலங்கிருள் | டிலங்கிருன் |
| 190 | 7 | கருதி | கருதித் |
| 190 | 12 | ஆராயலாம் | ஆராய்வாம் |
| 191 | 15 | கிளேமுதற் பொருள் | வினேமுதற்பொருள் |
| 191 | 18 | ஐகார நீங்கின் | ஐகாரம்நீங்கின் |
| 191 | 20 | ஐகாரம் நீக்கம் | ஐகாரநீக்கம் |
| 191 | 39 | ‘‘ ங ’’ என்னும் | ‘‘ ங் ’’ என்னும் |
| 192 | 22 | என்னு | என்னும் |

உ

சிவமயம்

## விக்கினேஸ்வரர் வணக்கம்

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

புதுமைக்கு நம்மானம் பராய்ப்பிள்ளை யாரென்று
புகழ்வார்கள் முன்னுளில் மக்கள் நின்னை
இதுமெய்யாம் இன்றுமென நிருபிப்பம் இன்னேயாம்
இன்னலுறும் தமிழினத்தை இனிது காமின்!
பொதுவுடைமைபிறநாட்டிற்போற்றிடுவோர்இறைபோற்ருர்;
போதிப்பார் லௌகீகம்; மறுமை பேணுர்;
பொதுவுடைமை நம்பதியிற் போதிப்போர் நினைப்போற்றிப்
புதுப்பித்தார் நின்கோவில் புதுமை காணே!

### பதினுன்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

விக்கினங்கள் நேராமல் மெய்யடியார்
விழைந்துசெய்யும் மேதக்க பணிகள் யாவும்
வெற்றிபெற வேண்டுமென்னும் வேணவா
மேவநின்னை வேண்டுகின்ருேம் இடர்தீர் எங்கள்
விக்கினேசு வரனே!நம் யுவர்பரப்ப
முயலுசம தர்மமது துவேஷ மின்றி
யார்மாட்டும் அன்புசெயும் மார்க்கத்தைக்
கடைப்பிடித்து எள்ளளவும் இம்சை யின்றி
எக்கணமும் இரத்தமது சிந்தாமல்
இழுக்கிழைக்கும் எதேச்சாதி கார மின்றி
இனியகுடி யரசுமுறை தழுவியெமைப்
படைத்தருள்செய் இறைவனடி தொழுதுநின்று
மக்களது பசிநீக்கிப் பிணியோட்டி
மருட்டியழி வகுப்புவா தங்கள் போக்கி
மாநிலத்தோர் அனைவரையும் ஓர்குடும்ப
மாக்கவருள் மாரிநன்கு வழங்கு வாயே!

## சுப்பிரமணியர் வணக்கம்

### பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தொல்லுலகிற் செய்தொழிலாற் சாதியுண்டாய்ச்
சுயநலத்தால் உயர்வு தாழ்வு
தோன்றியெங்கள் தமிழருளோர் பகுதியினர்
துன்புறுதல் பெரிதும் பாவம்!

அல்லலது அகற்றவெங்கும் அறிவாளர்
ஆவனசெய் இந்த நாளில்
அப்பாலார் சிங்களர்க்கெம் தமிழினத்தை
அறக்காட்டிக் கொடுத்தல் ஈனம்!

சொல்லரிய தெய்வணங்கைக் குறத்தியொடு
சோடாக்கிச் சமன்செய் எங்கள்
சுப்ரமண்ய சுவாமி! நினைத் தொழுமடியார்
மனம்மாற்றித் தாழ்த்தப் பட்டோர்
நல்லையிற்போல் மாவையிலும் மற்றுமுள்ள
கோவிலிலும் புகவே செய்து
நலிந்துநில்லெம் தமிழினமும் நவிலரும்நின்
தமிழ்மொழியும் நன்கு காவே!

## வைரவர் வணக்கம்

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவபிரானிற் தான்மிக்க தேவ னென்று
செருக்குற்ற திசைமுகனின் சிரத்தைக் கொய்து
அவனினது ஆணவத்தை அழித்த தேவே!
அகங்காரம் மமகாரம் இரண்டும் நீக்கிப்
பவவினைநாம் புரியாது பாது காத்துப்
பாரினிலே வீரராய் ஒளிர நின்றன்
தவவலியும் மனோபெலனும் தந்தாட் கொள்ளத்
தருணமிதில் வந்தருள்வை சுணங்கன் மீதே!

## சிவபெருமான் வணக்கம்

### பதினறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருவாகி உருவாகி அருவுருவ மாகிவிரி
அண்டபகி ரண்டமும் தானே யாகி
ஆதித்தன் மதிமுதலாம் கோளாகி மீனுகி
அகிலம்வாழ் அளவிறந்த உயிர்கட் கெல்லாம்
கருவாகி வேருகிச் சிருஷ்டிதிதி சங்காரம்
திரோபவம் அனுக்கிரகம் என்னும் பஞ்ச
கிருத்தியங்கள் புரிகின்ற கருத்தாவாய்க் களிநடனயைக்
கருதிடுவோர் கருத்தினிலே தோன்றுங் கோல
உருவாகி உயிராகி ஊனுகி உணர்வாகி
ஒலியாகி ஒளியாகி உஷ்ண மாகி
உரைக்கிலாக் காந்தமாய் ஊடுசெல்மின் சக்தியாய்
உலகனைத்தும் செறிந்திருந்தும் தேட வொண்ணுத்
திருவாகித் தேனுகித் தீம்பாலாய்த் தேங்கனியாய்த்
தெவிட்டாத அமுதமுமாய்த் திகழ்ந்து நிற்கும்
தென்பலவைக் கூத்தபிரான் செழுங்கமல அடியிணைகள்
தியானித்துப் பேரின்பம் திளைப்போம் நாமே!

## அம்பாள் வணக்கம்

### பதினறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலகிலுள்ள தேசமெல்லாம் யுத்தமின்றிச் சமாதானம்
ஓம்பிநன்கு ஒற்றுமையாய் வாழ வேண்டும்!
ஒருநாட்டில் வாழுபல இனமுமெந்தப் பயமுமின்றி
ஒன்றுபடப் பெரும்பாலோர் உழைக்க வேண்டும்!
குலமரபு கொடிவம்சம் கொக்கரியா தேமக்கள்
குலவியொன்ருய்ப் பேதமற்று வாழ வேண்டும்!
குவலயத்து மக்களெல்லாம் கொடியபசி நோய்முதலாம்
குறைநீங்கி நிறைவெய்தித் திகழ வேண்டும்!
பலகலையும் பரந்தோங்கிப் பாரினிலே விஞ்ஞானம்
பயனளித்து நாசமின்றி வளர வேண்டும்!
பரமபிதா படைத்தவெல்லாம் உடன்பிறப்பாம் என்னுமுயர்
பண்பார்ந்த பத்திநிலை பரவ வேண்டும்!
உலகினிலே தீயவெல்லாம் ஓய்வுபெற நல்லவெல்லாம்
உறுதிகர மானநிலை எய்த வேண்டும்!
ஓதருமிவ் விண்ணப்பம் ஒல்லையில் நிறைவேற
உலகன்னுய்! அருள்புரிவை உவந்து நன்றே!

## காளித்தாய் வணக்கம்

### போய் வழக்காளிகளுக்கு உதவிபுரிந்து பின்னர் பச்சாத்தாபப்பட்டுப் பாடியது

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வாடிய வதனத் தோடு வந்துயான் குரையி ரந்தும்
மூடிய வாயி னுளாய் மோனியாய் இருத்தன் நன்றே?
நாடிடும் பிள்ளை துக்கம் நல்லதாய் களையாள் தானே?
தேடிவந் தேனைத் தாயே! சேர்ந்தணை யாத தென்னே?

உற்றிடும் துயரம் முற்றும் உன்னிடங் கூற வந்தால்
முற்றிலும் கருணை இன்றி மோனியாய் இருக்கின் ருயே!
பெற்றதாய் இரங்கா விட்டால் பின்னையார் இரங்கு வாரோ
"உற்றதென்? மகனே! என்று உரைப்பது எப்போ" அம்மா?

சினம்மிகு பிள்ளை தீயர் சேர்க்கையிற் சேர்ந்து பின்னர்
மனமது மாறி வந்தால் மார்புறத் தழுவு வாள்தாய்
மனம்மிக நொந்து வந்து மன்னிப்புக் கேட்ட போதும்
சினந்துநீ தள்ள அம்மா! செய்திடும் குறைதான் என்னே?

சகிக்கொணுக் கோபம் என்ன? தாய்பொருப் பிழைதான் என்ன?
அகம்குழை யாத தென்ன? அன்பிலா மௌனம் என்ன?
சகத்தினில் நின்றன் ஆணை தன்னில்யான் பிறழ மாட்டேன்
புகல்வது உண்மை அம்மா! பொறுத்தருள் புரிவை இன்னே!

அலறிடும் சத்தம் கேட்டு அழுதிடும் கண்ணீர் கண்டும்
மலடிபோல் இருக்கின் ருயே வன்மனம் படைத்துள் ளாயோ?
கலங்கிடும் பிள்ளை தன்னைக் காத்திடாள் பாவி அம்மா!
அலமரும் அடியேன் தன்னை ஆதலின் தாயே! காவாய்!

## தன்னை நோந்து கதிர்காமத்திற் பாடியது

### பதினுன்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

முன்னுளிற் செய்திட்ட மொழிகிலாப் பவத்திஞல்
முடவனுய் நலியும் அடியேன்
முற்ருக நடக்கிலாச் சப்பாணி ஆவனே
மோசநிலை எய்து வேனே
இந்நாளி லாயினும் இனியசெயல் செய்துயான்
ஈடேற எண்ணும் எண்ணம்
இருகாலும் இயங்காமல் இடர்ப்படும்கொல் என்றெண்ணி
ஏங்குதே இதயம் ஐயோ!
அந்நாளில் நின்தந்தை வாகீசன் சூலைநோய்
அகன்ருெழிய அருள்பு ரிந்தார்
அதுவுமன்றி ஆரூரன் இருவிழியும் கெட்டுழல
அவன்நலிவு தீர்த்து வைத்தாய்
இந்நாளிற் கதிரையிற் கலியுகத்து வரதனென
எழுந்தருளும் முருக வேளே
ஏழையேன் கால்கள்தாம் இயன்றளவு சுகமெய்த
இரங்கியருள்! இரங்கி யருளே!

## 1952ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தன்று சிதம்பர க்ஷேத்திரத்தில் பாடியன

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

பண்டியான் பொல்லாப் பாவியாய்ப் புரிந்த
பாதகச் செயல்களால் என்னை
நொண்டியாய் முடக்கி நொந்திட வைத்தாய்
நுவலரும் கருணையங் கடலே!
தண்டியாய் இன்னும் சகிக்கிலேன் துன்பம்
தாரினில் உயிருள வரைக்கும்
தொண்டியான் புரியச் சோர்ந்தவென் கால்கள்
சுகம்பெலம் பெற்றிட அருளே!

மண்ணினில் வாழ்நின் மக்களுக் கெல்லாம்
வசதியாய்ப் பணிபுரி தற்கோர்
பெண்ணினை மணந்தில் வாழ்வினை நடாத்தல்
பேரிடர் விளைத்திடு மென்றே
எண்ணியான் ஈற்றில் எத்தகை துணையும்
இலாதவன் ஆயினன் இறைவா!
மண்ணினிற் சிறிதும் வருந்திடா வண்ணம்
மரித்திடும் வரமெனக் கருளே!

பூமியிற் பொல்லா ஆணவம் அடக்கிப்
புன்மைசேர் தன்னலம் போக்கிக்
காமமும் கோபக் குரோதமும் களைந்து
காட்டுமாக் குணமெலாம் கடிந்து
தீமையான் சிறிதும் செய்திடா திறைவா!
சீரிய செயல்களே புரிந்து
சேமமாய் வந்துன் திருவடி மலரைச்
சேர்ந்திடும் வரமெனக் கருளே!

## முன்னொருகால் இலங்கை முழுவதையும் இந்துமன்னர் ஆண்டமை குறித்துப் பாடியது

முன்னொருகால் இந்நாடு முழுவதையும் இந்துமன்னர்
ஆண்டமைக்குச் சான்றுபல உண்டு காண்மின்!
பன்னரிய வாகீசன் சம்பந்தன் தேவாரம்
பாடியகோ ணேஸ்வரம் கிழக்கே உண்டு
தென்னிலங்கை தனிற்தெய்வேந் திரமுண்டு முனீசுவரம்
திருக்கேதீச் சுரமென்ப மேற்கே யுண்டு
இன்னுமெங்கள் நகுலேசு வரத்தோடு மாவிட்ட
புரம்நல்லூர் ஆதியன வடபால் உண்டே!

## தென்பலவைக் கூத்தபிரானைத் தெரியாதார்க்கு அறிமுகம் செய்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

(''மருவார் கொன்றை மதிசூடி'' என்னும் தேவார மெட்டு)

அந்தம் அறியா ஆனந்தன்
அழகார் தில்லை நடராசன்
பந்தம் அறுத்துப் பரமுத்தி
பாங்காய் நமக்குத் தரவல்லோன்
வந்தான் எங்கள் தென்பலவை
மருண்டு பத்தி வலைப்பட்டே
உய்ந்தோம் நாங்கள் உலகினிலே
ஒருங்கு சேர்ந்து தொழுதிடினே!

வாரீர் எங்கள் வளநாடு!
    வந்தால் நுமக்குப் பெருவாழ்வு!
சீரார் இயற்கைக் காட்சிகளெம்
    தேயம் உடைத்து; விண்ணுலகம்
சேரத் திரும்ப வானூர்தித்
    துறையெம் பதியில் உளதென்றேம்;
தீரத் தேரா வரதபிரான்
    தெரியா ஈழம் சேர்ந்தனனே!

படைத்தல் காத்தல் அழித்தலொடு
    மறைத்தல் அருளல் நிகழ்ந்திடவே
அடைதற் கரிய பிரேமையுடன்
    ஆடி அகிலம் இயக்குபவன்
சடையிற் திங்கள் சத்தியொடு
    தரிக்கும் சம்பு மகாதேவன்
கிடைத்தற் கரிய திருச்செல்வன்
    கிட்டி வரலெம் தவப்பயனே!

மானம் பராய்வாழ் விநாயகர்க்கும்
    மற்றும் இளைய வேலவர்க்கும்
ஊனம் செய்து மலரவனின்
    கர்வம் கெடுத்த வயிரவர்க்கும்
நானென் றெழுந்த தக்கனைமுன்
    நலித்த வீர பத்திரர்க்கும்
ஆன தந்தை அழலாடி
    ஆதி சிவனென் பானிவனே!

நாகம் தன்னில் நிர்த்தமிட்டு
    நாகம் தன்னிற் சயனித்து
நாக தம்பி ரானெனவே
    நாமம் பூண்ட நாரணனின்
ஏக தங்கை உமாதேவி
    இதமார் கேள்வன் எனவாம
பாகம் தன்னில் அன்னவளைப்
    பற்றும் பகவான் பாரீரே!

சற்றே அசண்டைத் தனமாகத்
    தந்தை இருந்த போதும்தான்
பெற்ற பிள்ளை வருந்தாமற்
    பேணி வளர்க்கும் தாயவள்போல்
முற்றும் எம்மைக் காத்தருளும்
    முத்து மாரி என்னுமுமை
உற்ற காந்தன் நல்வரவால்
    உள்ளம் பூத்தாள் ஒன்றுனள்.

தில்லை நடனைத் திருவாலங்
காட்டிற் சேர்ந்து நடனமிடும்
தில்லைக் காளி போலத்தென்
பலவை தனிலும் காளியுள்ள்
மல்லல் வாய்முன் விளையாட்டு
மைதா னத்தில் இருவருமே
நல்ல கலையோ டானந்த
நடனம் புரியக் காண்போமே!

கோவிற் குழுவைக் கழகாலை
எனவெம் முன்னோர் கூறினரக்
கோவில் ஏழாய்க் கோலமுற
ஏழு தலமென் றுரைத்தனரக்
கோவிற் தலத்தில் இந்நாள்மேற்
கூறப் பெற்ற எழுதெய்வம்
கோவில் கொண்டே எழுந்தருளக்
கூடி வணங்கி உய்வோமே!

திருவில் ஊராம் செவ்வனவே
திகழும் கோவில் இல்லாவூர்
கருமப் பிறவிக் கடலுழல்வர்
கடவுள் அருளை வேட்காதார்
இருநோய் கெடவே இறைஞ்சிடுவீர்
என்னும் திருநா வுக்கரசர்
அருள்சால் வாக்கைச் சிரமேலே
அடியோம் போற்றி வாழ்வோமே!

ஓதி உய்யத் தமிழ்மறைகள்
உதவும் சமய குரவருக்கும்
போதம் அளிக்கும் சந்தான
குரவர் தமக்கும் பொய்யாகும்
சாதி குறைந்த சாம்பார்க்கும்
சமரச நோக்காய் அருள்புரியெம்
ஞாதி ஆகும் நடனைநாம்
நன்கு தொழுவோம் வாரீரே!

## தென்பலவைக் கூத்தபிரான் தரிசனத்தை வியந்து பாடியது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

அச்சம்ஒழித்(து) ஓம்(பு)அபய வரதம் காட்டி
அகிலமெலாம் படைக்கும்இட மாரம் காட்டி
நச்சுமலம் சுட்டழிக்கும் அனலைக் காட்டி
நம்வினைதுய்ப் பித்துமறை வலக்கால் ஊன்றிப்
பிச்சனென முத்தியருள் இடக்கால் தூக்கிப்
பிரபஞ்ச லீலையயர் பெம்மான் நிர்த்தம்
இச்சகத்தில் யாம்காண என்னோ நோற்றோம்?
இன்பநிலை எய்தினோம்; எமக்கார் ஈடே?

## கூத்தபிரானுக்குச் செய்யப்படும் கூட்டு விண்ணப்பம்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

கூத்துடைப் பிரானே! தில்லைக் கோயிலில் வந்து நின்னை
ஏத்திடும் பேறு பெற்றோம்; எம்நாட்டா ரோடெந் நாளும்
ஏத்திட நினக்குக் கோவில் எழுப்பிநல் மடமும் யாத்தோம்;
காத்திரம் செல்வம் இல்லோம் கருதுவ முடிக்கச் செய்யே!

ஆக்கநல் ஆர்வம் தந்து ஆற்றலும் தராயேல் எங்கள்
நோக்கங்கள் நிறைதல் எங்ஙன்? நும்திறம் தெரிதல் எங்ஙன்?
போக்குவை குறைகள் எந்தாய்! பொருள்துணை ஏவல் நல்காய்!
நீக்குவை தடைகள் சைவம் நிலைபெறச் செய்யு மாறே!

## 1952ம் ஸ்ரீ மார்கழிமீ திருச்செந்தூரிற் பாடியது

படிதனில் அடியேற் கவசிய மான
பகரரும் தேவைகட் கெல்லாம்
கடிதினில் விரயம் செய்யவும் தர்ம
கைங்கரி யம்பல செயவும்
மிடிதனிற் கொடிய பவநெறி விலக்கி
வேண்டிய பணமுழைத் திடநின்
அடிதனில் வீழ்ந்தேன் அமரர்தம் ஏறே!
ஆவன புரிந்தெமக் கருளே!

## கீரிமலை நகுலேசன்மேற் பாடியது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

கீரிமுகம் நகுலமுனி வனுக்கு நீக்கி
நகுலேசன் எனஇன்றும் திகழும் தேவே!
தாரிலவ தாரம்செய் இராமன் தானும்
தரிசித்து நின்றனருள் பெற்றுன் என்று
பாரிலுள்ளோர் ஆடியமா வாசை தன்னில்
பவம்தீர்க்க வந்துபடி நின்தீர்த் தத்தில்
நீராடி நினதுசந் நிதிக்கு வந்தேன்;
நீளடியார் கூட்டத்தில் எனையும் சேரே!

## மாவைக் கந்தன் மீது பாடியது

கீரிமுகம் மாற்றியமை கேட்டு வந்து
குதிரைநேர் தன்முகத்தை மாற்று வித்த
மாருதப் புரவீக வல்லி யாத்த
மாவிட்ட புரக்கோயில் தனில்வாழ் கந்தா!
பாரிலுள்ளோர் அபிஷேகக் கந்தன் என்று
பால்தயிர்நெய் தெங்கிளநீர் கொணர்ந்துள் ளார்கள்
சீரியநின் திருவடியைக் கண்டு போற்றச்
சேர்ந்துள்ளோம் திருப்பள்ளி எழுக இன்னே!

## நல்லூர்க் கந்தன் மீது பாடியது

கந்தனுக்கு வாய்த்தபல தலங்கள் தம்முள்
கருதரிய தலமெங்கள் நல்லூர்க் கோவில்;
பந்தமறு செல்லப்பா அடிகள் தாமும்
பகர்யோக சுவாமிகளும் சீடர் தாமும்
சிந்தித்து முத்திபெற அருளி மற்றும்
சீரடியார் திரள்திரளாய்ச் சேர்ந்து பாடி
வந்துகுறை இரக்கவரம் நல்கும் வேளை
வணங்கியாமும் ஆன்மசுகம் எய்து வோமே!

## சந்நிதி முருகையன் மீது பாடியது

ஆறுபடை வீடுகள்யான் தரிசித் துள்ளேன்
அருட்பொழிவு ஆங்குண்டு பசிநீக் கில்லை;
கூறருமெம் செல்வச்சந் நிதியில் வேலன்
அருட்பசியும் உடற்பசியும் நீக்கு கின்றுன்
மாறுபட முன்கதிரை மலையிற் போல
மனமுருகி நைந்தடியார் கண்ணீர் மல்கி
ஊறுவிளை ஊழ்வினைகள் போக்க நன்கு
ஓலமிடல் பத்திநல்கும் எவர்க்கும் தானே!

காதலுறும் கதிர்காமம் வரலா மென்ருல்
காலிரண்டும் வலிகுன்றி நடக்க ஆற்றேன்
ஆதலின்நின் செல்வச்சந் நிதியில் நின்று
அஞ்சலிசெய் கிறேன்அமரர் சிறைமீள் வேலா!
பூதலத்தில் தமிழினத்தைப் புரப்போ ருக்குப்
பொருட்டுணையும் அருட்டுணையும் புரிவ தோடு
தீதகற்றிக் கதிரையினில் மீண்டும் சைவர்
செல்வாக்குத் திகழவழி செய்கு வாயே!

## கதிர்காமத்தை இந்துக்களுக்குக் கொடுக்கும்படி புத்த சமயிகளை விளித்துப் பாடியது

ஆதியிலே கதிர்காமம் சைவர் கோவில்
அஃதுபழ முதிர்சோலை என்னும் வீடாம்;
ஓதரிய நம்கந்தப் புராணத் தோடு
திருப்புகழும் போற்றிநிற்கும் இத்த லத்தை
நீதிதெரி இந்தியர்கள் புத்த காயா
எனும்தலத்தைப் புத்தர்கட்கு அளித்த வண்ணம்
போதனைசால் புத்தரிந்து மக்கட் கீந்து
கிரிவிகாரை தனைவிருத்தி செய்ய லாமே!

## இந்துக்களை விளித்துக் கதிர்காமத்தைப் பெற முயலும்படி பாடியது

ஆதியிலே கதிர்காமம் இந்துக்கள் ஆலயமாய்
அமைந்தமைக்குக் கச்சியப்பர் அருண கிரியார்
போதியநற் சான்றுரைப்பர்; ஆங்குள்ள பூசகர்கள்
நாளடைவிற் சிங்களராய் மாறப் புத்த
போதனைகள் புகுந்துமுரு கக்கடவுள் ஒருவெற்றுப்
போதிசத்து வனுய்மாற்றப் படுதல் காண்மின்!
நீதிசொல்லி இந்தியர்பால் புத்தகாயா வினைப்புத்தர்
பெற்றமைபோல் கதிரைபெற முயலு வோமே!

கதிர்காமத்தையிட்டு
யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையினரையும்
கொழும்பு விவேகானந்த சபையினரையும்
இலங்கை இந்துக்கள் விவகாரச் சபையினரையும்
அகில இலங்கை இந்துமா மன்றத்தினரையும்
மற்றும் சைவம் புரக்கும் சகல தாபனத்தினரையும்
**ஒருங்கு விளித்துப் பாடியது**

திருவருட் கதிரொளிரும் பேரின்பத் தலமென்று
பொருள்விரியும் கதிர்காம க்ஷேத்தி ரத்தின்
அருண்மகிமை வரலாறு நம்கந்தப் புராணத்தும்
கதிர்காம மான்மியத்தும் காண லாகும்;

அருணகிரி நாதரும்தன் திருப்புகழில் அடியவர்தம்
அகத்தினில்வேள் விளையாடல் கூறு கின்றார்
இருபதாம் நூற்றாண்டில் இலங்கைவாழ் தமிழர்தான்
இதனருமை உணர்கின்றீ ரில்லை அந்தோ!

முன்னேயாம் கதிர்காமம் செல்லுங்கால் தமிழடியார்
நூற்றுக்குத் தொண்ணூறு வீத மாவர்
அந்நாளில் சடைச்சியம்மா தம்பையா அப்பா சாமி
ஆதியோர் அமைமடங்கள் தமிழர்க் குண்டு;
பின்னாளில் கற்றுணர்ந்த பெரியோர்கள் கூடியமை
பேரிராமக் கிருஷ்ணமடம் திகழ்ந்த துண்டு;
இந்நாளில் முன்சொன்ன மடம்மூன்றும் இடிபட்டுப்
பின்சொன்ன தும்புத்தர்க் காயிற் றையோ!

இப்பொழுது ஆங்குள்ள சிங்களரின் கடைகளிலே
இறைச்சிமீன் உணவுவகை நிறைய உண்டாம்;
எப்பொழுதும் மதுபானம் அருந்தவுண்டாம்; சூதாட்டம்
விபசாரம் களவுசண்டித் தனமும் உண்டாம்;
இப்பொழுது தானுமெங்கள் இந்துக்கள் கண்விழித்து
இதனைத்தம் தலமாக்க எழார்க ளாயின்
எப்பொழுதும் எமதுவருங் காலத்துச் சந்ததியார்
எமைச்சபித்துக் குறைகூறி நிற்பர் காணீர்!

சிங்களரும் எங்களது வேலவனைத் தொழுவதாலே
இம்முகாமைப் பிரச்சினைகை விடுவாம் என்னும்
எங்களது ஏமாளி கட்கொன்று இடித்துரைப்பன்,
எங்களைப்போல் வேலவனை இறைவ னாகச்
சிங்களவர் கருதாமல் இஷ்டசித்தி தரவல்ல
போதிசத்து வரென்னுமுயர் ஆன்மா என்பர்;
எங்களது முத்திக்கும் அன்னவர்தம் நிர்வாணப்
பேற்றுக்கும் வித்தியாசம் பெரிதும் உண்டே!

இந்தியநல் லரசாங்கம் புத்தகாயா எனும்தலத்தை
இதமாகப் புத்தர்கட் களித்த வண்ணம்
இந்துக்க ளுக்குரிய கதிர்காமத் திருத்தலத்தை
இந்துக்க ளுக்களிக்க இலங்கை அரசு
பிந்துவதை ஆராயின் பிறரிடத்துத் தமைவைத்துப்
பார்க்குமனப் பான்மையின்மை ஏதாய்க் காண்போம்;
இந்தவழு பெரும்பான்மை யோரினின்றும் விலகுமட்டும்
இந்நாடு ஒன்றுபட்டு முன்னே றாதே!

## அரசாங்க மதமாகிய புத்தத்தினின்றும் சைவசமயிகளைப் புரக்கும்படி ஷை சைவ ஸ்தாபனத்தினரை வேண்டிப் பாடியது

### நேரிசை வெண்பா

முன்னொருகாற் புத்தம் தமிழ்நாட்டில் வாழ்ந்தமைக்கு
அந்நாள் மணிமே கலைசான்றும் — எந்நாளும்
அத்தனுண்மை ஏற்கா மதத்தினின்றும் எம்மனோரைப்
பத்திரமாய்க் காத்தல் கடன்.

## நாவலரின் தொண்டைத் தொடர்ந்து செய்யும்படி நம்மனோரை விளித்துப் பாடியது

செந்தமிழும் எங்கள் சிவமதமும் காக்கக்கீழ்
வந்தபெம்மான் ஆறுமுக நாவலரின் — நந்தலில்லாத்
தொண்டைத் தொடர்ந்து செயாமல் நினைவுமட்டும்
கொண்டாடல் வீண்செயலாம் காண்.

1978ஆம் ஆண்டு சித்திரைமீ திருக்கோணமலைக்குப் போனபோது

## கோணேசரைப் பார்த்துப் பாடியது

### பதினறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிங்களரின் மூதாதை விஜயனென் மன்னனிந்தத்
தீவகத்திற் தோணிதனிற் களவாய் வந்து
சேர்ந்துகுடி யேறுமுன்பல் நூற்றாண்டு கட்குமுன்னே
திகழ்ந்துகடல் தனிலமிழ்ந்த குமரி நாட்டில்
எங்களரும் இன்றமிழை முதற்சங்கம் இடைச்சங்கம்
எனவிரண்டு சங்கங்கள் வளர்த்த வென்றும்
இலங்கையந்தத் தமிழ்நாட்டின் வடபாக மாகுமென்றும்
இராவணமன் நினையிறைஞ்ச வருவா னென்றும்
இங்குசில நூற்றாண்டு முன்னரசாள் குளக்கோட்டன்
திருப்பணியும் கமப்பணியும் புரிந்தான் என்றும்
செப்பரிய ஆராய்ச்சி வல்லுநர்கள் தெரித்துநிற்பச்
சிங்களர்மெய் வரலாற்றை முற்றும் மாற்றித்
தங்களதே திருக்கோண மலையெனப்பொய் கூறிநின்று
நம்புனித தலமாக்க மறுக்கின் றூர்கள்
சமஷ்டியர சுண்டாக்கித் தமிழர்க்கே உரியதிருத்
தலமாக்கக் கோணேசா! அருள்செய் வாயே!

## திருக்கேதீஸ்வரத்திற் பாடியது

நன்றன்றென் கிரகநிலை நீக்குகவத் தோஷமென
நலிந்துநின்னை மற்றடியார் வேண்டி நிற்க
நன்றன்றெம் சோதிடத்து நம்பிக்கை அதினின்றும்
நம்மனோரைக் காமினென வேண்டுகின்றேன்
என்றுமுள்ளாய் எங்குமுள்ளாய் எல்லாமும் செய்யவல்லாய்
எவர்தாமும் வேண்டுநல்ல ஈவாய் என்னில்
என்றும்நாம் எச்செயலும் இறைஞ்சிநினைச் செயலாமென்
ஏற்றமுறும் நம்பிக்கை எமக்குண் டாக்கே!

## தெல்லிப்பழை துர்க்காதேவியைப் பார்த்துப் பாடியது

துட்டநிக் கிரகம் செய்து சிட்டரைப் பரிபா லிக்கப்
பட்டயம் தராசு தாங்கிப் பாரினில் அறங்கா தேவீ !
இட்டசித் தியொன்று நல்காய் ! எம்மையும் தமைப்போல் எண்ணுந்
துட்டரைச் சிட்ட ராக்கிச் சுதந்திரம் எமக்குத் தாராய் !

திராவிட இரத்தம் பாயும் சிங்கள இனத்தைக் காக்கத்
தரணியில் உள்ள மற்றும் சமயத்தோர் எவரும் ஏற்கும்
அரனுண்மை ஏற்கச் செய்து மெய்ம்முத்தி விளக்கம் கூறி
நிருவாணக் கொள்கை போக்கி அறநெறி நிற்கச் செய்யே !

## முனீஸ்வரத்திற் பாடியது

கோலமுறும் கோதையரைக் கோரும் நாளில்
கூறரிது பேரின்பம் எனும்மெய் ஓர்ந்தேன்
ஞாலத்தில் வெவ்வேறு தேயம் தன்னில்
வெவ்வேறு காலத்திற் தோன்றி னோர்பால்
காலத்தைத் தூரத்தைக் கடந்தன் னோர்சொல்
மெய்வாக்கும் செய்யற்பு தங்கள் தாமும்
சாலநின்பால் விளைக்கநாட்டம் தனியன் ஆனேன்
தமியேனைக் காத்தருள்க ! தந்தாய் ! நன்றே !

## வண்ணை வைத்தீஸ்வரனைப் பார்த்துப் பாடியது

நோயினால் வருந்தும் பிள்ளை நோய்க்குத வாத கேட்கும்
தாயவள் தவிர்ப்ப நீக்கித் தக்கவை அளித்து நிற்பள்
மாயைக்கண் நோயும் மற்றும் மலரோகம் இரண்டும் வாட்டும்
நாயினேன் நன்மை நாடி நல்லவை உணர்ந்து நல்கே !

உ

# திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும்

(இஃது யான் எழுதிய பொழிப்புரையுடன் ஸ்ரீ தம்பையா தருமப்பணியினர் வெளியிட்ட ''திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும்'' என்னும் கைந்நூலின் முகவுரையாகும்)

சிவபெருமானை வழிபட்டு ஒழுகும் சைவசமயிகளாகிய எமக்கு எம் முன்னோர் அளித்துச் சென்ற அரும்பெரும் செல்வங்களுள் முதன்மை மிக்கது மணிவாசக சுவாமிகள் தந்தருளிய திருவாசகமே. அத் திருவாசகத்தை அருளிச்செய்த திருவாதவூரடிகள் இறைவனைத் தலைவனாகவும், ஆன்மாக்கள் அனைத்தையும் அத் தலைவன்மீது காதல்பூண்டு ஒழுகி உய்யவேண்டிய தலைவியராகவும், தம்மை அத்தகைய தலைவிகளுள் ஒருத்தியாகவும் பாவனைசெய்து, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் அகத்திணை முறையில் தமது திருக்கோவையை மாத்திரமன்றி மேற்படி திருவாசகத்தையும் பாடியருளினர் என்ப. இத் திருவாசகத்தில், திருவெம்பாவை, திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள்நோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப் பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி என்பன இறைவன்மீது காதல் கொண்டுள்ள கன்னியர்கள் ஒருவரோடொருவர் உரையாடிப் பாடுவனவாக இனிது அமைந்துள்ளன. இவற்றில் அன்பின் ஐந்திணைப்பேற்றை அளிக்கவல்ல பல்வகைக் காதல்நெறிகள் திகழ்ந்து விளங்குவதைக் காணலாம்.

திருவெம்பாவை என்பது திரு + எம் + பாவை என விரிந்து, 'எம்பாவாய்' என முடியும் திருப்பாட்டுக்களால் ஆகிய பகுதி எனப் பொருள்படும். இந்நூற்பகுதி கன்னிப்பெண்கள் விடியற் காலத்தில் ஒருவரை ஒருவர் நித்திரை விட்டெழச் செய்து, இறைவன் புகழ்பாடி மார்கழி நீராடிடும் வரலாற்றினைக் கூறுவதாகும். முற்காலத்தில் விவாகம் செய்யாத பெண்கள் மழை நலம் சிறந்து மாநிலம் செழிக்கவும், சீரிய கணவரை மணந்து நல்லறமாகும் இல்லறம் நடாத்தி இம்மை மறுமைப் பயன்கள் அடையவும் வேண்டி மார்கழி மாதத்தில் காத்தியாயனி விரதம் பிடித்தனரென்றும், அதுகாரணமாக அக் கன்னியர் அதிகாலையில் எழுந்து ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி நீராடித் தத்தம் விருப்புக்கள் நிறைவேறத் தேவி வணக்கம் செய்தனரென்றும் பரிபாடல், கலித்தொகை, நற்றிணை முதலிய பழந்தமிழ் நூல்கள் மூலம் அறிகின்றோம். இவ்வண்ணம் திருவண்ணாமலையில் மார்கழி மாதத்தில் இளம் பெண்கள் வைகறையில் எழுந்து மற்றைய மகளிரையும் துயிலுணர்த்தித் திருப்பொய்கையிற் தீர்த்தமாடிய இயல்பினைக் கண்டு, மாணிக்கவாசக சுவாமிகள், ''ஆணவம், கன்மம், மாயை என்னும் முப்பாசங்களினாலும் கட்டுண்டு, உறங்கிக்கிடக்கும் எனது உடன் ஆன்மாக்களே! எங்களைப் பீடித்துள்ள மும்மல

இருளில் மேன்மேலும் உறங்காமல், இப்பொழுதாயினும் விழித்தெழுந்து எங்கள் மும்மலங்களையும் ஒருங்குபோக்கவல்ல எம்பெருமானின் அருள்வெள்ளத்திலே மூழ்கி மெய்யின்பம் அடையவாருங்கள்'' என்னும் உட்கருத்துத் தோன்ற இத் திருவெம்பாவையைப் பாடினர் என்பர்.

இதன்கண் உள்ள இருபது செய்யுட்களுள், முதல் எட்டுப் பாட்டுக்களும் நேராகப் பெண்களைத் துயிலெழுப்புவனவாகவும், ஒன்பதாம் பாட்டு விழித்தெழுந்துவந்த மங்கையர்கள் ஒன்றுகூடி இறைவனை வழுத்தி விண்ணப்பம் செய்வதாகவும், பத்தாம் பாட்டு நீராடப்போகும் வழியில் கோவிலில் உள்ள பெண்குழந்தைகளுடன் அம்மங்கையர் அருளுரையாடுவதாகவும், பதினும் பாடல் தவிரப் பதினேராம் பாடல் தொடக்கம் பதினெட்டாம் பாடல்வரையும் அம்மையப்பரை ஒத்த அருட்குளத்தில் மூழ்கி அன்னவர்தம் புகழ் பாடி நீராடுவதை அழகுறச் சித்திரிப்பனவாகவும், பதினும் பாடல் அருட்சத்தியைப்போல வருஷிக்கும்படி மழையை வேண்டுதல் செய்வதாகவும், இறுதி இரண்டு பாட்டுக்களும் அருள்நீர் ஆடிய மங்கையர் ஒன்றுகூடி இறைவனை வழிபட்டுத் தம் வேண்டுகோளைச் சமர்ப்பித்து எல்லாம்வல்ல பரம்பொருளின் ஐந்தொழில்களையும் போற்றுவனவாகவும் இயைந்துள்ளன.

தத்துவப்பொருள் காணுவோர் மனேன்மணி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்னும் நவசக்திகளுள் முன்னின்றவர் பின்னின்றவரைத் துயிலுணர்த்துவதாகவும், அனைவரும் கூடி ஆண்டவனை அன்பொழுகப் பாராட்டித் தம்முட் பாடுவதாகவும் யாக்கப்பெற்ற பாக்களின் ஆக்கமே திருவெம்பாவையென்றும், அச்சக்திகளின் இயக்கத்தால் பிரபஞ்ச உற்பத்தி மார்கழி மாதம் ஆரம்பமாகி நடைபெறுமென்றும் கூறுவர்.

திருப்பள்ளி எழுச்சி என்பது இறைவனைத் துயில் எழுப்புவதாக அமைந்துள்ள திருப்பாட்டுக்களை உடைய பகுதி எனப் பொருள் விரியும். பள்ளியெழுச்சி தொல்காப்பியம் முதலிய பண்டைய நூல்களில் துயிலெடை என வழங்கப்படும். துயிலெடையாவது தமது வீரபராக்கிரமத்தால் பகைவரை வென்று வாகை மாலை சூடிப் பாசறையில் எத்தகைய மனக்கவலையுமின்றிப் படுத்துறங்கும் மன்னவனைச் சூதர் காலையிற் சென்று புகழ்ந்து பாடித் துயிலெழுப்புவதாகும். அங்ஙனம் துயிலெடை செய்யும் பாணர் அவ்வரசனின் மூதாதையரினதும், அவனதும் கீர்த்தியைப் பாடி, ''திறை செலுத்திய மன்னர்களும், மற்றும் திறை செலுத்த வேண்டிய மன்னர்களும் நின்னைத் தரிசித்து வணங்கி நின் கட்டளைப்படி நடக்க விரும்பி இதோ வந்திருக்கின்றூர்கள். ஆகவே, இத் துயிலினின்றும் எழுந்தருளுக'' என வேண்டுவர். இத் துயிலெடை முறையினை அனுசரித்தே மணிமொழி அடிகள் திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானை விளித்து இத் திருப்பள்ளியெழுச்சியைப் பாடினரென்ப. தலைமகன் பகைவரை வென்று அன்பரைக்

காத்து மணியில் வந்து எத்தன்மைய அக்கறையுமின்றி நீண்ட நேரம் படுத்துறங்க, அவனைத் தலைமகளும் மற்றும் ஆயத்தினரும் அடைந்து, அவனது அழகிய காலைக் காட்சியினைக் கண்டு மகிழப் பல்வகை அன்பர்களும் அத்தாணி மண்டபத்தில் வந்து காத்துக் கொண்டு நிற்கின்றனரென்றும் பொழுது விடிந்துள்ளதென்றும் கூறித் துயிலெழுப்புவதாக இந்நூற்பகுதி இனிது அமைந்துள்ளது.

இறைவனைப் பார்த்துப் பாடப்படும் பத்துப் பாக்களை உடைய இத்திருப்பதிகத்தில், முதலாவதில் மும்மல இருள் அகல இறைவ னடி தொழுது அவனைச் சேர முயல்வதே நல்வாழ்வுக்குரிய இலட் சியமாகும் என்றும், அங்ஙனம் திருவடி தொழப் பள்ளி எழுந் தருளுக என்றும், இரண்டாவதில் தாமரை மலரைக் கண்டு மகிழ்ந்து வண்டுகள் அதிலுள்ள தேனை உண்பதுபோல யாமும் நின் திருமுகமலர்ச்சி கண்டு களித்துக் கருணைத் தேனுண்ண எழுந்தருளுக என்றும், மூன்றாவதில் இருள் அகல்கின்றமையால் எழுந்து திருவடி காட்டுக என்றும், நாலாவதில், நானாவித அன் பர்களும் தரிசிக்க வந்து காத்துநிற்கும் நேரத்தில் மேலும் துயிலாது அவர்களுக்காகவும் எமக்காகவும் நித்திரைவிட்டு எழுக என்றும், ஐந்தாவதில் அன்பில்லாத வீணறிவாளரின் கட்சிப்புலனுக்கும் மதியூகத்துக்கும் அப்பாற்பட்டு நிற்பாயாயினும், பக்திவலையில் அகப்பட்டு எளியேமாகிய எம்மை ஆட்கொள்ளுவாயாதலால் எமக்காகத் துயிலுணர்கவென்றும், ஆறாவதில் பந்தபாசம் நீங்கிய அன்பர்கள் காதலுற்று வணங்க வந்து நிற்கின்றமையால் அவர் களை அலட்சியம் செய்யாது துயிலெழுந்து பிறவிப்பிணி நீங்க எங்கள் எல்லாருக்கும் அருள்புரிக என்றும், ஏழாவதில் தன்னருளே கண்ணாகத் தன்னைக் காணச்செய்து ஆட்கொள்ளும் இறைவனுக்கு என்ன பணியும் செய்ய யாம் தயாரென்றும், எட்டாவதில் செருக் குள்ள எத்துணைப் பெரியவர்களுக்கும் தன்னை உணரும் அறிவை ஈயாது, தாழ்மையுள்ள அன்பர்களுக்கு வலியவந்து காட்சியளித்து இன்னருள் புரிபவனே! தயங்காது இப்போது எழுந்தருளுக என்றும், ஒன்பதாவதில் நல்வாழ்வு அளித்த இனிய ஆருயிர்த் தலைவனென்ற வகையில் உம்மைக் கண்டு மகிழவந்த எமக்கு நினது திருக்கோலக் காட்சியைக் காட்ட எழுந்தருள்க என்றும், பத்தாவதில் விஷ்ணு, பிரமன் என்போர் தாமும் இப்பேறு தமக்குக் கிடைக்கவில்லையென ஆசைப்படும் வண்ணம் எளிதில்வந்து எம்மை ஆட்கொள்ள வல்லவனே! இப்போது துயில் நீத்தெழுந்து எமக்கு அருள்வாயாக என்றும் தலைவியும் பாங்கியரும் இனிது பாடுகின் றனர்.

திருப்பள்ளியெழுச்சி என்னும் இந்நூற்பகுதி திரோதான சுத்தி சொல்லிற்றென்றும், அத்திரோதானசுத்தியாவது ஆணவ மலம் பரிபாகப்பட ஆன்மா அதனுடைய தடையினின்றும் நீங்கு தலே என்றும், மலமறைப்பு இருட்டாகவும், மலநீக்கம் விடிவு ஆகவும் உருவகிக்கப்பட்டன என்றும் சமய ஞானிகள் சாற்று கின்றனர்.

யாவற்றுக்கும் முழுமுதற் கர்த்தாவாக விளங்கும் சிவபெருமான் ஆன்மாக்களின் அன்பு அறிவு ஆற்றல்களைத் தமது அன்பு அறிவு ஆற்றல்களோடு இயைத்தே எப்பொழுதும் தொழிற்படுத்துகின்றனரென்றும், அவர் அங்ஙனம் செய்யும் தமது நடப்பாற்றலினைத் தம் திருவடியிடத்தே ஒடுக்கியருளும் திருக்குறிப்பே திருப்பள்ளி யாகுமென்றும், இளைப்பாறிய ஆன்மாக்கள் திரும்பவும் தமது அன்பு அறிவு ஆற்றல்களை மேற்கூறிய வண்ணம் தொழிற்படுத்துமாறு இறைவனின் திருவடிகளைத் தொழுது வேண்டுதலே திருப்பள்ளியெழுச்சி ஆகுமென்றும் விளக்கம் கூறுவர்.

முதலாவதாக விவரித்த திருவெம்பாவை என்னும் திருவாசகப் பகுதிக்குச் சிவாலயங்கள் எல்லாவற்றிலும் வருடந்தோறும் மார்கழித் திருவாதிரை நாளுக்கு முன் பத்து நாட்களிலும் விழா எடுக்கப்பட்டு வருகின்றது. இவ்விழா எடுப்பிலிருந்து திருவெம்பாவைச் சிறப்பு இனிது புலனுகும். இத் திருவெம்பாவைக் காலத்தில் எல்லாச் சைவாலயங்களிலும் திருவெம்பாவையும், திருப்பள்ளியெழுச்சியும் மாத்திரம் ஓதப்படும். இதிலிருந்து இவ்விரண்டும் ஓதுதல் பன்னிரு திருமுறைகள் ஓதுதற்குச் சமமாகும் என்பது போதரும். இவ்வழக்கமும் திருவெம்பாவைக்கும் திருப்பள்ளியெழுச்சிக்கும் சைவ உலகு அளித்துவரும் தனிமதிப்பை நன்கு புலப்படுத்துகின்றது. எனினும், இரவீந்திரநாததாகூர் இயற்றிய கீதாஞ்சலியைப் பாராட்டும் ஆங்கிலப் பிரேமையாளர் மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய இத் திருவாசகங்களையோ மற்றும் திருக்கோவையாரையோ படித்துப் பயனடையாமல் இருப்பது பெரிதும் கவலத்தக்கதொன்ருகும்.

திருவெம்பாவைக் காலத்தில், திருப்பெருந்துறையில் சீரிய சிவநேயச் செல்வனுக விளங்கும் செட்டியாரொருவரின் நன் முயற்சியால் அதிகாலையில் திருவெம்பாவையும், திருப்பள்ளியெழுச்சியும் கோவில் வெளிவீதியைச் சுற்றி இனிது ஓதப்படுகின்றன. இம் முன்மாதிரியைப் பின்பற்றி இக்கிராமப் பகுதியிலுள்ள இளைஞர்களாலும் திருவெம்பாவை மட்டுமன்றித் திருப்பள்ளியெழுச்சியும் சென்ற சில ஆண்டுகளாகப் பாடப்படுகின்றது. ஆயின், இவற்றை ஓதக்கேட்கும் பொதுசனங்கள் சொற்பொருள் உணராமையாற் போலும் போதியளவு கரிசனை கொள்கின்றிலர். ஆகவே, இதுவரை வெளியாகி வந்துள்ள திருவாசக உரைகளை இயன்றளவு ஆராய்ந்து, எமது சிற்றறிவுக்கு எட்டியபடி பொழிப்புரை தயாரித்து, இவ்விரு நூற்பகுதிகளையும் அவ்வுரையுடன் வெளியிடுகின்ருேம். இவ்வெளியீட்டைக் கண்ணுறும் பெரியோர்கள் குற்றம் பொறுத்துக் குணம் கொள்ளுவார்களாக.

*5-1-68* **உரையாசிரியர்**

# வயாவிளான் — பலாலி சைவபரிபாலன சபையும்

## கூத்தபிரான் கோவிலையும் ஸ்ரீதம்பையா மடத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கும்

# நடராஜ மடாலயமும்

பாரதத்திற் சைவப் பயிர்கா மடங்கள்போல்
ஓரளவு யாமும் பணிபுரியப்—பேரருளார்
கூத்த பிரானுக்குக் கோவில் எழுப்பிமடம்
யாத்தமைத்தோம் இவ்விடத்தில் யாம்.

தொன்றுதொட்டுச் சைவர் தொழும்முறையில் ஈசனடி
என்றும் தொழுதெவரும் எம்சமயம்—நன்றுணரப்
போதனையும் கூட்டுத் தியானமும் கீர்த்தனையும்
நீதறவே செய்குவம்யாம் சேர்ந்து.

**பொ**துவாக எமது பகுதி முன்னேறியும், ஆங்கு வாழ்ந்திடும் சாதாரண மனிதன் உண்மையிற் திருந்தி விளங்கிடக் காண்கிலம். பண்பாட்டைப் பொறுத்தவரையில் அவன் முன்னேறுவதற்குப் பதிலாகப் பின்னேறியிருக்கின்றான் என்றே கூறவேண்டியிருக் கின்றது. முன்னாளில் யாமெல்லாம் கண்கூடாகக் கண்ட கடவுள் பக்தி, அன்பு, சாந்தம், தன்னடக்கம், பொறை, நேர்மை, நீதி, சமாதானப்பிரியம், பெரியோரைப் பேணல், பொதுநலம் போற் றல் ஆதியாம் நல்லியல்புகள் கொஞ்சம் கொஞ்சமாக நாளா வட்டத்திற் குன்றி, இந்நாளில் நாஸ்திகம், ஆணவம், தன்னலம், லோபித்தனம், வஞ்சகம், பொறாமை, குரோதம், பகை, வம்புத் தனம் முதலிய தீக்குணங்கள் தலையெடுத்துள்ளன. முன்னையைக் காட்டிலும் இப்போது மதுபானமும், சண்டித்தனமும், மற்றும் சட்டவிரோதமான செயல்களும் அதிகரித்துள்ளன. தன்னலம் குறைந்தாலொழிய மிருக சுபாவம் மனுஷ சுபாவமாகவும், மனி தத் தன்மை தெய்வத் தன்மையாகவும் திருந்திப் பரிணமிக்காது என்பதைக் கல்வியறிவு இல்லாத பாமர மக்களுக்கு மாத்திர மன்றிக் கற்றறிந்த உத்தியோகத்தருக்கும் யாம் அடிக்கடி இடித் துக் கூறவேண்டி இருக்கின்றது. மாணவருக்கெல்லாம் முன்மாதிரி யாகவும், ஆசாரத்துக்கெல்லாம் சிறந்த இலக்கியமாகவும் திகழ வேண்டிய ஆசிரியர்கள் இற்றைஞான்று கள்ளிற் தொடங்கி இறுதியில் குருநிந்தைக்கு ஆளாகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் சமய வாழ்வு சீர்குன்றியமையே.

மேலே காட்டியுள்ள குறைபாடுகள் எமது பகுதியில் மாத்திர மன்றிப் பொதுவாக மற்றைய பகுதிகளிலும் காணப்படுகின்றன எனச் சில போலி அபிமானிகள் கூறும் வீண்சமாதானத்தை நாங்கள்

செவிமடுத்து வளாவிருக்காது, சமய அடிப்படையில் எம்மையும், எம்மனோரையும் சீர்திருத்திச் சமயத்துறையில் முன்னேற்றம் காண, வயாவிளான்—பலாலி சைவபரிபாலன சபை என்னுமோர் இயக்கத்தைச் சரித்திரகாலத் தமிழ்ப் புரவலரொப்பத் தன்னால் இயன்றமட்டும் சைவமும் தமிழும் வளர்த்த முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அதிபர், உயர்திரு ம. ஸ்ரீகாந்தா அவர்களின் ஆட்சிக்காலத்தில், 1959ஆம் ஆண்டில், சித்திரா பூரணைத் தினத்தில், தென்பலவைச் சக்திகோவிற் சந்நிதானத்தில், போஷகர் திரு. சி. கதிரிப்பிள்ளை அவர்களின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்தோம். இச்சபை தமிழ் நாட்டில் சைவம் வளர்க்கும் ஆதீனங்களின் அடிப்படை நோக்கங்களைத் தழுவி, சமய தீட்சை, சமயவகுப்பு, சமயப்பிரசங்கம், சமய வெளியீடு, குருபூசை, புராண படனம், கூட்டுப்பிரார்த்தனை (வசனம்), கூட்டுப்பஜனை (செய்யுள்) முதலியனமூலம் சைவசமயத்தை வளர்க்கத் திட்டமிட்டு, தனது குறைந்த பொருள் வருவாய்க்கு இணங்கத் தன்னால் ஆகக்கூடிய தொண்டு தளராமல் இனிது செய்து வருகின்றது. இதுவரை யாங்கள், எழுத வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு மாத்திரமன்றி, எழுத்தறிவில்லாத மற்றைய மக்களுக்கும் பிரசங்கங்கள் பயன்படுமாதலின் அப்பிரசங்கங்கள் செய்விப்பதுடனேயே பெரும்பாலும் நின்றுவிட்டாம்.

இப்போது, சொற்பொழிவுகளுடன் பத்திரிகை, கைநூல், துண்டுப்பிரசுரம் முதலிய சமய வெளியீடுகளும் அத்தியாவசியம் தேவையென்பதை உணர்ந்துகொண்டோம். முதலாவதாக, பேசுவோனின் சொல்வன்மைக் குறைவாலும், கேட்போனின் விளக்கக் குறைவாலும், பிறசிந்தனையாலும், பிற குழப்பத்தாலும் பேசப்படும் பொருளில் ஒருபாகமே உண்மையில் கிரகிக்கப்படும்; அக்குறித்தபாகம்தானும் நாளாவட்டத்தில் மறதியின்பாற்பட்டு ஒழிந்துபோய்விடும். இரண்டாவதாக, எழுத்துமூலம் அறியப்படும் பொருள் ஆறுதலாக விளங்கிக் கிரகித்துக்கொள்ளக் கூடியது; மறதி ஏற்படும் காலத்தில் திரும்பவும் பார்த்துப் பார்த்துப் புதுப்பிக்கக்கூடியது; எவ்விடத்தவருக்கும் எக்காலத்தவருக்கும் பலனளிக்க வல்லது. ஆகவே, பிரதானமான சமயவிஷயங்களையிட்டுப் பேரறிஞர்களைக் கொண்டு கட்டுரைகள் வரைவித்து, அவற்றைச் சஞ்சிகை வடிவிற் தொகுத்து, ''சைவத் தொண்டன்'' என்னும் பெயருடன் ஆண்டுக்கொருமுறை பிரசுரிக்கவும், அவ்வெளியீட்டை இலவசமாக, உள்ளூரவர்களுக்கு வழங்கவும், ''யான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்'' என்னும் முறையில் பிற ஊர்களிலுள்ள வாசிகசாலைகள், சனசமூகநிலையங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள். கிராமசபைகள், கலாசாலைகள் முதலியவற்றுக்கு அனுப்பவும் தீர்மானித்துள்ளோம்.

இந்த ஈழநாட்டில் வாழும் மக்களுள், புத்தசமயிகளுக்குக் குறைந்தபட்சம் பூரணைத்தினங்களிலும். மகம்மதியருக்கு வெள்ளிக் கிழமைதோறும், கிறிஸ்தவருக்கு ஞாயிற்றுக்கிழமைதோறும் அவ ரவர் ஆலயங்களில், அவ்வச்சமயக் குருமார்களால் சமயம் போதிக் கப்பட, இந்துக்களுக்கு மாத்திரம் இத்தகைய சமய ஞானம் புகட்டப்படுகின்றிலது. இக்குறையை நிவிர்த்திசெய்யும் பொருட்டு. முதலாவதாக மணியடித்துக் கர்ப்பூரதீபம், பஞ்ச ஆலாத்தி காட் டக் கடவுளை வணங்கும் இப்போதைய வழிபாட்டு முறையுடன், பிரமசமாஜ ஸ்தாபகர், சேர் இராஜாராம் மோகன்ரோய் வியந்து பாராட்டும் பிரசங்கம், கீர்த்தனை, ஜெபம் என்னும் மூன்றும் அடங்கிய பாதிரிக் கிறிஸ்தவ வேதக் கடவுள் வழிபாட்டு முறை யையும் அனுஷ்டித்தல் மிகவும் விரும்பத்தக்கதாகும்.

ஆகவே, சோடோபசாரத்துடன் செய்யப்பட்டுவரும் நமது பாரம்பரிய முறைப்படியும், மேற்கூறிய பிரமசமாஜ முறைப்படி யும் இறைவனை வணங்கச் சிறு நடராஜ மடாலயம் ஒன்றும், மேற்சொல்லிய சமயதீட்சை, சமய வகுப்பு, சமயப் பிரசங்கம், சமய நூலகம், குருபூசை, புராணபடனம், மாகேசுர பூசை முதலி யன நிகழ்த்தப் பெரிய மடம் ஒன்றும் அடங்கிய நடராஜ மடா லயம் ஒன்று நிறுவச் சென்ற சில ஆண்டுகளாக நாம் மிகவும் முயன்று வருகின்றோம்.

மேற் சொல்லிய நடராஜ ஆலயம் இப்போது மக்கள் யாவரி னதும் கவனத்தை ஈர்த்து மிக்க எழில் கொழித்து விளங்குகின்றது. எமது போஷகர் உயர்திரு ம. ஸ்ரீகாந்தா அவர்களின் நித்திய தூண்டுதல் காரணமாகக் கோண்டாவில் சிற்ப வல்லுநர் திரு. நா. தங்கவேலு ஆச்சாரியார் கோலமுறச் செய்து தந்த சித்திரப் பதுமங்களுள் கல்லால மரத்தின்கீழ் ஜனகர் முதலான நான்கு முனிவர்களுக்குப் பதிபசுபாச விளக்கம் செய்த தக்ஷிணாமூர்த்தி சொரூபமும், திருப்பெருந்துறையில் குருமூர்த்தியாக வந்து மாணிக்கவாசகருக்குச் ஸ்ரீ பஞ்சாட்சர மகிமையை விளக்கியருளிய சிவபிரானின் வடிவமும், ஓங்காரப் பிரணவப் பொருளைச் சிவபெரு மானுக்கு உபதேசித்த முருகக் கடவுளின் திருவுருவமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவை எமது புதிய ஸ்தாபனம் கடவுள் வழிபாட்டுக்கு மாத்திரமன்றிச் சமயபோதனைக்கு முரியதென்பதை நன்கு எடுத்து விளக்குகின்றன.

இவ்வாலயம் ஹரிஜனங்களுட்படத் தூய்மை, ஒழுக்கம், பக்தி என்னும் மூன்று முக்கிய நிபந்தனைகளையும் திருப்திப்படுத்தும் சகல சைவசமயிகட்கும் இன்றைய தினம் திறந்துவைக்கப்பெறும். இச் சரித்திரப் பெருமை வாய்ந்த முன்னேற்ற நிகழ்ச்சியை முன்னிட்டு, யாம் வெளியிடத் துணிந்த "சைவத் தொண்டன்" என்னும் சமய

வெளியீட்டின் முதலாம் மலரை ஹரிஜன ஆலயப் பிரவேச மலராகப் பிரசுரிக்கின்றோம். அம்மலராக மாத்திரமன்றி, இம்மலர் காலம் சென்ற எமது போஷகர் கலைப்புலவர், திரு. க. நவரத்தினம் அவர்களின் நினைவு மலராகவும், நமது நடராஜர் ஆலயக் கும்பாபிஷேகத் திறப்புவிழா மலராகவும் ஏககாலத்தில் இனிது திகழ்வதை எமது வாசக நேயர்கள் கண்டு இன்புறுவார்களென எண்ணுகின்றோம்.

(இது 12-7-63இல் வெளியிடப்பட்ட ''சைவத் தொண்டன்'' என்னும் சமய சஞ்சிகையின் முன்னுரையிலிருந்து எடுக்கப்பட்டது.)

---

# சைவசமயம் தழைத்தோங்க வேண்டின்

**சிவநெறிச் சீலர்காள் !**

ஒரு சமூகமோ, நாடோ, கிராமமோ முன்னேற வேண்டுமாயின், அதைச் சேர்ந்த மக்கள் கொலை, களவு, கள், காமம், பொய், அவா, சூது, உலோபம், செருக்கு, பொறாமை, வம்பளத்தல், குரோதம், பழிவாங்கல் ஆதியாம் தீயவை தவிர்த்து, ''அன்பே சிவம்'', ''சீவசேவை—சிவசேவை'', ''வாழு ; வாழவிடு'' என்னும் சீரிய இலட்சியங்களைக் தழுவி வாழ்வாங்கு வாழ்ந்து, மற்றவர்களும் இனிது வாழ ஆவன புரிதல் வேண்டும். இத்தகைய சீரிய வாழ்க்கைக்கு, ''இறைவன் ஒருவன் உளன் ; அவன் எங்கள் யாவேமுக்கும் தந்தை ; எனவே, யாவேமும் சகோதரர்கள் ; ஆதலால், சமத்துவர்கள் ; ஆகவே, எல்லேமும் எத்தகைய பிளவோ, வேற்றுமையோ இல்லாமல் பரஸ்பர அன்புடன் வாழ்வோமாக !'' என்னும் உன்னத கொள்கை சமய அடிப்படையில் மக்களுக்கு உண்டாதல் வேண்டும். அதற்கெல்லாம் நாம் எமது சிவாலயங்களைப் பின்வரும் வண்ணம் புனருத்தாரணம் செய்து செவ்வனே நடாத்துதல் வேண்டும்.

1. கோவில்கள் யாவற்றையும் பொதுவாக்கி, ''இக்கோவில் ஊர்ப் பொது'' எனக் கருங்கற் சாசனம் அமைத்து, அவ் வாலயங்களிலெல்லாம் உண்மைச் சனநாயக சமதர்மம் என்றும் நிலவச் செய்தல் வேண்டும். ஒவ்வொரு ஊரிலுமுள்ள ஆலயங்களைப் பரிபாலிப்பதற்கு ஓர் ஆலய பரிபாலன சபையை (கிறீஸ்தவர்களின் திருச்சபையைப் போல) உண்டுபண்ணி, ஊரார் யாவரையும் உறுப்பினராகச் சேர்த்து, பொருள், பூமி சேகரித்து, அக் கோயில்களுக்குரிய காணி பூமிகளையெல்லாம் அப் பரிபாலன சபைக்குச் சேர்ப்பித்து, அக் கோயில்களைக் குடியரசு முறையில் நன்கு நடாத்துதல் வேண்டும். மெய்ச் சமத்துவம் விளங்க, அரிசனங்களுக்கு

ஆலயப் பிரவேசம் மட்டுமன்றி, மேற்படி ஆலய பரிபாலன நிருவாக சபைகளிலும் இடமளிக்க வேண்டும். அங்ஙனம் செய்யா விடத்து, கடவுட்கொள்கை இல்லாத புத்தமதம் அரசாங்க மதமா யிருக்கும் இந்த நாட்டில், தீண்டாமையால் முன்னொருகால் இந்து மதம் கெட்டுப் புத்தசமயம் தலை தூக்கியதுபோல, மீண்டும் தலை தூக்குவதுடன், தமிழினத்துக்குள்ளே ஐந்தாம் படையினராக இன, மொழி, மத அபிமானமில்லாத கயவர் சிலர் தோன்றி ஒருங்கு சேர்ந்து இனத்துரோகம் விளைக்கக் கூடும். ஆகவே, சமாதான முறையில், மேற்கூறியாங்கு, ஆலயங்களைப் பொதுவாக்கிக் குடியரசு முறையில் நடாத்த இப்போதைய முகாமையாளர்கள் யாவரேனும் தடையாக இருப்பின், 1917ஆம் ஆண்டில் 9ஆம் இலக்கத்துடன் எமது இலங்கை நம்பிக்கைச் சொத்துச் சட்டத்தின் 102ஆம் பிரிவின் கீழ், இப்போதைய பரிபாலனத்திலுள்ள தப்பிதமான செயல்களை யும், மற்றும் சீர்கேடுகளையும் நீதிமன்றத்துக்கு எடுத்துக்காட்டிச் சம்பந்தப்பட்ட ஆலயங்களையும் காணி பூமிகளையும் பொது நம் பிக்கைச் சொத்துக்களாக்கி, இப்போதைய பரிபாலகர்களை நீக்கி, அல்லது அவர்களுடன் சில மெய்த்தொண்டர்களைத் தர்மகர்த் தாக்களாகச் சேர்த்து, புதிய பரிபாலனத் திட்டம் வகுத்து, வரவு செலவுக் கணக்குகளைச் சரிவரக் காட்டுவித்து, அக் கோவில்களை இனிது நடாத்துவித்தல் சாத்தியமாகும் என்பதை எடுத்துக் காட்டுக. நல்லூர்க் கந்தசுவாமி கோவில், மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில், செல்வச்சந்நிதி ஸ்ரீமுருகன் கோவில் போன்ற வருவாய்மிக்க ஆலயங்களின் பரிபாலன திட்டங்களில், சைவநூல் நிலையம் நிறுவுதல், சமய வகுப்புக்கள் நடாத்துதல், விசேட சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்தல், ஆச்சிரமம் நடாத்துதல் முதலியவற்றுக்கும் பணம் ஒதுக்குவிக்கலாம் என்க.

2. தொன்றுதொட்டு எமது ஆலயங்களில் நீராட்டல், தீப தூபம் காட்டல், மலர் சாத்தல் முதலிய சோடோபசாரத்தோடு செய்யப்பட்டுவரும் பூசை முறையில், எங்களுக்கு விளங்காத வட மொழி மந்திரம் மட்டுமன்றி, எங்கள் தாய்மொழியாகிய தமிழ் மொழியிலும் சிவபுராணம், போற்றித்திருவகவல், திருவெழு கூற்றிருக்கை, திருக்கைலாசம் முதலிய மறைமொழிகள் ஓதிப் பூசை செய்வதுடன், கிறீஸ்தவர்களைப்போல் போதனை, கீர்த்தனை, ஜெபம் என்னும் மூன்று அம்சங்களையும் கொண்ட அமைதியும், ஒழுங்கும் சான்ற கடவுள் வணக்க முறையைக் கையாளுதல் மிகவும் விரும்பற்பால தொன்றும்.

3. இப்பொழுது, இயற்கை விவேகமும், பணவசதியுமுள்ள பிராமண இளைஞர்கள் கல்வி கற்று உத்தியோகம் பார்த்துக் கொண்டிருப்ப, பெரும்பாலும் போதியளவு கல்வியறிவில்லாத வர்களே இறுதித் தஞ்சமாகக் கோவிற்பூசைத் தொழிலைப் புரிந்து வருகின்றனர். எனவே, அவர்கள் வேண்டியளவு சமயஞான மில்லாதவர்களாகவும், வறுமை காரணமாய் நேர்மையீனமுள்ள வர்களாகவும், பொதுசன மதிப்பில்லாதவர்களாகவும் காணப்படு கின்றனர். ஆகவே, குறைந்த கணக்கு பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்தோருள் ஒழுக்கநலமுள்ளவர் களைத் தெரிந்து, யாழ்ப்பாணச் சைவ பரிபாலன சபை போன்ற ஒரு சமயஸ்தாபனம் குறைந்த பட்சம் நான்கு வருடம் பயிற்றிச் சைவாலயக் குருமார் பரீட்சைக்கும், சைவசித்தாந்தப் பண்டிதர் பரீட்சைக்கும் தோற்றுவித்து, அவ்விரண்டிலும் தேறியோருக்கு, (ஊர்ப்புரோகித வருவாய் தவிர) குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு ஆறுநேரப் பூசைக்கு 600 ரூபா வீதமும், மூன்றுநேரப் பூசைக்கு 400 ரூபா வீதமும்,* காலை மாலைகளில் மட்டும் (வறிய ஊர்களிற் செய்யப்படும்) இருநேரப் பூசைக்கு 200 ரூபா வீதமும் சம்பளம் கொடுக்கும்படி மேற்சொல்லிய ஆலய பரிபாலன சபைகளைத் தூண்டுதல் வேண்டும். (வறிய கிராமங்களையும், சிறியகோவில் களையும் பொறுத்தவரையில், மொத்தமாக மாதமொன்றுக்குக் குறைந்தபட்சம் 300 ரூபா கிடைக்கக்கூடியதாக அயலூரிலுள்ள ஆலயங்களிலும் பூசைசெய்யப் பூசகர்கட்கு ஆதரவு அளிக்கப்பட வேண்டும்). அங்ஙனம் ஊதியத்தைக் கூட்டினுற்றுன், எங்கள் ஆலயப் பூசகர்களின் அறிவும், ஒழுக்கமும், மதிப்பும் உயர்ந்து, எங்கள் சிவமதத்தைப் போதனை, சாதனை என்னும் இரண்டாலும் செவ்வனே வளர்த்து வருவர்.

(இது 21–1–1978இல் துண்டுப்பிரசுரமாக வயாவிளான்–பலாலி சைவ பரிபாலன சபையினரால் வெளியிடப்பட்டு, சிறந்த நியாய வாதியும், நாடாளுமன்றக் கோப்பாய்ப் பிரதிநிதியும் ஆகிய அமரர் சி. கதிரவேலுப்பிள்ளை அவர்களினதும், பிரபல தமிழறி ஞனும், சைவத்தொண்டனும், எமது அன்பனும் ஆகிய பலாலி பிரமஸ்ரீ கி. இலட்சுமண ஐயர் அவர்களினதும், சாற்றரும் தமிழபிமானியும், சமயாபிமானியும் ஆகிய எமது நண்பன், ஆனைக் கோட்டை நியாயவாதி அமரர் சோ. திருநாவுக்கரசு அவர்களி னதும் பாராட்டையும், வாழ்த்தையும் பெற்றதாகும்.)

---

*இப்போதைய வாழ்க்கைமுறையில் காலை மாலையில் செய்யப்படும் இரண்டு நேரப் பூசைகள் போதுமானவை. இவ்வொழுங்கு பூசகர்கள் பகற்காலத்தில் வேறு தொழில்கள் செய்யவும், மற்றும் அடியார்கள் தத்தம் தொழில்களைச் சரிவரச் செய்யவும் வசதியளிப்பதாகும்.

# ஹரிஜன ஆலயப் பிரவேசமும் வவனியா திரு செ. சுந்தரலிங்கம் அவர்களின் பிழையான ஆலோசனையும்

இவ்வுலகில் உள்ள சகல மக்களுக்கும் இறைவனை உண்மைத் தந்தையாக ஏற்றுக்கொள்ளுவோர் எவரும் அவ்விறைவனின் மக்கள் அனைவரும் சகோதரர் என்றும், ஆகவே, சமத்துவர் என்றும் ஒத்துக்கொள்ள வேண்டியவராவர்.

இப்பொய்யாமொழி காரணமாகவே, மகாத்மாகாந்தி, சுவாமி விவேகானந்தர், இயேசுக்கிறிஸ்து, முகம்மது நபி முதலிய ஆத் மீகப் பெரியார்கள் அனைவரும் சகோதரத்துவம் வாய்ந்த சமத்துவ நெறியைத் தாரினிலுள்ளோருக்கெல்லாம் இனிது போதித்துச் சென்றனர்.

இவ்வுண்மையை உணர்ந்தே சர்வதேச மக்களினதும் நன்மை விருத்திச் சங்கம் எனக் கூறத்தக்க ஐக்கிய நாட்டுச் சபை, தான் வகுத்த மனிதனின் அடிப்படை உரிமைச் சாசனத்தில் சாதி பேதம், நிறவேற்றுமை முதலியன பாராட்டுதலைப் பெலமாகக் கண்டித்துள்ளது.

சாதித்துவேஷம் பாராட்டுதலை இலங்கையில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், ஈழத்தமிழர் விடுதலை முன்னணி, சமசமாஜக் கட்சி முதலிய அரசியற் கட்சிகள் மாத்திரமன்றி, அகில இலங்கை இந்து மாமன்றம், யாழ்ப்பாணச் சைவ பரிபாலன சபை, கொழும்பு விவேகானந்தசபை முதலிய சமய ஸ்தாபனங்களும் பெரிதும் கண்டித்து நிற்கின்றன. ''இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமம்'' என்னும் சமய அடிப்படையில் சமத்துவம் பிறந்தாற்தான் சமூகத் துறையிலும் சமத்துவம் வளருமென மகாத்மாகாந்தி, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், சேர் சி. பி. இராமசுவாமி ஐயர் முதலிய சான்றோர்கள் தாய் நாட்டில் உள்ள இந்து ஆலயங்கள் எல்லாவற்றையும் சாதி வேற்றுமை யின்றிச் சகல இந்து மக்களுக்கும் திறந்து வைத்துள்ளனர். சேய் நாடாசிய இலங்கையிலும் தெல்லிப்பளையிற் பிறந்து வளர்ந்து, கோப்பாய்ப் பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்து விளங்கிய அமரர் கு. வன்னியசிங்கம் அவர்களும், முன்னுள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களும், மற்றும் பல பெரியோர்களும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில்,

வண்ணுர்பண்ணைச் சிவன்கோவில், வண்ணுர்பண்ணைப் பெருமாள் கோவில் ஆதியாம் முக்கிய ஆலயங்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து வைத்ததுடன், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலையும் அங்ஙனம் திறந்துவிடத் திட்டமிட்டிருந்தனர். அதற்கிடையில் மேற்படி வன்னியசிங்கம் அவர்களின் அகால தேகவியோகத்தால் மேற்படி ஆலயப்பிரவேசம் மிகவும் தடைப்படலாயிற்று. இது விஷயத்தில் பண்பாடு மிக்க இந்நாளைய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு· வேணன் அபயசேகரா அவர்களும், சைவப்பற்று வாய்ந்த யாழ்ப் பாணப்பகுதி நகரகாவல் அதிகாரி திரு. இ. சுந்தரலிங்கம் அவர் களும், தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தமிழ்க்காங்கிரசைச் சேர்ந்த பாராளுமன்ற உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும், மற்றும் பல சைவாபிமானிகளும் அதிக அக்கறை பூண்டு, இயலுமேல் சமாதானமாகவும், இயலா விடத்துச் சட்டமூலமாகவும் மேற்படி ஆலயப் பிரவேசத்தை நிகழ்த்த முன்வந்துள்ளமை சைவசமய வளர்ச்சியையும் தமிழர் களின் பரஸ்பர ஒற்றுமையையும் கருதும் எவர்க்கும் மிக்க மகிழ்ச் சியை உண்டுபண்ணும் செயலாகும்.

இந்தச் சுபவேளையில், வவனியாப் பழைய பாராளுமன்ற உறுப்பினர், திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் 1957இல் 21 என் னும் இலக்கத்துடன் இயற்றப்பட்ட சமூகக் குறைபாடுகள் சுமத்தற் தடைச் சட்டம் எங்கள் தேச வழமைகளை நேர்முகமாக இரத்துச் செய்திலதென்றும், எனவே அச்சட்டம் வலியற்றதென்றும், மேற்படி சமூகக் குறைபாடுகள் நீக்கற் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதைப் பொதுமக்கள் மும்முரமாக எதிர்க்க வேண்டு மென்றும் பிழையான ஆலோசனை கூறியுள்ளாரெனக் கேட்டுச் சைவாபிமானிகள் என்ற வகையில் மிகவும் துக்கமும், மேற்படி பெரியாரின் இனுபிமானத்தை வியந்து வந்தோர் என்ற வகையில் மிகவும் வெட்கமும் அடையலாயினேம். சைவசமயத்துக்குப் பெரும் கறையாகவும், தமிழினத்தின் ஒற்றுமைக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவும் இருக்கும் தீண்டாமையைக் கட்சி பேதம் பாராட்டாது சகலரும் ஒருங்கு சேர்ந்து வேரற நீக்க வேண்டிய இந்த நெருக்கடியான தருணத்தில்,ஷெ லிங்கம் அவர்கள் பொய்மை வாய்ந்த இவ் விஷமப் பிரசாரத்தில் ஈடுபடுவாரென்று எந்தத் தமிழனும் கனவிற்றுனும் எண்ணி இருக்கமாட்டான்.

உண்மையை ஆராயுமிடத்து, 1844இல் 20 என்னும் இலக்கத் துடன் யாக்கப்பட்ட அடிமை வழக்க ஒழிப்புச் சட்டம் அதற்கு முரண்பாடான தேசவழமைகளை யெல்லாம் மறைமுகமாக வலி கெடுத்தது போல மேற்கூறிய சமூகக் குறைபாடுகள் சுமத்துதலைத் தடைசெய்யும் சட்டமும் அதற்கு முரண்மை வாய்ந்த தேச வழமை

களையும் வலியற்றதாக்கி யுள்ளதெனக் காண்போம். செல்வச்சந்நிதி முருகன் கோவிலுக்குட் புகவிடாத தாழ்த்தப்பட்ட சைவசமயி சம்பந்தமாகத் தமிழ்க் காங்கிரசைச் சார்ந்த மேற்படி திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும் கோப்பாய்ப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்களும் மேற்படி சமூகத் தாழ்வுகள் நீக்கற் சட்டத்தை எடுத்துக் காட்டிப் பருத்தித்துறை நீதிமன்றத்திற் பேசிய வழக்குத் தீர்ப்பு மேல் முறையீட்டில் உயர்தர நீதிமன்றத்தால் வலியுறுத்தப்பட்டமை யாம் கூறும் இச்சட்ட அபிப்பிராயத்தை உறுதிப்படுத்துவதாகும்.

ஆகவே சட்டப்பிரமாணம் ஆகிய ஒன்றை எதிர்த்தல் பெருந் தப்பிதமென்பதை இப்போதாயினும் நன்குணர்ந்து வீணே பொருதிப் பகிரங்க சமாதானத்தைக் குலைக்காமல், தாழ்த்தப்பட்ட மக்கள் மேற்படி மாவைக் கந்தசுவாமி ஆலயத்துள்ளும், சந்நிதி முருகன் கோவிலுக்குள்ளும், வல்லிபுரக் கோவிலுக்குள்ளும் மற்றும் சைவாலயங்களுக்குள்ளும் புகுந்து எல்லோருக்கும் தந்தையாகிய இறைவனை வணங்க அனுமதியளிக்கும் வண்ணம், சைவசமய வருங்கால வளர்ச்சியை முன்னிட்டும், தமிழர்களின் ஸ்திரமான ஒற்றுமையை முன்வைத்தும், தெய்வநீதியின் பேரிலும், இப்பகுதியிலுள்ள எமது உடன் சமயிகள் அனைவரையும் அன்பார மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் சேவைக்குரிய
**வ. இராசநாயகம்**
(வழக்கறிஞரும், சமாதான நீதிபதியும்,
வயாவிளான்-பலாலி சைவபரிபாலன சபைத் தலைவரும்)
**த. கந்தையா, M. B. E.**
(தென்பலவை ஸ்ரீ தம்பையா தருமப்பணி
சிரேஷ்ட ஸ்தாபகர்)

பலாலி தெற்கு,
வயாவிளான்,
1-7-68.

---

குறிப்பு: இப் பிரசுரம் வெளிவந்து ஏறக்குறைய ஒருமாதகாலத்தின் பின்னர் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடந்த கூட்டமொன்றில் எமது விசேஷ மதிப்புக்கும் மிக்க அன்புக்குமுரிய கொழும்பு நியாயவாதி திரு. செ. இரங்கநாதன் கியூ. சீ. அவர்களும் மேற்படி கருத்துப்படப் பேசினர் என்பது அரிசன அபிமானிகள் நன்கு அவதானிக்கற்பாலதொன்றும்.

954.93
IRA
S

# இலங்கை ஆலயப் பிரவேசப் பிரமாணம்

முன்னுள் வவனியா நாடாளுமன்ற உறுப்பினர், திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் சில அரிசனங்களை (இறைவனின் மக்களாகப் பொருள்படக் காந்தியடிகள் பெயரிட்ட தாழ்த்தப்பட்ட மக்களை) 1968ஆம் ஆண்டில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் வணக்கத்துக்குச் செல்லவிடாமல் தடுத்தமைக்கு மல்லாக நீதிஸ்தலத்தில் ரூபா 50 குற்றம் விதிக்கப்பட்டதும், பின்னர் அத் தீர்ப்பு இலங்கை உயர்தர நீதிமன்ற (சுப்பிறீங்கோடு) த்தாலும், சென்ற மாதம் மகாராணியின் அதிஉயர் நீதிமன்ற (பிறிவிக்கவுன்சில்)த்தாலும் வலியுறுத்தப்பட்டதும் பொதுநல ஆர்வமுள்ளோர் நன்கு அறிந்த உண்மைகளாகும்.

201259

இப்பொழுது, அவர் மேற்படி பிறிவிக் கவுன்சிற் தீர்ப்பைப் பற்றித் தொடர்ந்து கூறிவரும் விபரீத விளக்கம் பொதுமக்களிடையே மிக்க தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணுகின்றதாதலால், இது விஷயமாக உள்ள சட்டப் பிரமாணம் முழுவதையும் ஈண்டு நன்கு விளக்கிக்காட்ட விழைகின்றேன்.

இவ்விடயமாக முதன் முதல் இயற்றப்பட்ட சட்டம் 1957 ஆம் ஆண்டில் 21 என்னும் இலக்கத்துடன் ஆக்கப்பட்ட சமூகக் குறைபாடுகள் சுமத்தற் தடுப்புச்சட்டம் ஆகும். அதன் 2ஆம் பிரிவு 'சாதி காரணமாக இன்னொருவன்மீது சமூகக் குறைபாடு எதுவேனும் சுமத்தும் ஒருவன் சுலபமான அல்லது கடூரமான ஆறுமாத மறியல் அல்லது நூறு ரூபா குற்றம் விதிக்கக் கூடிய குற்றமொன்றுக்கு ஆளாவன்' என நவில்கின்றது. 3 ஆம் பிரிவு தடுக்க முயலும் சமூகக்குறைபாடுகளை விபரிக்குங்கால் ஒருவன் யாதேனும் ஒரு சமயத்தைப் பின்பற்றும் இன்னொருவனை அச் சமயத்தைப் பின்பற்றுவோர் உட்செல்லும் எந்த வணக்கத்துக்குரிய இடத்தினுள்ளேனும் புக, சமுகமாயிருக்க, அல்லது வணங்க விடாமற் தடுத்தால், அவன் மற்றவன்மீது சமூகக்குறைபாடு சுமத்துபவனுகக் கருதப்படுவான்' என விளக்கம் கூறுகின்றது. எனவே, எந்த இந்து ஆலயத்துக்குள்ளேயும் செல்ல உயர்சாதி இந்துக்களுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை மேற்படி சட்டம் ஆக்கப்பட்டபின்னர் அரிசனங்களுக்கும் உண்டாயிருக்கின்றது.

மேற்சொல்லிய ஆலய வழக்கில், மேல் முறையீட்டுக்காரனுன திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் எமது தேசவழமைகளுக்கும், இந்து சமய வழக்கங்களுக்கும் மேற்படி சமூகக் குறைபாடுகள் சுமத்தற் தடுப்புச் சட்டம் முரண்பாடுடையதாய் இருப்பதால்

STACKS

அது வலியற்றதென வாதாட, முடிக்குரிய நியாயவாதி மேற்போந்த முரண்பாடு வாய்ந்த தேசவழமைகளேயும், மற்றும் வழக்கங்களேயும் மேற்படி சட்டம் மறைமுகமாக இரத்துச்செய்துள்ளதென இனிது எடுத்துக் காட்டினர்.

மேற்கூறிய பிறிவிக்கவுன்சில் கீழ் நீதிஸ்தலத் தீர்ப்புக்களேச் சரியெனப் பெலப்படுத்தி அளித்த தீர்வையில் இறுதியில் பின்வருமாறு கூறுகின்றது.

''ஆகவே, மேன்முறையீட்டாளி 1957ஆம் ஆண்டுச் சட்டத்தின் வலிமையைத் தாக்கித் செய்துள்ள வாதம் தோல்வியடைய வேண்டியதொன்ருகும். அதன்பேருக அவர் குற்றவாளியாகக் காணப்பட்டமை பெலநிலே அடைகின்றது. தப்பபிப்பிராயத்தை ஒழிக்கும் நோக்கமாக, நீதிப்பிரபுக்களாகிய நாம், 1957ஆம் ஆண்டுச் சட்டத்தின் 2, 3 (B) என்னும் இலக்கங்களேயுடைய பிரிவுகளிஞல் சட்டவிரோதமாக்கப்பட்ட விலக்குதல் விலக்கப்படுவோனின் சாதிகாரணமாகச் செய்யப்படும் விலக்குதலாகும் என்பதை மட்டும் மேலதிகமாகக் கூறுவாம். கோவிலொன்றினுள் வழிபடும் இடங்களிலிருந்து சாதித் தொடர்பற்ற வேறு சமயகாரணமாக அச்சமயத்தைப் பின்பற்றுவோரையும் வழிபடுவோரையும் விலக்குதல், உதாரணமாக மூலஸ்தானத்திலிருந்து பிரதம பூசகரைத் தவிர மற்றெல்லோரையும் விலக்குதல் அச் சட்டத்திஞற் பாதிக்கப்படவில்லே.

மேற்படி தீர்வையிலிருந்து சாதி காரணமாகவோ, 'ஆசௌச தீபிகை' போன்ற போலிச் சமய நூல்கள் பிராயச்சித்தம் செய்ய ஏதுவாகுமெனச் சொல்லும் ஆசௌசம் (வருணத் தொடக்கு) போன்ற சாதிசம்பந்தமுள்ள சமய காரணமாகவோ எவனேயும் அவனது சமயத்தைச் சேர்ந்த இறைவணக்கத்துக்குரிய இடத்துக்குச் செல்லவிடாமற் தடுத்தல் இயலாத கருமமென்பது இனிது புலஞகும். உண்மையில், பிறிவிக் கவுன்சில் மேற்குறித்த சட்டத்தைப் பெலமுடையதாக ஏற்றுக்கொண்டபோது அச் சட்டம் அதற்கு ஒவ்வாத சமய வழக்கங்களே யெல்லாம் மறைமுகமாக இரத்துச் செய்துள்ளது என்னும் உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அங்ஙனம் இல்லேயேல், திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் மேன்முறையீட்டில் வெற்றியடைந்து, அவரது குற்றம் நிராகரிக்கப்டிருக்கும்.

அதுமட்டுமன்றி, 'கிறவுண்ட்' (Ground) என மேற்படி தீர்வையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் ஆங்கிலப் பதம் 'பெலமுள்ள காரணம்' எனப் பொருள்படு மாகலின், திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் கருதும்வண்ணம் ஆலய அதிகாரி எவரும்

'பொதுவுடமை' போன்ற அற்ப காரணங்களைக் கூறி எவரையும் தமது ஆலயத்துக்குட் புகவிடாமற் தடுக்கமுடியாது என்பது பெறப்படும். உண்மையில் இதுபோன்ற விடயத்தில் (Inpari materia), இந்திய ஆலயப்பிரவேசச் சட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படும் அசுத்தம், குடிவெறி, பத்திக்கு ஒவ்வாத முறை கேடான நடத்தை போன்ற பெலமான காரணம்கொண்டே ஒரு வரை அவரது சமய ஆலயத்துக்குச் செல்லவிடாது தடுக்கலாம். இது சம்பந்தமாக, ஆலய அதிகாரிகள் ஒரு சட்ட உண்மையை நன்கு கவனிக்கவேண்டும். அஃதாவது, கோயிலுக்குச் செல்ல விடாது தடை விதிப்பதற்குக் கூறப்படும் காரணம் போதிய பெல முடையதென்றும் உண்மையானதென்றும் நிரூபிக்கும் பொறுப்பு அத்தடை விதிப்போரதாகும்.

சைவசமயக் கோட்பாடுகளை அவமதித்தல் அல்லது நம்பாமை, கண்டிக்கத்தக்க வெளிச் செயலாகப் பர்ணமித்தாலன்றி, ஆலயப் பிரவேசத் தடைக்குச் (செயலாற்றுமுறையில்) சரியான சமயகாரண மாகாது. ஏனெனில், முதலாவதாக, அச் சொற்றொடர் போதி யளவு வரையறை விளக்கம் இல்லாதது. இரண்டாவதாக, மனுஷ னின் மனோநிலையையும் போக்கையும் கண்டுபிடிப்பதும் நிரூபிப் பதும் இலகுவான காரியங்களல்ல. மறுபக்கத்தில் திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் விளக்கும் வண்ணம் (இல்லை! விதிக்க முயலுமாறு) சைவசமயக் கொள்கைகளை அவமதித்தல் அல்லது நம்பாமை ஆலயப்பிரவேசத் தடுப்புக்குப் போதிய சமயகாரண மாகக் கைக்கொள்ளப்படின், இப்போது அரிசன ஆலயப் பிரவே சத்துக்குத் தடையாயிருப்போருள் நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்துக்கு மேலானோர் எந்தக் கோவில் அல்லது கோவில்களின் பரிசுத்தத்தைக் காக்கிறதாகக் கங்கணங்கட்டி நிற்கின்றார்களோ அக்கோவில் அல்லது கோவில்களுக்கு வெளியே நிற்கும்படி தடுக் கப்படவேண்டியவராவர் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின் றேன். காரணம் புலாலுண்ணல், மது அருந்துதல் என்பன சைவ சமயக் கோட்பாடுகளுக்கு முற்றும் முரண்பாடானவையாகும்.

இப்போது, மேற்படி சமூகக் குறைபாடுகள் சுமத்தற் தடுப்புச் சட்டத்துக்கு 1971ஆம் ஆண்டில் 18 என்னும் இலக்கத்துடன் செய்யப்பட்ட திருத்தற் சட்டத்தை விளக்கவேண்டியிருக்கின்றது. இது ஆதிச் சட்டத்தைக் காட்டிலும் கடூரமானது. இதன் 2 ஆம் பிரிவு ஷெ சமூகக் குறைபாடுகள் சுமத்தற் தடுப்புச்சட்டத்தின் கீழ்ச் செய்யப்படும் குற்றச் செயலொன்றுக்காக ஒருவனைச் சமா தான உத்தியோகஸ்தரொருவர் பிடிகட்டளை (விருந்து) யின்றிச் சிறைப்படுத்தலாம் என விதிப்பதுடன், அக்குற்றச் செயலுக்குரிய

ஆகக்கூடிய தண்டனையை மூன்று வருடச் சுலப அல்லது கடூர மறியல் அல்லது மூவாயிரம் ரூபா குற்றம் அல்லது மேற்கூறிய மூன்று வருட மறியலுடன் மூவாயிரம் ரூபா குற்றம் என அதிகரிப் பிக்கின்றது. அத்துடன், இச்சட்டத்தின்கீழ்த் தொடரப்படும் வழக்கில் ஒருவன் மீது சுமத்தப்படும் சமூகக்குறைபாடு அவனின் சாதி காரணமாகவே சுமத்தப்பட்டதென முன்னுடிக் கருதப்படு மென்றும், அங்ஙனமன்றி அது வேறு காரணத்தாற் சுமத்தப்பட்ட தென உருசுப்படுத்தும் கடமை எதிரியைச் சார்ந்ததாகுமென்றும் அறைகின்றது.

மேற்படி திருத்தற் சட்டத்தின் 3ஆம் பிரிவு ஆதிச் சட்டத் தின் 3ஆம் பிரிவைப் பின்வருமாறு வாசிக்கும்வண்ணம் திருத்தி யமைக்கின்றது.

"ஒருவன் யாதேனும் ஒரு சமயத்தைப் பின்பற்றும் இன் னெருவனை அச்சமயத்தைப் பின்பற்றுவோர் உட் செல்லும் அல் லது உட்சென்றுள்ள எந்த வணக்கத்துக்குரிய இடத்தினுள்ளே னும் அல்லது அதன் எப்பகுதியிலேனும் புக, சமுகமாயிருக்க, அல்லது வணங்கவிடாமற் தடுத்தால், அவன் மற்றவன்மீது சமூகக் குறைபாடு சுமத்துபவனுகக் கருதப்படுவான்."

மேற்காட்டிய திருத்தம் பூசகர் மாத்திரம் செல்லும் கருப் பக்கிரகம் (ஆதிமூலம்), அர்த்த மண்டபம் (அதற்கு முன்னே யுள்ள கழுத்து வடிவமுள்ள மண்டபம்), மகாமண்டபம் (அர்த்த மண்டபத்துக்கு முன்னே காணிக்கை படைக்கும் மண்டபம்) முத லிய அதி பரிசுத்த ஸ்தலங்களைத் தவிர, மற்றைய ஸ்தம்பமண்டபம் (கொடிஸ்தம்பமுள்ள தூண்தாங்குமண்டபம்), உள்வீதி, தரிசன மண்டபம் (சங்கு, சேமக்கலம் முதலிய மங்கல வாத்தியங்கள் ஒலித்து வணக்கம் செய்யும் மண்டபம்) என்பவற்றுள் இந்து சமயத்தைச் சேர்ந்த எந்தத் தாழ்த்தப்பட்ட மகனும் மற்றும் உயர்சாதி இந்து மக்களைப் போலப் புக, சமுகமாயிருக்க, அல்லது வணங்கச் சரிநிகர் சமமான உரிமை யுடையன் என்பதையும், அங் ஙனமன்றிச் சமய வழக்கமெதையுமோ அல்லது பாரம்பரிய மெதையுமோ ஆலய அதிகாரி எவர்தாமும் எடுத்துக் கூறிக் குறித்த பிரத்தியேக இடமொன்றைச் சுட்டிக்காட்டி அதற்கப்பாற் செல் லாது நின்று வணங்கும்படி கட்டளையிட முடியாது என்பதையும் தெற்றெனத் தெளிவுபடுத்துகின்றது.

4 (1) எனும் பிரிவு இச் சட்டம் தடுக்கும் குற்றச் செயலொன்று புரியும் நோக்கத்துடன் வணக்க ஸ்தலமெதிலும் நிறுவப்பட்டு அல்லது வைக்கப்பட்டு இருக்கும் தடை அல்லது முட்டுக்கட்டையை அகற்ற அல்லது அகற்றுவிக்கவும், அதே நோக்கத்துடன் பூட்டப் பட்ட படலை அல்லது கதவைத் திறக்க அல்லது திறப்பிக்கவும் நகரகாவல் (பொலிஸ்) உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரம் அளிக் கின்றது.

இப் பிரிவின் 2 ஆம், 3 ஆம் உப பிரிவுகள் இச்சட்டம் தடுக்கும் குற்றச் செயலொன்றினைச் செய்வானென எண்ணக்கூடிய எவனை யும் நகரகாவல் (பொலிஸ்) உத்தியோகஸ்தர்கள் பிடிகட்டளை (விருந்து) இன்றிச் சிறைப்படுத்தி நகரகாவல் நிலைய (பொலிஸ் ஸ்ரேசன்) நிருவாக உத்தியோகஸ்தரின் காவற் பொறுப்பிற் கொடுக்கலாமென்றும். அங்ஙனம் கொடுக்கும்போது மஜிஸ்தி றேற்றுக் கோட்டில் முறையே தோற்றப் பிணைகாரருடன் அல் லது பிணையின்றிப் பொருத்தனை உறுதியொன்று முடிப்பித்துக் கொண்டு அப்பேர்வழியை அந்நிருவாக உத்தியோகஸ்தர் விடுதலை செய்யவேண்டும் அல்லது சிறைப்படுத்தி இருபத்து நான்கு மணித் தியாலத்துக்குள் மஜிஸ்திறேற்றிடம் ஒப்புவிக்க அல்லது ஒப்புவிக் கச்செய்யவேண்டு மென்றும் விதிப்பதுடன், அங்ஙனம் ஒப்புவிக்கப் படும் பேர்வழியை விளங்கிக் குற்ற நடவடிக்கைச் சட்டத் தொகுதி (கிறிமினல் புறொசீட்யர் கோட்) யின்கீழ் நன்னடத்தையும் சமா தானமும் பேணும்படி கட்டுப்படுத்தக் குறித்த மஜிஸ்திறேற்றுக்கு அதிகாரமும் அளிக்கின்றது.

---

குறிப்பு: இவ்விடயம் இலங்கைத் தமிழரசுக்கட்சித் தீண்டாமை ஒழிப்புக் குழுத் தலைவர், அமரர் சி. கதிரவேலுப்பிள்ளை அவர் களாலும், சட்ட நிபுணத்துவம் வாய்ந்த தந்தை செல்வா அவர் களாலும் விதந்தோம்பப்பெற்றுச் ''சுதந்திரன்'' பத்திரி கையில் வெளியிடப்பட்டது.

---

1978ஆம் ஆண்டு ஆனிமாதம்
வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையார் கோவில் சம்பந்தமாக
யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்குச் செய்த மனுவுடன் அனுப்பப்பெற்ற

# உத்தேச பிராது (Draft Plaint)

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

## 1917ஆம் ஆண்டில் 9ஆம் இலக்கத்துடன் இயற்றப்பட்ட நம்பிக்கைச்சொத்துச் சட்டத்தின் 102ஆம் பிரிவின்கீழ் தொடரப்படும் வழக்கு

வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையார்
ஆலய பரிபாலன சபையின்

1. தலைவர்: நடராசா நாகராசா
2. செயலாளர்: இளையதம்பி இராசையா
3. பொருளாளர்: கந்தசாமி சிவபாதம் வழக்காளிகள்.

எதிராக

இராமலிங்கம் இரத்தினசபாபதி
''சரஸ்வதி வாசா''
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

எதிராளி.

1979ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி சட்டத்தரணி திரு. வ. இராசநாயகம் மூலம் செய்யப்படும் வழக்காளிகளின் முறைப்பாடு அல்லது பிராது கூறுவதாவது :–

*(1)* மேற்சொல்லிய கோவிலும், அதற்குரிய சொத்துக்களும், அவ்வாலயம் சம்பந்தமாக வழக்குத் தொடரும் மேற்சொன்ன பரிபாலன சபையும் இந் நீதிமன்றத்தின் நீதி விசாரணைப் பகுதிக் குள்ளேயே இருப்பதுடன், இவ்வழக்குக்குரிய ஏதுக்களும் குறித்த விசாரணைப் பகுதியிலேயே எழுந்துள்ளன.

*(2)* குறித்த மனம்பராய்ப் பிள்ளையார் கோவில் இற்றைக்கு ஏறக்குறைய 175 வருடங்களுக்கு முன்னே ஊரவர்களிடமிருந்து பொருள் சேகரித்து, ஊர்ப் பொதுக் கோவிலாக அமைக்கப்பட்டது.

*(3)* அப் பொதுமை அடிப்படையிலேயே ஊர்ப்பொதுச் சைவ மக்கள் ஒருங்கு சேர்ந்து தினசரிப் பூசையையும், திருவிழாக்களை யும் செய்துவந்தனர்; இப்போதும் அங்ஙனம் செய்து வருகின்றனர்.

*(4)* அப் பொதுமை அடிப்படையிலே 1965 – 1971 என்னும் காலத்தில் இலட்சக் கணக்கான பணம் செலவழிக்கப்பட்டு குறித்த ஆலயம் மேற்கே ஆதிமூலத்திலிருந்து கிழக்கே ஸ்தம்ப மண்டபம் ஈறாக (சுற்றுமதிலுடன்) புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

*(5)* 1972 இல் குறித்த ஆலயத்தையும், அதற்குரிய அசை வுள்ள, அசைவற்ற சொத்துக்களையும் நிர்வகித்துப் பரிபாலிக்கப் பரிபாலன சபையொன்று (அஃதாவது இவ் வழக்காளிச் சபை) அமைக்கப்பட்டுச் சென்ற ஏழு வருடங்களாகச் செவ்வனே இயங்கி வருகின்றது.

*(6)* குறித்த ஆலயத்துக்குரிய ரூபா 1500/– கிரயமாக, திருநெல்வேலி திரு. காசிநாதர் இராமலிங்கம் என்பவர் பலாலி இறையில் உள்ளதும், ‘‘சிலும்பிலாசிட்டி’’ என்னும் பெய ருடையதும். நிலப்பரப்பு 40 விசாலமுடையதுமான தோட்டக் காணியையும், அதே இறையிலுள்ளதும், ‘‘மாளலைசிட்டி’’ என் னும் பெயருடையதும், நிலப்பரப்பு 18½ விசாலமுடையதுமான பனங்காணியிற் சொரியலாய் ⅓ பங்கையும், மயிலிட்டி இறையி லுள்ளதும், ‘‘அம்பலப்புலம்’’ என்னும் பெயருடையதும், நிலப்பரப்பு 24 விசாலமுடையதுமான பனங்காணி முழுவதையும் குறித்த விநாயகப் பெருமானுக்குக் குறித்த இராமலிங்கம் இரத் தினசபாபதியை (அஃதாவது எதிராளியை) நிர்வாகியாகக் காட்டி, 1919ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ஆம் திகதி உறுதிவரைஞர் திரு. தி. சிவசிதம்பரம் முன்னிலையில் 7450 ஆம் இலக்கத்தில் நிறை வேறிய சாதனமூலம் அறுதி எழுதினர்.

(7) குறித்த எதிராளி ''சிலும்பிலாசிட்டி'' என்னும் தோட்டக் காணியில் உள்ள கிணற்றிலும், தூர்வையிலும் ½ பங்கைச் சட்டவிரோதமாகவும், குறித்த ஆலயத்துக்கு நம்பிக்கைத்துரோகமாகவும், தனது சகோதரி அருணாசலம் இராசநாயகம் மனைவி சொர்ணம்மாவுக்கு 1939ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ஆம் திகதி உறுதிவரைஞர் திரு. சி. சுப்பிரமணியம் முன்னிலையில் 7483ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதியால் நன்கொடை அளித்துள்ளார். இதுமாத்திரமன்றி, அக்காணியினின்றும் கிடைத்த குத்தகைப் பணம் முழுவதையும் குறித்த ஆலயத்துக்குச் செலவழியாமல் ஒருபாகத்தைச சுவீகரித்ததுடன், அக் குத்தகைப் பணக் கணக்கைக் குறித்த ஆலயபரிபாலன சபைக்கு (அஃதாவது இவ் வழக்காளிச் சபைக்கு) க் காட்டவும் தவறியுள்ளார்.

(8) குறித்த எதிராளி குறித்த ''மாளலை சிட்டி'' என்னும் காணியை நீதிமன்றத்தின் அனுமதியில்லாமலும், மற்றும் பங்காளர்களாகிய தனது மக்களுக்கும், தனது சகோதரர்களுக்கும் சாதகமாகவும், குறித்த ஆலயத்துக்குப் பாதகமாகவும் நிந்தம் பிரிவிடுதல் செய்துள்ளார். அதுமட்டுமன்றி, குறித்த காணியிலுள்ள பனைமரங்கள் எல்லாவற்றையும் சட்டவிரோதமாகத் தறித்து விற்று, குறித்த சபைக்கு (அஃதாவது இவ் வழக்காளிச் சபைக்கு)க் கணக்குக் காட்டாது அப் பணத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

(9) குறித்த எதிராளி குறித்த ''அம்பலப்புலம்'' என்னும் காணியிலுள்ள பனைகளைக் குறித்த ஆலய பரிபாலன சபையின் தீர்மானத்துக்கு மாறாகவும், சட்டவிரோதமாகவும் தறித்து விற்று, அப் பணத்தைக் குறித்த சபைக்குக் கணக்குக் காட்டாமல் சுவீகரித்துள்ளார்.

(10) 1926ஆம் ஆண்டில் சின்னத்தம்பி சபாரத்தினம் மனைவி விசாலாட்சி என்பவர், மயிலிட்டி இறையிலுள்ளதும், ''நைவாரி'' என்னும் நாமமுடையதும், நிலப்பரப்பு 9⅜ விசாலமுடையதுமான நல்ல புன்செய்க் காணியையும், அதே இறையில் உள்ளதும், ''மந்திரம்பிராய்'' என்னும் பெயருடையதும், நிலப்பரப்பு 5 விசாலமுடையதுமான தோட்டக் காணியையும், பலாலி இறையில் உள்ளதும், ''நொங்கசிட்டி'' என்னும் பெயருடையதும், நிலப்பரப்பு 5 விசாலமுடையதுமான தோட்டக்காணி முழுவதையும், அதேயிறையிலுள்ளதும், ''சூணச்சை'' என்னும் பெயருடையதும். நிலப்பரப்பு 28 விசாலமுடையதுமான பனங்காணியில் 12½ பரப்பையும், வயாவிளான் இறையிலுள்ளதும், ''விராவத்தை'' என்னும் பெயருடையதும், நிலப்பரப்பு 3 விசாலமுடையதுமான பனங் காணியையும் 1926ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19ஆம் திகதி உறுதிவரைஞர் திரு. சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் முன்னிலையில் 8033ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதியால் (அவரின் தாயார் சின்னத்தம்பி கைம்பெண் தெய்வா

ளைப்பிள்ளையையும் குறித்த இராமலிங்கம் இரத்தினசபாபதியை யும் நிர்வாகிகளாகக்காட்டிக் குறித்த விநாயகர் ஆலயத்துக்குத் தருமசாதனம் செய்துள்ளார்.

*(11)* குறித்த ''நைவாரி'' என்னும் காணியில் ஒரு பாகம் பலாலி ஆகாயவிமான நிலையத் தேவைக்கு அரசினரால் 1949ஆம் ஆண்டில் அறுதி விலைக்கு எடுக்கப்பட்டபோது அரசினராற் கொடுக் கப்பட்ட நட்ட ஈட்டுப் பணத்தையும், அதற்கு முன் கொடுபட்ட குத்தகை நட்ட ஈட்டுப் பணத்தையும், குறித்த எதிராளி இராம லிங்கம் இரத்தினசபாபதி சுவீகரித்துக்கொண்டார்.

*(12)* இத் தப்பிதமான செயல்கள் மட்டுமன்றிக் குறித்த சபா ரத்தினம் மனைவி விசாலாட்சியின் தருமசாதனத்திற் சொல்லப் பட்டிருக்கும் மண்டலாபிஷேகத்தையும், பங்குனி உத்தர விழாவை யும் எதிராளி இராமலிங்கம் இரத்தினசபாபதி செய்யத் தவறி யுள்ளார்.

*(13)* குறித்த திருப்பணி வேலை தொடங்கும்போது குறித்த ஆலயத்துக்குரிய காணிபூமிகளை யெல்லாம் குறித்த பரிபாலன சபைக்கு (அஃதாவது இவ் வழக்காளிச் சபைக்கு) உறுதி எழுதுவ தாக வாக்குப்பண்ணிய எதிராளி, அவ்வாக்குறுதியை நிறைவேற் றத் தவறியுள்ளார்.

*(14)* குறித்த வாக்குறுதியை நிறைவேற்றும்படி இவ் வழக்கா ளிச் சபை எதிராளியை வற்புறுத்தியபோது, அவர் குறித்த சபையி னின்றும் விலகி அச்சபையைக் குலைக்க வீணே முயற்சித்தார்.

*(15)* இவை மாத்திரமல்லாமல், குறித்த இராமலிங்கம் இரத் தினசபாபதி என்பவர் சில உறவினர்களுடனும் அன்டார்களுடனும் சேர்ந்து குறித்த ஆலய பரிபாலன சபைக்கு (அஃதாவது இவ் வழக்காளிச் சபைக்கு) மாறுகச் சதித்திட்டமிட்டுக் குறித்த ஆலயத் தின் அபிவிருத்தி பாதிக்கப்படும்முறையில் அடாத செயல்கள் பல புரிந்து வருகின்றனர்.

ஆகவே வழக்காளிகள்,

*(அ)* குறித்த இராமலிங்கம் இரத்தினசபாபதி என்பவர் குறித்த நம்பிக்கைத்துரோகமான செயல்களையும் தப்பி தங்களையும் செய்துள்ளார் எனத் தீர்ப்பு வழங்கி, அப் பிழையான செயல்களுக்கெல்லாம் குறித்த ஆலய பரி பாலன சபைக்கு (அஃதாவது இந்த வழக்காளிச் சபைக்கு) நட்ட ஈடாக ரூபா 50,000/- கொடுக்கும்படி கட்டளை இடும்படியும்,

(ஆ) 1972 ஆம் ஆண்டு தொடக்கம் நாளதுவரை குறித்த ஆலயத்தைச் செவ்வனே பரிபாலித்துவரும் குறித்த ஆலய பரிபாலன சபைக்கே (அஃதாவது இந்த வழக் காளிச் சபைக்கே) குறித்த ஆலயத்தையும் அதற்குரிய

அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்கள் அனைத்தையும் நிர்வகித்துப் பரிபாலிக்கும் சம்பூரண உரித்து என்றென்றும் உண்டெனத் தீர்ப்புக்கட்டளை வழங்கும்படியும்,

(இ) குறித்த நம்பிக்கைச் சொத்துக்களை ஆண்டு புழங்கி வருமானம் அனுபவிக்கும் அல்லது குத்தகைக்கு விட்டுக் குத்தகைப் பணம் பெறும் உரித்தையிட்டு எக்காலத்திலாயினும் எத்தகைய பிரச்சினையும் ஏற்படாவண்ணம், குறித்த இரு உறுதிகளிலும் சொல்லப்பட்டிருக்கும் குறித்த ஆதனங்களைக் குறித்த ஆலயபரிபாலன சபைக்கு உரித்தாக்கும் கட்டளை (Vesting Order) இடும்படியும்,

(ஈ) இன்னும் இந் நீதி மன்றத்துக்குச் சரியெனத் தோன்றும் மற்றும் நிவாரணங்களையும் அளிக்கும்படியும்,

(உ) வழக்குச் செலவு வழங்கும்படியும் இதனால் தாழ்மையுடன் வேண்டுகின்றனர்.

**ஆதன அட்டவணை :**

| | | | |
|---|---|---|---|
| 1, | பலாலியிறை | ''சிலும்பிலாசிட்டி'' நிலப்பரப்பு 40. | இஃதடங்கலும் |
| 2. | பலாலியிறை | ''மாளலைசிட்டி'' நிலப்பரப்பு 18½. | இதிற் சொரியலாய் ⅓ பங்கு |
| 3. | மயிலிட்டியிறை | ''அம்பலப்புலம்'' நிலப்பரப்பு 24. | இஃதடங்கலும் |
| 4. | ,, | ''நைவாரி'' நிலப்பரப்பு 9⅝ | ,, |
| 5. | ,, | ''மந்திரம்பிராய்'' நிலப்பரப்பு 5. | இஃதடங்கலும் |
| 6. | பலாலியிறை | ''நொங்கசிட்டி'' நிலப்பரப்பு 5. | ,, |
| 7. | ,, | ''சூணச்சை'' ,, 28½. | இதிற் சொரியலாய் 12½ பரப்பு |
| 8. | வயாவிளானிறை | ''விராவத்தை'' நிலப்பரப்பு 3. | இஃதடங்கலும். |

**வ. இராசநாயகம்**
சட்டத்தரணி

---

வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையார் கோவிற்
பரிபாலன சபையினரைப் பார்த்துப் பாடியது

**கலித்துறை**

**மானம்ப ராய்ப்பிள்ளை யார்கோவில் ஊர்ப்பொதுவாய் இருந்திடினும்**
**தானதர்மம்வாய்ந்துமுன்னெம்காசிநாதர்குடும்பத்தார்விநாயகர்க்குத்**
**தானம்செய் காணிபல கருத்திருத்திச் சந்ததியார் பிழைபொறுத்தக்**
**காணிகளைச் சாட்டுவரேல் நும்சபைக்குத் தலைமையென்றும் நல்குகவே.**

வயாவிளான், மானம்பராய்ப் பிள்ளையார்கோவிற் பரிபாலன சபையின்
முன்னுட் தலைவர் திரு. இ. இரத்தினசபாபதி அவர்கள்
இந்நாள் வீணே இயக்க முயலும்

# போலித் தர்மகர்த்தாக்கள் சபையும்

ஷை ஆலய விடயமாய் அன்னுர் முடித்துள்ள

# பொறுப்பாளர் நியமன உறுதி விமர்சனமும்

எம்மூர்ச் சகோதர சகோதரிகளே !

மேலேயுள்ள திரு. இரத்தினசபாபதி அவர்கள் கீழேயுள்ள பதினைவருக்கும் '' தர்மகர்த்தாக்கள் '' என மகுடநாமம் சூட்டி, அவர்களொவ்வொருவருக்கும் 18-12-79இல் வீணே பின்வருமாறு ஓர் அறிவித்தல் செய்திருந்தார்.

## தர்மகர்த்தாசபை ஆலோசனைக் கூட்ட அறிவித்தல்

அன்புடையீர் !

வயாவிளான் - மானம்பராய்ப் பிள்ளையார் கோவிலின் பரிபாலனத்தின் பொருட்டு, கோவிலுக்குரிய காணிகள் யாவற்றையும், வயாவிளான் மக்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்றவர்களிடையே இருந்து, பதினைந்து பேரைக் கொண்ட தர்மகர்த்தாக்கள் சபை ஸ்தாபிக்கப்பட்டு, அரசாங்கக் காணிப் பதிவுக் கந்தோரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாங்கள் இச்சபையில் ஒரு அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரியத் தருகின்றேன். இக் கடிதம் கிடைத்ததும், தங்கள் சம்மதத்தினைத் தயவுசெய்து அனுப்புவதுடன், மேற்படி சபையின் ஆரம்பக்கூட்டம் எதிர் வரும் 23-12-79 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் திரு. கு. கதிரேசு அவர்களது இல்லத்தில் நடைபெற இருப்பதால், சமுகம் தருமாறும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தங்கள் விசுவாசமுள்ள
இ. இரத்தினசபாபதி

குறிப்புரை :

காணிப் பதிவுக் கந்தோரில் காணியுறுதிகள் பதியப்படுவதேயன்றி, தர்மகர்த்தாக்கள் சபைகள் பதியப்படுவதில்லை என்க. அத்தகைய சபைகள் பதியுமிடம் பொதுநம்பிக்கைச் சொத்துப் புரவலர் அலுவலகம் ஆகும்.

குறித்த பதினைவருள் பலர் மேற்காணும் அறிவித்தலை எமக்குக் காட்டி எமது ஆலோசனையைக் கேட்டபோது, ஓரளவு ஆலோசனை கூறிவிட்டு, சம்பந்தப்பட்ட உறுதியைத் தேடிக் கண்டு உண்மைப் பிரதி பெற்று, அவர்கட்கு மாத்திரமன்றி மற்றும் பொது சனங்களுக்கும் சம்பூரண சட்ட ஆலோசனை கூறுவாம் என யான் சொன்னதுண்டு. அதன் பிரகாரம் அவ்வுறுதியின் உண்மைப் பிரதியை அரசினரிடமிருந்து பெற்று, நீங்கள் யாவீரும் நேரடியாக நன்கு வாசித்து விளங்கக்கூடியவண்ணம் உள்ளதை உள்ளவாறு கீழே தருகின்றும்.

## பொறுப்பாளர் நியமனம்

**2631**

*4—10—1979*

இத்தாற் சகலரும் அறிக யாழ்ப்பாணம் வயாவிளான் இரமலிங்கம் இரத்தினசபாபதி ஆகிய நான் வயாவிளான் மானம்பராய் என்னும் காணியில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பிள்ளையாருக்கு 1919ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ஆம் திகதி த. சிவசிதம்பரம் முகதாவில் 7450 ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப் படியும், 1926ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19ஆம் திகதி சி. சுப்பிரமணியம் முகதாவில் 8033ஆம் இலக்கத்தில் முடிந்த உறுதிப் படியும் உரிய தர்மசாதன ஆதனங்களையும் கோயில் முகாமையாளரும் உரிமைக்காரரும் சொந்தக்காரரும் நிர்வகிக்கும் பொறுப்பாளரும் என்ற முறையில் எனக்குப் பின் குறித்த ஆதனங்களையும் கோயில் முகாமையையும் சரிவர நிர்வகித்து ஆட்சிசெய்ய எனது குறித்த ஆதனங்கள் பரம்பரை பரம்பரையாக எனது குடும்பத்தினராலேயே சொந்தக் காணியாக ஆட்சிசெய்யப்பட்டு வந்துள்ள படியாலும் முற்றுரிமை எங்களுக்கே உடையபடியாலும் இவ்வாதனங்களையும் குறித்த கோயில் முகாமையையும் மேற்பார்வை செய்யும் பொறுப்பையும் உள்ள நயம் சோந்தை உரித்து யாவற்றையும் எனது குடும்ப அங்கத்தவர் ஒருவருக்குக் கொடுக்கவேண்டியிருப்பதாலும் அவ்வாறு அவற்றை மேற்பார்வைசெய்யும் பொறுப்பையும் அவ்வாதனங்களில் எனக்குள்ள நயம் சோந்தை உரித்தையும் ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவராக எனது மகன் இரத்தினசபாபதி சுவாமிநாதனே சிறந்தவரெனக் கருதுவதாலும்,

இத்தாற் சகலருமறிக இராமலிங்கம் இரத்தினசபாபதியாகிய நான் கீழ் ஆதனடாப்பில் விபரிக்கப்படும் ஆதனங்களை வயாவிளான் மானம்பராய் என்னும் காணியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் பிள்ளையாரின் நன்மைக்காகக் குறித்த ஆதனங்களில் இருந்து வரும் வருவாயைப் பாவிக்கும் உரித்தையும் நிர்

வகிக்கும் பொறுப்பையும் எனது மகன் இரத்தினசபாபதி சுவாமி நாதனுக்குக் கையளிக்கிறேன்.

மேற்படி தர்மசாதன ஆதனங்களை இரத்தினசபாபதி சுவாமி நாதன் ஒழுங்காகவும் திறமையாகவும் நிர்வகிப்பதன் பொருட்டுப் பின்வருவோரை உதவியாளராக நியமிக்கிறேன்.

1. இரத்தினசபாபதி சுவாமிநாதன், 2. இராமலிங்கம் நடராசா, 3. கதிரிப்பிள்ளை சிவலிங்கம், 4. குருநாதி கதிரேசு, 5. கா. தம்பர் முத்தையா, 6. இராமலிங்கம் கனகலிங்கம், 7. வன்னிய சிங்கம் மனோகரன், 8. வல்லிபுரம் கணபதிப்பிள்ளை நடராசா, 9. கதிரிப்பிள்ளை சின்னத்தம்பி சுப்பிரமணியம், 10. சண்முகம் கருணாநிதி, 11. சின்னத்துரை தாயுமானவர், 12. முத்து சிவஞானம், 13. சரவணமுத்து இளையதம்பி, 14. ஆறுமுகம் நாகேந்திரம், 15. வேலுப்பிள்ளை சின்னையா.

உதவியாளருக்குள் ஏற்படும் வெற்றிடங்களுக்குப் புது உதவியாளரை நியமிக்க உதவியாளரின் ஆலோசனையுடன் இரத்தின சபாபதி சுவாமிநாதனுக்கு அதிகாரம் உண்டு. அத்துடன் இவர்களுக்குப் பின்னரும் முகாமையாளர்களை இவரே தமது சந்ததியில் உள்ள ஒருவரை நியமிக்க உரிமையுண்டு.

குறித்த இரத்தினசபாபதி சுவாமிநாதன் ஆகிய நான் குறித்த பொறுப்புக்களை நேர்மையாகக் குறித்த பிள்ளையாரின் நயத்துக்காகச் செயல்படுத்துவேன் என்று விளம்பி ஏற்றுக்கொள்கிறேன்.

## குறித்த ஆதன டாப்பாவது:

1. பலாலிஇறை சிலும்பிலாசிட்டி நில. பர. 70. மேற்படி கற்பூரக்கடவை நில. பர. 20. ஆக மொத்தம் நில. பர. 90. இதில் மேற்குப்புறமாக நில. பர. 40. கிணறும், தூர்வையிலுள்ள தென்னை மரங்கள் ஆறும், மற்றும் பயிர்வகைகளும். இந்த நிலப்பரப்பு நாற்பதுக்கும் எல்லை கிழக்கு மிகுதிக்காணி. வடக்கு வேலு தாமருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு தம்பையா பெண் ஐயாத்தைப்பிள்ளையின் ஆதனம். தெற்கு அம்பலவி முருகருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இந்த எல்லைக் காணி அடங்கலும் அதற்குட்பட்டவைகளும்.

2. ஷ இறை ''மாளலசிட்டி'' நி. பர. 18½யும் பனைகளும். சொரியலாய் மூன்றில் ஒரு பங்கு.

3. மயிலிட்டி இறை ''அம்பலப்புலம்'' நில. பர. 24. பனைகளும், புளிகளும். அடங்கலும்.

4. வயாவிளான் இறை ''விராவத்தை'' நில. பர. 3ம், வடலிகளும். அடங்கலும்,

5. மயிலிட்டி இறை ''நைவாரி'' நில. பர. 9. இதடங்கலும்.
6. ஷெ இறை ''நுங்கசிட்டி''. நில. பர. 5. இதடங்கலும்,
7. பலாலி இறை '' மந்திரம்பிராய் '' நில. பர. 5. இதடங் கலும்.
8. மேற்படி இறை ''சூணேச்சி'' நில. பர. 31. பனேகளும், வடலிகளும். இதடங்கலிற் சொரியலாய் நில. பர. 12. குளி 6 (செய்பயிர் நீக்கி). இதற்குரிய பனேகள் வடலிகளும்.

இதற்கத்தாட்சியாக இவ்வுறுதி முடிப்பவராகிய நாங்கள் இதிலும் இதுபோன்ற வேறிரண்டு பிரதிகளிலும் கொக்குவிலில் இருந்து ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு ஐப்பசி மாதம் நாலாம் திகதியாகிய இன்று எமது கையொப் பங்களே வைக்கிறோம்.

சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1. இ. நடராசா | பொ. காங்கேயன் | இ. இரத்தினசபாபதி |
| 2. கா. த. முத்தையா | பிரசித்த நொத்தாரிசு | இ. சுவாமிநாதன் |

**விமர்சனம் :**

1. பொதுவாக நோக்குங்கால், மேற்காணும் சாதனம் போதி யளவு வாக்கிய இலக்கண அமைவு, பொருள் விளக்கம், முரண் பாடின்மை, சட்டநுணுக்கம், தக்க சாட்சியுடைமை என்பன இலதாய்க் காணப்படுகின்றது.

2. முன்னுரையில் கோவில் முகாமையாளரும், உரிமைக் காரரும், சொந்தக்காரரும், நிர்வகிக்கும் பொறுப்பாளரும் தமது குடும்பத்தினரே எனப் பொய்யுரை கூறி, அத் தப்பிதமான அடிப் படையிலேயே திரு. இ. இ. அவர்கள் மேற்போந்த சாதனத்தை முடித்துள்ளார். தனக்குப்பின் இளேய மகன் திரு. இ. சுவாமி நாதன் அவர்களுக்குக் கோவில் முகாமையும் அதற்குரிய காணி களே நிர்வகிக்கும் உரிமையும் செல்லவேண்டுமென்பதும், அம் மகனுக்குப் பின் சந்ததி சந்ததியாக அம்முகாமையும் உரிமையும் தனது வம்சாவழியினருக்குப் போகவேண்டுமென்பதும் திரு. இ. இ. அவர்கள் விருப்பமெனக் காணப்படுகின்றது. ஆயின், ஆக்கியோ னின் கருத்தை எடுத்துக்காட்டும் முக்கிய பாகத் (Operative Part) தைப் பார்க்கும்போது, குறித்த ஆதனங்களே நிர்வகிக்கும் பொறுப்பையும் அவற்றின் வருவாயைக் கோவிலுக்கு உபயோகிக் கும் உரித்தையும் அவர் மகனுக்கு வழங்கியிருக்கின்றுரேயன்றிக் குறித்த கோயில் முகாமையை வழங்கினுரல்லர் எனக் கூற வேண்டி யிருக்கின்றது.

3. குறித்த பதினைவருக்கும் கோவில் முகாமையில் எவ்வித அதிகாரமோ உரித்தோ கிடையாது. பின்னை, குறித்த முகாமையாளர் திரு. இ. சுவாமிநாதன் அவர்கள் குறித்த தர்மசாதன ஆதனங்களை ஒழுங்காகவும் திறமையாகவும் நிர்வகிக்க உதவி செய்வதே அவர்களது கடமையாகும். ஆதலினுற்றுன், திரு. இ, இ. அவர்கள் அப்பதினைவரையும் மேற்காணும் சாதனத்தில் தர்ம கர்த்தாக்கள் என அழைக்காது, உதவியாளர் என அழைக்கின்றுர். உண்மை இவ்வாருக, குறித்த பதினைவருள் ஒரு சில ஏமாளிகள் ஏமாற்றிகளாக மாறி, ''எங்கள் பிள்ளையார் கோவிலைத் திரு. இ. இ. அவர்கள் ஊரவர்களுக்குரிய பொதுக் கோவிலாகத்தானே கருதி, எங்களைத் தர்மகர்த்தாக்களாக நியமித்துள்ளார். எங்கள் சபையைக் காட்டிலும் எங்களுக்கெதிராக நிற்கும் பரிபாலன சபை எவ்வகையிற் சிறந்தது?'' எனக் கூறிப் பொதுமக்களிடையே வீண் பொய்ப்பிரசாரம் செய்கின்றனர். இம்மதியிலிகளுக்கும் இவர்களின் துர்ப்புத்தியைக் கேட்டு நிற்போருக்கும் யாம் இடித்துக் கூறுவது யாதெனில், மேற்படி பரிபாலனசபை பொதுமக்கள் கூடி நிறுவியது. அச்சபையினருக்கு மேற்படி ஆலயத்தையும் அதற்குரிய அசைவுள்ள அசைவற்ற சொத்துக்கள் அனைத்தையும் நிருவகித்துப் பரிபாலிக்கச் சகல அதிகாரமும் தத்துவமும் உண்டு. அச்சபையின் நிர்வாகிகள் பொதுமக்களால் ஆண்டாண்டுதோறும் தெரிவுசெய்யப்படுவர். பொதுமக்கள் வருடாந்தக் கூட்டத்திலோ அல்லது விசேட கூட்டம் கூடியோ அவர்களைப் பதவியினின்றும் நீக்க இயல்வர். ஆகவே, பொது மக்களுக்கு மறுமொழி கூற வேண்டிய பொறுப்பினை உணர்ந்து, அவர்கள் பொதுநலம் என்றும் போற்றி நிற்பர். இனி, மறுபக்கத்திலுள்ள திரு. இ. இ. அவர்களின் உதவியாளர்சபையை ஆராயுமிடத்து, அச்சபையினருக்குக் கோவில் நிர்வாகத்தில் எட்டுணையும் உரித்து இல்லை. மேற்கூறியாங்கு அசைவற்ற சொத்துக்களை முகாமையாளர் ஒழுங்காகவும் திறமையாகவும் நிர்வகிக்க உதவி புரிவதே அவர்களது கடமையாகும். அவ்வுரித்துத்தானும் அசைவுள்ள சொத்துக்களைப் பொறுத்தவரையில் இலதாகும். வெற்றிடங்களுக்குப் புதிய உதவியாளரை மற்றைய உதவியாளரின் ஆலோசனையுடன் குறித்த முகாமையாளர் நியமிப்பார். பொதுசனங்கள் அவர்களை நியமிக்கவோ நீக்கவோ உரித்துடையரராகார். ஆகவே, பொதுமக்களைப் பொருட்படுத்தாது, பொதுநலம் போற்றுது, தங்களுக்குப் பதவி அளித்த முகாமையாளரையே திருப்திப்படுத்தும் நோக்குடன் அவருக்கு இதமாகக் குறித்த உதலியாளர்கள் நடப்பார்கள்.

4. திரு. இ. இ. அவர்கள் 2ஆம், 3ஆம் காணிகளிற் தறித்த பனைகளை ஷெ உறுதியிற் காட்டியமை பிழையாகும்.

5. மேற்கூறியவண்ணம் உறுதியெழுதித் திரு. இ. இ. அவர்கள் மேற்படி கோவிலைத் தமது குடும்பச் சொத்தாக்க முடியுமா? என யாரேனுங் கேட்பின், ''இல்லை! ஒருபோதும் இயலாது!'' எனத் திடமாகக் கூறுவாம். முதற்கண், ''மேற்காணுமாறு உறுதி எழுதச் சட்டப்பிரகாரம் திரு. இ. இ. அவர்களுக்கு எத்தகைய உரித்தும் கிடையாது'' என்போம். அத் திடமான துணிபுக்குரிய நியாயங்கள் பின்வருமாறு:-

(அ) ஊரவர்களின் காணியில், ஊரவர்களிடமிருந்து பொருள் சேகரித்தே ஷெ கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) கோவில் பொதுவென்றே பலபாகங்கள் பல புண்ணிய சீலர்களின் உபயங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

(இ) ஆலயம் ஊரவர் அனைவருக்கும் பொதுவானது என்னும் அடிப்படையிலேயே ஆதியிலிருந்து தினசரிப் பூசை, மகோற்சவம், சாதாரண திருவிழா முதலிய நித்திய நைமித்திய கருமங்கள் நிகழ்ந்து வருகின்றன.

(ஈ) இவ்வடிப்படையிலே காணிகள் மாத்திரமன்றி, விக்கிரகங்கள், ஆபரணங்கள், திருவாசிகள், பட்டுக் குடைகள், சாமரைகள், ஆலவட்டங்கள், வாகனங்கள், சகடை, மணிக்கூடு, சட்டவிளக்குகள் முதலியனவும் பொதுமக்களால் தரும நன்கொடை செய்யப்பட்டுவருகின்றன.

(உ) இப் பொதுமை அடிப்படையிலேயே காலத்துக்குக்காலம் ஊர்மக்கள் கூடிப் பணம் சேகரித்துத் திருப்பணி வேலைகள் செய்து கும்பாபிஷேகங்கள் நடாத்தி வருகின்றனர்.

(ஊ) இறுதியாக, 1965—1971 என்னும் திருப்பணிக்காலத்தில், மேற்கே கர்ப்பக்கிருகம் தொடக்கம் கிழக்கே ஸ்தம்ப மண்டபம் ஈறுகப் பழைய கோவிற் கட்டிடம் முழுவதும் இடிக்கப்பட்டு, இலட்சக்கணக்காகப் பொது மக்களின் பணம் செலவிட்டுப் புதிய கோவிற் கட்டிடம் அமைக்கப்பட்டபோது, எத்தகைய பிரச்சினைக்கும் எதிர்காலத்தில் இடமளிக்காமல் ''இவ்வாலயம் ஊர்ப் பொது'' என்னும் ஆலய நெறிமுறைக் கருங்கற் சாசனம் திருப்பணிச் சபையினரால் ஏகோபித்துத் தரிசன மண்டபத்தின் மேற்குச் சுவரில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது.

(எ) 1972ஆம் ஆண்டில் பொதுமக்கள் கூடிக் கோவிலையும் அதன் சொத்துக்களையும் பரிபாலிக்க முறைப்படி ஓர் ஆலய பரிபாலனசபையை நிறுவியுள்ளனர்; அதன் தலைவராக திரு. இ. இ. அவர்கள் 7 வருடம் இருந்துள்ளார்.

(ஏ) கோவில் ஊர்மக்களுக்கெல்லாம் பொதுவாக இருந்து வருகின்றமையாலேயே, ஊர்ப்புரோகிதத்துக்கும் கோவிற் பூசைக்கும் அன்னியோன்னிய ஒற்றுமை உண்டாகி, குறித்த ஊர்ப் புரோகித வருவாயை முன்னிட்டுப் பூசகருக்கு ஒரு மட்டான சம்பளம் அன்றுதொட்டு இன்றுவரை கொடுக்கப்பட்டுவருகின்றது.

(ஐ) இவைமாத்திரமன்றி, ''சிலும்பிலாசிட்டி'', ''மாளலை சிட்டி'', ''அம்பலப்புலம்'', ''நைவாரி'' முதலிய காணிகள் சம்பந்தமாய்ச் செய்யப்பட்ட நம்பிக்கைத் துரோகச் செயல்கள் எப்பொழுதும் திரு. இ. இ. அவர்களுக்கு மாறுக நிற்கும்.

ஆகவே, பொதுசன அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாது, பொதுமக்களின் பகைமையைப் பெற்று, அவர்களின் ஆதரவின்றி, அவர்களுக்கு எதிராக மேற்கூறிய ஆலயத்தைத் தமது தனிப்பட்ட கோவிலாக நடத்த முயல்வது இறுதியில் வீண் பகற்கனவாக முடியுமென்பதை இப்பொழுதாயினும் நன்கு உணர்ந்து, தமது பேரிலுள்ள கோவிலாதனங்களை யெல்லாம் மேற்படி பரிபாலன சபைக்கு எழுதும்படி திரு. இ. இ. அவர்களுக்கும், அங்ஙனம் அவர் எழுதும்போது அவருக்கும் அவருக்குப்பின் அவரின் சந்ததியினருக்கும் மேற்படி பரிபாலனசபைத் தலைமைப் பதவியை அளிக்கும்படி குறித்த பரிபாலன சபையினருக்கும் நல்லாலோசனை கூறுகின்றோம்.

இங்ஙனம்

தங்கள் சமூகசேவைக்கும் சமயத் தொண்டுக்குமுரிய
**வல்லிபுரம் இராசநாயகம்**

வயாவிளான், சட்டநூலறிஞரும், சமாதான நீதிபதியும்,
*4-4-1980.* வயாவிளான்–பலாலி சைவபரிபாலனசபைத் தலைவரும்

முன்னுள் ஷீ மானம்பராய்ப் பிள்ளையார் கோவிற்
பரிபாலன சபைத் தலைவராக விளங்கிய

## திரு. இ. இரத்தினசபாபதி அவர்களைப் பார்த்துப் பாடியது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

ஆனைமுகன் கோவிலினை உள்ளிட்டெம் ஏழுதலம்
ஆக்கிவைத்தார் நம்மானம் பராயார் முன்னுள்
ஆனநல்ல ஆலயத்தில் அன்னவரும் இப்பற்றில்
நாலுதலை முறையாக உடையா வேலை
மானமுடன் பார்நின்றன் மூதாதை மார்களுமே
தனியுரிமை சாதியாது பொதுமை காத்தார்;
ஏனிந்நாள் வீணுக வழக்காடு கின்றீர்? நின்
மக்கணன்கு நிருவகிக்க மாட்டார் காணே!

முன்னாள் மேற்படி
மானம்பராய்ப் பிள்ளையார் கோவிற் திருப்பணிச் சபைத் தலைவர்
**அமரர் திரு. சி. கதிரிப்பிள்ளை அவர்களை விளித்துப் பாடியது**

நேரிசை வெண்பா

தந்திமுகன் கோவிற் திருப்பணி மன்றுக்கு
முந்திமக்கள் தேர்ந்துநிதி சேர்தலைவ! — சொந்தமென
மக்களுக்கு மாறாய் இரத்தினண்ணல் வாதாடல்
மிக்கபிழை யென்றே விளம்பு.

மேற்படி ஆலயத்தில் எழுதப்பட்டிருக்கும் போத வசனங்கள்

1. குடியரசு ரீதியிலிக் கோவில் திகழ
அடியார்கள் ஆவசெய்க ஆய்ந்து.

2. இலட்சக் கணக்கிலளி மக்கள் உரிமை
அலட்சியம் பண்ணற்பாற் றன்று.

**வயாவிளான் திரு. பொன்னர் நாகமுத்து கந்தசாமி அவர்களையும் மற்றும் ஆலய பரிபாலகரின் மெய்ச் சேவையையும் வியந்து பாடியது**

நேரிசை வெண்பா

கந்தசாமி என்னும் சுருட்டு முதலாளி
தந்திமுகன் மெய்த்தொண்டன் ஆகின்றான்—இந்தநாள்
அன்னவனும் மற்றுமுடன் தொண்டரும் ஆலயத்தை
நன்கு நடாத்துகின்றார் காண்.

மலாக்கா முன்னாள் வைத்தியர்
**திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி அவர்களை வியந்து பாடியது**

கலித்துறை

பன்னரிய விவேகானந்த சுவாமிநூல்கள் கற்றசின்னத் தம்பிமேதை
தன்னுத்தி யோகத்தை விட்டிராமக் கிருஷ்ணமடம் சேரவெண்ணிப்
பின்னரில்ல றம்படிந்து மருத்துவர்கள்இருவரினைப் பயந்துதந்தோன்
இந்நாளில் விநாயகர்க்குப் புதுமணிக்கோ புரந்தந்தான் இனிது
காண்மின் !

நல்ல சமய சமூக சேவை ஆற்றுபவரும்
தனது நண்பரும் ஆகிய

**நவாலி, முதலியார் வ. மகேசன் அவர்களை**
**விளித்துப் பாடியது**

நேரிசை வெண்பா

*சாற்றரிய கோவிற் திருப்பணிகள் செய்யுமன்ப!*
போற்றிடுவோம் ஐயைக் கிறிஸ்தவர்போல்—சாற்றவொண்ணுப்
போதனையும் கூட்டுத் தியானமும் கீர்த்தனையும்
போதிப்போம் செய்யுங்கள் என்று.

மலாக்கா திரு. வ. சின்னத்தம்பி அவர்களையும்
சண்டிருப்பாய் திரு. ச. இளையதம்பி அவர்களையும்
மற்றும் நல்லிகிளானையாரையும்

**பார்த்துப் பாடியது**

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

*"அறமது மறத்தை வெல்லும்; அதர்மிகள் அழிவர்" என்மெய்*
*சிறப்புற மானம் பூவென் திருவிழாச் செய்து காட்டி*
*அறநெறி நிற்கும் நல்லி கிளானையீர்! சூரன் போரின்*
*சிறந்தவுட் பொருளைக் கூத்தன் கோவிலில் விளக்க நன்றே!*

முன்னுள் பண்டாரவளைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும்,
சிறந்த சைவாபிமானியும், கோடிப் பிரபுவுமான

**வதுளை, வழக்குரைஞர் திரு. க. வே. நடராசா அவர்களை**
**விளித்துப் பாடியது**

*நின்னிடத்தில் நானிருந்தால் நீத்துடலம் செல்லமுன்னர்*
*தென்கதிரை வேளைத் தியானித்து—அன்னவனின்*
*ஆலயத்தை இந்துக்கள் ஆலயம் ஆக்கிடுவேன்*
*சாலவுழை சட்டறிஞ ரோடு.*

**கொழும்பு தமிழ் வழக்குரைஞர் சங்கத்தினரை**
**நோக்கிப் பாடியது**

*இந்துமதம் இன்றமிழ்ச் சாகியம் காத்திட*
*முந்தியெழும் நம்வீர சிங்கங்காள்!—இந்துமத*
*ஏழுபடை வீட்டிலொன்றும் ஏமகூடம் தன்னையிந்நாள்*
*மீளுக இந்துமதத் தோர்க்கு.*

கதிர்காமம்பற்றி இந்துக்கள் எல்லோரையும்
இந்துமதம் பேணுகின்ற சகல தாபத்தினரையும் விளித்துத்
தயவாக வேண்டுவது

**கலித்துறை**

201259

இந்துக்கள் பகிரங்க கூட்டங்கள் கூடியெங்கும் மற்றுமெங்கள்
இந்துமதம் புரக்கின்ற இயக்கங்கள் பொதுக்கூட்டம் கூடியும்நம்
இந்துக்கட் கேமகூடம் உரித்தாக்கத் தீர்மானம் நிறைவேற்றிப்
பிந்தாமல் அரசினருக் கனுப்பலொடு பேட்டிநன்கு காணுகவே!

## வயாவிளான் கண்ணகையம்மன் கோவிலுக்குமுன்
## இதுவரை செய்யப்பட்டுவந்த உயிர்ப்பலியை
# இவ்வாண்டு தொடக்கம் நிறுத்துதல்

**சகோதர சகோதரிகளே !**

நிகழும் கீலக வருடம் ஆனி மாதம் 5ஆந் திகதி (18-6-68) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில், வயாவிளான்-பலாலி தெற்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில், கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில், காங்கேசன்துறைப் பகுதி நகர காவல் நிலையப் பிரதம அதிகாரி திரு. ஆர். ஹரத் அவர்களினதும், அக் காவல்நிலையத்தைச் சேர்ந்த பரிசோதகர் திரு. தேவசகாயம் அவர்களினதும், வலிகாமம் வடக்குப் பகுதிக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் அவர்களினதும் முன்னிலையில் நிகழ்ந்த மேற்படி கோவில் அடியார்களின் பகிரங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறிய தீர்மானங்களைப் பொது மக்களின் விஷயஞானத்துக்கு இதனல் அறியத் தருகின்ருேம்.

1. இவ்வருடம் தொடக்கம் இப்பகுதியில், அஃதாவது வயாவிளான்-பாலாலிதெற்கு என்னுங் கிராமப்பகுதியில், மேற்படி கோவில் முன்றிலில் அல்லது வழிவெட்டுமிடத்தில் அல்லது குறித்த கோவிலுக்கு அண்மையில் (வேறெந்தக் காணியிலாயினும்) உயிர்ப்பலி எதுவுஞ் செய்யப்படாது கைவிடப்படவேண்டும்.

2. குறித்த உயிர்ப்பலிக்கு எதிராக 18-6-68இல் நிகழ்த்தத் திட்டமிட்டிருந்த பொதுக்கூட்டமும், 22-6-68இல் செய்யத் திட்ட

STACKS

மிட்டிருந்த சத்தியாக்கிரகமும் பொதுமக்களின் பரஸ்பர ஒற்றுமையும் சமாதான வாழ்வுங் கருதி முற்ருகக் கைவிடப்பட வேண்டும்.

*3.* குறித்த கண்ணகையம்மனுக்கோ அல்லது பாதாள வைரவருக்கோ அல்லது வேறெந்தத் தெய்வத்துக்கோ உயிர்ப்பலி செய்ய ஆடு, கோழிகளை நேர்ந்தவர்கள், குறித்த ஆலய முகாமையாளரோடு பேசிக் குறித்த ஆடு, கோழிகளை உயிரோடு கோயிலுக்கென அவரிடம் ஒப்படைக்கவேண்டும். அவற்றைக் குறித்த முகாமையாளர் உயிரோடு விற்றுப் பணத்தைக் கோவில் நிதிக்குச் சேர்க்க முழு உரிமையுமுடையவராவர்.

*4.* குறித்த கோவில் நிர்வாகம், பூசை நன்கு நடப்பதற்கு இக்கிராமப்பகுதி மக்கள் குறித்த முகாமையாளருடன் சேர்ந்து நிர்வாகசபை அமைத்து, நிதி திரட்டத் தகுந்த ஒழுங்குகள் செய்ய வேண்டும். இக்கூட்டம் இன்று தொடக்கம் ஒரு மாதத்திற்குப் பின், இரண்டு மாதம் முடியமுன், குறித்த பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் கூட்டப்பட லேண்டும்.

*5.* மேற்கூறிய நான்கு தீர்மானங்களுக்கும் முரண்பாடாக அத்துமீறி நடப்பவர்கள்மீது குறித்த நகர காவற்பகுதியினரும் மற்றும் அரசினரும் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இந்த ஐந்து தீர்மானங்களும் உடனடியாக அச்சிடப்பெற்றுப் பிரசுரஞ் செய்யப்படவேண்டும்.

இங்ஙனம்

**வ. நீலப்பிள்ளை**
*ஷெ கோவில் முகாமையாளர்*

**சி. கதிரவேலுப்பிள்ளை**
கோப்பாய்த் தொகுதிப் பா. உ.

**வ. இராசநாயகம்**
*சமாதான நீதிபதி*

வயாவிளான், *18-6-1968.*

# வயாவிளான் கண்ணகை அம்மன் கோவில்
# உயிர்ப்பலி மறுப்புச் சத்தியாக்கிரகம்

சைவாபிமானம் வாய்ந்த சகோதர, சகோதரிகளே !

எமது பகுதிச் சைவமக்கள், 1968ஆம் ஆண்டு யூன் மாதம் 18ஆம் திகதி, எம்மூர்க் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில், எமது கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில், வலி-வடக்குக் காரியாதிகாரியினதும், காங்கேசன்துறைப் பகுதி நகர காவல் நிலையத் தலைமைப் பரிசோதகரினதும் முன்னிலையில் கூட்டங் கூடி, மேற்படி ஆலயத்தில் இனிமேல் உயிர்ப்பலி செய்வதில்லை யென ஏகமனதாகத் தீர்மானித்ததும், அத் தீர்மானம் பொது மக்கள் யாவரினதும் விஷயஞானங் கருதி மேற்படி கோவில் முகாமையாளரினதும் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினரினதும் கையெழுத்துக்களுடன் அச்சிட்டு வெளியிடப்பட்டதும், மேற்படி தீர்மானத்தின்பின் குறித்த ஆலயத்தில் எத்தகைய உயிர்ப்பலியும் நிகழாமல் இருப்பதும் நீங்கள் யாவீரும் நன்கறிந்த உண்மை களாகும்.

இப்பொழுது ஒருசிலர் குறித்த தீர்மானத்தை மீறி எங்க ளூரவர்கட்கும், எங்கள் சமயத்தவர்கட்கும் மீண்டும் பெருங் கறையை உண்டுபண்ண முயல்கின்றனராதலால், அவர்களது தீய முயற்சியை எதிர்த்துத் தடுக்க, வருகிற வெள்ளி, சனி வாரங்களில் (1970ஆம் ஆண்டு யூன் மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில்) குறித்த கோவில் முன்றிலிற் சத்தியாக்கிரகஞ் செய்ய எங்கள் இயக்கத் தினரும் இப் பகுதியிலுள்ள மற்றும் நன்மை விருத்திச் சங்கங் களைச் சேர்ந்தவர்களும் வேண்டிய கூட்டு முயற்சிகளைத் தீவிரமாகச் செய்து வருகின்றனர்.

ஆகவே, மேற்சொல்லிய உயிர்ப்பலியை எதிர்த்து எம்முடன் சேர்ந்து சத்தியாக்கிரகஞ் செய்ய விரும்பும் சகோதர சகோதரிகள் அனைவரும், வருகிற புதன்கிழமை (24–6–70) முற்பகல் 10 மணிக்கு முன் எழுத்துமூலம் விண்ணப்பஞ் செய்து எமது அனுமதியையும், எமது இயக்க இலச்சினையையும் தாமதமின்றிப் பெறும்வண்ணம் இத்தால் தயவாக வேண்டப்படுகின்றனர்.

இங்ஙனம்,

தங்கள் ஒத்துழைப்பை நாடும்

செ. சின்னத்துரை (தலைவர்)
கு. வல்லிபுரம் (உபதலைவர்)
நா. சிதம்பரநாதன்
அ. பாலச்சந்திரன் } (இணைச்செயலாளர்கள்)
க. சி. சுப்பிரமணியம்
க. பஞ்சலிங்கம் } (பொருளாளர்)
வ. இராசநாயகம் (காப்பாளர்)

(வயாவிளான்-பலாலி உயிர்ப்பலி நிறுத்த இயக்கச் செயற்குழுவுக்காக)

வயாவிளான்,
17–6–70.

### வயாவிளான்

## தோலகட்டிச் செபமாலைத்தாசர் ஆச்சிரமத்தின்

# பொன்விழாவிற் பாடியது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

''ஆயபல மதங்களுள்ளே அரிதெம் மார்க்கம்
அதன்மூலம் தான்பரனை அடைய லாம்''என்
தீயகுறு கொள்கையினைத் தேர்ந்து கண்டி
சுவாமிவிவே கானந்தர் சமுத்தி ரத்தை
ஆயபல நதியனைத்தும் அடைதல் போல
அரனையெய்தும் மதங்களென்மெய் ஓர்ந்தெம் மூரில்
ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத் தெட்டில்
ஆச்சிரமம் வகுரிஷியை நினைவு கூர்வாம்!

கருதரிய முனிவரெனத் தூரத் தேயும்
காண்பவரைக் கருதிடச்செய் தோற்ற முள்ளோன்;
அருள்நோக்கும் அன்பொழுகும் சொல்லும் வாய்ந்தோன்;
அமலனடி அடைவிக்கும் ஆன்ம நேயன் ;
அருள்சமய நூல்களெல்லாம் அறவே கற்றோன் ;
அனைவருக்கும் அவைவிளக்கும் ஆற்றல் ஆர்ந்தோன் ;
பொருள்வருவாய் தனிலுமருள் வருவாய் வேண்டும்
புண்ணியனார் தோமாசுச் சுவாமி போற்றி !

எண்ணரிய தெய்வீக இயல்பு வாய்ந்த
எம்மகாத்மா தோமாசுத் தவத்தர் கோமான்
உண்ணுமுண வைக்குறைத்து ஊனுண் நீக்கி
உடல்தன்னை ஓயாமல் உழலச் செய்து
மண்ணினிலே மனிதபவம் போக்க மற்றும்
சீடருடன் தபசுசெபம் நிதமும் செய்து
உண்மையிலே இறைவனடி பலரை உய்த்தார் ;
உரைக்கவொண்ணு இவர்தொண்டு நீடு வாழி ! !

'' கருத்தாவின் சிருட்டிகளே ! துதிக்க வாரீர் !!
கருத்தாவைப் புகழ்ந்தேத்தீர் !! '' என்று பாடிக்
'' கருத்தாவே ! எங்களது பாவ மெல்லாம்
கமித்தருள்வீர் ! பவம்மீண்டும் செய்யா தெம்மைத்
திருத்திடுவீர் ! '' என்றுமுழங் காலில் நின்று
தினமுமிராப் பகலாகத் தியானம் செய்து
கருணையினைக் கடவுளிடம் பெற்று மக்கள்
கடைத்தேற வழங்கிடுமாச் சிரமம் வாழி !

வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவனுக்கு

**அடியார் நலம் கருதி அவர்களுக்கு வசதியான ஒரு குறித்த நேரம் பூசை செய்தல்**

**வெண்பா**

வேண்டுதல் வேண்டாமை இல்லாற்குப் போசனம்
வேண்டுமெனப் பூசை செயல்மடமை—வேண்டவருள்
மக்களொன்ருய்க் கூட வசதியாய் ஓர்நேரம்
எக்காலும் ஓம்பிநிற்றல் நன்று.

இந்தநாள் மக்கள் வசதியுன்னி நாடோறும்
அந்திசந்திப் பூசை செயல்போதும்—இந்தநாள்
மத்தியானப் பூசைக்கு மக்கள் வரமாட்டார்
தத்தம் தொழில்விட்டுக் காண்.

## திரோதான சத்தியும் சிறுபிள்ளை வாதமும்

(சைவசித்தாந்த மாணவன், திரு. வ. இராசநாயகம் அவர்கள்)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

முன்னேயான் கொழும்பிற் சட்டக் கலூரியிற் பயிலுங் காலை
சின்னவோர் இனத்த பையன் மலாய்நாடு செல்லும் போது
அன்னைய ளோடு வந்தென் விடுதியிற் பேசும் வேளை
என்னேயோ நொண்டு கின்ருர்; யாரிவர்க் கடித்த தென்ருன்.

அன்னையள் வந்த தைந்தில் சிறுபிள்ளை வாதம் என்ருள்;
சின்னவன் சும்மா என்ருன்; அடித்தவர் கடவுள் என்றேன்;
அன்னவர் துன்பம் செய்யார்; அவர்மிக நல்லர் என்ருன்;
என்கன்மம் தாக்கிற் றென்றேன்; இதுவும்பொய் என்று சொன்ஞன்.

அந்நாளச் சிறுவன் கேட்ட வினுவுக்கு விடையான் காணப்
பன்ஞளா ராய்ச்சி செய்தேன்; கிறீஸ்தவர் முஸ்லிம் மக்கள்
கன்மமென் றென்று இல்லை; கடவுளின் சித்தம் யாவும்
அன்னவன் சித்தம் தாரில் நிறைவேறல் நல்ல தென்ருர்.

ஆதியிற் பார பட்சம் காட்டிடும் தேவன் ஈற்றில்
பூதலம் தன்னில் நாம்செய் புண்ணிய பாவம் நோக்கி
நீதியே செலுத்து வாரென் றெண்ணுதல் எங்ஙன் என்று
போதத்திற் சிறந்தோர் என்னும் புத்தர்பால் அறியச் சென்றேன்.

கடவுளென் றொருவன் உள்ளான் எனநாங்கள் துணிதற் கில்லை ;
திடமாகக் கன்ம மென்று செப்புதற் கொன்று உண்டு ;
படிமிசை துன்பம் செய்து வருத்து'துன் பழைய கன்மம் ;
கடவுளை விட்டுச் செய்க நிர்வாண தியானம் என்றார்.

அறிவிலா அசித்தாம் கன்மம் ஆன்மாவை வருத்தல் எங்ஙன்?
அறிவுள்ள பதியே கன்மப் பயனினை ஆன்மா துய்த்துப்
பெறுநல்ல அனுப வத்தாற் திருந்திடச் செய்வர் அன்பால் ;
இறையிங்ஙன் செயுங்கால் அஃதைத் திரோதான சக்தி என்பர்.

ஆதலின் எம்மல் லற்கு ஏதுவா யிடினும் கன்மம்
நாதனே அதனை ஆன்மா புசிக்கச்செய் கின்றார் ஈற்றில்
தீதெலாம் ஒழிந்தவ் வான்மா தன்னடி சேரும் வண்ணம்;
ஈதுமெய் உணர்வோர் தம்மை நொந்திறைக் குரைப்பர் நன்றி.

இன்னணம் சித்தி யாரில் யான்கண்ட மெய்யை முன்னே
என்னுடன் வாதம் செய்த இனத்தவற் கெழுத நன்றி
அன்னவன் கூறிச் சைவ மடாலயம் அமைக்கத் தந்தான்
தன்பெருப் பிதாமார் மூலம் தனம்சாலத் தமைய னோடே.

அன்னவன் யாரோ என்னின் வயவையிற் கடவுட் பட்டம்
மன்னுதம் பையர் பேரன்; சுப்பிர மணியர் மைந்தன்;
பன்னரும் சிங்கப் பூரில் மேனிலைக் கலூரி ஆசான்;
உன்னரும் தில்லைக் கனக சபாபதிப் பெயரோன் காணீர்!

இந்தவா சிரியன் பொல்லா இவ்வாண்டின் ஆரம் பத்தில்
இந்தமே தினியைவிட்டு ஏகினன் என்னும் செய்தி
பிந்தியான் அறிந்து நொந்து பிரார்த்தித்தேன் அவன்சாந் திக்காய்
இந்தநீள் உலகில் நல்லோர் இளமையில் மறைதல் ஓர்ந்தே!

குறிப்பு: நிர்வாணதியானம் என்பது மாப்பிள்ளை இன்றிக் கலியாணம் நிகழ்த்துதல் போல, பரம்பொருளைச் சிந்திக்காது தங்கள் ஆன்மாவைச் சூனியமாக்கப் புத்தசமயிகள் செய்யும் வீண் போலித் தியானமாகும். சித்தியார் என்பது சைவசமயிகள் யாவரும் விரும்பிக் கற்கவேண்டியதும், எளிதிற் படித்துணரத் தக்கதுமான சிவஞானசித்தியாரைக் குறிக்கும். இதுவே உண்மைச் செகசோதியாகும்.

கொழும்பில் பம்பலப்பிட்டி பிளாசா மண்டபத்தில்

## 1931இல் அகில இலங்கை வாலிபர் மகாநாடு அமைக்கப்பட்டபோது பாடியது

**பல்லவி**

பார்க்கிறோம்! பார்க்கிறோம்!! பாதகராம் வெள்ளையரைப்
பாரினிலே இக்கணமே நாமொருகை பார்க்கிறோம்!!!

**சரணங்கள்**

வெளிப்படுத்தித் துரத்தவென்று வெளியேவந்தால் நாமுமே
வெடிகுண்டு வாள்துவக்கு வெறும்புருடா ஆகுமே! — பார்க்கிறோம்

பரசீவி களாமிவர்கள் எங்களுட்டு மக்களை
வறுமையிலே தள்ளிவிட்டு வாழுகிறார் மகிழ்ந்துமே!—பார்க்கிறோம்

தேயிலையும் இறப்பரும் செய்வதற்கெம் பூமியைச்
சுவீகரித்துக் கொண்டெமது சுதேசிகளை நலிக்கிறார்!—பார்க்கிறோம்

கமத்தொழில் கடற்றொழில் கைத்தொழிலை நாட்டிலே
நமக்காக வளர்க்காது தம்நலமே காக்கிறார்!— பார்க்கிறோம்

நம்நாட்டுக் கைத்தொழில்கள் யாவையும் கெடுத்துமே
தம்நாட்டுப் பொருட்கள்தம்மை வரவழைத்து விற்கிறார்!—பார்க்

எப்பெரிய வணிகமும் இவர்களது கையிலே
செப்பரிய செல்வமெல்லாம் சேர்க்கிறார்தம் நாட்டிலே! — பார்க்

பிரித்தாளும் ஆட்சியைப் பிரிட்டிஷார் கையாண்டுமே
சிரித்துமகிழ் கின்றனர்தம் ஆட்சிமுறை மெச்சியே!— பார்க்கிறோம்

சிங்களரும் தமிழரும் சேர்ந்தொன்றாய்த் திரண்டுமே
எங்களன்னை கால்விலங்கை உடைத்திடுவோம் பார்மினே!—பார்க்

**பல்லவி**

இலங்கா தேவீ! கலங்கா தேநீ!
நின்றனின் மக்கள்நாம் நின்றுயர் களைகுவோம்!

**சரணங்கள்**

புனைமுடி இழந்தாய்! அணிகலம் இழந்தாய்!
அரியணை இழந்தாய்! அவைக்கெலாம் கவலாய்! — இலங்காதேவீ!

கால்விலங்(கு) அவிழ்ப்போம்! விடுதலை செய்வோம்!
அடிமையை ஒழிப்போம்! அரியணை சேர்ப்போம்! — இலங்காதேவீ!

இங்ஙனம் செய்ய இந்நாட்டில் வசிக்கும்
சிங்களர் தமிழர் திரண்டொருங்கு சேர்ந்தோம்! — இலங்காதேவீ

சுதேசக் கைத்தொழிற் பொருட்களை நுகர்வோம்!
விதேசப் பொருட்களை விழியாலும் பாரோம்! — இலங்காதேவி!

கமத்தொழில் கைத்தொழில் கடற்றொழில் வளர்ப்போம்!
திரைகடல் ஓடியும் திரவியம் சேர்ப்போம்! — இலங்காதேவி!

அகிம்சை முறையில் அறப்போர் புரிவோம்!
மகாத்தும காந்திசொல் சட்டமீறல் செய்வோம்! — இலங்காதேவி!

அகிம்சைப்போர் நாம்கோரும் பலனளிக் காவிடின்
பகவதம்சொல் பலாத்காரம் இறுதியிற்கை யாள்வோம்! — இலங்

உள்நாட்டுப் படைப்பெலம் போதாதேல் மற்றும்
வெளிநாட்டு நேயர்தம் உதவியைப் பெறுவோம்!—இலங்கா தேவி!

## 1934இல் பூவரசம் பூந்தோண்டை (Suriyamal Campaign) ப் போற்றிப் பாடியது

### வெண்பா

ஆங்கிலேயர் எம்மை அடிமையாய் வைத்திருப்ப
நாங்களதைப் பற்றிமிகு நாணுது—ஈங்கவரின்
பொப்பிப்பூ வாங்கவெங்கள் பூவரசம் பூவெமக்குச்
செப்புவான் புத்தி சினந்து.

நன்னுட்டு மக்கள் நலந்திவரின் வல்லரசால்
துன்புற்று வாழ்தல் தெரிந்துகொண்டும் — கொன்னேயெம்
நற்பொருளை அன்னியர்க்கு நாடி அனுப்புதலாற்
தற்கொலையே செய்கின்றேம் யாம்.

தங்கணலம் பேணி மகாயுத்தம் புரிந்தவிவர்
எங்கணலம் பேணினர் என்பதெங்ஙன் ?—அங்கிலரின்
ஏகாதி பத்தியத்தால் எங்களுக்கு இன்னலன்றி
ஆகாது நன்மையொன்றும் தான்.

இந்திய சோதரர்கள் சென்றமகா யுத்தத்தில்
முந்திநின்று சேவை செயும்போது — சொந்தரசு
ஈவோம் எனச்சொன்ன ஆங்கிலர்தம் சத்தியத்தை
ஈயளவும் பேணவில்லை இன்று.

எங்களையும் தங்களையும் ஒன்றென் றியம்புமிவர்
எங்களையும் தங்களைப்போல் எண்ணியே—எங்களுக்கு
எல்லாச் சுதந்திரமும் ஈந்து சமத்துவராய்
நல்லாக வாழலா மே!

ஆதலால் அன்பீர்! அடிமைத் தனமொழித்துக்
காதலுடன் சொந்தரசு காண்டற்குச்—சோதரரைத்
தட்டி எழுப்புங்கள் தாய்நாட்டுக் குற்றபணி
இட்டமுடன் செய்ய எழுந்து!

பூவரசம் பூக்கூறும் புத்திமதி கேட்டவிளம்
பூவையரும் வாலிபரும் கூடியே—சேவைசெய
முற்படும் வேளை முனைந்து உடன்பிறப்பீர்!
உற்சாகம் செய்ய அவர்க்கு.

இன்னவர்கள் இவ்வாண்டில் என்னபணி செய்தாரென்
றென்னைநீர் கேட்பில்யான் கூறுவேன்—நன்னாட்டுத்
தீண்டாத பையனொன்றைப் பள்ளிக்கு வைத்தவற்கு
வேண்டியன செய்கின்றார் தேர்ந்து.

பற்றுள்ள மின்றிப் பரும்பிரிட்டிஷ் ஏகாதி
பத்தியத்தின் மாசரிதை கூறும்நூல்—தற்போது
நன்னாட்டுப் பாஷைகளில் நன்கெழுதப் பெற்றிருக்'குச்
சின்னாளில் ஏறுங்காண் அச்சு.

இன்னுமிவர் நன்னோக்கம் எவ்வளவோ உண்டவற்றை
நன்கு செயலிற் கொணர்தற்கு—நன்னாட்டுச்
செல்வர்காள்! நீவிரெலாம் தேசீயப் பற்றோடு
நல்குவீர் நாடிப் பணம்!

மாதா வயிறெரிய மாகே சுரபூசை
ஏதமின்றிச் செய்தாலும் இன்றுபயன்—ஆதலால்
பொப்பிப்பூ வாங்கலிலும் பூவரசம் பூவாங்கல்
செப்பமுடைத் தென்றெண்ணு வீர்.

— 'ஈழகேசரி' *4-11-34*

1940ஆம் ஆண்டில் யாழ்ப்பாண வாலிபர் மகாநாட்டுத் தலைவர் திரு. ச. பேரின்பநாயகம் அவர்களுக்குத் தத்தம் செய்த விடுதலை வெண்பாவில் அழியாது மிஞ்சியிருக்கும் ஒரு செய்யுள்

**வெண்பா**

நன்னாட்டு மக்கள் நலிவின்றி வாழ்ந்திட
நன்னாட்டை நாமாள வேண்டுங்காண்—எந்நாளும்
தத்தம் கருமத்தைத் தாம்தாம் நிருவகித்துச்
சித்தம்போற் செய்வதே மேல்.

1972இல் அவரை நினைத்துப் பாடியது

காந்திஜியில் அன்புகொண்டு ஈழத்துக்(கு) அழைத்துக்
காந்தீயம் யாழ்நாட்டிற் தோற்றுவித்தோய்!—காந்தீயம்
சிங்களவர் மத்தியினிற் செவ்வன் பரவிலதால்
எங்களுக்கு இக்கீழ் நிலை.

முன்னாள் அரசாங்க சபை அங்கத்தவராகவும்,
பின்னாள் தபால், தகவல் அமைச்சராகவும் விளங்கிய

## அமரர் திரு. சு. நடேசன் அவர்களுக்கு
## நன்றி கூறியது

### நேரிசை வெண்பா

சோழ வளநாட்டிற் தோன்றிநன்கு கற்றுயர்ந்து
ஈழத்திற் கல்விமானாய்த் தொண்டுசெய்தோய்!—ஈழப்
பெருமகனார் சேரிராம நாததுரை தேர்ந்த
மருமகனே! வாழ்கநின்றன் தொண்டு.

கன்னங் கராவென்னும் கல்வி அமைச்சருக்குப்
பன்னரிய பக்கதுணை யாயிருந்து—இந்நாட்டில்
இல்லாரும் கற்க இலவசக் கல்வியினை
நல்லோனே! கொண்டுவந்தாய் நன்கு.

போற்றருமக் கல்வி புகட்ட வயவையிலே
தோற்றுவித்தீர் மத்தியகல் லூரியொன்று—ஏற்றமுறும்
அக்கலூரி நேயரெல்லாம் நின்னொடுநின் மந்திரியை
மிக்கவாழ்த்து கின்றார் வியந்து.

செந்தமிழ்க்கும் சைவசம யத்துக்கும் உள்ளவுயர்
அந்தஸ்தை நம்கல்வித் திட்டத்தே—தந்தென்றும்
நன்றொளிரச் செய்செம்மால்! நல்லிசையும் போற்றிநின்றாய்;
என்றும் மறவோம் நினை.

கல்லடிவேற் பிள்ளைக் கவிஞனை ஞாபிசைவப்
பள்ளியொன்று ஆக்கிப் பதிவிக்க—வில்லங்கம்
உண்டான போததனை வென்றுதந்தீர் கல்லடிக்கு
உண்டாம் புறநடைகள் என்று.

கோப்பாயாண் ஆசிரிய கல்லூரி தன்னையதி
வாய்ப்பார் பலாலிக்கு மாற்றுவித்துக்—கோப்புறவே
பன்னெறிகள் போதியுயர் கல்லூரி ஆக்கிவைத்தீர்!
நின்கந்த சாமிமகா னோடு,

மத்திய நிர்வாக மட்டத்திற் பன்னெறி
உத்தியோகர் தம்மைப் படைத்துதவ—உத்தம
கனிஷ்டசர்வ கலாசாலை யொன்று நிறுவுவித்தீர்
நினதம்மான் பேரதற்கு வைத்து.

சென்றயுத்த காலத்தில் இராணுவத்தோர் மக்களலம்
கொன்றுதோட்டக் காணிகளைப் பற்றுங்கால்—நன்றவர்க்காய்
வாதாடி அன்னோர் குறைகள் நிவிர்த்திசெய்தீர்
ஓதியறம் ஆங்கிலேய ருக்கு.

போனயுத்த தேவைக்கு ராணுவத்தோர் ஆக்கிவைத்த
வானூர்தி நன்னிலையம் தன்னைப்பின்—வானப்
பிரயாணச் சேவை அரசாங்கம் செய்யப்
பிரயோ சனப்படுத்தி னீர்.

வழலாய் இடைக்காடு தம்பாலை மக்கள்
உழல்கின்றார் வீதியின்றி யென்று—அழகியவோர்
வீதி அமைப்பித்தீர் கண்கண்ட மெய்த்தில்லை
நாதனென ஏத்த நினை.

இத்தனையும் செய்தநின்னை எம்மினத்தின் நன்மையுன்னி
விட்டுவிட நேர்ந்தமைக்கு நொந்துள்ளோம்—சுத்தவுள்ளன்
தேசியக் கண்களுக்குச் சேரலர்தம் தீச்செயல்கள்
மாசிலவாய்த் தோன்றிடுதல் மெய்.

தத்துவமோ (இ)லக்கியமோ அல்லால் அரசியலோ
எத்துறை தன்னிலுமே பேசவல்லோய்!—சுத்ததமிழ்
ஆற்றொழுக்குப் போலநின்பால் ஊற்றெடுத்துப் பாயுங்கால்
ஆற்றத்தேன் உண்ணும் அவை.

நாடாளுமன்ற முன்னாள் கோப்பாய்ப் பிரதிநிதி

## அமரர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்களை

## நினைவு கூர்ந்து பாடியது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

சருவகலா சாலைக்கல் லூரி தன்னில்
தமியேனும் நீருமொன்றாய்க் கற்கும் வேளை
அரும்பெருமெம் பாரதத்தில் மகாத்மா காந்தி
ஆற்றுமறப் போர்ச்செய்தி விரும்பிக் கற்று
அரும்பாடு பட்டுநாமும் இலங்கை மாதா
அடிமைக்கால் விலங்கொருகால் அவிழ்ப்பாம் என்று
பிரித்தானி யர்க்கெதிராய் விரதம் பூண்டே
பெரும்பான்மை யாரோடு சேர்ந்து வாழ்ந்தோம்.

அதன்பின்பல் லாண்டுசெல நாற்பத் தாறில்
ஐக்கிய தேசியக் கட்சி தன்னில்
இதமாரச் சேர்ந்துள்ளோம்; அடுத்த ஆண்டில்
அதைவிட்டுத் தமிழர்மா நாட்டிற் சேர்ந்து

அதன்மூலம் நாடாளு மன்றம் சென்று
ஆங்குபொன்னர் தமிழினம்கா வாமை கண்டு
புதிதாகத் தமிழரசுக் கட்சி என்றோர்
கட்சிசெல்வா வுடன்நிறுவிச் செய்தீர் தொண்டே!

அன்னணம்நீர் தொண்டுசெய்யும் நாளில் நீதி
மன்றிலெனைக் கண்டைம்பத் தைந்தாம் ஆண்டில்
இன்னும்நீர் யூ என் பி கட்சி தன்னை
ஆதரித்தல் முறையாமோ? அன்ப! சொல்லாய்!
அன்னவரெம் இந்தியர்க்குத் துரோகஞ் செய்தார்;
கல்லோயா தனைக்கபளீ கரம்செய் துள்ளார்;
இன்னுமெங்கள் மொழிப்பிசகு தீர்ந்த தில்லை;
இன்றேனும் எமைவந்து சேர்க என்றீர்.

அப்பொழுது யான்விம்மிப் பெருமூச் செய்தி
ஐக்கிய தேசியக் கட்சி இங்ஙன்
தப்பிதங்கள் செயுமெனயான் முன்னர் ஓரின்
சமதர்மக் கட்சிதனிற் சேர்ந்தி ருப்பேன்;
இப்பொழுதெம் நடேசருக்குப் போட்டி யின்றி
இடமளித்துக் கட்சியிற்சேர்ப் பீரோ? என்றேன்;
எப்பொழுதும் தயாரென்று சொல்லி விட்டீர்;
அம்மனுஷன் அதற்கந்தோ! இசைந்தா ரல்லர்.

பின்னொருநாள் பேசுங்கால் உம்கட் சிப்பேர்
பின்னமுறச் சிங்களரைச் செய்வ தாலே
அன்னதனைச் சமஷ்டியகற்கட் சியாக மாற்றி
ஆயபிர சாரம்சிங் களத்திற் செய்து
இந்நாட்டிற் சமதர்மம் பேணு வோரின்
ஆதரவைப் பெறமுயல வேண்டும் என்றேன்;
பின்னர்செய் வாம்கட்சி தமிழர் தம்பால்
பெலனுறுங்கால் என்றெம்மைச் சேர்த்தீர் நன்றே!

அன்னணம்நீர் செய்யமுன்னர் மறைந்து போக
ஆவசெய்யா நம்மனோர் விரக்தி யுற்று
முன்னொருகாற் கோரிநின்ற சமஷ்டி விட்டு
முனைகின்றார் தனிநாடு பெறுதற் கிந்நாள்
பன்னரிய கஷ்டமுண்டாம் தமிழர் ஈழம்
பெறுவதிலும் பாதுகாப் பதிலும் என்மெய்
எண்ணஅலை எனச்சுந்தர் சொல்லு வாரே
எம்மனோர்க்கவ் வலைமூலம் உணர்த்து வீரே!

# தமிழரசுக் கட்சியினரின் வீர சுதந்திர முழக்கம்

அடியுதை இடிகட் கஞ்சோம்!
அடக்குநர் மிரட்டற் கஞ்சோம்!
கடியவாள் துவக்குக் கஞ்சோம்!
கடுஞ்சிறை யெனினு மஞ்சோம்!
வெடியணு குண்டுக் கஞ்சோம்!
வெம்படை யெதற்கு மஞ்சோம்!
படிமிசை சுதந்திர வாழ்வு
பரிவுடன் வேண்டும் நாங்கள்

தன்னலம் சிறிதும் பேணோம்!
தமிழினம் வருந்தப் பாரோம்;
மன்னிய சுற்றத் தார்கள்
மறிப்பினும் அவர்சொற் கேளோம்!
பொன்னினைப் பொருளைப் பேணோம்!
போற்றிடோம் உயிரைத் தானும்!
பன்னரும் சுதந்திர வாழ்வு
பரிவுடன் வேண்டும் நாங்கள்.

அடிமையாம் நிலைமை நீங்கச்
சமஷ்டியல் அரசுண் டாக்கல்,
கொடியவேற் றுமைகள் நீக்கிச்
சமதர்ம வாழ்வு காணல்,
முடிபுனை தமிழ்த்தாய் மீண்டும்
அரியணை ஏறச் செய்தல்
படிமிசை எங்கள் சேவா
லட்சிய மாகும் பாரீர்!

இந்தியர் குடிமை யெய்த
இனிதுநாம் உதவி செய்வோம்!
செந்தமிழ்ப் பிரதே சத்தைச்
சிங்களர் தம்நா டாக்கச்
சிந்தித்துத் திட்ட மிட்டுக்
குடியேற்றம் செயாது பார்ப்போம்!
முந்திநின் றிவற்றைச் செய்ய
உடல்பொருள் ஆவி ஈவோம்!

ஓதினேம் எமது நோக்கம்
உணர்ந்தெமைச் சேரு மாறு!
நீதியெம் பக்கம் கண்டு
நிமலனும் உதவி செய்வான்;
ஆதலின் தமிழர் தம்முள்
ஆண்மக்க ளாக வுள்ளோர்
பாதகம் அனைத்தும் தீரிம்
பண்புசால் கட்சி சேர்மின்!

UNIVERSITY OF JAFFNA LIBRARY

1957இல் முன்னுள் கமத்தொழில் கூட்டுறவு அமைச்சர்

## திரு. பிலிப்பு குணவர்த்தனு அவர்களைப் பாராட்டிப் பாடியது

### வெண்பா

பன்னேக்கச் சங்கம் பருக்கின் சமதர்ம
நன்னேக்கம் விர்த்தியாம் நம்பென்று—இந்நாள்
பிரசாரம் செய்து பிலிப்புகுண வர்த்தனுவென்
பெரியோனைப் பாராட்டு வோம்!

நெற்காணிச் சட்டம் பிலிப்புகுண வர்த்தனுவின்
பொற்பார் சமதர்மப் பிள்ளையென்பாம்—உற்பத்தி
செய்கின்ற ஏழை உழவருக்குச் செல்வந்தர்
செய்யார் கொடுமை இனி.

1957இல் முன்னுள் இலங்கைப் பிரதமர்

## திரு. S. W. R. D. பண்டாரநாயக்க அவர்கள் யாழ்ப்பாணம் வந்தபோது அளிக்கப்பெற்ற அறிவுரை

நந்தமிழைப் பண்டார நாயக! நீ போற்றிலையால்
வந்தனம்நாம் செய்கிலமிந் நாள்.

தமிழிரத்தம் பாய்கின்ற சான்ருேனே! ஒப்பில்
அமிழ்தம்காண் எங்கள் மொழி.

உயிருக் குயிரான ஒண்டமிழைப் போற்று(து)
உயிர்வாழா(து) எங்கள் இனம்.

நின்னைப்போல் மற்ருேரை நேசிக்கும் பண்புடையோய்!
நின்னினம்போல் எம்மினத்தை எண்ணு.

ஈரினமும் ஒன்றுபட்டெம் ஈழத்தைப் போற்றிநிற்கத்
தீர்மின்! நம்பாஷைப் பிணக்கு.

அன்னணம்நீர் செய்யின் அகிலமெலாம் எந்நாளும்
நின்னைப் புகழும் நினைந்து.

மாட்சியுற நின்னுட்சி வண்டமிழும் சிங்களம்போல்
ஆட்சியுற வேண்டும் அறி.

நோக்கமன்றி நின்றன் வழிவகையும் சீராகின்
ஆக்கமுறும் நின்றன் அரசு.

புத்தபிரான் போதனைகள் போற்றிநன்கு கற்றவனே!
அத்தனையும் செய்கையிலே செய்.

## 1970இல் பிரதமை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களை விளித்துப் பாடியது

**வெண்பா**

இலங்கைச் சுதந்திரக் கட்சித் தலைவி!
துலங்கிமுன் னேறிடநம் நாடு — இலங்கைத்
தமிழர்முன் செய்தவெண்ணித் தம்மைத்தாம் ஆளச்
சமஷ்டியல் தாரீர் துணிந்து!

இலங்கை ஜனாதிபதி

## திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களைப் பார்த்து

**வெண்பா**

சமதர்மம் தார்மீகம் பேசுகின்ற அண்ணல்!
தமிழரையும் சிங்களர்போல் எண்ணிச் — சமஷ்டி
அரசளிக்க ஏனோ தயங்குகின்றீர்? தூர
திருஷ்டியில்லா நின்போக்கு தீது.

ஆங்கிலேயர் ஆட்சி ஒழிப்பதற்கு உங்களுடன்
நாங்கள் இணைந்துதொண் டாற்றுங்கால்—நாங்களுமிந்
நாட்டிற் சுதந்திரமாய் வாழலாம் என்றுழைத்தோம்;
காட்டிக் கொடுத்தலிந்நாள் தப்பு.

இலங்கைப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்

## கலாநிதி எஸ். விக்கிரமசிங்கி அவர்களுக்கு 1971ஆம் ஆண்டில் எழுதிய கடிதத்தின் சாராம்சம்

**வெண்பா**

பூவரசம் பூந்தொண்டு போலெம் விடுதலைக்கு
ஆவனயாம் செய்யுங்கால் பேரினத்தோர் — நோவமனம்
செய்வரென எண்ணிலோம்; எம்மிடத்தில் உம்மையெண்ணி
மெய்ச்சமஷ்டி தாரீர் விழைந்து!

1971ஆம் ஆண்டில், இலங்கைப் புரட்சிவாதச் சமசமாஜக் கட்சித் தலைவர்

## திரு. எட்மன்ட் சமரக்கொடி அவர்களுக்குச் செய்த வேண்டுகோள்

விக்கிரம சிங்கிகொல்வின் வேணன்ரெறென்ஸ் பிலிப்புகுண
வர்த்தனவே லியன்பெரேரா என்போ ரோடு
உக்கிரமமாய் ஆங்கிலேய ருக்கெதிராய் நாம்செய்த
பூவரசம் பூந்தொண்டை நினைவு றுத்தி
அக்கிரம மாய்நுமர் நம்மவரை நடாத்துவது
அதர்மமொடு நன்றியீனம் ஆகும் என்று
தக்கநல்ல சமதர்மச் சமஷ்டியர சுண்டாக்கச்
சாசுவத சமதர்மி! ஆவ செய்யே!

1971ஆம் ஆண்டில் இலங்கைச் சமசமாஜக் கட்சித் தலைவர்

## கலாநிதி என். எம். பெரேரா அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றின் சாராம்சம்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

சமதர்மக் கட்சி தன்னிற் சேரென எனைத்தூண் டுங்கால்
சமதர்மம் வாய்ந்த உண்மைச் சமஷ்டியற்(கு) இசைவீ ராயின்
சமதர்ம அரசுண் டாக்கத் தமிழினம் உதவும் என்றேன் ;
சமதர்மம் போற்றும் நீவிர் சம்மதித் திலீர்கள் அந்தோ !

## 1971ஆம் ஆண்டில் கோல்வின் ஆர். டி. சில்வா அவர்களுக்குச் செய்த வேண்டுகோளின் சாரம்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

சமதர்மம் பேசும் சான்றோய்! தமிழுக்குச் சமவந் தஸ்தும்
தமிழர்க்குச் சிங்க ளர்போல் சமத்துவ வசதி தானும்
அமைந்திட உதவி செய்வோம் எனமுன்சொல் நினது கட்சி
சமஷ்டியல் யாப்புண் டாக்கித் தாயகம் தன்னைக் காவே!

முன்னாளைய யாழ்ப்பாண வாலிப மகாநாட்டுப் பிரதானிகளுள் ஒருவரும்
முன்னாள் மூதவை உறுப்பினரும் ஆகிய பிரபல நியாயவாதி

## திரு. சோ. நடேசன், Q. C. அவர்களை விளித்துப் பாடியது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

நித்தியமும் சண்டையிடும் ஈரினம்வாழ் இலங்கைக்கு
உத்தமமாம் மெய்ச்சமஷ்டி யாட்சி யென்று
அர்த்தபுஷ்டி யானபல நியாயங்கள் சிங்களர்க்கு
ஆர்வமுண்டாம் வகையினிலே எடுத்துக் காட்டிப்
புத்தகமொன் றெழுதிடநாம் வேண்டு கின்றோம்;
போகுங்கால் என்னேயோ கொண்டு செல்வீர் ?
இத்தொண்டை ஈரினத்தும் நன்மைக்காய்ச் செய்துவைப்பின்
என்றுமும்மை இந்நாட்டார் வாழ்த்து வாரே !

முன்னாள் யாழ்ப்பாண வாலிபர் மகாநாட்டைச் சேர்ந்தவரும்
பின்னாள் பண்டாரவளை நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

## திரு. க. வே. நடராசா அவர்களை விளித்துப் பாடியது

### கலிவிருத்தம்

தண்டமிழில் சைவத்தில் தமிழினத்தில் ஆர்வமுள்ளோய்!
வண்டமிழ்வேற் பிள்ளையென்னும் வரகவியின் பிரியமைந்த!
பண்டார வளைக்குமுன்னாட் பாராளு மன்றத்தோய் !
உண்டுநன்மை சமஷ்டியினால் என்றொருநூல் எழுதுகவே !

முன்னாள் யாழ்ப்பாண வாலிபர் மகாநாட்டு உயிர்நாடியும்
பின்னாள் மூதவை உறுப்பினருமாய்த் திகழ்ந்த

## அமரர் திரு. போ. நாகலிங்கம் அவர்களின் மறைவு குறித்துப் பாடியது

அறுசீர் விருத்தம்

தெல்லியம் பதிவாழ் பொன்னர் துணையிலார்க் களித்த செம்மல்
சொல்லுகாந் தீயம் போற்றிச் சுதந்திரம் வேண்டி நின்றோன்
இல்லவர் இன்னல் தீர்க்கச் சமதர்மக் கட்சி சேர்ந்தோன்
நல்லமூ தவையோ னாகி நாட்டுக்குச் சேவை செய்தோன்.

உன்னிடும் சமஷ்டி எய்த உதவிடின் இன்னோன் கட்சி
மன்னிட ஆட்சி பீடம் உதவுவாம்; முதலில் இந்நாள்
இன்னோனை நாடாள் மன்றம் அனுப்புவாம் நடேச னோடு
என்னயான் அந்தோ! செல்வா நம்பாயக் கட்சி என்றார்.

பின்னாளில் உடுவிற் பற்றுக் கிராமச்சங் கத்துக்(கு) இன்னோன்
பன்னரும் தலைவ னாகிப் பற்பல பணிகள் செய்தான்;
சுன்னாகச் சந்தை தன்னைத் துலங்கிநன் கொளிரச் செய்தான்;
மன்னுநூல் நிலையம் யாத்தான் மலர்ந்திட அறிவு நன்றே!

இந்துக்கல்லூரி உடன் மாணவன்

## திரு. போன். கந்தையா, நா. உ. அவர்களை விளித்துப் பாடியது

கட்டளைக் கலித்துறை

நாடாளு மன்றினிற் பண்டார நாயகம் போற்றுமன்ப!
ஊடாட நல்ல சமதர்மப் போக்கர் உதவியுடன்
கேடாரும் இந்நாள் முதலாளித் தத்துவம் நீக்கலொடு
ஈடாடும் எங்கள் தமிழினம் தாய்மொழி காக்குவையே!

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவரும்,
முன்னாள் கைத்தொழில், கடற்றொழில் மந்திரியும் ஆகிய

## திரு. க. கா. போன்னம்பலம், Q. C. அவர்களின் இறுதி நினைவுப் பாக்கள்

கலிவிருத்தம்

பொன்னம்ப லம்ராம நாதரரு ணாசலமென்
பன்னரிய மகான்கள்போற் சிங்களரோ டொத்துழைத்து
பின்னரதி விரக்தியுற்றுத் தனிநாடு கோரிநின்ற
பொன்னம்ப லப்பெரியோய்! போகுதியோ நமைவிட்டு!

திருச்செல்வம் எனும்சட்ட மேதையாம்நம் செல்வத்தை
இருமாதம் முன்பிழந்தோம்! இவ்வேளை நினையிழந்தோம்!
வருமிடர்கள் எவைவரினும் மனம்தளரோம்! இலட்சியத்தை
ஒருபோதும் நாம்மறவோம்! உரைக்கஇதை நம்மவர்க்கே!

உன்னரிய நுண்மதியோய்! ஒப்பிகந்த சட்டறிஞ!
பன்னரிய பேச்சாளா! பழுத்தவர சியல்ஞானி!
நின்னினத்தை நின்மொழியை நிலைநிறுத்த முயன்றசெம்மால்!
இன்னெருகால் சேரிராம நாதருடன் வருகுதியே!

நேரிசை வெண்பா

ஐம்பதுக் கைம்பதின்றேல் மெய்ச்சமஷ்டி சோல்பரிக்
கொம்மிஷன்பாற் கோராமை குற்றமாம் — உம்மைப்போல்
மற்றேரும் அக்கறைகொண் டாவனசெய் யாமையினுல்
உற்றதையோ! இக்கீழ் நிலை.

முன்னுள் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும்
திருக்கோணமலை நாடாளுமன்ற உறுப்பினரும் ஆகிய

## அமரர் திரு. வ. இராஜவரோதயம் அவர்களை நினைந்து

அறுசீர் விருத்தம்

முப்பதாண் டுகட்கு முன்நின் முத்துக்கு மார்கோட் டத்தில்
ஒப்புடன் உபச ரித்துப் பிரசாதம் தந்து நேயா!
தப்பாமல் முஸ்லிம் மக்கள் சமஷ்டிக்கு இசைவர் என்றீர்;
இப்போ'முற் பார்வை குன்றி இடையூருய் நிற்றல் என்னே!

அடங்காப்பற்று நாடாளுமன்ற உறுப்பினன்

## திரு. சே. சுந்தரலிங்கம் அவர்களைப் பாடியது

வெண்பா

சுந்தர லிங்கமென்னும் சொல்லரிய வல்லோனை
நந்தமிழர் எல்லைப் புறத்தோனுய்க் — கந்தழியாய்
நாடாளு மன்றிலென்றும் போட்டியின்றி விட்டிருந்தால்
கூடாமற் போயிருக்கார் பின்பு.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரிப் பழைய மாணவனும்
1958இல் சகிராக் கல்லூரி முன்னுள் அதிபரும் ஆகிய

## அல்காஜ் A. M. A. அசீஸ் அவர்களுக்குச் செய்த வேண்டுகோள்

நேரிசை வெண்பா

சிங்களர்போற் சோனகரும் தாய்வழி மூலமினம்
எங்களுக்கு என்றுமுன்பும் சொல்வதுண்டு — உங்களது
மூதாதை யர்பெண்கள் கொண்டுவா ராதெங்கள்
மாதரைச் செய்தார் மணம்.

ஈதுமெய்யை உம்மைத் தமிழ்நாட்டில் மாப்பிள்ளைச்
சாதியெனல் நன்கு வலியுறுத்தும் — ஓதரிய
இன்றமிழ் இன்றுமும் தாய்ப்பாஷை யாயிருத்தல்
இன்னுமொரு சான்றும் இதற்கு.

ஆதலினெம் தாய்மொழியை ஓம்பிடவும் சிங்களவர்
பாதகஞ்செய் யாதெம்மைக் காத்திடவும் — போதிய
பாதுகாப்புச் செய்யும் சமஷ்டியென உம்மனோர்க்கு
ஓதுமின் நன்கு விதந்து.

1958ஆம் ஆண்டில்

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கும்

மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா அவர்களுக்கும் கூறியது

**வெண்பா**

தமிழர் அரசாங்க சேவை அமரல்
தமிழர்க்கு நன்மை விளைக்கும்—தமிழுத்தி
யோகரெங்கும் சேவிக்கச் சிங்களம் பின்னரெம்மை
நோகாமற் கற்கவிடல் நன்று.

1966ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சியினருக்கு

**எடுத்துக் கூறியது**

**வெண்பா**

சிறீமாவோ சாஸ்திரி ஒப்பந்தம் தன்னைச்
சிறிதும்யாம் ஏற்கலா காது—சிறீலங்கை
வாசருள் ஆகவெட்டில் மூவரே தக்கரெனல்
மோசம்செய் என்கணித மாம்.

இந்தியர்க்குப் பொன்னர் இழைத்தார் துரோகமென
முந்திநீர் கூறியமை ஞாபகமா?—இந்தியருள்
எட்டிலைந்து பேருக்கு ஏன்துரோகம் செய்கின்றீர்
டட்லிசென நாயகர்சொற் கேட்டு?

இலங்கைத் தமிழர் கூட்டணித் தலைவர்

**உயர்திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், Q. C. அவர்கள்**

*தேர்தல்மூலம் தமது கூட்டணிக் கொள்கைத் திறனைக் காட்ட*

**இலங்கைத் ''தேசிய அரசுப் பேரவை'' உறுப்பினர் பதவியைத் துறந்து**

**யாழ்ப்பாணம் வருகை தந்தபோது பாடப்பட்ட**

# வீர சுதந்திர விருத்தப் பாக்கள்

தாங்கொணு அதர்மம் மிஞ்சித் தருமர்கள் வருந்தும் போது
ஆங்கறம் காக்கத் தோன்றும் அவதார புருஷன் போல
ஈங்குநம் தமிழி னத்தை இழிக்கச்சிங் களவர் செய்யும்
தீங்குக ணின்றும் காக்கும் செல்வா! நம் தந்தாய் !! போற்றி !!!

உங்கள்தம் மொழிமார்க் கம்போல் எம்மொழி மார்க்கம் ஓம்பீர்!
எங்கள்தம் இனத்தை உங்கள் இனம்போலப் பேணீர் என்று
சிங்களர்க் குரைத்துக் கொள்கைத் திரமதைத் தேர்தல் மூலம்
நன்கவர்க் குணர்த்த நாடாள் மன்றத்தை நீத்தீர் நன்றே!

ஈழத்திற் தமிழர் தோற்றம் இராவணன் தோன்ற முன்னும்
ஈழத்தைப் பின்னும் ஆண்டார் எல்லாளன் போலெம் மன்னர்
ஈழத்தின் விருத்திக் காக எண்ணரும் சேவை செய்தோம்;
ஈழத்திற் சிங்க ளர்போல் யாம்சம உரிமை உள்ளோம்!

ஈழமோர் சிறிய தீவு; இயலாது காக்கத் தன்னை;
ஈழமோர் படிய தாகும் இந்தியா தனிற்கால் வைக்க;
ஈழத்தைப் பிடிக்கப் பார்ப்பர் இதரரும் பரதர் தாமும்;
ஈழத்தில் இகலுண் டாகில் எம்விடு தலையோ போகும்!

எங்கள்நல் இலங்கைத் தாய்க்குச் சுதந்திரம் வேண்டித் தொண்டு
சிங்கள மக்க ளோடு செய்யுங்கால் நன்றி கெட்டுச்
சிங்கள மக்கள் அந்தச் சுதந்திரம் தன்னைக் கொண்டே
எங்களை அடிமை யாக்கக் கூடுமென் றெண்ணி லோமே.

புத்தரைப் போற்றும் மக்கள் புத்தர்மைத் திரியம் போற்ருர்;
புத்தபிக் குகளே பொல்லா வகுப்புவா தம்செய் கின்ருர்;
இத்தகு நிலையே முன்னுட் சமதர்மக் கட்சி யென்ருல்
ஒத்துநாம் வாழ்வ தெங்ஙன் ஒருகுடைக் கீழிந் நாட்டில்?

இன்னண மெல்லாம் செவ்வன் எடுத்துநாம் உரைத்த போதும்
அன்னையாய்த் திகழற் பால ஸ்ரீமாவோ உணர்வாள் அல்லள்;
மன்னுமாண் அமைச்சர் தாமும் வருவமுன் உணர்வார் அல்லர்;
பின்னைநாம் அறப்போ ருக்குப் புறப்படு வோமிந் நாளே !

அடியுதை குத்துக் கஞ்சோம்! அடக்குநர் மிரட்டற் கஞ்சோம்!
கடியவாள் துவக்குக் கஞ்சோம்! கடுஞ்சிறை எனினும் அஞ்சோம்!
வெடியணு குண்டுக் கஞ்சோம்! வெம்படை எதற்கும் அஞ்சோம்!
படிமிசை சுதந்த்ர வாழ்வு பரிவுடன் வேண்டும் நாங்கள்.

தன்னலம் சிறிதும் பேணோம்! தமிழினம் வருந்தப் பாரோம்!
மன்னிய சுற்றத் தார்கள் மறிப்பினும் அவர்சொல் கேளோம்!
பொன்னினைப் பொருளைப் பேணோம்! போற்றிடோம் உயிரைத் [தானும்
பன்னரும் சுதந்த்ர வாழ்வு பரிவுடன் வேண்டும் நாங்கள்.

ஓதினோம் தமிழர்க் காவ உணர்ந்துசிங் களவர் செய்ய;
நீதியெம் பக்கம் கண்டு நிமலனும் உதவி செய்வான்;
ஆதலின் தமிழர் நீர்சொல் அகிம்சைப்போர் செய்து வெல்வர்;
வேதனை வணங்கி உண்ணு விரதமோர் சிலர்நாம் நோற்பாம்!

*8-10-1972.*

முன்னாள் தமிழரசுக் கட்சித் தலைவரும்
பட்டிருப்புப் பிரதிநிதியும் ஆகிய

## திரு. M. இராசமாணிக்கம் அவர்களின்
## புத்திமதியைப் போற்றிப் பாடியது

**அறுசீர் விருத்தம்**

உத்தரத் தமிழ ரோடு குணத்தமிழ் மக்கள் சேரின்
நித்திய பிச்சை ஏற்கும் நிர்ப்பந்த நிலைமை நீங்கி
உத்தம வாழ்வு நல்கும் சுதந்திரம் உண்டாம் என்றே
நித்தம்சொல் இராச மாணிக் கனார்புத்தி போற்றி வாழ்வாம்!

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தற்போது பாடப்பட்ட

## தமிழர் சுதந்திரத் தந்தை
# அமரர் செல்வா அஞ்சலி

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

நண்ணலர் என்று நம்மைச் சிங்களர் நலிக்கும் நாளில்
திண்ணிய தியாகம் வீரம் செறிந்தநற் தலைவ னாகி
எண்ணரும் ஈழம் யாக்க உடல்பொருள் ஆவி ஈந்த
அண்ணலே! நின்னை என்றும் அஞ்சலி செய்கின் றோமே!

இலங்கைவாழ் தமிழர் மார்க்கம் இடம்குலம் சுயேச்சை தம்மால்
பலப்பல பிரிவு பட்டுப் பான்மைகெட் டிழியும் வேளை
நலனுற ஈழம் காட்டி நன்கொன்று சேர்நம் செல்வா!
சிலரதைச் சிதைக்கா வண்ணம் தேவனை வேண்டி நில்லே!

நீதவான் மார்போற் தேர்தல் நியமனக் குழுவோர் தாமும்
யாதேனும் பிழைகள் விட்டால் இதுமனு இயற்கை என்னே
தீதொன்றும் கூட்ட ணிக்குச் செயாதெங்கள் தமிழர் ஈழம்
பாஷையிற் பிறழா வண்ணம் பராபரன் தன்னை வேண்டே!

''பாரினில் வடகீழ் ஈழம் தன்னைத்தான் ஆண்ட நாடாம்;
சீருற அதனை மீண்டும் சுதந்திர தேய மாக்க
வாரீர்!'' என் றழைக்க அங்ஙன் வாராது தன்ன லத்தால்
சேரலர் தமைச்சேர் வோரித் தேர்தலிற் தோற்க வேண்டே!

சகத்தினில் பருப்பம் கல்வி சனத்தொகை தனிலெம் நாட்டில்
மிகக்குறை அநேக தேயம் விடுதலை பெறுதல் கண்டு
செகத்தினிற் தமிழர் செங்கோல் செலுத்திடத் துணிந்தார் என்ன
மிகப்பொலி வாக்கால் எங்கள் வேட்பாளர் வெல்லச் செய்யே!

மண்ணில்நீர் விட்டுச் சென்ற வாரிசு அமிர்த லிங்கம்
எண்ணரும் தியாகி வீரன்; இதரவேட் பாளர் தாமும்
கண்ணியம் கடமை கட்டுப் பாட்டினர்; துரோகம் செய்யாப்
புண்ணியர்; இவர்கள் வென்று போயீழம் வகுக்க வேண்டே!

தன்னுயிர் போல மற்றும் மன்னுயிர் தன்னை எண்ணும்
இன்னருள் வாய்ந்தோன் உண்மைச் சமதர்மி; அவன்மெய்ப் புத்தன்
அன்னநற் பண்பு வாய்ந்த சிங்கள அபேட்ச கர்கள்
தென்னிலங் கையில் வெல்லத் திருவருள் வேண்டி நில்லே!

## காந்தீயத்தைப் போற்றிப் பாடியது

### வெண்பா

இந்துமதம் புத்தம் கிறிஸ்துமதம் இஸ்லாமிற்
சிந்தித்துத் தேனீபோற் தேர்வனதேர்—எந்தையார்
காந்திமகான் சொற்பொழிவும் கட்டுரையும் செய்தொண்டும்
காந்தீயம் என்பர் தொகுத்து.

காந்திஜியின் காலத்தில் நாம்வாழ்ந்தோம்; ஈழத்தில்
காந்திஜியை நேரில்நாம் கண்டுள்ளோம்—காந்திஜியின்
சொற்பொழிவு கேட்டுள்ளோம்; அன்னவரின் போதனைபோல்
நிற்கின்றோம் என்றெழுகல் மேல்.

நித்தனை நேரிற் தியானித்(து) உரையாடி
சத்தியாக் கிரகம்செய் காந்திஜிபோல்—சத்தியாக்
கிரகம் திரிகரண சுத்தியுடன் செய்யின்
அரனருளாற் சித்தியுண்டாம் நன்கு.

## 1978இல் காந்தி சேவா சங்கத்தினரை விளித்துக் கூறியது

வெண்பா

காந்தீயம் போற்றுகின்ற காந்திசேவா சங்கத்தீர்!
காந்தீய அம்சமொன்று சொந்தரசு—காந்திமகான்
போதி விடுதலை தமிழருக்கு உண்டாக்க
யாதுசெய்தீர் இந்நாள் வரை?

1977இல்

## தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு உரைத்தது

வெண்பா

தமிழ்நாடோ அல்லாற் சமஷ்டியலோ கோரத்
தமிழ்ப்பிர தேசமொன்று வேண்டும்—தமிழ்ப்பிர
தேயத்தில் மாதுரு வோயாகல் லோயாபோல்
போயினெங்கள் லட்சியமும் போம்.

1979இல்

## இந்நாட்டுத் தமிழ்வாலிபர்களைப் பார்த்துக் கூறுவது

வெண்பா

வன்கொலையும் கொள்ளையும் செய்வதனைக் கைவிட்டு
வன்மையாய் மாதுரு பூமியினை—எந்நாளும்
எங்கள் பிரதேச மாய்க்காக்க முன்வருவீர்
சிங்களர்போல் வீரரெனில் நீர்!

## அளவெட்டி, திரு. வ. பொன்னம்பலம், M. A. அவர்களை

நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டுமென

1981இல் பாடியது

வெண்பா

பொன்னம் பலமென் பொதுவுடைமைப் புண்ணியன்
மன்னுயிரைத் தன்னுயிர்போல் எண்ணுபவன்—அன்னவனை
ஓர்முறை யாயினும் நாடாள்மன் றத்துக்குத்
தேர்ந்தனுப்பல் எங்கள் கடன்.

''வாழுதி! வாழவிடு!'' என்போரே நம்மடிமை
மீளுமனப் பான்மையுள்ளார் மேதினியில் — வாழநாம்
தாரிற் சமதர்மம் பேணுமெந்த நாட்டினதும்
பேருதவி பெற்றிடற் பாற்று.

முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர்

**திரு. மு. திருச்செல்வம் அவர்களை விளித்துப் பாடியது**

**எண்சீர் ஆசிரிய விருத்தம்**

சரித்திரமும் சட்டறிவும் கைவந்த தமிழ்ப்பெரியோய்!
தமிழ்நாட்டைச் சிங்களநாட் டோடு சேர்த்துப்
பிரித்தானி யரொன்றாக வசதிக்காய் ஆண்டமையால்
பிரியுமுரித் தெமக்கில்லை யெனல்தப் பென்று
நீரூபித்தோய்! பெருமீன்கள் சிறியவற்றை விழுங்குமுண்மை
நீளுலகில் நாடுகள்பாற் கண்டி லையோ?
சரித்திரத்தில் சமஷ்டிமுறை அனுசரித்த நாடுபல
தழைத்தோங்கல் பார்த்திலையோ? சான்றோய்!
சொல்மின்!

அமரர் திரு. சி கதிரவேலுப்பிள்ளை நா. உ. அவர்கள்
1981இல் மறைந்தபோது பாடிய

**கையறுநிலைச் செய்யுள்**

**அறுசீர் விருத்தம்**

தந்தையார் செல்வா தந்த அரசியற் தனயர் தம்முள்
சிந்தனைச் சிற்பி யாகத் திகழ்ந்தொளிர் கோவை மன்னா!
நந்தமி ழர்க்கு மாய மாவட்ட சபையால் உண்டாம்
தொந்தரை நீக்கா தையோ! செல்கின்றீர்! என்செய் வோமே!

தமிழர் விடுதலைக் கூட்டணியினரைப் பார்த்து
ஊர்காவற்றுறை திரு. வ. நவரத்தினம் அவர்களை
உடன்தொண்டனாகச் சேர்க்கும்படி வேண்டுவது

**அறுசீர் விருத்தம்**

நவரத்னம் எனுமூர் காவற் றுறைமுன்னாள் நாடாள் மன்றன்
கவனமாய்ப் பார தத்தின் சுதந்திரப் போரை நன்கு
அவதானித் தாவ கற்ற அனுபவ சாலி யென்று
நவிலரும் விடுத லைக்காய்க் கூட்டணி சேர்த்தல் நன்றே!

**நம்மனோர்க்கு மெய்ச்சமஷ்டி போதுமெனல்**

**வெண்பா**

அண்ணாத் துரையர் அயல்நாட்டார் தாக்கத்தால்
பின்னாளில் மெய்ச்சமஷ்டி போதுமென்றார்—எந்நாளும்
அன்னியர்கள் நம்தீவைக் கைப்பற்றக் கூடுமென
உன்னலிரு சாரார்க்கும் நன்று.

1971இல் கூட்டுறவுப் பதிலாணையாளர்
திரு. இ. இராசரத்தினம் அவர்கள்
கூறிய புத்திமதியை அனுஷ்டித்துக்

**கூட்டுறவு மாகாண வங்கிகள் திறத்தல்**

**விருத்தம்**

எமதுபிர தேசத்தை யாம்விருத்தி செயமீண்டும்
கூட்டுறவு மாகாண வங்கி தேவை
சமஷ்டியலே விரும்பாத அமைச்சரிலங் கரத்தினு
சர்வாதி காரியாய்க் குலைத்தார் என்று
தமியேற்குக் கூட்டுறவுப் பதிலாணை யாளரான
இராசரத்தின இனுபிமானி கவன்று சொன்னூர்;
அமிழ்தனைய அவ்வேந்தல் சொல்லோம்பிக் கூட்டுறவு
வங்கியபி விருத்திக்கென்(று) அமைப்போம் இன்னே.

ஏனைய கூட்டுறவுத் தமிழ்ப் பதிலாணையாளர்களும்
இதர உதவி ஆணையாளர்களும் இதேகருத்துடையரெனல்

**நேரிசை வெண்பா**

இதேகருத்தர் ஏனைய கூட்டுற(வு) ஆக்கப்
பதில்உதவி ஆணையாளர் என்பாம்—எதற்கும்
சமஷ்டியல் வேண்டுமென்பர் தென்னயல்நட் போடு
தமைநாமே ஆண்டுதிகழ் தற்கு.

நடுத்தர நிர்வாகிகளைப் பயிற்றி நாட்டுக்குதவ
ஐக்கியதேசியக் கட்சி நிறுவிய கனிஷ்ட பல்கலைக் கழகங்களை
சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் 1971ஆம் ஆண்டில் மூடியபோது

**மனம்நோந்து பாடியது**

**வெண்பா**

ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆக்கிவைத்த
தக்கவிளம் சர்வகலா சாலையெல்லாம்—மொக்கி
அரசாங்கம் இஞ்ஞான்று மூடுதையோ! மத்திய
நிர்வாகர் தேவையுண ராது.

1981 ஆவணி மாதம்

## சேர் பொன். இராமநாதன் அவர்களை நோக்கிப் பாடியது

### ஆசிரியப்பா

இராமா யணப்புகழ் இராமேஸ் வரத்துறை
பரமேஸ் வரனின் வரப்பிர சாதமாய்
இராம நாதனென் ஈரர்த்தப் பேருடன்
பிரித்தா னியரென் அன்னியர் ஆட்சியால்
அவஸ்தைப் படுமீழ மக்களைக் காத்திட
அவதார புருடனாய் அவனியில் உதித்தோய்!
நிலவளம் நீர்வளம் நிறைந்தவிந் நாட்டில்
மலைப்பிர தேசம் முடிக்குரிய தென்றதைக்
கோப்பி தேயிலை இறப்பருண் டாக்கத்
தம்மனோ ருக்குத் தாரைவார்த் தன்னவர்
செம்மையுறத் தெருபாலம் புகைரத வீதியென்ப
அமைத்துக் கொடுத்ததுடன் அரியதொழி லாளரை
வருவித்து நல்கி வாழ்வித்து மற்றும்
தம்மனோர் கொழும்பில் வணிகஞ்செய் துயரத்
தம்மால் ஆவன சகலதும் புரிந்து
இந்நாட்டு மக்கள் இழந்துதம் தொழில்களை
பன்னரும் பசிப்பிணி தம்மால் வருந்திப்
பின்தங்க விட்டுநில் பிரித்தா னியரைத்
தட்டிக் கேட்கும் ஆளிலாக் குறைதீர
இயம்பரும் ஆற்றல்சால் இரட்சகராய்த் தோன்றினை!
ஆயிரத்துத் தொள்ளா யிரத்துப் பதினைந்தில்
சிங்களர்க்கும் மற்றும் மகமதிய மக்களுக்கும்
இடையில் உண்டான இனக்கல வரத்தைத்
தங்கட்கு மாறாய் எழுந்திடும் சுதந்திர
இயக்கம் எனத்தம் அகத்தினில் எண்ணி
பெலம்குறைந் தோரைப் புரப்பதாய் வெளியே
நடித்து நடாத்திய கொள்ளை வன்கொலை
கடைவீ டெரிப்புக் கற்பழிப் பாதியாம்
அக்கிரமச் செயல்களைச் சட்டசபை தன்னில்
குரலெழுப்பிக் கண்டித்துக் கொர்ச்சித்தீர் உலகறிய!
அவ்வேளை தன்னில் அனகரீக தர்மபாலா
எனும்புத்த பெரியார் நீரன்றிச் சிங்களரைக்
காக்கும் இரட்சகர் வேறில்லை என்றனரே.
அத்துடன் நில்லாது மகாயுத்த காலத்தில்
ஜேர்மனிச் செறுநரின் நீர்மூழ்கிக் கப்பலுக்கு

எள்ளளவும் அஞ்சாது இங்கிலாந்து சென்று
குடியேற்ற நாட்டு மந்திரிக்கும் மற்றும்
பாராளு மன்றப் பிரமுகர்க்கும் அரசினர்
சிங்கள மக்களுக்குச் செய்கொடுமை எடுத்துரைத்து
சேனநாயகா கனங்கரா விஜய வர்த்தனு
ஜெயத்திலகா ஹேவ விற்ருனே ஆதியாம்
சிங்களப் பிரமுகரைச் சிறைமீட்டு வைத்தனே!
அந்நாள் நின்னைத் தம்மிரட் சகராய்
இரதம் ஒன்றினில் ஏற்றிமேற் கூறியோர்
கொழும்புத் துறைமுக மிருந்துநின் மனைக்கு
இழுத்துச் சென்றனர் சகலமரி யாதையுடன்.
நீர்மட்டு மன்றி நின்தம்பி யான
சேர்பொன் அருணு சலத்துரை தானும்
இந்நாட் டவர்க்கு அளப்பரும் சேவை
புரிந்தனர் சுதந்திர இலங்கை படைத்திட.
அத்தகு சேவைநின் மாமனும் தமையனும்
புகழ்ந்திட யாவரும் புரிந்தனர் என்ப.
இன்னுமெம் தமிழர் இந்நாடு முன்னேறப்
பற்பல துறையிலும் பகரரும் பணிகள்
புரிந்தனர் என்று சரித்திரம் புகன்றிடும்.
இவற்றை யெல்லாம் இற்றைநாட் சிங்களர்
முற்றும் மறந்து நன்றியில் லாது
சகிக்கொணு இன்னல் தமிழர்க்குச் செய்கின்ருர்.
குறித்தவோர் சமயத்தை அரசமதம் ஆக்காத
பரந்தவுள்ளம் வாய்ந்த பாரதத்தோர் போலன்றிப்
புத்தத்தை மட்டும் அரசமதம் ஆக்கியுள்ளார்;
தமிழ்மொழிக் குரியசம அந்தஸ்து மறுத்துள்ளார்;
கல்வியால் முன்னேறும் நம்மினத்தைக் கண்டெரிந்து
பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சையில்
தரப்படுத்தல் எனும்பொல்லாத் தந்திரத்தைக் கையாண்
மாணவரை ஐயகோ! மட்டம் தட்டுகின்ருர்; [டெம்
உத்தியோகத் துறையிலும் ஒதுக்குகின்ருர் நம்மவரை;
தகுதிமுறை கைவிட்டுத் தமிழர் மனமெரியத்
தமரையே பெரிதும் தெரிகின்ருர் பதவிகட்கு;
மேலுத்தி யோகங்கள் ஒதுக்குகின்ருர் தம்மனோர்க்கு;
தம்மவர்க்கே வெளிநாட்டு உதவியினைப் பயன்படுத்தி
நம்மவரைப் பின்தங்கச் செய்கின்ருர் நீதியிலர்;
இன்னவர்கள் செய்கின்ற இன்னல்களிற் தப்பிப்
பிறிதாக வாழ்வமென்ருல் விடுகிலர் அதற்குமே.
சுதந்திரப் பேச்சுநாம் எழுப்பிடும் காலத்தில்

இவர்கட்கு மேற்சொன்ன பதினைந்தாம் ஆண்டினிலே
என்னஎன்ன வன்செயல்கள் அன்னியர் புரிந்தனரோ
அன்னஅன்ன வன்செயல்கள் எங்கட்குச் செய்கின்றார்!
வன்செயல்கள் வெள்ளையர் ஒருமுறையே செய்திருப்ப
சிங்களர் பன்முறை தமிழருக்குப் பொல்லாப்
படுகொலை கற்பழிப்பு பொருட்கொள்ளை தீவைப்பு
ஆதியாம் அக்கிரமம் அனைத்தும் புரிகின்றார்!
இவற்றினை யெல்லாம் அரசினர் நன்கறிந்தும்
வன்செய லாளரைத் தண்டிக்கின் றாரில்லை.
இன்னண மெல்லாம் நிகழ்ந்திடும் என்பதை
முன்னரே வெகுதூர திருஷ்டியால் உணர்ந்து
சிறுபான்மை யோர்க்குச் செவ்விய பாதுகாப்பு
அரசியல் யாப்பில் அவசியம் தேவையென
இங்கிலாந்து சென்றுநன்கு எடுத்துக் காட்டினை!
இந்நாட்டு வரலாற்றில் தங்களுக் கெதிராகச்
சுதந்திரம் வேண்டிநின்றோர் தமிழர்களே என்னும்
குரோதமனத் தாலும் பெரும்பான்மை யோரின்
நல்லெண்ணம் தமக்கென்றும் வேண்டுமென்ற கருத்தாலும்
ஆங்கிலர் எங்கட்கு ஆவன செய்திலர்.
அதனால் எண்ணிக்கை தன்னிற் குறைந்தநாம்
காலத்துக் குக்காலம் வன்செயல்கட் காளாகி
ஓலமிடு கின்றோம் உலகிலுள்ள யாவருக்கும்!
இன்னவற்றை யெல்லாம் கண்டாவ செய்வதற்கோ
நின்காயம் தன்னை நெருப்பில் அழிக்காமல்
தென்திசை நோக்கிச் சமாதி யிருத்தி
சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தீர் அதன்மேலே?
அன்னணம் அமைந்தநின் சமாதியின் முன்புநாம்
அரற்றியெம் அவலநிலை அடியோங்கள் ஓதுகின்றோம்!
சிங்களர் போலன்றித் திருவருளை நம்பும்நாம்
நின்மூலம் ஆண்டவற்கு விண்ணப்பம் செய்கின்றோம்
செயற்பால வற்றையெல்லாம் செய்மின் விரைவிலென்றே!

## சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களை நோக்கி

### வெண்பா

தேச விடுதலைக்காய்ச் சிங்களரைத் தூண்டிநன்கு
தேசீயக் காங்கிரசு தாபித்து—மோசவினைப்
போக்குணர்ந்து விட்டகன்றோய்!நம்மினத்தைக் காத்தருள்வை
ஆக்கபுத்தி நன்குணரச் செய்து.

## சூரிய வணக்கம்

விருத்தம்

சகிக்கொணு இன்ன லிந்நாள் தமிழர்க்குச் செய்து தங்கள்
தாய்நாட்டுச் சுபீட்சத்தைச் சிதைத்துநிற்கும் சிங்களர்க்கு
''அகிலத்திற் கடவுளுண்டு; அனைவரும் அவர்க்குமக்கள்;
ஆகலின் தமிழரோடு நித்திய கலகமின்றிச்
சகோதரர் போல்வாழச் சமதர்மம் வாய்ந்தவுண்மைச்
சமஷ்டியல் அரசமைப்போம்'' என்னுணர் வொளியுதிக்கச்
செகத்தினை வாழ்விரவி தனிலரனைக் கண்டுபொங்கிச்
சீராரப் படைத்தவன்றன் திருவருளை வேண்டிடுவோம்.

## மங்கல வாழ்த்து

வாழிய சூரியன்! வாழிய ஸ்ரீலங்கை!
வாழிய சமதர்மச் சமஷ்டியல் அரசொன்று!
வாழிய சிங்களம்! வாழிய செந்தமிழ்!!
வாழிய இருமொழி மக்களும் ஒன்றியே!!

*22-1-76*

காலத்துக்கேற்பச் செய்யாத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரை

## விளித்துப் பாடியது

விருத்தம்

இருபத்தைந் தாண்டுகள்முன் ஸ்ரீலங்கா சுதந்திரக்
கட்சியோடெம் தமிழரசுக் கட்சி கூடிப்
பிரதேச சபைபற்றி இடைக்கால ஒழுங்காகப்
பேசியமை அந்நாட்குப் பொருந்து மேனும்,
கருத்தின்றும் கால்நூற்றுண்(டு) கழிந்தபின்னெம் கூட்டணியோர்
குறைந்தபட்சம் சமஷ்டியல் கேளா(து) இந்நாள்
அரசுடனே மாவட்ட அபிவிருத்திச் சபைச்சட்டம்
திருத்துவிக்கப் பேச்சுவார்தை நடாத்தல் காண்மின்!

குரும்பசிட்டி

## அமரர் திரு. நா. பொன்னையா அவர்களை விளித்துப் பாடியது

வெண்பா

தொல்காப் பியத்தோடு தொன்னூல் பலபதித்து
ஒல்காப் புகழ்படைத்த உத்தமனே! —நல்கிநிதி
நம்பகுதி தன்னிலோர் மத்திய கல்லூரி
எம்முடனே தாபித்தீர் நன்கு.

நன்னாடு முன்னேற நல்லீழ கேசரியை
முன்னின்று நிர்வகித்த மூதறிஞ!—நின்னைப்போல்
செயற்கரிய செய்யத் துணிந்துநிறை வேற்ற
முயலுவோர் நாடெங்கும் இல்.

நம்கிராமச் சங்கத் தலைவனாய் நாட்டுக்கு
நன்குசெய்தீர் பற்பல கைங்கரியம்—நம்கர்ப்ப
ஸ்திரீகட்கும் மற்றும் சிசுக்களுக்கும் நன்மைசெய்
ஸ்தாபனம் அன்னவற்றுள் ஒன்று.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

யாழ்ப்பாண நாட்டிலுயர் அச்சகமும் நூற்பதிப்புக்
கழகமொன்றும் நிறுவியவற் றின்வருவாய் தனைக்கொண்டு
யாழ்ப்பாணச் சைவவித்தி யாவிருத்திச் சங்கத்தோர்
தங்கடமை திறம்படவே ஆற்று தற்கும்
யாழ்ப்பாண வாலிபர்மா நாட்டினரித் தேயத்தில்
காந்தீயம் தேசீயம் வளர்ப்ப தற்கும்
யாழ்ப்பாணத் தேமற்றும் பொதுப்பணிகள் புரிகுநர்க்கும்
துணைபுரிந்தோய்! நின்வண்மை போற்றற் பாற்றே!

தனது தமையனும்
அரசினர் குற்றத்தடுப்பு இரசாயன ஆராய்ச்சிப்
பதிற்தலைவரும் ஆன

## திரு. வ. குலநாயகம், F. R. I. C. அவர்களை நினைவு கூர்ந்து பாடியது

வெண்பா

எமதுகுல நாயகமாய் எந்தையொடு மற்றும்
நமருமும்மைப் போற்றுவார் நன்கு— உமதுவிஞ்
ஞானகுலம் தானுமுமை ஆராய்ச்சி நாயகமாய்
நானிலத்திற் போற்றும் நயந்து.

வகுப்புவாதம் கண்டித்தோய்! நின்னுத்தி யோகம்
வகுப்புவாதத் தாலுயரா மையால்—வகுப்புவாதம்
உள்ளளவும் இந்நாடு முன்னேற மாட்டா(து)
எள்ளளவும் என்றீர் வெறுத்து.

சருவகலா சாலைக் கல்லூரி தன்னிற்
பிரீதியுடன் கல்லாமை கண்டு—அரசியலை
மட்டுமே கண்டித்து நாயேனை மன்னித்துச்
சட்டம் பயிலவைத்தீர் நன்கு.

சொற்பகாலம் "தமிழன்", "Spectator" என்னும் பத்திரிகைகளை ஆசிரியராக நடாத்தியவரும், அதற்குமுன் "சுதேச நாட்டியம்" என்னும் பத்திரிகைக்குத் துணை ஆசிரியராய் இருந்தவரும் ஆகிய

**திரு. க. வே. சாரங்கபாணி அவர்களை நினைந்து**

**வெண்பா**

செந்தமிழ் இன்னடையும் செப்பரிய கண்டனமும்
முந்து விகடத் துணுக்குகளும்—சொந்தரசு
வேண்டுமென்னும் தாயகப் பற்றுமதி வீரமும்
யாண்டுமுமை ஞாபிக்கும் காண்.

வண்டமிழ்நேயனும், சிறந்த வழக்கறிஞனும் ஆகிய அமரர்
ஆனைக்கோட்டை
தமிழ்த்திரு. சோ. திருநாவுக்கரசு, B. A. அவர்களைப்பற்றிய

# இறுதி நினைவுப் பாக்கள்

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

செந்தமிழ் நேயன் மேதை திருநாவுக் கரசென் நண்பன்
சந்ததம் வியப்பு வாய்ந்த சமயோசி தங்கள் கூறி
நந்தலில் உவகை நல்கும் நகைச்சுவை மன்னன் தன்னை
அந்தகன் கொண்டு சென்றான் அறமுண ராமல் அந்தோ !

சங்கையாய்ச் சாம்பி யாசெல் தனயனை அனுப்ப வந்து
தங்கியோர் மணித்தி யாலம் தமியேனின் வீட்டில் நின்று
இங்கித மாக நின்பா இறக்கமுன் கேட்க வந்தேன்
நன்கவை பாடாய் என்று நயந்துகேட் டிதயம் பூத்தான்.

ஆங்கில மொழியைப் போலெம் அருந்தமிழ் மொழியை நாங்கள்
ஓங்கிடச் செய்தல் வேண்டும் உயர்தர நூல்கள் யாத்தே;
ஈங்கீழம் ஒளிர்ந்த எங்கள் நியாயவா திகளைப் பற்றிப்
பாங்குற எழுது கின்றேன் பாரீழ நாட்டில் என்றான்.

வள்ளுவன் கூறி யாங்கு மக்களை இயன்ற மட்டும்
நல்லிடங் களில்வைத் துள்ளேன் ; நானினிச் செல்ல லாகும் !
உள்ளுங்கால் எனது நெஞ்சை உறுத்திடும் கவலை யொன்று
எள்ளிடும் அடிமை நீங்கா எம்நிலை அஃது என்றான்.

சிங்கள ரோடு கூடிச் சுதந்திரம் வேண்டுங் காலை
சிங்களர் பின்னர் எங்கள் சுதந்திரம் சிதைப்பார் என்று
இங்கித நட்பாற் சற்றும் எண்ணிலம் ; துரோகஞ் செய்யும்
சிங்களர் அடிமை யாவர் செய்கர்மப் பலனாய் என்றான்.

தன்னுயிர் போல மற்றும் மன்னுயிர் தன்னை எண்ணும்
இன்னருளாளன் உண்மைச் சமதர்மி ; அவன்மெய்ப் புத்தன் ;
அன்னநற் தர்மர் பல்க ஆவன செய்வாம் இந்நாள்
மன்னுயிர் அழிக்கும் இம்சை முறையினைப் பின்போட் டென்றான்.

தேவருக் கசுரர் பொல்லாத் தீங்குகள் விளைத்த ஞான்று
மேவலர் இடியாய் வந்து வேலவன் காத்தா னன்றோ ?
யாவுமே பார்த்து மேலே இதழ்கடித் திருக்கும் அவ்வேள்
ஆவன செய்வான் என்று ஆறுதல் கூறிச் சென்றான்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர்

**திரு. சு. நடராசா அவர்களை விளித்துப் பாடியது**

**கலித்துறை**

மல்லாக நடராஜ! மறத்தமிழ! தமிழ்ப்பிர தேசமதில்
பொல்லாதார் ஊடுருவல் நேராமல் தமிழரையே பயன்படுத்தி
நல்லாக அபிவிருத்தி செயமுதற்கண் சட்டத்தைத் திருத்துவிமின்!
அல்லாக்கால் அபிவிருத்தி வீண்கேலிக் கூத்தாகும் அறிகநன்றே!

(மல்லாக—வலிமைபொருந்திய நெஞ்சையுடைய)

# தமிழர்க்கு ஐந்து சற்புத்தி

**வெண்பா**

சிங்களவர் தீந்தமிழும் செந்தமிழர் சிங்களமும்
நன்குகற்றல் நாட்டுக்கு நன்மையே—இங்கிதமாய்
ஈரினமும் வாழ ஜெயவர்த்த னுமன்சொல்
சீராரிப் புத்தி திறம்.

புத்தருக்குப் புத்தகாயா இந்தியாவில் இந்துக்கள்
தத்தம்செய் முன்மா திரியுணர்ந்து—புத்த(அ)ரசை
இந்துக் களுக்குக் கதிர்காமம் நல்கவென
முந்திநின்று கேட்பாம் முயன்று.

நன்னாட்டு மக்கள் நலிவின்றி வாழ்ந்திட
இந்நாளே மெய்ச்சமஷ்டி யாத்திடுவோம்—எந்நாளும்
தத்தம் க்ருமத்தைத் தாம்தாம் நிருவகித்துச்
சித்தம்போற் செய்வதே மேல்.

ஈங்குநிகழ் செய்திகளை யாம்வெளி நாட்டினர்க்குப்
பாங்காய் எடுத்துரைக்க உள்ளவண்ணம்—ஆங்கிலத்தில்
நல்லதினச் செய்தித்தாள் ஒன்று பிரசுரிக்க
எல்லேமும் ஒத்துழைப்பாம் சேர்ந்து.

அபிவிருத்தி செயவிழையும் அன்பர்காள்!
சட்டத்தைத் திருத்துவிமின்!
அபிவிருத்திக் காயொழிமின் மாவட்ட
மந்திரியென் பதவியினை!
அபிவிருத்திக் காயொழிமின் அளவிறந்த
ஜனதிபதி அதிகாரம்!
அபிவிருத்திக் கந்தந்தப் பிரிவினரை
மாத்திரமே பயன்படுத்தீர்!

*1-12-81.*

## இந்துமதம், பிராந்தீயம் செந்தமிழ் அபிவிருத்தி அமைச்சருக்கு விநயமொடு செய்யப்படும் விண்ணப்பம்

### வெண்பா

முப்பத்தைந் தாண்டு முயன்ரேம் உயிர்ப்பலி
நிற்பாட்டச் சட்டம் இயற்றுவிக்க—அப்பொழுது
செய்யவிய லாததிந்நாள் செய்வித்த செம்மலே!
செய்குக பின்வருவ தேர்ந்து!

இந்துமதம் போற்றி இனிதபி விர்த்திசெய
இந்து மகாநாடு கூட்டுமண்ணல்! —இந்தியர்
புத்தருக்குப் புத்தகாயா நல்கியமை போற்கதிரை
தத்தம்செய் விக்கவிந்துக் கட்கு!

தமிழ்பேசு வோர்க்கென்ரேர் சர்வகலா சாலை
அமைக்க இருவளாகம் பெற்றுத்—தமிழ்மொழி
இந்துமதம் இஸ்லாம் கலாச்சாரம் ஆதியன
நன்கு விருத்திசெய்வாம் நாம்.

தத்தம் கருமத்தைத் தாம்தாம் நிருவகித்துச்
சித்தம்போற் செய்வதே மேலென்று — நத்திமுன்நாம்
கோரிநின்ற மெய்ச்சமஷ்டி பெற்றுத் தருவீரேல்
யார்துரோகி என்ப'வினு வாம்.

இலவசக் கல்விமுதல் தர்மபூமி யாமெம்
இலங்கையிற்ருன் தோன்றிற்று ஏந்தால்!—இலவச
வாய்ப்பைக் கெடுத்தேழை மாணவரைப் பாதிப்ப
ஆய்ந்தகற்றீர் வெள்ளறிக்கை யில்!

**5-2-1982.**

முன்னாளைய வீடமைப்பு கட்டிட அமைப்பு மந்திரியும்
பொதுவுடைமைச் செயலாளருமாகிய

**பீற்றர் கேனமன் அவர்களை 1982இல் விளித்துப் பாடியது**

**எண்சீர் விருத்தம்**

சமதர்மம் பேசியெங்கள் மதிப்பொருகாற் பெற்றபீற்றர்!
சென்றரசிற் சேர்ந்துபிழை செய்தீர்! போக
தமிழருக்குச் சுயநிர்ணய உரிமையுண்டாம் பொருட்டவர்க்குப்
பிரதேச ஆட்சிநல்கல் வேண்டு மென்று
சமதர்மி யாய்நீவிர் பேசியதை யான்படித்தேன்;
சந்தேக விபரீத மின்றி ஏனோ
தமிழருக்கு மெய்ச்சமஷ்டி வழங்கிடுதல் வேண்டுமெனச்
சிங்களர்க்குச் செப்புகின்றீ ரில்லை? சொல்மின்!

மயிலிட்டிக் கிராமச்சங்கத் தலைவராகவும்
திருநெல்வேலி சைவாசிரியகலாசாலை அதிபராகவும் திகழ்ந்த

**கலைமாணி திரு. சி. சுவாமிநாதன் அவர்களை**
**விளித்துப் பாடியது**

**வெண்பா**

செந்தமிழ்ப் பேச்சழகும் ஆங்கில நுண்ணறிவும்
இந்து மதத்திலபி மானமும்—நந்தமிழர்
நன்னிலையில் அக்கறையும் நல்லிசையில் நாட்டமும்
மன்னுசெம்மால்! வாழ்கநின்றன் தொண்டு!

**கலித்துறை**

வயாவிளான் மாவிட்ட புரத்தெருவை அமைத்ததொடு நில்லாமல்
வயாவிளான் தம்பாலை நெடுஞ்சாலை பூர்த்திசெயத் துணைபுரிந்தீர்!
வயாவிளான் மயிலிட்டி மக்கணிலம் இராணுவத்தோர் பிடிக்குங்கால்
அயலன்பர் எனும்முறையில் மக்களுக்கு ஆவசெய்தோம் ஒத்துழைத்தே!

**வெண்பா**

மயிலைக் கிராமசபை வாழ்த்தும் தலைவனுய்
அயராது தொண்டாற்றிப் பின்னர்—செயற்கரிய
செய்வனெனப் போற்றியெனைப் போட்டியின்றி அப்பதவி
எய்திடச் செய்தீர்! ஸ்துதி!!

மயிலிட்டிதெற்கு

**திரு. கந்தவனம் பொன்னம்பலம் அவர்களை**
**நினைத்துப் பாடியது**

**வெண்பா**

தென்மயிலைப் பொன்னம் பலமென்னும் சீர்த்தொண்டன்
தன்னூர்க்குத் தொண்டுபல செய்துள்ளான் —அன்னவன்
கூட்டுறவு வங்கி குலைபடவில் எங்களினக்
கூட்டழிவு கண்டான் கொதித்து!

1977ஆம் ஆண்டு ஆவணி மாதம் மனம் மிகவும் வருந்தி

## வெளிநாட்டுத் தமிழினத்தவரை விளித்துப் பாடியது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

படமுடியா தினித்துயரம் படமுடியா தையோ!
பாதகராற் பாரினிலே பட்டதுயர் போதும்!
விடமுடியா தின்னுமிந்த வெய்யவரை நம்மை
வீடெரிப்புக் கொலைகொள்ளை கற்பழிப்பால் வருத்தச்
சுடமுடியா தெம்மவரை நாய்களைப்போல் இனிமேல்!
துட்டநிக்கி ரகம்செய்யத் துணிந்துள்ளோம் தாரில்!
கெடமுடியா தனாதைகளாய் அடிமைகளாய் நாங்கள்
கெதியிலெங்கள் விடுதலைக்கு ஆவசெய்மின் இனத்தீர்!

1982ஆம் ஆண்டு மார்ச்சுமீ 1ஆம் திகதி இந்நாளைய

## மாண்புமிகு ஜனாதிபதி அவர்களை நோக்கிப் பாடியது

### நேரிசை வெண்பா

நின்னையான் வந்தித்து நின்குறைகள் கூறமுன்னர்
நின்னாட்சி லட்சணம் ஒன்றுரைப்பேன் — நின்னரசு
பேசும் எழுதும் உரிமை அனுமதிக்கும்;
பேசிலிந்நூல் ஓரெடுத்துக் காட்டு.

குடியரசு பேசிக் குடியரசு கொல்லல்
படியினிற் தர்மமா காது — கொடிய
சருவாதி காரம்நின் மாவட்ட மன்றப்
பிரமாணம் தன்னிலே உண்டு.

நின்விகிதாச் சாரப் பிரதி நிதித்துவம்
உண்மைக் குடியரசுக் கொவ்வாது — இந்நாடாள்
மன்றத்தோ ரைத்தெரிவர் கட்சிக் குழுவினர்
திண்டாட நாம்செல்வாக் கற்று.

சமதர்மம் பேசுவோய்! எங்களைநாம் ஆளச்
சமஷ்டிதர ஏனோ தயக்கம்? — சமதர்மம்
மற்றோர் இடத்திற் தமையிட்டு மெய்யோர்ந்து
பற்றாற வாழும்பண் பாடு.

ஈற்றிற் தமிழருக்கு மெய்ச்சமஷ்டி நல்கவுள
மாற்றமெய்து வார்கள்நின் வர்க்கத்தார் — போற்றரிய
அந்நன்னாள் ஏனோநின் ஆளுகைக் காலத்தில்
மன்னிடக் கூடாது சொல்.

புத்தகுரு வாயீற்றிற் போகமுன்னர் சொல்வனென்று
அத்தனென உள்ளான் ஒருவனென்றும் — நித்தமும்
நம்வினைகள் நோக்கிநுகர் விப்பான் பலனென்றும்
நம்பியவன் தாள்தியானம் செய்!

## A FEDERAL SOCIALISTIC STATE FOR THE TAMILS

The Tamils would do well to have as their political aim the creation of a separate Tamil **Socialistic** State ever willing to federate with the rest of Sri Lanka **on equal terms.** if the said rest of Sri Lanka would agree to form one such **Genuine Federal State**, which ought to be acceptable to all the Sinhalese, Tamil and Muslim socialists, who adopt the policy of "Live! and Let live!", and hence stand for democratic, socialism and peaceful coexistence.

Vayavilan,
22-1-1976.

**V. RASANAYAHAM, J. P.**
Attorney-at-Law

## AN OPEN LETTER TO ALL THE SINHALESE

*Dear Brethren & Sisters,*

In once again urging the Sinhalese people in general and Mr. J. R. Jayewardene's Government in particular to solve our communal problem once and for all by going in for a Federal Constitution without the right of secession, instead of colonising the Tamil areas with Sinhalese and the Sinhalese areas with Tamils, which will only aggravate the problem and create fifth columnists, who would be a source of danger during any internal strife or international turmoil, I do now, as a humble religious and public worker, earnestly request them gracefully to hand over Kataragama to the Hindus, even as Messrs. Rajendra Prasad and Jawaharlal Nehru were broad-minded, dharmistic and far-seeing enough to give Buddha Gaya to the Buddhists, soon after attaining independence.

Vayavilan,
Jaffna.
9-11-1978.

Yours sincerely,
**V. Rasanayaham, J. P.**
Attorney-at-Law

**குறிப்பு:** இந்திய அரசாங்கம் புத்தகாயாவைப் புத்தர்களுக்குக் கையளித்ததுபோல, கதிர்காமத்தையும் இந்துக்களுக்குக் கையளிக்கும்படி பொதுவாகச் சிங்களச் சகோதரர்கள் அனைவரையும், சிறப்பாக மாண்புமிக்க J. R. ஜெயவர்த்தன அவர்களின் தார்மீக அரசாங்கத்தையும் இதனுற் தயவாக வேண்டுகின்ருேம். இவ்விடயத்தில் சகலரினதும் ஒத்துழைப்பு வேண்டற்பாலதாகும்.

**வ. இராசநாயகம்**
நியாயவாதி

இலங்கைத் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினருக்கும்
கனம் உள்ளூர் அமைச்சருக்கும்
26–5–65 இல் வயாவிளான் மத்திய கல்லூரியில்
அயலூரவர்கள் அனைவரும் ஒருங்குகூடி அளித்த வரவேற்பில்
மனமுவந்து வழங்கப்பட்ட

# வரவேற்புப் பத்திரம்

**தமிழினம் போற்றும் தன்றெறல் வாழ்க்கையீர் !**

கடந்த சில ஆண்டுகளாகக் காரிருள் சூழ்ந்திருந்த எமது இலங்கை அரசியல் வானில் நம்பிக்கை ஊட்டும் ஒளிக்கதிர் ஒன்று தோன்றும் உவகைக்குரிய இந்த உத்தம வேளையில் — அஃதாவது செவ்விய அரசாங்கம் ஒன்று இல்லாமையாற் சென்ற சில வருடங்களாகத் தமிழருக்கும் சிங்களருக்குமிடையே தீராதிருந்த சில பிரச்சினைகளுக்கு ஓரளவு சுமுகமான முடிவு தென்படும் மகிழ்ச்சிக்குரிய இந்தச் சுபதருணத்தில் — பட்டம் பதவி நாடாது எங்கள் உரிமைகளுக்காக அறப்போர்புரிந்து சிறைத் தண்டனை அடைந்தும், இன்னும் இன்னோரன்ன வழிகளிற் பலவித இன்னல்கள் எய்தியும் எம்மினத்தைப் புரந்து நிற்கும் புருஷோத்தமர்கள் அனைவீரையும் தங்கள் வரவு நல்வரவு ஆகுக என வாயார வாழ்த்தி, மனமார வரவேற்கின்றோம்.

தமிழ்ப் பேசும் மக்களுக்காகச் செய்யவேண்டியவற்றையெல்லாம் தந்தையாரும் மற்றும் எல்லீரும் சரிவரச் செய்வீர்களென யாங்கள் நன்கு அறிந்திருந்தும், ஆர்வ மேலீட்டினால் அவற்றுள் முக்கியமானவற்றை ஈண்டு எடுத்துக்காட்டத் தங்கள் அனுமதி கோருகின்றோம்.

1. குறைந்தபட்சம் வடமாகாணம், குணமாகாணம் (கிழக்கு மாகாணம்) என்னும் இரண்டிலும் நீதிமன்றங்கள் உட்படச் சர்வ காரியாலயங்களிலும் எங்கள் தமிழ் மொழியை அரசகருமமொழியாக ஆக்குவிக்க வேண்டும்.

2. இலங்கையில் எந்தப் பகுதியிற்றானும் இருக்கும் தமிழன் அரசாங்கத்துடன் எந்தக் கருமத்தையும் தனது தாய்மொழியிற் பார்க்கக்கூடியதாகச் சகல வசதிகளும் செய்விக்கவேண்டும்.

3. அரசாங்கம் பொதுஜன விஷயஞானம் கருதி வெளியிடும் அறிவித்தல், பிரசுரம், அறிக்கை முதலிய யாவையும் மற்றும் படிவங்கள் அனைத்தையும் சிங்களத்திற் போலத் தமிழிலும் வெளியிடச் செய்யவேண்டும்.

4. தமிழ்ப் பகுதிகளிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் யாவும் பொதுசனங்களுடன் மாத்திரமன்றி, மத்திய அரசாங்கத்துடன் தானும், தமிழ்மொழியில் கடிதத்தொடர்புறத் தேவையான உரிமை பெற்றுக் கொடுக்கவேண்டும்.

5. தமிழ்ப் பிள்ளையொன்று ஆரம்பக் கல்விதொட்டு உயர் தரக் கல்வி ஈருகத் தமிழிற் கற்கக்கூடியதாகத் தேவையான சகல வசதிகளும் செய்விக்கவேண்டும்.

இந்நோக்கம் இனிது நிறைவேறப் பல்கலையும் பயிலக்கூடிய சருவ கலாசாலை யொன்றைத் தமிழருக்கென யாழ்ப்பாணம், திருக்கோணமலை என்னும் இடங்களில் இரண்டாகப் பிரித்து இயன்ற விரைவில் நிறுவுவிக்கவேண்டும்.

6. அரசாங்க சேவைக்குத் தெரிவுசெய்யும் எந்தப் பொதுப் பரீட்சைக்கும் தமிழ் இளைஞர்கள் தங்கள் தாய்மொழியிலே தோற்ற எப்போதும் உரிமையுடையவராய் இருக்கச் செய்யவேண்டும்.

7. இப்போதுள்ள கச்சேரிமுறை போய், போதியளவு சுய நிர்ணய உரிமையுள்ள பிரதேச சபைகள் அல்லது மாவட்ட சபைகள் நிறுவுவிக்க வேண்டும்.

8. பாரம்பரியமாகத் தமிழ்ப் பிரதேசங்களென நிலவும் தரைப் பாகங்களில் அரசினர் திட்டமிட்டுச் சிங்களரைக் கொண்டு வந்து குடியேற்றுதல் முற்றுகத் தவிர்க்கப்பட்டு, ஆங்கே கமத் தொழில், கடற்றொழில், கைத்தொழில், வணிகம் முதலிய துறைகளிலெல்லாம் தமிழர்களின் பொருளாதாரம் தக்க முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

9. இலங்கைவாழ் இந்தியர் பிரச்சினையை அன்னவரின் தலைவர்களுடன் இலங்கை அரசாங்கக் குழுவும், இந்திய அரசாங்கக் குழுவும் கலந்து ஆலோசித்து அதனைச் சுமுகமாகத் தீர்க்க முயலுங்கால், குறைந்த கணக்கு இருபது வருடம் இலங்கையிற் சீவித்து இப்போது இந்தியாவுக்குச் செல்ல விருப்பமில்லாது தயங்கும் தேயிலைத்தோட்ட, இறப்பர்த்தோட்டத் தொழிலாளர்களையும் அவர்களின் சந்ததியினரையும் கட்டாயப்படுத்தி இந்தியாவுக்கு அனுப்பாமல், மேற்படி தேயிலை, இறப்பர்த் தோட்டங்களைச் சரிவர நடாத்தவும், தேட்டாக்கூறுய் இருக்கும் தமிழ்ப் பகுதிகளிலும் சிங்களப் பிரதேசங்களிலும் குடியேற்றுவித்து, காடு கெடுத்து உணவு பெருக்கவும் அரசினரைக்கொண்டு பயன்படுத்துவிக்க வேண்டும்.

*10.* எங்கள் தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமையும், பெலமும், முன்னேற்றமும் கருதிச் சம்பூரண தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இயற்றுவிப்பதுடன், சாதி சமய வர்க்க வேற்றுமைகளை நீக்கிச் சனநாயக சமதர்ம அரசாங்கமொன்றை இந்நாட்டில் உருவாக்கவும் உதவிபுரிதல் வேண்டும்.

*11.* சிறுபான்மையினரின் மூலாதார உரிமைச் சாசனத்தை முறையே வகுத்து இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும்.

*12.* இப்போதைய அரசியல்அமைப்புச் சட்டம் மாற்றி அமைக்கப்படும் காலத்தில், தமிழரினதும் சிங்களரினதும் நிரந்தர சமாதான உடன்வாழ்வுக்கும், பொதுவாக ஈழநாடு முழுவதினதும் பொருளாதார விருத்திக்கும் சமஷ்டி அரசியலே உகந்ததெனச் சிங்களச் சகோதரர்களுக்கு எடுத்துக் காட்டி, அதற்கேற்ற அரசியற் சட்டம் அமைக்கப்பட ஆவன செய்யவேண்டும்,

மேற்கூறிய இரு நோக்கங்களும் விளங்கா விளக்கமின்றி இனிது நிறைவேற எமது கட்சியின் பெயர் ஸ்ரீ இலங்கைச் சமஷ்டியற் சமதர்மக் கட்சியெனத் திருத்தி அமைக்கப்படுதல் மிகவும் வேண்டற்பாலதாகும்.

இவ்வண்ணமெல்லாம் தமிழினத்தை இனிது காக்கவும் இலங்கை மக்கள் யாவரினதும் பொதுநன்மை கருதி உழைக்கவும் இறைவன் தங்களுக்கு வேண்டிய நீண்ட ஆயுளையும், நிறைந்த தேகாரோக்கியத்தையும், பொருள், துணை, ஏவல், வாய்ப்பு, ஊக்கம் முதலியவற்றையும் தந்தருளவேண்டுமென்று இனிது பிரார்த்திக்கின்றோம்.

வாழிய கமத்தொழில்! வாழிய கடற்றொழில்!
வாழிய கைத்தொழில்! வாழிய வர்த்தகம்!
வாழிய தமிழினம்! வாழிய தமிழ்மொழி!
வாழிய சமஷ்டியாம் அரசியல் வாழ்கவே!

இங்ஙனம்
தங்கள் சேவைக்குரிய
**வயாவிளான், ஈவினை, புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், குரும்பசிட்டி, மயிலிட்டிதெற்கு, பலாலி, மயிலிட்டி என்னுமூர் வாசிகள்**

வயாவிளான் மத்திய கல்லூரி,
வயாவிளான், *26-5-65.*

இலங்கை உதவிக் கல்வி மந்திரி

**கனம் B. Y. துடாவை அவர்களுக்குச்**

சனநாயக சமதர்மி ஒருவன் வரையும்

# சமரசக் கடிதம்

**அன்புடையீர்!**

அன்னியராட்சியின் கீழ் தமிழர்களுடன் சகோதரர்களாக வாழ்ந்துவந்த சிங்களமக்கள் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், சென்ற இருபத்தைந்து வருடகாலமாகத் தமிழர்களை, அவர்களின் மொத்த எண்ணிக்கை, பரம்பரைப் பிரதேசம், தாய்மொழி, கல்வி, உத்தியோகம், கொழும்புத் திட்டத்தின்கீழ்ச் செய்யப்படும் பொருளாதார அபிவிருத்தி முதலிய விடயங்களிற் பெரிதும் பாதித்து, தம்முள் ஒருவரோரொருவர் போட்டியிட்டு வகுப்பு வாதச் செயல்கள் அநேகம் தொடர்ந்து புரிந்துவருகின்றனர். இப்பொழுது சனநாயக சமதர்மம் பேசி, தங்கள் ஐக்கிய முன்னணியினர் தமிழர்களுக்கு நியாயமாகவுரிய அடிப்படை உரிமைகளை வழங்காது, அவர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கும் புதிய அரசியற் திட்டமொன்றை உருவாக்குகின்றனர். இத்திட்டத்தில் உள்ள குறைகளைப் பொதுசனங்கள் எடுத்துக்காட்டிக் கண்டிக்க இயலாதவண்ணம், பத்திரிகைச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், ஊர்வலம், அட்டை, சுலோகம் முதலியன மூலம் கிளர்ச்சிகாட்டும் சுதந்திரம் என்பன சட்டவிரோதமாக்கப்பட்டுள்ள இப்போதைய நெருக்கடிப் பிரகடனத்தைப் பயன்படுத்துகின்றீர்கள். தம்மொழிபோற் பிறர் மொழியையும், தம் சமயம்போற் பிறர் சமயத்தையும், தம்மினம்போற் பிற இனத்தையும் எண்ணிச் சமதர்ம முறையிற் போதியளவு பரந்த நோக்கத்துடனும், தூரதிருஷ்டியுடனும் மேற்போந்த அரசியற் திட்டம் அமைக்கப்படுகின்றிலது. ஆகவே, அத்திட்டம் சனநாயக தர்மத்துக்கு அடிகோலும் திட்டமாகுமென நீங்கள் பிரசாரம் செய்வதைப் பகுத்தறிவு, ஆழ்ந்தபோக்கு, ஊடுருவும் நோக்கு, தூரதிருஷ்டி. நிதானபுத்தி முதலியன வாய்ந்த தமிழ்மக்கள் எள்ளளவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்க ளென்பதையும், அவர்களைத் திருப்திப்படுத்தி அவர்களின் ஒற்றுமையுடனும், ஆசியுடனும் யாக்கப்படாத எந்த அரசியற் திட்டமும் இலங்கை மாதாவின் நித்திய சுதந்திரப் பாதுகாப்புக்கும், நிரந்தர பொருளாதார வளர்ச்சிக்கும் சிறிதும் துணைபுரியாதென்னும் உண்மையையும் எடுத்துக்காட்டி, பாகிஸ்தான் உட்பிரிவினை கற்பிக்கும் பாடத்தை இப்போதாயினும் கருத்திற்கொண்டு. தமிழர்களுக்குரிய நியாயமான உரிமைகளை மேற்சொல்லிய அரசியற் திட்டத்திற் சேர்க்கும்வண்ணம், குருவிக்குத் தக்க இராகசுரமென்னும் வகையில், தனது தாழ்மையான

முறையில், வாலிபர் மகாநாடு, சூரியமலர் இயக்கம் முதலிய சுதந்திர இயக்கங்களிற் சேர்ந்து தாய்நாட்டின் விடுதலைக்காகத் தன்னால் இயன்றளவு பாடுபட்டவன் என்னும் ரீதியிலும், அவ் விடுதலை நீடூழி நிலைத்துப் பொதுமக்களுக்குப் பொருளாதாரம் முதலிய பல வழிகளிலும் பயன்பட வேண்டுமென மிகவும் ஆசைப் படுபவன் என்னும் கோதாவிலும். தங்களையும் மற்றும், தங்கள் ஐக்கிய முன்னணி நேயரையும் இதனாற் தயவாக வேண்டுகின்றேன்.

சுபம்!!!

யாழ்ப்பாணம்,
*26-2-1972.*

இங்ஙனம்
உண்மைச் சனநாயக சமதர்மம் போற்றும்
வழக்கறிஞர் வ. இராசநாயகம்

---

# தமிழ்மொழி உபயோகமும் இப்போதைய இலங்கைக் குடியரசுச் சட்டமும்

**மேற்கூறிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தமிழ்பேசும் மக்கள் என்ன என்ன குறைகள் காணுகின்றனர் என்பதை விருப்பு வெறுப் பின்றி, நடுநின்று ஆராய்ந்து, சத்தியம் பிறழாமல், தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி மற்றும் சிங்கள மக்களுக்கும் ஈங்கு சுருக்கமாக அறியத் தருகின்றோம்.**

*1.* இலங்கையின் உத்தியோகமொழி சிங்களரைப் பொறுத்த வரையில் சிங்களமாகவும், தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை யில் தமிழாகவும் இருக்குமென்று கூறப்படாது, 1956ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 33ஆம் இலக்கமுள்ள உத்தியோகமொழிச் சட்டத் தில் விதித்திருக்கும் வண்ணம் இலங்கையின் உத்தியோகமொழி சிங்களமேயாகுமென்று 7ஆம் பிரிவிலும், தமிழ்மொழி உபயோகம் 1958ஆம் ஆண்டில் 28 என்னும் இலக்கத்துடன் இயற்றப்பட்ட தமிழ்மொழி நியாயமான உரிமைச் சட்டத்துக்கு அமைய இருக்கு மென்று 8ஆம் பிரிவின் 1ஆம் உபபிரிவிலும் கூறிவிட்டு, பின்னைய சட்டத்தின்கீழ் உண்டாக்கப்பட்டு இப்போதைய அரசியல் அமைப் புச் சட்டம் அமுலுக்கு வரும்போது வலிமை யுள்ளதாக இருக்கும் எந்த விதியும் குறித்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு பாக மாகக் கருதப்படாமல், தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் உப சட்டமாகக் கருதப்படுமென (பெரும் வாதத்துக்கு ஏதுவும் இடமுமளித்து மிகவும் இழுக்கான முறையில்) 8(2)ஆம் உபவிதியிற் கூறப்பட்டிருக்கின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி ஆட்சிமொழி யாக இருக்குமென்றும், இலங்கையில் எங்கிருக்கும் தமிழனும் தனது தாய்மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளலா மென்றும், எத்தகைய அரசாங்க அறிவித்தலோ மாதிரிப் பத்திரமோ, அறிக்கையோ தமிழிலும் பிரசுரிக்கப்பட வேண்டு

மென்றும் கூறும் 1966ஆம் ஆண்டு தைமாதம் உண்டாக்கப்பட்ட தமிழ்மொழி நியாயமான உபயோக விசேஷ ஏற்பாடுகள் (சிங்களம் மட்டும் என்னும் மேற்படி உத்தியோகமொழிச் சட்டத்துக்கு முரண்பாடில்லாத வகையிற் சொல்லப்பட்ட ஒரு குறித்த பரிபாலன விடயங்களுக்கு மட்டும் தமிழ்மொழி உபயோகிக்கப்படலாம் எனக் கூறும்) 1958ஆம் ஆண்டில் 28 என்னும் இலக்கத்துடன் இயற்றப்பட்ட தமிழ்மொழி விசேட ஏற்பாடுகட் சட்டத்தின் நோக்குக்கும் போக்குக்கும் முரண்பாடானவை என்றும், ஆகவே வலியற்றனவென்றும் (அரசியல் அமைப்பு விவகார மந்திரியும், மேற்படி அரசியலமைப்புச் சட்டத்தின் மூலகர்த்தாவும் ஆகிய கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களும், நீதி மந்திரியாகிய பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா அவர்களும் நாடாளுமன்றத்திற் கூறியவண்ணம்) வெற்றிகரமாக வாதாடக்கூடுமாதலால், தமிழ்மொழி உபயோக உரிமைகள் எத்தகைய வாதத்துக்கும் மயக்கத்துக்கும் இடமில்லாமல் சரிவர மேற்படி அரசியல் அமைப்புச் சட்டத்திற் புதிதாகப் பொறிக்கப்பட வேண்டும்.

2. சட்டங்கள் யாவும் சிங்களத்திலும், தமிழிலும் இயற்றப்படும் எனக் கூறுது, சிங்களத்தில் மட்டும் இயற்றப்படும் என 9ஆம் பிரிவு கூறுவதால், அப்பிரிவிற் சொல்லப்படும் தமிழ் மொழிபெயர்ப்புக்குச் சிங்கள மூலச் சட்டத்துக்குரிய அந்தஸ்துக் கிடையாதென்பதும், கருத்துப்பிரச்சினை ஏற்படும்போது, சரியான பொருள் விளக்கத்துக்கு, அதாவது சட்டமியற்றினேனின் உண்மைக் கருத்தறியச் சிங்களச் சட்டத்துக்கே செல்லவேண்டும் என்பதும் பெறப்படும்.

3. நீதிமன்றமொழி சிங்களப் பகுதிகளிற் சிங்களமாகவும் தமிழ்ப்பகுதிகளிற் தமிழாகவும் இருக்கும் எனக் காட்டப்படுவதை விட்டு, கோட்டுமொழி இலங்கை முழுவதும் சிங்களமாகும் எனக் காட்டப்பட்டிருக்கின்றது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வழக்குகள் தமிழில் நடாத்தப்படலாம் என்றும், வழக்கு மனு, மறுமொழி, விண்ணப்பம், இயக்கு பிரேரணை என்பனமட்டும் தமிழில் சமர்ப்பிக்கப்படலாமென்றும் காட்டப்பட்டிருக்கின்றது, எனவே, இப்பொழுதும் மேற்படி அரசியற் சட்டப்படி (வழக்குப்) பதிவேடுகள், தீர்வைகள், கட்டளைகள், மேன்முறையீடுகள் சிங்களத்திலேயே இருக்கவேண்டும்.

இவற்றுள் தீர்வைகள், கட்டளைகள் என்பன வட, கீழ் மாகாணங்களில் தமிழிற் செய்யப்படக் கோட்டு மொழிச் சட்டத்தின்கீழ் உபவிதிகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றனவாயினும், அவற்றுக்கு அரசியற் சட்ட அந்தஸ்துக் கிடையாதென்பது ஈங்கு சுட்டிக் காட்டற்பாலதாகும்.

பலாலி தெற்கு,
வயாவிளான்,
3-2-75.

இங்ஙனம்
ஷ சட்டங்களை எவர்க்கும் விளக்கத் தயாராயிருக்கும்
**நியாயவாதி, வ. இராசநாயகம்**

# தமிழினம் அழிந்து ஒழியாது நன்னிலை அடையவேண்டுமாயின்...

நம்மினத்தவர்க்கு எதிராகச் சிங்களவர் காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்துவிட்டுவரும் வன்கொலை, சித்திரவதை, கற்பழிப்பு, கொள்ளை, தீவைத்தல் முதலிய அக்கிரமச் செயல்கள், தமிழர்களுக்கு இலங்கையில் மெய்ப்பாதுகாப்பு இல்லை என்பதையும், தமிழர்களுக்கென ஒரு நாடும் சுதந்திரமும் இருப்பின், இத்தகைய வன்செயல்கள் நிகழமாட்டா என்பதையும், இனிமேல் எம்மனோர் தம் சீவனோபாயத்துக்குச் சிங்களப் பகுதிகளை நம்பியிருக்கமுடியாது என்பதையும், ஆகையால் நாம் எம் தன்னலத்தையும் கோழைத்தனத்தையும் விடுத்து, அரசியல் விடுதலையையும் பொருளாதார சுதந்திரத்தையும் அத்தியாவசியம் உண்டுபண்ண வேண்டும் என்பதையும் நன்கு புலப்படுத்துகின்றன.

ஆகவே, மேற்கூறிய வன்செயல்கள், ஐக்கியநாட்டுச் சபை வகுத்து வெளியிட்ட அடிப்படை மனித உரிமைகளுக்கும், இயற்கை நீதிக்கும் முற்றும் முரண்பாடானவை என்பதைக் குறித்த சபைக்கு எடுத்துக்காட்டி எங்கள் சுயநிர்ணய உரிமையைத் தொடர்ந்து நான்று பெற முயலவேண்டும்.

அதற்கிடையில், புத்த தருமம் ஓரளவு வாய்ந்த உயர்திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு போன்ற சிங்களப் பிரமுகர்கள், ''முற்றுய்ப் பிரியாதீர்! உங்கள் தந்தை செல்வா கேட்டதும், பிரிந்தும் பிரியாச் சகவாழ்வுக்கு உரியதுமான உண்மைச் சமஷ்டி அரசியல் தருகின்றோம்'' எனின் அதனை அங்கீகரித்துக்கொள்ளுதல் நன்றாகும். அது தமிழருக்கும், சிங்களவருக்கும் இடையே நிரந்தர சமாதான பரஸ்பர சகவாழ்வை விளைவிக்கும் என்க.

அதுதானும் அளிக்கப்படாவிடில், இப்போதைக்கில்லையாயினும், தமிழரின் விடுதலை ஆர்வமும், மதிநலனும், விடாமுயற்சியும் வீண்போகா என்பதை நன்கு உணர்ந்து, தக்ககாலம் வரும்போது. எமது வாலிபர் வெளிநாட்டு உதவியுடன் பூரண சுதந்திரம் அடைய முயலலாம்.

இப்பொழுது, நாங்கள் எம்மனோரின் அறிவு வளர்ச்சியும், பொருளாதார சுதந்திரமும் கருதிப் பின்வருவனவற்றை அதி விரைவிற் செய்யவேண்டும்.

*1.* இப்போதுள்ள இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தைத் தமிழ் வளாகமாக்கி, சகல கல்வித்துறைகளையும் இவ்வளாகத்திலும் கிழக்கு மகாணத்தில் நிறுவப்பட இருக்கும் புதிய வளாகத்திலும் உண்டுபண்ணுதல்.

*2.* மேற்சொல்லிய வன்செயல்களாற் பாதிக்கப்பட்ட அகதிகளையும், உயர்தரக் கல்வி கற்க இயலாத வாலிபர்களையும், கமம்

செய்யப் போதிய காணி பூமி இல்லா மற்றும் வறியவர்களேயும் குடிசனம் குறைந்த மன்னுர், வவனியா, திருக்கோணமலே, மட்டக்களப்பு, அம்பாறை முதலிய மாவட்டங்களில் விரைவில் குடியேறச் செய்து, நெல், தென்னே, காட்டு முந்திரிகை, உழுந்து, பயறு, கடலே, சோழம், சோயா அவரை முதலிய உணவு அபிவிருத்தியில் ஈடுபடச்செய்தல்.

3. மேற்காட்டிய மாவட்டம் ஒவ்வொன்றிலும் பெரிய மீன்பிடிக் கொம்பனிகளும், மற்றும் சிறிய மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களும் அமைத்து, தொழில் மாண்பு உணர்த்தி, சாதி வித்தியாசமின்றிச் சகல வாலிபர்களேயும் சேர்த்து, இப்போதுள்ள மீன்பிடிப் பயிற்சிக்கலாசாலேயிற் பயிற்றுவித்து, நவீனமுறைகளிற் கடல்படுதிரவியத்தை அபிவிருத்தி செய்தல்.

4. எமது விஞ்ஞானப் பட்டதாரிகளும், மற்றும் வர்த்தகப் பட்டதாரிகளும் ஒருங்குகூடி ஆராய்ந்து வட, குண மாகாணங்களிலுள்ள மூலப் பொருட்களேக்கொண்டு என்ன என்ன கைத்தொழில்கள் போதியளவு ஊதியத்துடன் செய்யலாமெனக் கூறுகின்ருர்களோ அன்ன அன்ன கைத்தொழில்களே (சிறப்பாக வடக்கே ஒன்றும் கிழக்கே ஒன்றுமாக இரு பெரிய நெசவாலேகளே) ஒன்றுபட்டு ஆரம்பித்துச் செவ்வனே நடாத்துவதோடு பனே, தென்னே, மா, பலா, தக்காளி, வாழை, முந்திரிகை, பருத்தி முதலியவற்றை அபிவிருத்தி செய்தல்.

5. இப்பொழுது குடிசனமுள்ள நகரங்களேயும், மற்றும் ஊர்களேயும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலமும், அபிவிருத்திச் சபைகள் மூலமும், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் சீர்திருத்திப் பொதுமக்களின் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்தல்.

மேற்கூறியவற்றை யெல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர்தான் செய்யவேண்டு மென்று எண்ணுமல், தமிழர் விடுதலேக் கூட்டணியினர் யாவேமும் நகரந்தோறும் கிராமந்தோறும் கிளேகள் நிறுவிக் குறித்த விடுதலேக் கூட்டணியைப் பொதுசன இயக்கமாக்கி, செல்வந்தர்களின் பணத்தையும், இளேப்பாறிய உத்தியோகத்தர்களின் அமைப்பு வன்மையையும், நிருவாகத் திறனேயும் உலக அனுபவத்தையும், மேலும் கல்விமான்களின் மதிநலனேயும், பேரறிவையும், நமது உயிர்நாடிகளான வாலிபர்களின் திண்மையையும், வீராவேசத்தையும், புதுமைப்பற்றையும் பயன்படுத்தி, எமது இனத்துக்கு வேண்டிய பொருளாதார சுதந்திரத்தையும் அரசியல் விடுதலேயையும் பெறுவோமாக. சுபம்!

இங்ஙனம்
நாடாளுமன்றம் செல்லாமலும்
நாட்டுக்கு நல்ல சேவை செய்யலாமென எண்ணும்
நீண்டகால அனுபவம் வாய்ந்த பொதுநலத் தொண்டன்
சட்டத்தரணி வ. இராசநாயகம்

வயாவிளான்,
10-10-77.

# கிராமாபிவிருத்தியும் நம் சமூக முன்னேற்றமும்

## நேரிசை வெண்பா

ஊர்திருத்தும் சங்கங்கள் உண்டுபண்ணித் தொண்டாற்றிச்
சீர்திருத்தம் கண்டிடுவோம் தேசமெங்கும் — ஊர்திருத்தும்
சேவையினில் ஈடுபடும் தொண்டர் மடைமாற்றம்
தேவநிலை உய்விக்கும் தேர்.

(மடைமாற்றம் - Sublimation of the sexual instinct)

ஒரு நாட்டின் உயிர்நிலை அதன் கிராமப் பிரதேசத்திலேயே தங்கியிருக்கிறதென்பதை நன்குணர்ந்த மகாத்மா காந்தியடிகள் கிராமங்களிலேயே தமது கதரியக்கத்தையும் இதர சுதேசக் கைத் தொழில் அபிவிருத்தியையும் ஆரம்பித்து வைத்தார். இலங்கை சுதந்திரமெய்தியபொழுது, இவ் வுண்மையை ஐக்கியதேசீயக் கட்சி அரசாங்கம் இனிது உணர்ந்து, சமய விருத்தி. கலாச்சார விருத்தி, கல்வி அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி, பொருளாதார அபி விருத்தி என்பவற்றை நோக்கங்களாகக்கொண்டு ஊர்கள் தோறும் கிராம முன்னேற்றச் சங்கங்கள் தாபித்து, அவற்றுக்குத் தேவை யான கட்டிடங்கள் நிறுவப் பணமுதவியதோடமையாது, தெருக் கள் அமைத்தல், குளங்கள் திருத்துதல் முதலிய பொதுப் பணி களைச் சிரமதானமுறையிற் செய்யப் பொருளுதவியும் புரிந்து வந்தது.

இதன்பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தபோது, மாணவர்களும், வேலைசெய்யாது திரியும் வீணர்களும் சந்திகளி லும், மற்றும் இடங்களிலும் நின்று வீணே நேரத்தைப் போக்கா வண்ணம், வாசனையிலும், விளையாட்டிலும் தங்கள் ஒய்வு நேரத் தைப் பயன்படுத்தும் பொருட்டு, வாசிகசாலை, விளையாட்டுமுன் றில் என்னும் இரு அம்சங்களையும் தன்னகத்தேகொண்ட சன சமூகநிலையங்களை நிறுவி, அவற்றுக்குக் கிராமசபைகள் மூலம் நன் கொடைகள் அளித்தும், கலாச்சார விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவித்தும் ஊக்கமளித்தது. இச் சனசமூகநிலைய இயக்கம் பணியாளர் பஞ்சமுள்ள பிற்போக்கான இடங்களில் மேற்சொல் லிய கிராமமுன்னேற்ற இயக்கத்தை ஓரளவு பாதிக்கலாயிற்று. இப்பாதிப்பை நீக்குவதற்குச் சில கி. மு. சங்கத்தினர் ச. ச. நிலை யங்களைத் தங்கள் சங்கங்களின் அம்சங்களாக இப்போதும் நடாத்தி வருகின்றமை மற்றும் சங்கங்களாலும் பின்பற்றற்பாலதொன்றும். ஆகவே, மேற்கூறிய இரு நிறுவனங்களையும் உதவி அரசாங்க அதி பரின் மேற்பார்வையின் கீழ் இயங்கச் செய்தல் மிகவும் நன்றென் பது எம்போன்ற அனுபவசாலிகளின் கருத்தாகும்.

இப்போதைய அரசாங்கம் பழைய கிராமாபிவிருத்திச் சங்கங் களைப் புனருத்தாரணம் செய்தும் புதிய சங்கங்களைத் தாபித்தும் கிராமாபிவிருத்தி செய்ய எண்ணி, 1978-10-14இல் ''கிராமாபி விருத்தி இயக்கத்தினை மீள அமைத்தல்'' என்னும் தலையங்கத் துடன் வெளியிட்ட சுற்றறிக்கையிலிருந்து சில முக்கிய விபரங் களைத் திரட்டி ஈண்டு தருகின்றோம். ஒரு கி. அ. சங்கத்தில், கிரா மத்தில் வசிக்கும் அல்லது காணி பூமி வைத்திருக்கும் அல்லது தொழில்புரியும் 18 வயதுக்கு மேற்பட்ட எந்த இலங்கைப் பிரசை யும் அங்கத்தவராகலாம். சங்கமொன்று பதியப்படுவதற்கு அக் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களில் 51 சதவீதமாவது அதில் அங் கத்துவம்பெற்றிருத்தல் வேண்டும். அரசாங்கம் தரும் மாதிரி யாப் பின் நியதிகளுக்கு அமைய யாப்பு (Constitution) ஒன்று தயாரிக் கப்பட்டு, பொதுக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படு தல் வேண்டும். செயற்குழு (நிருவாகசபை), தலைவர், உபதலை வர், காரியதரிசி, உபகாரியதரிசி, தனாதிகாரி என்னும் 5 உத்தியோ கத்தர்களையும், மகாசபையால் தெரிவுசெய்யப்படும் இன்னும் 6 உறுப்பினரையும், கிராமாபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டுக் கிராம மட்டத்தில் சேவையாற்றும் அரசாங்கப் பணியாளர்களையும் கொண்டிருக்கும். (மேற்படி அரசாங்கப் பணியாளருக்கு வாக் குரிமை கிடையாது). கிராமத்தில் எல்லாப்பகுதிகளையும் பிரதி நிதித்துவப்படுத்தும்வண்ணம் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். ஒரு செயற் குழுவின் சேவைக்காலம் 2 வருடமாகும். குறைந்தபட்சம் மகாசபை 4 மாதங்களுக்கு ஒரு முறையாயினும், செயற்குழு 1 மாதத்திற்கு ஒரு முறையாயினும் கூடவேண்டும். இக். கி. அ. சங்கம் அரசாங்க அதிபரால் பதியப் பட்டு, உதவி அரசாங்க அதிபர், கிராம அபிவிருத்தி உத்தி யோகத்தர் என்போரின் மேற்பார்வையில் இயங்கும்.

இச் சங்கத்தின் நோக்கம் கிராம மக்களின் பொருளாதார, சன்மார்க்க, சமூக அபிவிருத்தியை மேம்படுத்துதல் என மேற்படி சுற்றறிக்கை கூறுகின்றது. ஆகவே, கைத்தொழில், கமத்தொழில், கடற்றொழில் ஆதியன மூலம் நமது சமூகத்தின் பொருளாதா ரத்தை ஓரளவு வளர்க்கவும், மதுபானம், அக்கிரமச்செயல், சூது, துராசாரம், சாதித்துவேஷம், சமயப் பூசல் முதலியவற்றை ஒழித்து நாட்டில் சன்மார்க்கச் சமயவாழ்வை உண்டுபண்ணவும், எல்லா முன்னேற்றத்துக்கும் மூலகாரணமாகிய கல்வியை அபி விருத்தி செய்யவும், அதிலும் வறிய மாணவர்கட்கு வெளிச்ச வசதி, தளபாட வசதி, பாடங்கேட்கும் வசதி என்பவற்றை இல வசமாக அளித்து இராப் பாடசாலை நடாத்தவும், இளம்வயதிற் போதியளவு கற்கத் தவறியவர்களுக்கு முதியோர் கல்வி புகட்டி, வானொலி, பத்திரிகை ஆதியனமூலம் அவர்களின் அறிவை

வளர்க்கவும், இன்னும் இளைஞர்கட்குப் பொதுநலப் பணியில் ஆர்வமும் தேர்ச்சியும் அளித்து, பிற்காலத்தில் அவர்களை நல்ல நகர மாந்தர்களாகத் திகழச் செய்யவும் இச் சங்கங்கள் பெரிதும் துணைபுரியும் என்க. இவைமாத்திரமன்றி, இத்தகைய சங்கமொன்று அரசாங்கத்திலுள்ள சகல அமைச்சுக்களுடனும் தொடர்புகொண்டு தனது கிராமம் முன்னேற என்ன என்ன குறை நிவிர்த்திசெய்யப் படவேண்டுமோ அன்ன அன்ன குறையை எளிதில் நிவிர்த்திசெய் விக்கலாம். ஆகவே, கனடா, ஜேர்மனி முதலிய பல தேசங்கள் கிராமாபிவிருத்திசெய்ய இலங்கைக்கு மிக்க பணவுதவிபுரிய முன் வரும் இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பழைய சங்கங் களைச் செவ்வனே புனருத்தாரணம் செய்தும், புதிய சங்கங்களை நிறுவியும் நமது நாட்டை முன்னேற்றுவோமாக. சுபம் !!!

இங்ஙனம்

தன்னாட்டுக்குத் தன்னாலியன்ற தொண்டு செய்யும்

வயாவிளான் **சட்டத்தரணி வ. இராசநாயகம்**
*27-10-78*

குறிப்பு : இத்தொடர்பில் நமது வயாவிளான் - பலாலி தெற்குக் கிராம முன்னேற்றச் சங்கத்தினதும், அதன் அம்சமாகவுள்ள வாலிபர் சங்கச் சனசமூக நிலையத்தினதும் இப்போதைய நிலைமையை உற்று நோக்கும்போது, அவற்றை ஆக்கிவைத்த உண்மை ஊரபிமானிகட்கெல்லாம் பெரும் இருதய நோ ஏற் படும். முதலாவதாக, தொண்டர்கள் கூடிக் கலந்து பேசவும், பிரசங்கங்களும், மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடாத்த வும், இப்பொழுது குறித்த கி. மு. சங்க மண்டபத்தில் இருக் கும் நெசவு நிலையம் பெருந் தடையாகக் காணப்படுகின்றது. அந்நிலையத்தைத் தெருவுக்குக் கிழக்கே அல்லது வேற்றிடத் துக்குக் கொண்டுசெல்லப் புதிய கட்டிடமொன்று அமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் மூலம் அரசினரிடமிருந்து பணம் பெறலாமென்றால், (முகம்பார்த்தும், பொல்லாப்புக்கு அஞ்சி யும்) பழைய உத்தியோகத்தர்களாயினுஞ்சரி, புதிய உத்தியோ கத்தர்களாயினும்சரி, எம்முடன் கூடி ஒத்துழைக்கின்றார்க ளில்லை. இரண்டாவதாக, கூட்டம்கூடித் தொண்டாற்றாமை யால், மேற்படி கிராம முன்னேற்றச் சங்கம் பதிவழிக்கப்பட்டு, நீண்டகாலம் சென்றபின் இப்போதுதான் அரசினரால் புத்துயிர் அளிக்கப்படுகின்றது. மூன்றாவதாக, மேற்போந்த சனசமூக நிலையத்தில் வானொலிப் பெட்டியோ, பத்திரிகை களோ காணப்படுகின்றில. புத்தக அலுமாரியில், முன்னர் துரைச்சாணி லீலாவதி இராமநாதனும், திருவாளர்கள் மு. ச. இளையதம்பி, தம்பி இராமநாதன் முதலிய பெருமக்களும்,

மற்றும் உள்ளூரன்பர்களும் நன்கொடை யளித்த அரும் பெரும் நூல்களைக் காணவில்லை. இதனை மீண்டும் சீர்ப்படுத்தி நல்ல வாசிகசாலையாக நடாத்தவும், முதியோர் கல்வி புகட்ட வும், இராப் பாடசாலை நடாத்தவும் மேற்கூறிய நெசவுசாலை பெரும் இடையூருக இருக்கின்றது. நான்காவதாக, இவ் வாண்டு அரசாங்கம் தரும் 25,000 ரூபாவைப் பயன்படுத்தி மயிலிட்டிக் கிராம சபையைக்கொண்டு ஸ்ரீ சண்முகம் விளை யாட்டு முன்றிலில் திறந்த வெளியரங்கொன்று அமைப்பிக்க முயலுங்கால், அதற்கு மாருக அதனைக் குறித்த கி. மு. ச. மண்டபத்துக்குத் தெற்கேயுள்ள நெருக்கடியான இடத்தில், அதுவும் தெருவுக்கு முதுகுகாட்டி, அமைக்க முயற்சி எடுக் கப்படுகின்றது. இக் குறைகளை இப்போதேனும் நீக்க அரசின ரும் மற்றும் ஊரபிமானிகளும் முன்வருவார்களாக.

இங்ஙனம்
தமர், வேண்டியவர் என்று முகம்பாராது
பொல்லாப்புக்கு அஞ்சாது பொதுநலம் போற்றும்
பகவத்கீதை மாணவன்

*27–10–78* வ. இராசநாயகம்

---

# தமிழ் மக்களுக்கு ஒரு நல்லுரை

**(நியாயவாதி திரு. வ. இராசநாயகம் அவர்கள்)**

உலகத்தில் அகங்காரம் (ஆணவம்), மமகாரம் (தன்னலம்) என்னும் இரண்டுமே சகல குற்றங்களுக்கும் காரணங்களாக இருக் கின்றன. 1930ஆம் ஆண்டில் சேர் பொன். இராமநாதன் அவர்கள் இயற்கை எய்திய காலந்தொட்டு இன்று வரையுள்ள சென்ற அரை நூற்றுண்டில் மேற்சொல்லிய தீய இயல்புகளினுல் எமது தமிழினம் ஒன்றுபட்டு ஆவனசெய்யாது சீரழிந்து இப்போதைய கேவலநிலையை அடைந்துள்ளது. குறித்த ஐம்பது ஆண்டிலும் காலத்துக்குக்காலம் எட்டப்பர் பலர் தோன்றி எம்மினத்தைச் சிங்களர்க்குக் காட்டிக்கொடுத்தமையால், தமிழர்கள் சகலரும் இரண்டாந்தரப் பிரசைகளாக (இல்லை! மூன்ருந்தரப் பிரசைகளாக) வாழவேண்டிய நிர்ப்பந்தநிலைமை ஏற்பட்டுள்ளது. மேலும் மேலும் இத்துர்லபநிலை அதிகரித்து நீடிக்காவண்ணம், கடந்த ஐம்பதாண்டு அரசியலை ஆர்வத்துடன் அவதானித்துவரும் ஒரு சிறு சுதந்திரப் பிரியன் என்னும் முறையில், பொதுவாகத் தமிழினத்தவர்கள் அனைவருக்கும் சிறப்பாக எங்கள் தமிழ்த் தலைவர்களுக்கும் மேல் வரும் நல்லோசனைகளை மிக்க தாழ்மையுடன் கூற விரும்புகிறேன்.

மேற்படி இராமநாததுரை அவர்கள் டொனமூர்த் திட்டம் அளவுகடந்த அதிகாரங்களைச் சிங்களர்க்கு வழங்குகின்றமையால், அவர்கள் அந்த அதிகாரங்களைத் தமிழருக்கும், மற்றும் சிறு பான்மையினருக்கும் எதிராகத் துர்ப்பிரயோகம் செய்வரெனத் தீர்க்கதரிசனம் கூறினர். அவ்வுண்மையை அனுசரித்து அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களும் அவரைச் சேர்ந்தோரும் ஐம்பதுக் கைம்பது கேட்டனர். அச் சமபெலப் பிரதிநிதித்துவம் கிடைக்காதுபோகவே, அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களும் அவரைச் சேர்ந்தோரும் சமஷ்டி அரசியல் வேண்டினர். அவர்கள் தங்கள் கட்சியின் பெயரைத் தமிழில் ''தமிழரசுக் கட்சி'' எனவும், ஆங்கிலத்தில் Ceylon Federal Party (இலங்கைச் சமஷ்டியரசியற் கட்சி) எனவும் வைத்துக்கொண்டதினுல், தங்கள் உண்மை நோக்கத்தைத் தமிழினத்தவர்களுக்குக் கூறிவிட்டு, சமஷ்டி அரசியல் பெறுவதே தங்கள் நோக்கமெனத் தங்களை அணுப்புகின்றன ரெனச் சிங்களர் எண்ணி, தமிழரசுடன் நில்லாது தமிழர் அடுத்த படியாக இந்தியாவுடன் இணைவார்கள் எனவும் மிகவும் அஞ்சி வெருண்டனர். அப்போது குறித்த கட்சியினர் மெய்ச்சமஷ்டி அளிப்பதால் சிங்களர்க்கு எத்தகைய கேடும் உண்டாகாதென்றும், சமஷ்டி அரசியலால் இந்நாட்டு இருபேரினங்களும் நித்திய கழுத்தறு சண்டையினின்றும் விடுபட்டு, பிரிந்தும் பிரியாமல் நிரந்தர சமாதானமாக வாழலாம் என்றும், அங்ஙனமன்றி ஒற்றையாட்சி நீடித்து நிலைக்குமேல் இரு சாகியத்தினருக்குமிடையே உண்டாகும் குரோதம், பகை, இகல் என்பவற்றைப் பயன்படுத்தி இந்துசமுத்திரத்தில் நல்ல கேந்திர ஸ்தானத்தில் இருக்கும் இந்தச் சிறிய இலங்கைத் தீவை ஒருகாலத்தில் அமெரிக்கா, ருஷியா என்னும் நாடுகள் மட்டுமன்றி அயலிலிருக்கும் இந்தியாதானும் தற்பாதுகாப்புக்காக எளிதிற் பிடிக்கக்கூடுமென்றும், ஆகவே, சிங்களர் தங்கள் நிரந்தர சுதந்திரம் கருதித் தமிழர்க்குச் சமஷ்டி அரசியல் அளித்தல் இன்றியமையாததென்றும் தமிழில் மட்டுமன்றிச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பத்திரிகைகள் பிரசுரித்தும், கூட்டங்கள் கூடியும் தேவையான பிரசாரம் செய்தார்களல்லர். அதுமட்டுமன்றி, அக்கட்சியினர் ''வாழு! வாழவிடு!'' என்னும் சமதர்மக்கொள்கையுடைய இடதுசாரிகளின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெறவும் தேவையான தேர்தல் உடன்படிக்கை அவர்களோடு செய்யவும் தவறியுள்ளனர்.

இவற்றின் விளைவாகப் பிரதிகூலமடைந்த குறித்த கட்சியினர் தமிழர்க்கு மென்மேலும் ஏற்படும் கஷ்டங்களை உணர்ந்து தமிழர்களனைவரும் தங்கள் பிரிவினைகளை ஒழித்து ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டிய அவசியத்தை உணர்ந்து திருக்கோணமலையில் ஒரு

கூட்டம் கூடி தனித்தமிழ்நாடு நிறுவுதலே நோக்கமாகவுள்ள ''தமிழர் விடுதலைக் கூட்டணி'' என்னும் ஓர் ஒற்றுமை முன்னணியை வகுத்து வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஒரு பெரும் மகாநாடு கூடி, தங்கள் தீர்க்கமுடிவைப் பொதுமக்களுக்கும் அரசினர்க்கும் பிரகடனம் செய்தனர். இதுமாத்திரமன்றி, குறித்த முன்னணியினர் சென்ற பொதுத்தேர்தலில் தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் தொகுதிகளிலெல்லாம் தமது கட்சி அபேட்சகர்களை நிறுத்தி அடுத்த ஆறுவருடகாலத்துக்குள் வேண்டிய தியாகங்கள் யாவையும் செய்து தமிழீழம் என்னும் தனித் தமிழ்நாட்டை அமைத்து விடுவார்களென்றும், அடுத்த பொதுத் தேர்தல் குறித்த தமிழீழ மண்ணிலேயே நடைபெறுமென்றும் வாக்குறுதி செய்து தமிழ்மக்களின் வாக்குகளை யெல்லாம் சேகரித்தனர்.

இம்முன்னணியைச் சேர்ந்த எங்கள் தலைவர்கள் சென்ற தேர்தலில் போதியளவு வெற்றியடைந்து நாடாளுமன்றம் சென்று தங்கள் அரசியல் இலட்சியத்தைப் பட்டவர்த்தனமாகக் கூறிய சில நாட்களுக்குள் சிங்களர் தமிழர்மீது ஆக்கிரமித்துக் கொலை, கொள்ளை, வீடெரிப்பு, கற்பழிப்பு முதலிய பொல்லாப் பாதகச் செயல்களைப் புரிந்தமையாலும், அதற்குப்பின் சிலமாதங்கள் சென்றதும் இப்போதைய ஜனாதிபதியும் அவரின் அரசாங்கமும் அரசியல் யாப்பைத் திருத்தித் தார்மீக இராச்சியம் ஒன்றை நிறுவப்போவதாகக் கூறியமையாலும் குறித்த கூட்டணியினர் தாங்கள் செய்யவிருந்த அறப்போரைப் பின்போட்டனர். அதன்பின்னர் மொழிப்பிரச்சினையை ஓரளவு தீர்த்து வைத்த இப்போதைய அரசாங்கம் தமிழர் தங்கள் பொருளாதார அபிவிருத்தியைத் தாங்களே நிர்வகித்துச் சரிவரச் செய்யக்கூடிய மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நிறுவுமென எண்ணி முன்னர் மக்களுக்குச் செய்து கொடுத்த வாக்குறுதியைச் செயலிற் கொண்டுவருவதை மீண்டும் பின்போடலாயினர்.

1. இப்போது, அரசாங்கம் வழங்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பொதுமக்கள் அங்கீகரிக்கவேண்டுமா அல்லது நிராகரிக்க வேண்டுமா என்னும் பிரச்சினை எழுந்துள்ளது. அவற்றை அங்கீகரிக்கலாமெனக் கூறும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனிநாடுபெற முயற்சி செய்யும் அதேவேளையில் தமிழர்கள் தங்கள் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமெனவும், அங்ஙனம் செய்யக் குறித்த மாவட்ட சபைகள் போதியளவு துணைபுரியுமென்றும் கூறுகின்றனர். இக் கூற்றினைக் கோவை மகேசன், ஈழவேந்தன், சந்திரகாசன் முதலிய இனபிமானிகள் பெரிதும் ஆட்சேபித்து, குறித்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மாவட்ட மந்திரிகட்கும் மற்றும் மத்திய அர

சாங்கத்துககும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியிருப்பதாலும், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்கப் போதிய அதி காரம் அவற்றுக்கு இல்லாமையாலும், திருக்கோணமலை, மெதுறு ஓயா, வவனியா முதலிய தமிழ்ப்பிரதேசங்களில் செய்யப்படும் பொருளாதார அபிவிருத்தி சென்றகாலத்தில் செய்யப்பட்ட கல் லோயா அபிவிருத்திபோலச் சிங்களஇனுபிவிருத்தியாகப் பரிணமிக்கு மென்றும் சொல்லுகின்றனர். இவர்கள் மாத்திரமன்றி, ஐக்கிய அமெரிக்காவிலும், கனடாவிலும், பிரித்தானியாமுதலிய ஐரோப்பிய நாடுகளிலும் எம் மினத்தவர்களின் அரசியல் சுபீட்சத்துக்காகப் பிறநாட்டவர்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் உண்டு பண்ண மிகவும் பாடுபடும் எம் விடுதலைவாதிகள் தனி நாடு கேட்டு நிற்கும் இவ்வேளையில் குறித்த அபிவிருத்திச்சபைகளைத் தமிழர்கள் ஆங்கீகரித்தால், எங்கள் ஜனுதிபதி பிறநாட்டினர்க்கு இப்போது பிரசாரம் செய்வது போல, குறித்த அபிவிருத்திச் சபைகளை வழங் கித் தமிழர்களைத் திருப்திப்படுத்தி அவர்களின் சுதந்திரப் பிரச் சினையைச் சிங்கள அரசாங்கம் தீர்த்துள்ளதெனக் குறித்த வெளி நாட்டு அனுதாபிகள் தப்பபிப்பிராயம் கொள்ளுவரென்றும் கூறுகின்றனர். பின்னைய இவ்விருசாராரின் கூற்றுக்களையும் பார பட்சமின்றிச் சட்டக்கண்ணுடன் ஆராயும்போது அவை சரி யெனவே தோன்றுகின்றன. அதுமாத்திரமன்றி, இப்போது வழங் கப்படும் மாவட்டசபைகள் செல்வநாயக—பண்டாரநாயக உடன் படிக்கையிற் சொல்லப்பட்டுள்ள பிரதேச சபைகளைக்காட்டிலும் சுயாட்சி மிகவும் குறைந்தனவாகக் காணப்படுகின்றன. ஆகவே, மேற்கூறிய விடுதலைக் கூட்டணியினர் கருத்துவேற்றுமையுடைய கோவை மகேசன், ஈழவேந்தன், சந்திரகாசன் முதலிய உள்நாட்டு விடுதலை வாதிகளையும், மேற்கூறிய வெளிநாடுகளில் வதியும் மற்றும் விடுதலைவாதிகளையும், மற்றும் சுதந்திர இயக்கத்தினரையும் முறைப் படி அழைத்து வட்டமேசை மகாநாடு கூடிப் புனராலோசனை செய்து குறித்த மாவட்டசபைகளை அங்கீகரிக்கவேண்டுமா அன்றி நிராகரிக்கவேண்டுமா என்னும் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப் பார்களாக.

2. அடுத்தபடியாக, (தமிழர்கள் முதலில் பெறுவதிலும் பின்னர் பாதுகாப்பதிலும்) மிக வில்லங்கம் வாய்ந்ததும், சிங்களர் எவரும் எக்காலத்திலாயினும் விரும்பாததும் என்றும் தனித்துவம் வாய்ந்தது மான தனித்தமிழ் நாட்டைக் கோருவதா அல்லது மீதி இலங்கை சம்மதிக்கின் அம்மீதி இலங்கையுடன் சமத்துவ அடிப்படையில் உண்மைச் சமஷ்டி அரசியல் அமைக்க என்றும் தயாராக இருக் கும் சமதர்மம் வாய்ந்த தமிழ் நாட்டைக் கோருவதா என்னும் பிரச்சினையையும் குறித்த எங்கள் வெளிநாட்டு இனுபிமானிகளை

உசாவிக் குறித்த மகாநாட்டில் முடிவுசெய்தல் மிகவும் விரும்பற் பாலதொன்றுகும்.

3. மேற்சொல்லிய தனிநாடு நிறுவவோ அல்லது சமஷ்டி அரசியல் அமைக்கவோ தமிழருக்கென்ருெரு பிரதேசம் இருக்கவேண்டும். இப்பொழுது மேற்சொல்லிய மெதுறுஓயா, திருக்கோணமலே, வவனியா முதலிய பிரதேசங்கள் சிங்களப் பிரதேசங்களாக மாற்றப்படுவதை அறிந்தும் அறியாதார் போல் எங்கள் தலேவர்களும் மற்றும் பொதுமக்களும் வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்காது வாழாவிருப்பது மிகவும் கவலேக்கிடனுகும். இங்ஙனம் தமிழ்பிரதேசத்தைப் பிறர் அபகரித்தலே மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் எங்கள் தலேவர்கள் தனிநாடமைத்தல் என்னும் சொற்களே உச்சரிக்கத்தானும் தகைமையிலர் என்பது தமியேனின் தாழ்மையான அபிப்பிராயமாகும்.

4. எங்கள் விடுதலேக் கூட்டணித் தலேவர்களுக்குச் சிறியேன் ஒரு சற்புத்திகூற விரும்புகிறேன். அஃதாவது, யாவும் முற்றுற உணர்ந்து தேவலோகத்திலிருந்து வந்த தேவாதி தேவர்களெனத் தங்களேக் கருதாமல், தமிழினத்துக்காகப் பேசக் கரும மாற்றத் தங்களுக்கே உரித்துண்டென்று தப்பிதமாய் எண்ணுது,

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''.

என்னும் பொய்யா மொழியைச் சிரமேற்கொண்டு, பொது நன்மை கருதி எம்போன்ற சில்லறைகள் கூறுவதையும் கேட்டு இவர்கள் நடக்கவேண்டும். இல்லேயேல், தமிழினத்துக்கு மாத்திரமன்றித் தங்களுக்கும் பெரும்கேடு விளேவிப்பவராவார்கள்.

5. இறுதியாக, எம்மினத்தைச் சேர்ந்த பொதுமக்கள் யாவரையும் விளித்துக் கூறுவது யாதெனில், ''நாம் உண்டு; நம் குடும்பம் உண்டு'' எனத் தன்னலம்வாய்ந்த மிருக வாழ்வு நடத்தாமல், ''நம் நாடு உண்டு; நம்மினம் உண்டு; நம்மொழி உண்டு; நம்மதம் உண்டு '' எனப் பொதுநல ஆர்வம்பூண்டு, எமது தலேவர்கள் செய்யத் துணியும் எந்தக் கைங்கரியத்திலும் ஈடுபாடுகொண்டு, தங்கள் சக்தி, நேரம், பணம், செல்வாக்கு முதலியவற்றைத் தியாகம் செய்து அவர்களுக்கெல்லாம் பக்கபலமாக நின்று உறுதுணே புரிதல் வேண்டும். அங்ஙனமன்றி, கிளிநொச்சி, மன்னூர், வவனியா, திருக்கோணமலே, மெதுறு ஓயா, மட்டக்களப்பு, அம்பாறை முதலிய தமிழ்ப் பிரதேசங்களிற் தமிழரைக் குடியேற்றுதல், கூட்டுறவு முறையில் குறித்த தமிழ்ப் பிரதேசங்களிற் கமத்தொழில் விருத்தி, கடற்றெழில் விருத்தி, கைத்தொழில் விருத்தி, வியாபார விருத்தி என்பன செய்தல், சகல சைவாலயங்களேயும் பொதுக் கோயில்க

ளாக்கி, அவற்றிலெல்லாம் அரிசன ஆலயப்பிரவேசம் நிகழ்த்தி அவற்றைச் சனநாயகமுறையில் நடாத்திச் சமயபோதம் செய்தல், கதிர்காமவேலவன் ஆலயத்தை இந்துக்களுக்குரியதாக்கல் முதலிய பொதுத் தொண்டுகளில் ஈடுபடாது, நாடாளு மன்ற உறுப்பினர் களே பொதுநலத்துக்குரிய அனைத்தும் செய்யக் கடமைப்பட்ட வர்கள் என எண்ணி வாளாவிருப்பின், எமது தமிழினத்தவர்கள் அரசியல் விடுதலையோ, பொருளாதார சுதந்திரமோ, ஆன்ம விடு தலையோ எப்போதாயினும் எய்தமாட்டார்கள்,

குறிப்பு: ஷெ கட்டுரை 2ஆம், 3ஆம் பந்திகள் களையப்பட்டு, ''அபிவிருத்திச் சபைகளால் தமிழினத்துக்கு அழிவா? வாழ்வா?'' என்னும் தலையங்கத்துடன் 5-10-80இல் ''சுதந்திர''னில் வெளிவந்தது

---

# மாவட்ட சபைச் சட்டத்தின் முக்கிய பாகங்களும் அச்சட்டத்துக்குச் செயற்பால சில திருத்தங்களும்

இற்றைக்கு ஏறக்குறைய ஒரு வருட காலத்துக்கு முன்னே, 1980ஆம் ஆண்டில் 35 என்னும் இலக்கத்துடன் இயற்றப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டத்திற் சொல்லப்படும் மாவட்ட சபைகளை அங்கீகரிக்க வேண்டுமா அல்லது நிராகரிக்க வேண்டுமா என்னும் பிரச்சினை எழுந்தபோது, அதனை அங்கீகரித்தல் புத்தி யாகாது என்னும் நல்லாலோசனையை 30-10-79இல் வெளிவந்த ''சுதந்திரன்'' பத்திரிகை மூலம் தமிழ்மக்களுக்கு வழங்கியதோடு அமையாது, மாவட்டசபைத் தேர்தல் நிகழுமுன் பொதுமக்கள் குறித்த சட்டம் முழுவதையும் நன்கு வாசித்து விளங்கித் தாமாகவே சரியான ஒரு முடிபுக்கு வரவேண்டுமென்னும் நோக்கத்துடன் ஷெ சட்டம் முழுவதையும் மொழிபெயர்த்து ஷெ ''சுதந்திரன்'' ஆசிரியருக்கு அனுப்பினேன். அவர் தனிநாடு கேட்பதற்குச் சரியான காலம் வந்துற்ற இந்த வேளையில் மாவட்ட சபைச் சட்டத்துடன், அதுவும் அதிகாரம் போதியளவு இல்லாத மாவட்ட சபைகளுடன், வினைக்கெடுதல் புத்தியாகாது என்னும் கருத்தினல், அதனை வெளியிடாது விட்டுவிட்டார். பின்னர் தேர்தல் நிகழ்ந்தபின் எங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர், குறித்த சட்டத்துக்குச் செய்யவேண்டிய திருத்தங்களை (காலம் தப்பியாயினும்) செய்ய முயலுகின்றனரென்பதை அறிந்து, குறித்த சட்டத்துக்கு அத்தி யாவசியம் செயற்பால திருத்தங்களை விபரமாக வரைந்து அனுப் பினேன். அவர்கள் அவை கிடைத்தனவென்றும், தாங்கள் அரசின

ருடன் நடாத்திய பேச்சுவார்த்தையில் அவை இடம்பெற்றன வென்றும் மறுமொழி எழுதியிருந்தார்கள். இப்போது பார்க்கிற வரையில், மத்திய அரசாங்கம் தனக்குரிய பேரதிகாரங்களை யெல்லாம் விட்டுக்கொடுக்குமென எண்ணுதற்கில்லை. ஆகவே, மேற்படி திருத்தங்களை யெல்லாம் பொதுமக்களின் விஷயஞானம் கருதிக் கீழே தருகின்றோம்.

ஷெ சட்டத்தின் 2ஆம் பிரிவு ஜனதிபதி பெரும்பாலும் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு மாவட்டசபை நிறுவுவாரென்றும், அச்சபைக்கெனத் தெரிவுசெய்யப்படும் அங்கத்தவரின் எண்ணிக்கை நாடாளுமன்ற உறுப்பினரின் எண்ணிக்கையைக் காட்டிலும் பெரும்பாலும் குறைவாகவே இருக்குமென்றும், அந்நாடாளுமன்ற உறுப்பினரின் எண்ணிக்கை மூன்றுக்குக் குறைவாயிருக்குமிடத்து மொத்த எண்ணிக்கை ஐந்துக்குக் குறைவுபடாமல் இருக்கும் பொருட்டுத் தெரிவுசெய்யப்படும் அங்கத்தவரின் எண்ணிக்கையைக் கூட்டுவாரென்றும் கூறுகின்றது.

இங்ஙனம் தெரிவுசெய்யப்படும் அங்கத்தவரின் என்ணிக்கை வரையறையின்றி இருப்பதைக்காட்டிலும், ஏழாகவோ, அல்லது ஒன்பதாகவோ, அல்லது பதினென்றுகவோ இருக்குமென வரையறுத்துக் கூறப்படுதல் நன்று.

7ஆம் பிரிவு மாவட்டசபை ஒன்று வருடமொன்றில் குறைந்த கணக்கு 12 பொதுக்கூட்டங்கள் கூடவேண்டு மென்றும், அச்சபையின் தலைவர் பொதுக் கூட்டங்கட்கும், விசேடகூட்டங்கட்கும் குறைந்தபட்சம் 4 நாள் அறிவித்தல் அங்கத்தவருக்குச் செய்ய வேண்டுமென்றும், அவ்வறிவித்தலில் கூட்ட நிகழ்ச்சி நிரல் காட்டப்படவேண்டுமென்றும் சொல்கின்றது.

தேவையான அறிவித்தல் பொதுக்கூட்டங்கட்கு 5 நாட்களுக்கு முன்னும், விசேட கூட்டங்கட்கு 3 நாட்களுக்கு முன்னும் கொடுபடவேண்டுமென்றும் திருத்துதல் நன்றாகும்.

9ஆம் பிரிவு மாவட்டசபை யொன்றின் கூட்டங்களுக்கு அதன் தலைவரே தலைமை வகிப்பாரெனக் கூறுகின்றது.

12ஆம் பிரிவு ஷெ சபையின் கூட்ட நடவடிக்கைகள் அறிக்கைப் புத்தகமொன்றில் வரையப்பட்டுக் கூட்டத்துக்குப் பின்பு தலைவராற் கையொப்பமிடப்படவேண்டுமென நவில்கின்றது.

ஷெ கூட்டங்கட்கு மாவட்டக் காரியதரிசி சமுகமளிக்கவேண்டுமென்றும், கூட்டநடவடிக்கைகள் அவரின் மேற்பார்வையின் கீழ் அறிக்கைப்புத்தகத்தில் எழுதப்படவேண்டு மென்றும் திருத்தம் செய்தல் நன்று.

17ஆம் பிரிவு மாவட்டசபைகளின் கடமைகளைச் சொல்லுமிடத்தில் முதலாவது அட்டவணையிற் காணப்படும் பின்வரும் விடயங்களைப் பொறுப்பேற்றுக் கடமைபுரியுமெனக் கூறுகின்றது.

(i) காணியபிவிருத்திச் சேவைகள், (ii) கமத்தொழில், (iii) கால்நடை வளர்ப்பு, (iv) கூட்டுறவு அபிவிருத்தி, (v) கலாச்சார விடயங்கள், (vi) கல்வி, (vii) வேலையில் அமர்த்தல், (viii) மீன்பிடித்தல், (ix) உணவு, (x) சுகாதார சேவைகள், (xi) வீடமைப்பு, (xii) ஒன்றுக்கு மேற்படாத மாவட்டத்தைப் பாதிக்காத நீர்ப்பாசன வேலைகள், (xiii) காணியுபயோகமும் காணிப்பிரச்சினை தீர்த்தலும், (xiv) கிராமாபிவிருத்தி, (xv) சிறிய கைத்தொழில்களும் நடுத்தரக் கைத்தொழில்களும்.

இவற்றுள் ஆறும் விடயத்தை ஆரம்பக்கல்வியும் மத்தியதரக் கல்வியும் எனவும், ஏழாம் விடயத்தை வேலையில்லாதோருக்கு வேலைதேடிக் கொடுத்தல் எனவும் திருத்துதல் நன்று. பதின்மூன்றும் விடயத்தை ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் காணியுரிமைப் பிரச்சினை தீர்த்தலும், காணியைப் பயன்படுத்தலும், காணியை அபிவிருத்தி செய்தலும், குடியேற்றம் செய்தலும் எனத் தெளிவாகத் திருத்தி அமைத்தல் வேண்டும்.

வேண்டுமேல், பதினாறும் விடயமாகச் சமூகசேவைகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

ஷெ 17ஆம் பிரிவின் 1ஆம் உட்பிரிவு அபிவிருத்திச் சபையின் கடமைகள் பின்வருவனவாகுமென விதிக்கின்றது.

(அ) நிர்வாகக் குழு அமைத்துச் சமர்ப்பிக்கும் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தைப் பரிசீலித்து அங்கீகரித்தல்.

(ஆ) அத்திட்டத்தை நிருவாகக் குழுமூலம் செயலிற் கொணர்தல்.

(இ) உபவிதிகள் இயற்றுதல்.

(ஈ) சபையின் வருவாயை அபிவிருத்தித் தேவைகட்கு முதலீடு செய்தல்.

(உ) குறித்த முதலாம் அட்டவணையிற் சொல்லப்படாத எந்த விஷயமாகவும் அபிவிருத்தித் திட்டமொன்று தயாரித்துச் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு உள்ளூராட்சி அமைச்சரின் சம்மதத்துடன் சமர்ப்பித்தல்.

2ஆம் உட்பிரிவு 1ஆம் அட்டவணையிற் சொல்லப்படாத எதுவையிட்டும் அபிவிருத்தித்திட்டம் தயாரித்து அத் திட்டத்தைச்

செயலிற் கொணருமாறு வேண்டிய நிபந்தனைகள் விதித்து எந்த மாவட்டசபைக்கும் அவ்விடயத்துக்குரிய அமைச்சர் உள்ளூராட்சி அமைச்சரின் சம்மதத்துடன் கட்டளையிடலாம் எனக் கூறுகின்றது.

இக்கட்டளையைப் போதியகாரணம் கொண்டு தொடர்புள்ள மாவட்ட சபை ஏற்க மறுக்கலாமெனக் காட்டப்படுதல் நன்று,

19ஆம் பிரிவு மாவட்டசபைக்குரிய வருவாய் விபரங்களை விபரிக்கின்றது.

பெரும் பொறுப்புக்கள் மாவட்டசபைகள் மீது சுமத்தப்படு கின்றனவாதலால், இன்னும் கூடிய வருவாய்கள் அவற்றுக்கு மத்திய அரசாங்கம் கையளிக்கவேண்டும்.

22ஆம் பிரிவு மாவட்டசபை என்ன என்ன தேவைகட்குப் பணம் செலவழிக்கலாம் என விபரிக்கின்றது.

அங்ஙனம் விபரிக்கப்படும் தேவைகளுள் 6ஆம், 7ஆம் தேவைகளுள் சரியான பொறுப்புணர்ச்சியில்லாத சங்கங் கட்கும், பிரச்சினை எழக்கூடிய சமய விஷயங்கட்கும் பணம் கொடுபடாமற் தடுப்பதற்கு வேண்டிய திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

25ஆம் பிரிவு உள்ளூராட்சி அமைச்சரினதும் நிதி அமைச்சரி னதும் அனுமதியுடன் அபிவிருத்தித்திட்டம் எதையும் நிறை வேற்றத் தேவையான உபவிதிகளை விதிக்க மாவட்டசபைகளுக்கு அதிகாரம் வழங்குகின்றது.

26ஆம் பிரிவு பாராளுமன்றத்திற் தீர்மானம் நிறைவேற்றி அமைச்சர் குழு மத்திய அரசாங்கத்தால் அறவிடப்படும் ஒரு குறித்த இறைவருவாயை மாவட்டசபைகளுக்கு அவற்றின் கடமைகளைச் செய்ய அளிக்கலாமெனக் கூறுகின்றது.

இந்தப் பகுதியில், வெளிநாடுகளிலிருந்து இந்நாட்டுக்குக் கிடைக்கும் பணஉதவியை அமைச்சர்குழு சகல மாவட்டசபை களுக்கும் பகிர்ந்து அளிக்கும் என ஒரு புது உட்பிரிவு இடம் பெறுதல் நன்றாகும்.

31ஆம் பிரிவு ஒரு மாவட்டசபையின் நிருவாகக்குழு அம் மாவட்டத்துக்குரிய மந்திரியையும், அச்சபையின் தலைவரையும், அத் தலைவருடன் ஆலோசித்துக் குறித்த மாவட்ட மந்திரி நியமிக்கும் இரண்டுக்கு மேற்படாத அங்கத்தவர்களையும்

கொண்டதாக இருக்கு மென்றும், குறித்த மாவட்ட மந்திரி குறித்த நிர்வாகக் குழுவுக்குத் தலைவராக இருப்பாரென்றும், ஷெ மாவட்ட சபைத் தலைவருடன் ஆலோசித்து, ஜனாதிபதியின் சம்மதத்துடன் நிர்வாகக்குழுவிலுள்ள ஒவ்வொரு அங்கத்தவரும் புரியவேண்டிய கடமைகளை நிர்ணயிப்பாரென்றும், குறித்த நிருவாகக்குழு அங்கத்தவ ரொவ்வொருவரும் தனக்கெனச் சாட்டப்பட்ட கடமைகளைத் தனது மாவட்டத்திற்குச் செய்யும் பொறுப்புடையவராய் இருப்பாரென்றும், நிருவாகக்குழுவின் அங்கத்தவர்கள் அனைவரும் கடமைகளைப் பொறுத்தவரையில் தம் மாவட்டசபைக்குத் தனித்தும், ஒருமித்தும் பொறுப்பாயிருப்பார்களென்றும் கூறுகின்றது.

*32*ஆம் பிரிவு ஒரு மாவட்டசபையின் நிருவாகக் குழுவுக்கு அம்மாவட்ட மந்திரியே தலைமை வகிப்பாரென்று நுவல்கின்றது.

*34*ஆம் பிரிவு ஷெ நிருவாகக்குழு ஒவ்வொருமாதமும், ஒரு முறையாயினும் கூடவேண்டுமென்றும், அக்கூட்டங்கட்கு மாவட்டக் காரியதரிசி சமுகமளித்துக் கூட்ட நடவடிக்கைகளை எழுதி வைத்திருக்க வேண்டுமென்றும் சொல்லுகின்றது.

*35*ஆம் பிரிவு நிர்வாகக்குழுவின் கடமைகள் பின்வருவனவாகு மென விதிக்கின்றது.

(அ) முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக அவ்வவ்விடயங்களுக்குரிய மந்திரிகளால் தயாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்திவேலைகளைப் பரிசீலனைசெய்து, அவ்வவ் மந்திரிகளுடன் கலந்தாலோசித்து மற்றும் வேலைகளையும் தயாரித்து அவ்வேலைகளை யெல்லாம் உள்ளடக்கி வருடாந்த வேலைத்திட்ட மொன்று தயாரித்து மந்திரி மூலம் மாவட்ட அபிவிருத்திச் சபைக்குச் சமர்ப்பித்தல்.

(ஆ) அடுத்த வருடத்துக்குரிய உத்தேச வருமானத்தையும் உத்தேச செலவு விபரங்களையும் கொண்ட வரவு செலவுத் திட்ட மொன்று தயாரித்தல்.

(இ) மாவட்டசபையின் நிருவாகத்தை நடாத்துதல்.

(ஈ) வருடாந்த அபிவிருத்தித்திட்டத்தைச் செயலிற் கொணருதல்.

(உ) ஜனாதிபதியின் சம்மதத்துடன் மாவட்ட மந்திரியால் பணிக்கப்படும் தொழில்களையும் கடமைகளையும் புரிதல்.

*36*ஆம் பிரிவு நிருவாகக்குழுவொன்று தேவையான பதவிகளையும், உத்தியோகங்களையும் உண்டாக்கவும், அவற்றுக்கு ஆட்களை நியமிக்கவும், அவற்றுக்குரிய சம்பளம், ஊதியம் முதலியவற்றை நிர்ணயிக்கவும், சபைக்குரிய காணியையோ கட்டிடத்தையோ விற்க அல்லது குத்தகைக்குக் கொடுக்கவும், தேவையான காணியை விலைக்கு வாங்க அல்லது குத்தகைக்கு எடுக்கவும், வேலை எதுவையும் செய்விக்க அல்லது சேவை எதுவையும் புரிவிக்க அல்லது பொருட்கள் எவற்றையும் தருவிக்க எவருடனும் ஒப்பந்தம் செய்யவும், சபையின் உரித்துக்களைப் பாதுகாக்க அல்லது பணியாளரை அல்லது அங்கத்தவர்களைக் கடமையாற்றும்போது பாதுகாக்க வழக்காளியாகவோ அல்லது எதிரியாகவோ சட்ட நடவடிக்கை எடுக்கவும் அதிகார முடைத்து எனக் கூறுகின்றது.

*37*ஆம் பிரிவின் *1*ஆம் உட்பிரிவு நிருவாகக்குழுவின் கூட்டம் எதுவிலும் சமுகமளித்து வாக்களிக்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை எந்தவிடயத்திலும் சமமாகப் பிரியும்போது, உறுப்பினர் என்னும் முறையில் தனக்குரிய வாக்குடன், தலைவர் என்னும் முறையிலும் மாவட்டமந்திரிக்கு இன்னுமொரு வாக்குண்டாகும் எனச் சொல்லுகின்றது.

*39*ஆம் பிரிவின் *1*ஆம் உட்பிரிவு நிருவாகக்குழுவால் பரிசீலனை செய்து தயாரிக்கப்பட்ட வருடாந்த அபிவிருத்தித்திட்டம் உள்ளூராட்சி மந்திரிமூலம் மாவட்டசபையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டுமென நவில்கின்றது.

*2*ஆம் உட்பிரிவு ஷெ மாவட்ட சபைக்குக் கிடைக்கக் கூடிய உத்தேச வருமானத்தையும் உத்தேச செலவு விபரங்களையும் கொண்ட அடுத்த வருடத்துக்குரிய வரவு செலவுத் திட்டத்தை நிர்வாகக்குழு தயாரிக்க வேண்டுமெனக் கூறுகின்றது.

*41*ஆம் பிரிவு ஒவ்வொரு மாவட்டசபையும் பணவருடம் முடிவதற்குமுன் விசேட கூட்டம் கூடி வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தையும் வரவுசெலவுத் திட்டத்தையும் பரிசீலனை செய்து அங்கீகரிக்க வேண்டுமெனக் கூறுகின்றது.

*43*ஆம் பிரிவு ஒரு வரவு செலவுத் திட்டத்தில் அல்லது வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் உள்ள விடயங்கள் அனைத்தையும் அல்லது எதையும் திருத்தி அமைக்கவோ அல்லது விடயம் எதனையும் சேர்க்கவோ மாவட்டசபைக்கு அதிகாரம் உண்டெனக் கூறுகின்றது.

44ஆம் பிரிவு ஓர் அபிவிருத்திச்சபை தனது வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தைப் பரிசீலித்து அங்கிகரித்த பின் அதனை உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், அங்கீகாரம் கிடைத்ததும் அத்திட்டம் குறித்த சபைக்குரிய வருடாந்த அபிவிருத்தித் திட்டமாக முழுவலிமையுமுறுமென்றும் கூறுகின்றது.

48ஆம் பிரிவு ஒவ்வொரு மாவட்ட சபைக்கும் ஜனாதிபதி மாவட்டமந்திரியுடன் கலந்து ஆலோசித்து (தேவையெனக் கருதுமிடத்து அச்சபையின் தலைவருடனும் கூடி ஆலோசித்தும்) மாவட்டக் காரியதரிசி என ஓர் உத்தியோகஸ்தரை நியமிப்பரென்றும், அக் காரியதரிசி நிர்வாகக் குழுவின் ஆணைக்கு அமைவாக அம் மாவட்ட சேவை உத்தியோகத்தர் அனைவரையும் மேற்பார்வை செய்வாரென்றும், அவரே அச்சபையின் சிரேஷ்ட கணக்காளராயிருப்பாரென்றும் செப்புகின்றது.

61ஆம் பிரிவு மத்திய அரசாங்கம் தனது பொது நெறிமுறையை அனுஷ்டிக்கும் போது, மாவட்ட மந்திரிக்கும் நிர்வாகக் குழுவுக்குமிடையே யாதேனும் வேற்றுமை ஏற்படுமிடத்து குறித்த வேற்றுமையைக் குறித்த மாவட்டமந்திரி ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டு மென்றும், குறித்த வேற்றுமையை நீக்கி மாவட்ட மந்திரிக்கும் நிர்வாகக் குழுவுக்குமிடையே சமரசத்தை உண்டுபண்ண இயலாவிடத்து, ஜனாதிபதி அந்த நிர்வாகக்குழுவைக் கலைப்பாரென்றும், அங்ஙனம் நிர்வாகக் குழு கலைக்கப்படும்போது மாவட்ட மந்திரி ஜனாதிபதியின் சம்மதத்துடன் புதிய நிர்வாகக் குழுவொன்றை நியமிப்பாரென்றும் அறைகின்றது.

62ஆம் பிரிவு நிர்வாகக்குழுவின் அங்கத்தவர் எல்லோரிடத்தும் அல்லது அவர்களுள் எவரிடத்தும் ஆற்றற் குறைவு அல்லது தப்பித நிர்வாகம் உண்டெனத் திருப்திப்படின், ஜனாதிபதி அந்த அங்கத்தவரை அல்லது அங்கத்தவர்களைப் பதவியினின்றும் நீக்குவாரென்றும், அங்ஙனம் உறுப்பினர் எவரும் பதவிநீக்கம் செய்யப்படும்போது, மாவட்டமந்திரி அப்பதவிக்கு வேறு அங்கத்தவரை நியமிப்பாரென்றும் அறைகின்றது.

63ஆம் பிரிவின் 1ஆம் உட்பிரிவு ஓர் மாவட்ட சபையிடம், அல்லது அதன் தலைவரிடம், அல்லது அங்கத்தவர்கள் எவரிடமேனும்,

(அ) ஆற்றல் குறைவும் நிர்வாகத் தப்பிதமும், அல்லது

(ஆ) இச்சட்டத்தினல் விதிக்கப்படும் கடமைகளை வேண்டுமெனத் தொடர்ந்து செய்யாதிருத்தல், அல்லது

(இ) யாதாயினும் ஒரு சட்டம் பணிப்பதைக் செய்யத் தொடர்ந்து மறுத்தல், அல்லது செய்யாது விடுதல், அல்லது

(ஈ) இச்சட்டத்தால் வழங்கப்படும் அதிகாரங்களைத் துர்ப் பிரயோகம் செய்தல் அல்லது

(உ) கூட்டம் கூட்ட அல்லது கூட்டங்களுக்குச் சமுகமளிக்க அல்லது கூட்டம் எதுவிலும் வாக்களிக்க அல்லது கரும மாற்றவேண்டுமெனத் தொடர்ந்து மறுத்தல் என்னும் குறைபாடுகள் உண்டெனத் திருப்திப்படின், உள்ளூ ராட்சி அமைச்சர் தலைவரை அப்பதவியினின்றும் அல்லது தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரையும் அல்லது அவர்களுள் எவரையும் பதவி நீக்கம் செய்வா ரென்றும் விதிக்கின்றது.

2ஆம் உட்பிரிவு மேற்கூறிய வண்ணம் பதவி நீக்கம் செய்யமுன் னர் 1ஆம் உட்பிரிவிற் சொல்லப்படும் குறைபாடுகள் எதனை யிட்டும் விசாரணை செய்து மூன்று மாதகாலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க இளைப்பாறிய ஒரு நீதிபதியை உள்ளூராட்சி அமைச்சர் நியமிப்பாரெனக் கூறுகின்றது.

3ஆம் உட்பிரிவு மேற்செல்லியவாறு ஓர் இளைப்பாறிய நீதிபதியை நியமிக்கும்போது, சந்தர்ப்பத்துக்கு ஏற்பத் தலைவரைப் பதவியி னின்றும் இடைநிறுத்தி அவரின் கடமைகளைச் செய்யும்படி மாவட்டக் காரியதரிசிக்குக் கட்டளையிடுவர். அல்லது தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரையும் அல்லது எவரையும் பதவி இடைநிறுத்தம் செய்து சபையினதும் தலைவரினதும் கடமை களைப் புரியும்படி மாவட்டக் காரியதரிசிக்குக் கட்டளையிடுவா ரென்றும் நுவல்கின்றது,

4ஆம் உட்பிரிவு அமைச்சர் மாவட்ட சபையின் தலைவரொரு வரைப் பதவி நீக்கம் செய்யும்போது, அத் தலைவர் அங்கத்தவர் பதவியையும் இழப்பாரெனக் கூறுகின்றது.

5ஆம் உட்பிரிவு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் பதவி நீக்கம் செய்யப்படும்போது, மற்றும் உறுப்பினரும் தங்கள் அங்கத்துவத்தை இழந்தவராகக் கருதப்பட்டு, மாவட்ட மந்திரி மாவட்ட சபைக்குரிய கடமைகளையும் தொழில்களையும் புரிவா ரென்றும், அப்போது அமைச்சர் விரும்பினுல் புதிய அங்கத்த வரைத் தெரிவு செய்யத் தேர்தல் நடாத்தக் கட்டளையிடுவா ரென்றும் கூறுகின்றது.

69ஆம் பிரிவு ஓர் அபிவிருத்ச் சபை தனது அதிகாரங்களைச் செலுத்திக் கடமைகள் புரிவதற்கும், தனது வருடாந்த அபி

விருத்தித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும், தேவையான உபவிதிகளைக் காலத்துக்குக் காலம் இயற்றவும், பின்னர் அவற்றை அழிக்கவும், திருத்தவும் அதிகாரமுடைத் தென்றும், 70ஆம் பிரிவு குறித்த உபவிதிகள் பாராளுமன்றத்தால் ஊர்ஜிதம் செய்யப்பட்டு அரசாங்க வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்ட பின்னரே சட்டவலிமை எய்துமென்றும் கூறுகின்றன.

94ஆம் பிரிவு எதிர்பாராத அல்லது அசாதாரணவிடயமெதற்கும், மாவட்டசபை நிர்வாகம் சம்பந்தமாய் எழுவதும், இச்சட்டத்தில் சொல்லப்படாத அல்லது பெலமான முறையில் சொல்லப்படாததுமான விடயமெதற்கும் ஜனாதிபதி நிருவாக இயல்புவாய்ந்த கட்டளைகளிட ஜனாதிபதிக்குச் சட்ட முறையான அதிகாரமுண்டு எனக் கூறுகின்றது.

மேலே இதுவரையும் கூறப்பட்டவற்றை நன்கு வாசித்து விளங்கினோர் குறித்த மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்குப் போதிய அதிகாரகங்ளில்லை என்பதையும், ஜனநாயகம் பேசும் எங்கள் ஜனாதிபதி அவற்றுக்கு வழங்கவேண்டிய ஜனநாயம் வாய்ந்த சுயாட்சியை வழங்காது, தனக்கும் மற்றும் மத்திய அரசாங்கத்தினருக்கும் அளவிறந்த அதிகாரங்களை வைத்துக் கொண்டிருக்கிறாரென்பதையும், மேலேயுள்ள சட்டத்தின்கீழ்ச் செய்ய முயலப்படும் அபிவிருத்தி வீண் கேலிக்கூத்தாகு மென்பதையும், அச்சட்டத்தைப் பின்வருமாறு விரைவில் திருத்தாவிடில் அதன் காரணபூதராகிய ஜனாதிபதி மாத்திரமன்றி அச்சட்டத்தை அங்கீகரித்த நாடாளுமன்ற உறுப்பினர் அனைவருமே அடுத்துவரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் நன்குணர்வர்.

முதலாவதாக, இந்தப் பெரிய வையகத்தில் எங்கேயாயினும் இருப்பதாக யாங்கள் கண்டு கேட்டு அறியாத மாவட்ட மந்திரிப் பதவி முற்றாய் அழிக்கப்பட்டு, மாவட்டசபைத் தலைவரே நிருவாகக் குழுவுக்கும் தலைவராக இருக்கும்படி செய்யவேண்டும்.

இரண்டாவதாக, மாவட்டசபையினர் தலைவரையும் நிர்வாகக் குழுவினரை (ஜனாதிபதியின் அனுமதி கோராமல்)யும் தாங்கள் விரும்பியவண்ணம் தெரிவு செய்ய உரிமையுடையோராக்கப்படல் வேண்டும்.

நிருவாகக்குழுவினரின் எண்ணிக்கையை மகாசபையினரின் எண்ணிக்கைக் கேற்ப ஐந்தாகவோ, ஏழாகவோ நிர்ணயித்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் மேற்சொல்லிய முதலாம் அட்டவணையிலுள்ள பதினைந்து விடயங்களையும் (விவசாயம், காணிஅபிவிருத்திச் சேவை, கால்நடை வளர்ப்புக் காரியதரிசி என்னும் முறையில்) பகிர்ந்து கொடுத்தல் மிகவும் விரும்பற்பாலதாகும்.

இங்ஙனம் காரியதரிசிமுறை ஏற்படின், மாவட்டக் காரியதரிசி, மாவட்டச் சிரேஷ்ட காரியதரிசியென அழைக்கப்படலாம்.

மூன்றுவதாக, மேற்கூறிய வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தையும் வரவு செலவுத் திட்டத்தையும் நிருவாகக்குழு தயாரித்து நேரடியாக மாவட்டசபைக்குச் சமர்ப்பிக்க, அம்மாவட்ட சபை அதனை அங்கீகரித்த பின்னரே உள்ளூராட்சி மந்திரியின் அங்கீகாரத்துக்கு அனுப்பவேண்டுமெனும் திருத்தம் இடம்பெற வேண்டும்.

நாலாவதாக, ஆற்றற்குறைவு, தப்பிதநிர்வாகம், நேர்மையீனம், அதிகார துர்ப்பிரயோகம் முதலிய குற்றங்கள் சம்பந்தமாய் மாவட்டசபை யொன்றின் தலைவரையோ, தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களையோ இடைநிறுத்தம் செய்ய அல்லது பதவி நீக்கம் செய்யத் தேவையான அதிகாரம் முழுவதும் உள்ளூராட்சி அமைச்சருக்கு 63ம் ஆம் பிரிவு அளித்துக்கொண்டிருப்ப, ஆற்றற்குறைவு அல்லது தப்பித நிருவாகம் என்னும் சாட்டுக்கூறி நிர்வாகக்குழுவினர் எல்லாரையும் அல்லது எவரையும் பதவி நீக்கம் செய்ய ஜனுதிபதிபதிக்கு அதிகாரம் வழங்கும் 62ஆம் பிரிவு தேவையில்லையெனக் கைவிடப்பட வேண்டும்.

ஐந்தாவதாக, மேற்காணும் 94ஆம் பிரிவில், 'நிருவாகம் சம்பந்தமாய் எழுவதும் இச்சட்டத்தில் சொல்லப்படாத அல்லது பெலமான முறையில் சொல்லப்படாததுமான விடயமெதற்கும்' என்னுன் பாகம் துர்ப்பிரயோகம் செய்யப்படக்கூடுமாதலால் அதனை நீக்குதல் நன்று.

ஆறுவதாக, மாவட்டமொன்றில் செய்யப்படும் எந்த அபிவிருத்தி வேலைக்கோ அல்லது குடியேற்றத்துக்கோ வெளி மாவட்டத்தினரை சம்பந்தப்பட்ட மாவட்டசபையோ அல்லது மத்திய அரசாங்கமோ உபயோகிக்கக் கூடாது என ஒரு புதிய பிரிவு இயற்றப்பட வேண்டும்.

ஏழாவதாக, குறித்த சட்டத்தில் பல இடங்களில் காணப்படும் மந்திரி (The Minister) என்னும் பதம் யாரைக் குறித்து நிற்கின்றது என்பது ஐயத்துக்கு இடமாயிருப்பதால், அதற்குரிய விளக்கம் இறுதியிலுள்ள பொருள் கோடலில் இடம்பெற வேண்டும்.

## எங்கள் ப. நோ. கூ. சங்கங்களுக்கு

# ஆறு நல்ல அத்தியாவசிய ஆலோசனைகள்

''பன்னேக்கச் சங்கம் பருக்கின் சமதர்ம
நன்னேக்கம் விர்த்தியாம் நம்பு.''

இந்நாட்டில் முன்னொருகால் சிறந்த தேசீயச் சமதர்ம வீரனுகத் திகழ்ந்தவரும், பின்னர் காணி விவசாயக் கூட்டுறவுப் பகுதிகளுக்கு அமைச்சராக விளங்கியவரும் ஆகிய அமரர் பிலிப்பு குணவர்த்தனு அவர்கள் நமக்கெல்லாம் உவந்தளித்துச் சென்ற ப. நோ. கூ. சங்கம், மக்கள் வங்கி, நெற்காணிச்சட்டம் என்னும் முப்பெரும் நன்கொடைகளுள் முதலாவதாகச் சொல்லப்பட்டிருக்கும் ப. நோ. கூ. சங்கம் உண்மையில் நம் நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்து மேம்படுத்தப் பெரிதும் உதவிபுரியும். ஆகவே, அத்தகைய சங்கங்களுக்குப் பின்வரும் ஆறு ஆலோசனைகளையும் இஞ்ஞான்று அடியேன் கூற விழைகின்றேன்.

1. ''கோழி மேய்க்கினும் கோறணமேந்தின் கீழ் மேய்க்க வேண்டும்'' என்னும் அடிமைத்தனம் வாய்ந்த அரசாங்கசேவை மோகத்தினுல் வேலையில்லாது, அரசாங்கப் பிச்சைப் பணம் எடுத்துண்டு, தெருத்தெருவாய்த் திரியும் எங்கள் படித்த வாலிபர்களையும், கமத்தொழில் புரிய உண்மையில் காணியின்றிக் கஷ்டப்படும் வறியவர்களையும், மன்னர். கிளிநொச்சி, வவனியா, முல்லைத்தீவு, திருக்கோணமலை, செகுவிலை, மூதூர், மதுரநதி (Meduru Oya) பாயும் கற்குடா, மட்டக்களப்பு, சம்மாந்துறை, பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் முதலிய தொகுதிகளிற் குடியேறச் செய்து, கமத்தொழில், கடற்றெழில் என்பனமூலம் முன்னேற அன்னவருக்கு அல்லது பெற்ரேருக்குத் துணைபுரிதல்.

2. உப உணவுப் பொருள் உற்பத்திக்கு இப்போது பெரும்பாலும் பயன்படும் நீரிறை இயந்திரங்களின் இயக்கத்துச்கு இன்றியமையாத மண்ணெய்க்குத் தட்டுப்பாடும், விலையுயர்வும் ஏற்பட்டுள்ளதாதலால், குறைந்த செலவில் நீர்ப்பாய்ச்சல் செய்ய மின்சார வசதிகள் விவசாயிகளுக்கு உண்டுபண்ணிக் கொடுத்தல்.

மின்சக்திக்கு விண்ணப்பிக்கும் விவசாயிகளின் தோட்டங்களுக்குத் தெருமார்க்கமாகவோ, ஒழுங்கை மார்க்கமாகவோ அம் மின்சக்தியைக் கொண்டுசெல்ல நிறுவப்படவேண்டிய

நெடுங்கம்பித்தொடர்ச் செலவை உள்ளூராட்சி நிலையங்கள் பொறுப்பதற்குத் தேவையான கடனை மத்திய அரசாங்கத் திடமிருந்து குறித்த ஸ்தலஸ்தாபனங்கள் பெற நாடாளு மன்ற உறுப்பினர் மூலம் உதவி செய்வதுடன், குறித்த நெடுங்கம்பித் தொடரிலிருந்து குறித்த விண்ணப்பதாரரின் கிணறுகள் வரையும் நிறுவவேண்டிய சேவைக்கம்பித்தொடர்ச் செலவை அவ்விவசாயிகள் ஒருங்குகூடிப் பொறுக்கவும், தேவை யான நீரிறை மோட்டோர் இயந்திரங்களை வாங்கவும் வேண் டிய கடன்களை மக்கள் வங்கி, கிராமிய வங்கி முதலியவற்றி லிருந்து பெறவும் துணைசெய்யவேண்டும்.

3. நமது பகுதிகளில் போதியளவு பெறக்கூடிய மூலப் பொருட் களைக் கொண்டு போதிய ஊதிபம் பெறக்கூடிய கைத் தொழில்களைத் தெரிந்து, அவற்றைப் போதிய ஆர்வமும், நேர்மையும், அமைப்பு வன்மையும், காரிய நிர்வாகத்திறனும் வாய்ந்த எங்கள் இளைப்பாறிய உத்தியோகஸ்தர்களின் சேவை யைப் பயன்படுத்தித் திறம்பட நடாத்துதல்.

இத்துறையில், குறுகிய ஊரபிமானத்தை விட்டு, சகலரும் வாழவேண்டும் என்னும் விரிந்த மனப்பான்மையுடன் இடத் துக்கிடம் மின்தறி நெசவு நிலையம், கல்லு நொருக்கி நிலையம், சீமென்றுக் கொங்கிறீற்றுத் தொழிற்சாலை, தச்சுத் தொழிற் சாலை, லோகத் தொழிற்சாலை, கண்ணுடித் தொழிற்சாலை, மட்பாத்திரத் தொழிற்சாலை, அரிசிமா ஆலை, பனம்பொருளூற் பத்திச்சாலை, மாங்கனிப் பொருளூற்பத்திச்சாலை, திராக்ஷை, நெல்லி, பழ இராசமல்லிகை (பாஷன்) ஆதியாம் இரசோற் பத்திச்சாலை போன்றவற்றைக் குறித்த சங்கங்கள் எளிதில் நிறுவி இனிது நடாத்தலாம் என்க.

4. விளைபொருள்கட்கு உத்தரவாத விலைத்திட்டம் மீண்டும் வகுப்பித்தல்.

வெங்காயம், மிளகாய் முதலியவற்றின் விலை அளவுமீறி அதிகரிக்கும்போது, அரசினர் அவற்றை வெளிநாட்டினின்றும் இறக்குமதிசெய்து விலையை அளவுகடந்து குறையச் செய்கின் றனராகலின், அவற்றின் உற்பத்திச் செலவையும், வாழ்க் கைக்கு அத்தியாவசியம் தேவையான ஏனைய பொருட்களின் அகவிலையையும் கருத்திலிருத்தி, விளைபொருட்களுக்கு உத்தர வாதவிலை அரசினரைக்கொண்டு விரைவில் நிர்ணயிப்பிக்க வேண்டும். அத்துடன் கிருஷிகரும் அரசினரும் விரும்பின், விளை பொருட்களை உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் கமக்காரரிட மிருந்து கொள்வனவு செய்து அரசினருக்குக் கொடுக்கவும் நமது சங்கங்கள் தயாராக இருக்கவேண்டும். இங்ஙனம் செய்யும் போது ஆனையிறவெல்லைத் தடுப்பை (நெல்லுக்குப் போல) விதிக்காமல் விடுதல் நன்று.

5. பொதுசன விருப்பத்தினை அறிந்து ப. நோ. கூ. சங்கங்களின் தொழிற்பரப்பினைச் சுருக்குதல்.

இப்போதுள்ள ப. நோ. கூ. சங்கங்களின் சேவைப்பாகம் அளவுகடந்து விசாலித்திருப்பதால், பரிபாலன வில்லங்கமும், அதனால் ஊழல் மலிவும், பொதுசன அசிரத்தையும் உண்டாகின்றனவாதலால், கிராமம் ஒன்றுக்கு ஒரு சங்கம் என்னும் கனம் O. E. குணதிலகா அவர்களின் கொள்கைக்கும், கிராம சபைப்பகுதியொன்றுக்கு ஒரு சங்கம் என்னும் கனம் T. B. இலங்கரத்தின அவர்களின் கொள்கைக்கும் நடுப் பாதையாக யாழ்ப்பாண மாவட்டம் போன்ற இடங்களில் நாலு சதுர மைலுக்கு ஒரு சங்கம் என்னும் அடிப்படையில் மேற்சொல்லிய சங்கங்களைப் பிரித்துப் புனருத்தாரணம் செய்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

6. அரசினரைக்கொண்டு உபவிதிகளைத் திருத்தி அமைப்பித்தல்.

குறித்த உபவிதிகளில், கூட்டுறவுக்கு அடிப்படையான குடியரசு (ஜனநாயக) முறை குறைக்கப்பட்டு, அரசாங்கத்துக்கு அளவிறந்த எதேச்சாதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, நியமன முறைக்குப் பதிலாகத் தெரிவுமுறை ஓம்பிய முன்னைய உபவிதிகளை (சில அத்தியாவசிய திருத்தங்களுடன்) மீண்டும் இந்நாளைய ஜனநாயக அரசாங்கத்தைக் கொண்டு இயற்றுவித்தல் நாட்டுநலம் போற்றுவோர் யாவரினதும் முக்கிய கடனாகும்.

இங்ஙனம்

வயாவிளான், நீண்டகாலக் கூட்டுறவாளன்

*21-9-1978.* சட்டத்தரணி வ. இராசநாயகம், ச. நீ.

---

# யாழ் மாவட்டசபையின் கரிசனைக்கும் மற்றும் பொதுசனங்களின் கவனத்துக்கும்

1951—1957 என்னும் எனது தலைமைக்காலத்திய மயிலிட்டிக் கிராமச் சங்கப் பரிபாலன அறிக்கையிலிருந்து கீழ்க்காணும் விடய பாகங்களை எடுத்துக்காட்டி அவையொவ்வொன்றைப்பற்றியும் இப்போது யான் கூறும் நல்லாலோசனைகளைக் ''குறிப்பு'' என்னும் தலைப்பின் கீழ் அடைப்புக்குறிகளுக்குள் சுருக்கமாக அறியத் தருகின்றேன்.

**புதிய உபவிதிகள்:**

மேற்கூறிய உபவிதிகளைத் திருத்தியது மாத்திரமன்றி, காணியும் சொத்தும், வெள்ள வாய்க்கால்களும், வடிகால்களும், மலசல

கூடங்களைச் சுத்திசெய்தலும், அழுக்குப் பொருள்களை அகற்றுதலும், வாகனப் போக்கு வரவைக் கிரமப்படுத்துதல் (Regulation of Traffic), பொது ஜன ஆரோக்கியம், கட்டாக்காலி ஆடு மாடுகள் என்னும் விஷயங்கள் சம்பந்தமாய உபவிதிகளைத் திருத்தியுள்ளோம். அது மாத்திரமன்றி, கிராமச்சங்க உத்தியோகத்தர்கள், சலவைச் சாலைகள், நிழல் மரங்கள், மழைத்தண்ணீர், மின்சார வினியோகம், ஆடுமாடடித்தல், கள்ளுச்சீவுதல், சேகரித்தல், விற்றல் என்னும் விஷயங்கள் பற்றியும் புதியவுபவிதிகள் இயற்றியுள்ளோம். மிகவும் முன்மாதிரியாய் அமையும் உப விதிகளைச் செயலிற் கொண்டுவரத் தங்கள் ஒத்துழைப்பை நல்குவது பொதுமக்கள் யாவரினதும் கடமையாகும்.

(குறிப்பு ; *(1)* சந்திகளுக்கூடாகச் செல்லும் எந்த வாகனமும் மணித்தியாலமொன்றுக்கு 20 மைலுக்கு மேற்பட்ட வேகத்துடன் செல்லுதல் சட்டவிரோதமான செயலாகு மென்றும், *(2)* பகிரங்க தெருக்களிலும், ஒழுங்கைகளிலும் கட்டாக்காலியாக ஆடுமாடுகளைத் திரியவிடுதல் சட்டவிரோதமான செயலாகு மென்றும், அதேபோல மரக்கன்று, பயனுள்ள செடிகொடி, காய்கறித் தோட்டம் அல்லது தோட்டப்பயிர் யாதேனும் உள்ள பிரத்தியேகக் காணியொன்றுக்கூடாக அக் கட்டாக்காலிகளைத் திரியவிடுதல் சட்டவிரோதமான செயலாகு மென்றும், *(3)* பகிரங்க தெருக்களிலும், ஒழுங்கைகளிலும், மற்றும் பொதுசன நடமாட்டத்துக்குரிய இடங்களிலும் நிற்கும் நிழல் மரங்களிற் குழைவெட்டுதல் சட்டவிரோதமான செயலாகுமென்றும், *(4)* மழைத்தண்ணீர் இயற்கையாகப் பாய்ந்து வருவதைத் தடுத்தல் சட்டவிரோதமாகுமென்றும், கீழேயுள்ள ஒரு காணிக்காரன் எவ்வித செயற்கைமுறையாலும் தனது காணியின் தரைமட்டத்தை முன்னிருந்ததைக் காட்டிலும் உயர்த்தும்போது, மேற் காணிக்காரனின் மழைத்தண்ணீர் கீழேயுள்ள தனது காணிக்கூடாக ஒரு பக்கமாகப் பாய்ந்து செல்லக்கூடிய வண்ணம், குறைந்த பட்சம் 6 அடி அகலமும், போதாவிடத்துக் கூடிய அகலமும், வாய்ந்த வடிகால் அமைக்க வேண்டு மென்றும் உபவிதிகள் இயற்றிச் சட்டமாக்க உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பினோம். இவை போன்ற மற்றும் புதிய பல உபவிதிகள் யாத்து அனுப்பினோம். அவர் அவற்றையெல்லாம் பரிசீலித்து அறிக்கையிடச் சட்டமா அதிபருக்கு அனுப்பியபோது, பின்னையவர் அங்ஙனம் சட்டமியற்றக் கிராமச்சங்கங்களுக்கு அதிகாரமில்லை எனத் தட்டிக் கழித்துவிட்டார். இவ்வுபவிதியாக்க முயற்சி எனது பரிபாலன இறுதிக்காலத்தில் நிகழ்ந்தமையால், யான் பதவி துறந்த

பின்னரே ஷெ சட்டமா அதிபரின் பிழையான அறிக்கை கிராமச் சங்கத்துக்குக் கிடைத்தது. எனக்குப்பின் என்பதவிக்கு வந்தவர் இவ்விடயத்தில் வேண்டிய கரிசனையும் அக்கறையும் எடுக்காமையால், அரும்பாடுபட்டு யாக்கப்பட்ட உபவிதிகள் போதிய காரணமின்றிக் கைவிடப்படலாயின. இவ்வுபவிதிகள் எங்ஙனும் பயன்படும் தன்மையவாதலின், இப்போது எமது யாழ் மாவட்ட சபையும், மற்றும் மாவட்ட சபைகளும் ஆவன புரிவனவாக.)

**சுகாதாரம்:**

இக்கிராமச் சங்கம் புத்திமதி கூறிப் பொது மக்கள் பலரை மலகூடம் அமைத்து உபயோகிக்கச் செய்துள்ளது எனினும், இன்னும் எத்தனையோ மக்கள் கண்ட இடங்களிலெல்லாம் மலங் கழித்து, காமாளை, வயிற்றுளைவு, கழிச்சல் முதலிய நோய்களைப் பரப்பி வருவது மிகவும் வருந்தத்தக்கது.

திருத்திய மாதிரி உபவிதியின் கீழ் வாளி மலசலகூடம் மாத்திரமன்றி நீரடைப்பு மலகூடமும் பொது சனங்களைக் கொண்டு அமைப்பிக்க இக்கிராமச் சங்கத்துக்கு அதிகாரம் உண்டாகும்.

மேற்படி நீரடைப்பு மலகூடம் சாலவும் சிறந்தது. துர்நாற்றமில்லாதது; சுகாதாரத்துக்கு உகந்தது; பரிபாலனச் செலவு இல்லாதது. மலிந்த விலைக்கு மேற்படி மலகூடங்கள் செய்து விற்குமாறு காங்கேசன்துறைச் சீமேந்துத் தொழிற்சாலையாரை இச்சங்கம் வேண்டியதன் பயனாக, அவர்கள் சுமார் 95 ரூபாவுக்கு நீரடைப்பு மலகூடங்கள் செய்து விற்கின்றனர். இவை இடம்விட்டு இடம் பெயர்த்துக் கொண்டுபோகக்கூடியவை. இத்தகைய மலகூடங்களை வாங்கி உபயோகிக்கும்படி சனங்களைத் தூண்டினால் இக்கிராமச் சங்கப் பகுதியினரின் சுகாதாரம் பெரிதும் சீருறும்.

மேற் கூறிய பிரத்தியோக மலகூடங்கள் ஒருபுறமிருப்ப, மற்றொரு புறம் பொதுசன மலகூடங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் சந்திகள் போன்ற பிரதான இடங்களில் அத்தியாவசியம் அமைக்கப்படுதல் வேண்டும். அங்ஙனம் செய்ய அரசினர் நன்கொடையை இச்சங்கம் நாடியுள்ளது. இதுவிஷயத்தில் இயன்ற உதவி அரசினர் புரிவார்களாக.

ஆண்டாண்டு தோறும் சுகாதார விழாக்கள் பொதுசனங்களைக் கொண்டு கொண்டாடுவிக்க இக் கிராமச்சங்கம் வேண்டிய முயற்சி எடுத்துள்ளது.

(குறிப்பு: பொதுமக்களைக் கொண்டு மலகூடங்கள் அமைப்பிக்கும் விடயத்தில் மத்திய அரசாங்கமும், மற்றும் ஸ்தலஸ்தாபனங்களும் இப்போது எத்தகைய கரிசனையோ சிரமமோ எடுப்பதா

யில்லை. பொது மலகூடங்கள் இல்லாமையால் பொதுவாக யாவரும், குறிப்பாகப் பிறவூரவர்களும் சில வேளைகளில் பெருங்கஷ்டத்துக்கு ஆளாகின்றனர். எனவே, இவ்விரு விடயத்திலும் ஆவன விரைவில் செய்யப்படுவதுடன், சுகாதாரத் தொழிலாளர் இருவர் ஒவ்வொரு பழைய கிராமசபைப் பகுதிக்கும் நியமிக்கப்படுவார்களாக.)

**பிரசவ சிகிச்சை நிலையமும், மருந்துச் சாலையும்:**

அரசினரிடமிருந்து 11000 ரூபா நன்கொடை பெற்று, புதிய கட்டிடமொன்று அமைத்து இக் கிராமச்சங்கப் பிரசவ சிசிச்சை நிலையத்தைப் பெருப்பித்துள்ளோம். இந்நிலையத்தில் பிரசவ சிகிச்சை மாத்திரமன்றி சிசு சமரக்ஷணையும் நடைபெறுகின்றது. மேற்கூறிய இரு விஷயங்களிலும் இப்போதைய தெல்லிப்பழைச் சுகாதார வைத்தியர் எடுத்துவரும் கரிசனை மிகவும் பாராட்டத்தக்கது

மேற்படி நிலையத்தில் மத்தியமருந்துச்சாலை (Central Dispensary) ஒன்று அரசினரைக்கொண்டு நிறுவுவிக்க இச்சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி இவ்வாண்டு கைகூடுதல் மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஓர் விஷயமாகும்.

(குறிப்பு: இந் நிலையத்திலுள்ள இரு கட்டிடங்களுள் கிழக்கேயுள்ளதைச் சித்தாயுர்வேத மருந்துச்சாலையாகவும், மேற்கேயுள்ளதைப் பிரசவ ஸ்திரீசிசுசம்ரஷணை நிலையமாகவும் இப்போதையைக்காட்டிலும் கூடியகரிசனையுடன் உபயோகித்தல் மிகவும் வேண்டற்பாலதாகும்.)

**கிணறுகள்:**

பொது சன உபயோகத்துக்கென இக் கிராமச்சங்கம் கட்டுவனில் ஒரு கிணறும், பலாலியில் இன்னொரு கிணறும், வயாவிளானில் இன்னொரு கிணறும் அமைத்துள்ளது. அத்துடன் கட்டுவனில் ஒரு கிணறும், பலாலியில் இன்னொரு கிணறும் இப்பொழுது அமைக்கப்படுகின்றன. மயிலிட்டிதெற்குச் சந்தை வளவில் உள்ள ஒரு பழங் கிணற்றையும், ஒட்டகப்புலத்திலுள்ள இன்னொரு பழங் கிணற்றையும் திருத்தப் பணம் ஒதுக்கப்பெற்று, வேண்டிய மற்றும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இவை மாத்திரமன்றி வயாவிளானில் ஒரு கிணறும், வீமன் காமத்தில் ஒரு கிணறும், கட்டுவனில் ஒரு கிணறும், மயிலிட்டி தெற்கில் ஒரு கிணறும் அமைக்க அரசினரின் பண உதவி கோரப்படுகின்றது.

(குறிப்பு : மேற்காணும் கிணறுகளும், அவற்றுக்குப்பின் அமைக்கப்பட்ட கிணறுகளும் கவனிப்பாரின்றி, துலா, கொடி, வாளி என்பன இல்லாமல், பொதுமக்களுக்குச் சிறிதும் பயன்படாமல் வீணே கிடக்கின்றன. சில கிணறுகளுக்கு அயலிலுள்ள சில தன்னலவாதிகள் தங்கள் செலவில் துலா, கொடி, வாளி என்பன அமைத்துப் பொதுமைகெடுத்துத் தங்கள் சொந்தக் கிணறுகள் போல அதிகாரம் காட்டி உபயோகித்து வருகின்றனர். இவ்விடயம் எங்கள் மாவட்டசபையின் விசேட கரிசனையை அதி விரைவில் பெறுவதாக.)

## தெருக்கள், ஒழுங்கைகள், வெள்ள வாய்க்கால்கள்:

வழக்கம்போல இக் கிராமச்சங்கம் தனது பழைய தெருக்களையும் ஒழுங்கைகளையும் வெள்ள வாய்க்கால்களையும் பரிபாலித்துள்ளது. அத்துடன் புதிய தெருக்களும் ஒழுங்கைகளும் வெள்ள வாய்க்கால்களும் அமைத்துள்ளது; அமைக்கின்றது. அவற்றுள் சிறிதும் தெரு வசதியின்றிப் பெரிதும் வருந்திய பலாலி கிழக்கு வாசிகளின் அல்லல் போக்க அரிதின் முயன்று திறந்த கொவ்வாவத்தை ஒழுங்கையும், ஒட்டகப்புல வெளியில் குடியேற்றத்துக்குகந்ததாயிருக்கும் 'சாந்தை' என்னும் முடிக்குரிய காணியின் மேற்கோரமாக அமைக்கப்பட்டுள்ள கோணவளைத்தெருவும், அரசாங்க நன்கொடை பெற்று அமைக்கப்படும் வீமன்காமம் பொன்னு சீமாத் தெருவும், மயிலிட்டி மாயெழுத் தெருவும், குஞ்சுக் கலட்டி—கறுத்தலைக்கப்பன் தெருவும், வருத்தலைவிளான் வெள்ளவாய்க்காலும், அத்தகைய நன்கொடை பெற்று அமைக்கப்பட்டுள்ள பலாலி அம்மன் கோயில் ஒழுங்கை மதகும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவை.

அரசினரின் நன்கொடை பெற்று ஈழகேசரிப் பொன்னையா தெருவை அகட்டித் திருத்திய நாள் தொட்டு அதனைப் பகிரங்க வேலைப் பகுதியினரைக்கொண்டு எடுத்துப் பரிபாலிப்பிக்க இக் கிராமச்சங்கம் மிகவும் தீவிரமாக முயற்சித்துள்ளது. அடுத்த பணவருடத்தில் அங்ஙனம் செய்வதாக அரசினர் வாக்குப் பண்ணியுள்ளனர்.

மயிலிட்டி வடக்கில், மயிலிட்டி—பலாலி ஒல்லாந்தர் தெருவிலும், பலாலியில் கொவ்வாவத்தை ஒழுங்கையிலும், வெள்ளப் புற்றடி ஒழுங்கையிலும் மதகுகள் அமைக்க இக் கிராமச் சங்கம் கோரிய கனடா நன்கொடை விண்ணப்பங்களை எமது யாழ்ப்பாண மாவட்டஅதிபர் நன்கு சிபார்சு செய்து அனுப்பியுள்ளார்.

(குறிப்பு : மேற்கூறியவற்றைப் புதிதாகத் திறந்தவர்களுக்குத் தான் அவைபோன்ற தெருக்கள், ஒழுங்கைகள், வெள்ளவாய்க் கால்களின் அருமை விளங்கும். எனவே, அவற்றை அழிந்து போகவிடாது பாதுகாப்பது பொதுவாகப் பொதுமக்களினதும், சிறப்பாக ஸ்தலஸ்தாபனங்களினதும் கடமையாகும். அத் தகைய பாதுகாப்பின்றி, யாழ்நாட்டில் பல கிராமங்களில் பல பழைய ஒழுங்கைகள் மூடப்படுகின்றமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும், உதாரணமாக, பலாலிதெற்கில், மாளிகை சிட்டி — கரவைசிட்டி ஒழுங்கையையும், கிளானை—ஆவளை ஒழுங்கையையும், கொற்றப்புலம்—கரவைசிட்டி ஒழுங்கையை யும், ஸ்ரீ நல்லதம்பி ஒழுங்கையையும், காட்டாங் குடியிருப்பு— ஆவளை ஒழுங்கையையும் சில சுயநலப்புலிகள் மூடுகின்றனர். இவற்றுள் முதலாம் ஒழுங்கையை ஒருவருடத்துக்கு முன்னே வயிரவக்கிளானை என்னும் கிழக்கெல்லைக் காணிக்காரன் மூடியது மாத்திரமன்றி, அதில் ஒரு கிணறும் அமைத்துள்ளார். இத்தகைய ஆக்கிரமிப்பைத் தடுக்க எமது யாழ் மாவட்ட சபை ஏற்ற நடவடிக்கை எடுப்பதாக.)

**சந்தைகள்:**

இக் கிராமச்சங்கம் அரசாங்க நன்கொடைபெற்று மயிலிட்டி தெற்கில் ஒரு சந்தையையும், வீமன்காமத்தில் இன்னொரு சந் தையையும், பலாலியில் இன்னொரு சந்தையையும் அமைத்துள்ளது. இம் மூன்று புதிய சந்தைகளையும், வயாவிளான் சந்தையையும் விருத்திசெய்தால் பொதுசனங்களுக்கு நன்மையுண்டாவதுடன், இச் சங்கத்தினது வருமானமும் உயரும். எனவே, இது விஷயத்தில் வருங்காலத்தில் மிக்க அக்கறை காட்டப்படுவதாக.

(குறிப்பு : மேற்கூறிய வீமன்காமச் சந்தையை வழிப்போக்கரும் மற்றும் பொதுமக்களும் காணக்கூடியதாக, அதனை யாழ்— காங்கேசன்துறை வீதிவரைக்கும் பெருப்பித்துப் புதிய கட்டி டங்கள் அமைக்கப்பட வேண்டும். பலாலிச் சந்தையை மறைத்துநிற்கும் தனியார் கடைக் கட்டிடம் இடிக்கப்படுவ துடன், வளர்ந்துவரும் சந்தைக்கேற்ற இரு பெரும் புதிய கட்டிடங்கள் அதிவிரைவில் அமைக்கப்படுதல் வேண்டும்.)

**சனசமூக நிலையங்கள்:**

1951ஆம் ஆண்டில் 2 சனசமூக நிலையங்களே இக் கிராமச் சங்கப் பகுதியில் இருந்தன. இப்பொழுது 15 சனசமூக நிலையங்கள் உள. பிற்போக்கான பகுதிகளில் இன்னுமிரண்டு மூன்று சனசமூக நிலையங்கள் நிறுவ இச்சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி கை கூடாமற்போனமை மிகவும் கவலைக்கிடமானது. சனசமூக நிலையங்

கள் பொதுமக்களின் அறிவுவளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவன வாதலால், இப்போதையைக்காட்டிலும் அரசினர் இந்நிலையங் களுக்குக் கூடிய பொருளுதவி புரிய முன்வருகுக!

(குறிப்பு: பெரும்பாலான சனசமூக நிலையங்கள் சிறிதும் இயங்கு கின்றில. எனவே, தகுதிகாண் காலமாக ஆறுமாத காலம் கொடுத்து இயங்காதவற்றின் பதிவை அழித்து அவற்றுக்குக் கொன்னே கொடுக்கப்பட்டு வரும் நன்கொடைப் பணத்தை நன்கு இயங்கும் நிலையங்கட்குப் பகிர்ந்து கொடுத்தல் புத்தி கரமான செயலாகும்.)

## விளையாட்டு முன்றில்கள்:

அரசாங்க நன்கொடைபெற்று மயிலிட்டி தெற்கில் புதியவொரு விளையாட்டு முன்றில் இக் கிராமச்சங்கம் திறந்துள்ளது. வயா விளான்—பலாலி தெற்குச் சனசமூக நிலையத்தாரிடமிருந்து சுமார் 24 பரப்பு விசாலமுடைய ஒரு காணியை நன்கொடையாகப் பெற்று, அதிலொருபாகத்தை அரசாங்க நன்கொடைபெற்றுத் திருத்தி விளையாட்டு முன்றில் ஆக்கியுள்ளது. இவை மாத்திர மன்றி குரும்பசிட்டி, வயாவிளான்தெற்கு, வருத்தலைவிளான், வீமன்காமம் என்னுமிடங்களிலும் விளையாட்டு முன்றில்கள் அமைக்க அரசாங்க நன்கொடை கோரப்பட்டுள்ளது. இம்முயற்சி அடுத்த ஆண்டு கைகூடுமென எண்ண இடமுண்டு.

(குறிப்பு: மேற் கூறிய சனசமூக நிலையங்களின் நிலைமையிலேயே அவற்றுடன் தொடர்புபட்டிருக்கும் விளையாட்டு முன்றில்களும் இருக்கின்றன எனலாம். உதாரணமாக, பலாலிதெற்கு விளையாட்டு முன்றில், சட்டவிரோதமாக இ. போ. ச. உந்து வண்டிகள் திருப்பும் நிலையமாக உபயோகிக்கப்படுவதால், மண்ணரிப்பு உண்டாகிக் கீழேயுள்ள படர்கற்கள் மேலே விளை யாடுவோரின் கால் கைகளை முறித்துவிடும் போலும், ஆகவே, போதிய நட்டஈடு இ. போ. சபையிடம் பெற்று மண் கொணர்வித்துப் பரப்பி இம்முன்றிலைப் புனருத்தாரணம் செய் வித்தல் நமது மாவட்ட சபையின் அத்தியாவசிய கடமை யாகும்.)

## கிராமச்சங்கக் காணிகளின் படமும், நாமாவலியும்:

இக் கிராமச்சங்கப் பகுதியின் படம் ஒன்று ஆயிரம் ரூபா செல விட்டுத் தயாரிக்கப்பெற்று, அதில் இக் கிராமச்சங்கத்துக்குரிய தெருக்களும், ஒழுங்கைகளும், வெள்ளவாய்க்கால்களும், கிணறுக ளும், குளங்களும், சந்தைகளும், மயானங்களும், மேய்ச்சற்தரை களும், விளையாட்டு முன்றில்களும், மற்றும் காணிகளும் விந்தா ரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவற்றின் நாமாவலியொன்றும் தயா

ரிக்கப்பெற்று அரைகுறையாக இருக்கின்றது. இதனைப் பூர்த்தியாக்க விஷயஞானமுள்ள முதியோரின் ஒத்துழைப்பு அத்தியாவசியம் தேவைப்படுகிறது.

(குறிப்பு: எமக்குப் பின் வந்த தலைவர்களின் கவனக்குறைவாலும், ஒருவரின் நாசகாரச்செயலாலும் மேற்காணும் படமும் நாமாவலியும் மிசுவும் சேதமுற்றுக்கிடக்கின்றன. இவற்றைப் புதுப்பித்து நாளதுவரை சேர்க்கப்படவேண்டியவற்றைச் சேர்த்து மிகவும் பாதுகாப்பாக வைத்திருத்தல் நமது மாவட்டசபையின் கடமையாகும்.)

**மின்சார வினியோகம்:**

வீட்டுத்தேவைக்கு மாத்திரமன்றிக் கமத்தொழில், கைத்தொழிற் தேவைக்கும் மின்சாரம் கொடுக்க இக்கிராமச் சங்கம் எடுத்துக்கொண்ட நீண்டகால முயற்சி இவ்வாண்டு கைகூடியுள்ளது.

இக்கிராமச்சங்கம் மின்சாரத்திட்ட மொன்று வகுத்து அதனைச் செயலிற் கொண்டுவர அரசினரிடம் இருந்து 2,25,000 ரூபா கடன் பெற்றுக் கேள்விப்பத்திரங்கள் அழைத்து, வேலை விரைவில் தொடங்க இருக்கின்றது,

போதிய பணமின்மையால், ஷெ திட்டத்தின்படி முதற் தறுவாயில் மொத்தமாக சுமார் 6 மைல் நீளமுள்ள பிரதான தெருக்களுக்கும் ஒழுங்கைகளுக்குமே மின்சாரம் கொடுபட இருக்கின்றது. மற்றும் இடங்களுக்கு இரண்டாந் தறுவாயிலேயே மின்சாரம் அளிக்கப்படும். அங்ஙனஞ் செய்வதற்கு, முதலாவதாக இக்கிராமச் சங்கம் காணி வருமான மதிப்பு வரியை விதித்து அதன் மூலம் தனது பணநிலையை மேம்படுத்துதல்வேண்டும். இரண்டாவதாக, மின்சாரம் வேண்டுமென விண்ணப்பித்து நிற்கும் மக்கள், கிராமச் சங்கம் மின்சார வினியோகம்செய்யத் தூண், கம்பி முதலியன நிறுவும்பொழுது, தாமும் தத்தம் வீடுகட்கும் தோட்டங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான கம்பி முதலியவற்றை நிறுவிக் காலம் தாழ்த்தாது, மின்சார வினியோக ஆரம்பத்திலேயே இக்கிராமச்சங்கத்தினின்றும் மின்சாரம் பெறுதல்வேண்டும். அங்ஙனம் செய்யாவிடில் அவர்கள் இக்கிராமச்சங்கத்துக்கு மாத்திரமன்றி மற்றும் பொதுமக்களுக்கும் பெரும் தீங்குபுரிபவராவர்.

ஆழக்கிணற்றில் அரும்பாடுபட்டுப் போதிய ஊதியமின்றி அல்லற்படும் எமது கமக்காரர் மின்சாரம் பெற்று நீர்ப்பாய்ச்சல் செயின், குறைந்த செலவில் நிறைந்த பயனடைந்து நாளடைவில் இந்நாட்டைப் பொன்னுடு ஆக்குவர். ஆகவே, இப்பொழுது முதலாந்தறுவாயில் மின்சாரம் கொடுபடவிருக்கும் தெருக்களுக்

கும் ஒழுங்கைகளுக்கும் அணித்தாயுள்ள தோட்டக்காரர் நீர்ப் பாய்ச்சலுக்கு மின்சாரம்பெற இதுவரையும் விண்ணப்பஞ் செய் யாது இருப்பின், இப்பொழுதாயினும் இக் கிராமச்சங்கத்துக்கு விரைந்து விண்ணப்பம் செய்குக.

(குறிப்பு : மேற்கூறிய நீர்ப்பாய்ச்சற் தேவைக்கே முக்கியமாக மின் சாரத்தை எம்பகுதிக்குக் கொண்டுவந்தோம். அத்துடன் நில் லாது, கமக்காரரைக் கூட்டுறவுமுறையில் தத்தம் தோட்டங் களுக்குத் தேவையான நீரிறை பொறி (மோட்டோர்) களையும் மற்றும் தேவையான மின் தூண், மின்கம்பி முதலியவற்றையும் வாங்கப் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் காணியபி விருத்திச் சேவைப்பகுதியினரிடமிருந்து குறைந்த வட்டிக்குத் தடவை பலவற்றிற் திருப்பிக் கட்டக்கூடிய கடனெடுத்துத் தரலாமெனக் கூறியும், இப்பகுதியிலுள்ள பிற்போக்குக் கமக் காரர் கோண்டாவிலிலுள்ள கமக்காரரின் முன்மாதிரியைப் பின்பற்றுகின்றாரில்லை. இப்போதாயினும் இவர்கள் மின்சாரம் பெற முயலாவிடில், தென்னிலங்கையில் மின்சார உபயோகம் மிகவும் கூடிக்கொண்டு போகின்றமையால், பின்னொருகால் இவர்கள் செய்யும் விண்ணப்பங்கள் நிராகரிப்பப்படுமென முன்னெச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.)

---

## சமஷ்டி அரசியல்

ஒரு சமஷ்டி இராச்சியம் என்பது முழுநாட்டுக்கும் பிரதிநிதித் துவம் படைத்து வெளிநாட்டு விடயங்களையும், பொது நன்மைக் குரிய உள்நாட்டு விடயங்களையும் நிருவகித்து நாடுமுழுவதற்கு மாகக் கருமமாற்றும் ஒரு மத்திய அரசாங்கத்தையும், யாப்பியற் சட்ட(அரசியலமைப்புச் சட்ட)த்தில் ஒதுக்கப்பட்ட தத்தம் ஆக்ஞை எல்லைக்குள் சட்டமியற்றவும், காரியநிர்வாகம் புரியவும் அதிகாரம் கொண்ட மாகாண அரசாங்கங்களையும் தன்னகத்தே கொண்ட ஓர் இராச்சியமாகும். இதனைச் சிறிது விளக்கிக் கூறுவதாயின், ஒற்றையாட்சி முறையில் ஒரேயொரு நாடாளுமன்றமும், ஒரே யொரு அரசாங்கமும் இருப்பதுபோலன்றி, சமஷ்டியாட்சிமுறையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாண நாடாளுமன்றங்க ளும், மாகாண அரசாங்கங்களும், அவற்றுடன் ஒரு மத்திய நடாளு மன்றமும் மத்திய அரசாங்கமும் இருக்கும். ஒவ்வொரு மாகாண அரசாங்கமும். தனது மாகாணத்துக்குரிய உள்நாட்டு விடயம், கல்வி, சுகாதாரம், கமத்தொழில், கடற்றொழில், கைத்தொழில் முதலிய விடயங்களைக் கவனித்து நிருவகிக்கவும், அவ் விடயங்கள் தொடர்பாய்ச் சட்டங்கள் யாத்துச் செயலிற் கொணரவும் உரிமையும், கடமையும் உரியனவாயிருக்கும். மத்திய அரசாங்கம்

முழுநாட்டுக்கும் பொதுவான தேசீய பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், புகையிரத, கடல், ஆகாய விமானப் போக்குவரத்து, தபால் தந்தித் தொடர்பு, சுங்கவரி, மின்சாரம் போன்ற பொது விடயங்களைக் கவனித்து நிருவகிக்கவும், அவ்விடயங்கள் தொடர் பாய்ச் சட்டங்கள் இயற்றிச் செயலிற் கொணரவும் உரிமையும் கடமையும் உள்ளனவாகும்.

இந்த ஆட்சிமுறையை டைசி யென்னும் அரசியல் யாப்புச் சட்ட நிபுணர் இராச்சிய உரிமைகளையும் தேசீய ஒற்றுமையையும் ஒருங்கு பாதுகாக்கக் கையாளப்படும் ஓர் அரசியற் தந்திரோபா யம் என்பர்.

சமஷ்டி அரசியல் யாப்பில் மாகாண அரசாங்கங்களுக்குரிய விடயங்களும் மத்திய அரசாங்கத்துக்குரிய விடயங்களும் வரை யறுக்கப்பட்டிருக்கும். இங்ஙனம் அரசியல் அதிகாரம் வரையறுத் துப் பிரிக்கப்பட்டிருப்பதே சமஷ்டியரசியலின் சிறப்புத் தத்துவ மாகும்.

மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் ஒன்றுக் கொன்று தரம் கூடியனவாகவோ, குறைந்தனவாகவோ இருக்கா மல் அரசியல் அமைப்பு (யாப்பு)ச் சட்டம் விதித்த தத்தம் ஆக்ஞை எல்லைகட்குள்ளேயே தத்தம் சட்டம் இயற்றும் அதிகாரத்தையும், காரிய நிருவாக அதிகாரங்களையும், நீதிபரிபாலன அதிகாரங்களையும் செலுத்தும். எனவே, யாப்பியற் சட்டமே யாவினும் மேலதாம் என்னும் யாப்பியல் மகத்துவம் சமஷ்டி யரசியலின் இரண்டாம் பிரதான இயல்பாகும்.

ஆகவே, மத்திய அரசாங்கமாயினும் சரி, மாகாண அரசாங்க மாயினும்சரி யாப்பியற் சட்டத்துக்கு முரண்பாடுடைய சட்ட மெதுவும் இயற்றினுல், அது சட்டவிரோதமானதென்றும், எனவே, பெலமற்றதென்றும், பிரகடனத் தீர்ப்பளிக்கவும், ஷெ யாப்பியற் சட்டத்தை நன்கு எடுத்து விளக்கவும், மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண அரசாங்கத்துக்கும் இடையே ஏற்படும் ஆக்ஞை முரண் பாடுகளைத் தீர்த்து வைக்கவும் உயர்ந்த தர நீதிமன்ற மொன்று தேவையாகும்.

சமஷ்டி யாப்பியற் சட்டத்தை மத்திய அரசாங்கமோ மாகாண அரசாங்கமோ ஒரு பக்க நடவடிக்கையாக மாற்ற முடியாது. ஷெ சட்டத்தைத் • திருத்தவேண்டுமாயின், மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கங்களும் ஒரு குறித்த முறையை ஒருங்குசேர்ந்து கடைப்பிடிக்கவேண்டும்.

ஆகவே, அதிகாரப்பிரிவு, யாப்பியற் சட்டத்தின் உன்னத மகத்துவம், யாப்பியற் சட்டத்தை விளக்க நீதிமன்ற மொன்றின் இன்றியமையாமை, யாப்பியற் சட்டத்தின் இறுக்கம் என்பன சமஷ்டியரசின் முக்கிய இயல்புகளாகும்.

(இப்போது கவனிக்கற்பாலதொன்று என்னவெனில், ஒற்றையாட்சியின்கீழ் இயங்கும் மாவட்டசபைகளுக்கும், மாநகரசபைகளுக்கும், நகரசபைகளுக்கும் மற்றும் ஸ்தலஸ்தாபனங்களுக்கும் இப்போதுள்ள மத்திய அரசாங்கம் கடிவாளம் பிடிப்பதுபோல, சமஷ்டியாட்சியின் கீழ் இயங்கும் மாகாண அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் கடிவாளம் பிடிக்க முடியாது. ஒற்றையாட்சியில் எந்த ஸ்தலஸ்தாபனத்தையும் படைக்கவும், அவற்றுக்குரிய தொழில்களையும், அதிகாரங்களையும், உரிமைகளையும், கடமைகளையும் நிர்ணயிக்கவும், அழிக்கவும் மத்தியஅரசாங்கத்துக்கு உரிமையுண்டு. அத்தகைய உரிமை சமஷ்டிஅரசியலில் மத்திய அரசாங்கத்துக்குக் கிடையாது. ஏனெனில், மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் ஒன்றுக்கொன்று தரம் குறைவின்றி ஒன்று மற்றதுக்கு எதிராகச் சுதந்திரமாக இயங்கும் உரிமையுடையது. இரண்டுக்கும் அவ்வவற்றுக்குரிய அதிகாரத்தை வழங்குவது அவ்விரண்டுக்கும் பொதுவான அரசியலமைப்பு (யாப்பு)ச் சட்டமாகும்.

சமஷ்டியரசு இரண்டு முறையில் உண்டாகும். ஒன்று ஒற்றையாட்சி நடாத்திய ஒருசில நாடுகள் தங்கள் பாதுகாப்பும் மற்றும் பொதுநன்மையும் கருதி ஒன்ருக இணைந்து தங்கள் தனிராச்சிய உரிமைகளைப் பாதுகாத்துக்கொண்டு பொது மத்திய அரசாங்கமொன்றை நிறுவுவது. இந்தமுறையிற்ருன், ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா என்பவற்றில் சமஷ்டியரசு உண்டாயிற்று. இரண்டாம் முறை என்னவெனில், ஒற்றையாட்சியின் கீழிருந்த நாடொன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றுக்கெல்லாம் மாகாணஅரசுரிமை வழங்கப்பட்டுப் பொதுநன்மைக்குரிய ஒருசில விடயங்களுக்காக மத்திய அரசாங்கமொன்றை உண்டாக்குதல். இவ்வகையிலேயே கனடா தேசச் சமஷ்டியரசு உண்டாயிற்று.

சமஷ்டியரசு உண்டாவதற்கும், தொடர்ந்து நிலைத்தற்கும் வாய்ப்புக்கரமான நிலைமைகள் பின்வருமாறு:-

(அ) ஐக்கியப்படவேண்டும் என்னும் ஆசை: இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடுகள் தங்களைக்காட்டிலும் பராக்கிரமம் வாய்ந்த பிறவல்லரசுகளுக்கு எதிராகத் தங்கள் அரசியற் சுதந்திரத்தைப் பாதுகாக்க, அல்லது தங்கள் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு வியாபாரத்தை அல்லது கைத்தொழிலை அபிவிருத்திசெய்ய, அல்லது சாகிய வேற்றுமை காரணமாக இரு சாகியங்கள் நித்தமும் செய்து வரும் கழுத்தறு சண்டையை நிற்பாட்ட, அல்லது வேறேதும் பொது நன்மை கருதி இணைந்து சமஷ்டியரசமைக்க ஆசைப்படவேண்டும்.

(எமது இலங்கையைப் பொறுத்தவரையில், பல தடவைகளில் சிங்களர் தமிழர்கள்மீது ஆக்கிரமித்துக் கலகம்விளைத்து கொலை, கற்பழிப்பு, கொள்ளை, கடை வீடெரிப்பு முதலிய பாதகச் செயல்களைச் செய்துள்ளமைகாரணமாக, கருணை சிறிதேனும் இல்லாத சிங்களவருடன் எத்தகைய தொடர்பையும் நீக்கித் தனித்தமிழ் நாடு உண்டுபண்ணுதல் நன்றெனஎண்ணி தமிழர் சமஷ்டியலை ஆதரிக்காது தனிநாடு கோருகின்றனர். இதனைப் பெறுவதுமாத்திரமன்றிப் பாதுகாப்பதும் பெரும் வில்லங்கமாகும், பாதுகாப்பு என்னும் போது சிங்களருக்கு எதிராக மாத்திரமின்றி மற்றும் வெளி நாடுகளுக்கு எதிராகவும் தமிழீழத்தைப் பாதுகாத்தலைக் கருதுகிறேன். சிறிதேனும் தூரதிருஷ்டியில்லாத சிங்களவர் தங்களைத் தாமே ஏமாற்றி, ''தமிழருக்கென்றொரு பிரதேசம் இப்போது மில்லை; முன்னேயும் இருந்ததில்லை. அவர்களுக்கென்றொரு இராச்சியம் இப்போதுமில்லை; முன்னேயுமிருந்ததில்லை. இப்போதைய இலங்கை இராச்சியம் எங்கள் சிங்கள இராச்சியம், எனவே தமிழர்களோடு சமஷ்டி என்ன சமஷ்டி?'' என்று எள்ளி நகையாடினும், விரைவில் அவர்கட்கு இப்போது இருக்கும் அதிகாரவெறி முறிந்து, நிதான புத்தி உண்டாகி சமஷ்டியின் அவசியத்தையும் அதனால் விளையக்கூடிய நன்மையையும் நன்கு உணர்வர், எங்ஙனமெனில், இலங்கை ஒரு சிறிய தீவு; தன்னைத்தானே பாதுகாக்கமுடியாதது; அதற்குள்ளே வகுப்பொற்றுமையீனம் உண்டாகின் அது தனது சுதந்திரத்தை இழக்க நேரிடும். எங்ஙனமெனின், இலங்கை பொதுவாக உலகநாடுகள் முழுவதினதும் குறிப்பாக அமெரிக்கா, உருசியா என்னும் வல்லரசுகளினதும் கவனத்தை ஈர்த்து நிற்கும் இந்து சமுத்திரத்தில், அதுவும் ஒரு நல்ல கேந்திர ஸ்தானத்தில் இருக்கிறது. ஆகவே, மேற்சொல்லிய வல்லரசுகள் இலங்கையைப் பிடிக்க முயலும். ஏன்! இந்தியாதானும் தனது தற்பாதுகாப்புக்கு இலங்கையைத் தனக்குரியதாக்க முயலும், 'பட்டால் அறிவன் சண்டாளன்; மட்டிட்டறிவன் மதியூகி' என்னும் பழமொழிக்கேற்ப மேற்கூறிய உண்மையைச் சிங்களவருள் நுண்மாணுழைபுலமுள்ளோர் இப்பொழுதே உணர்கின்றனர். அவர்களின் இப்போதைய எண்ணிக்கை மிகவும் குறைவாயிருப்பினும், அது காலக்கிரமத்தில் போதியளவு வளர்ந்துவரும் என்பது எம்போன்றோரின் நம்பிக்கையாகும்.

(ஆ) மாகாணச் சுதந்திர நாட்டம்: ஒரு சில பொதுநன்மைக்குரிய விடயங்கள் ஒழிய மற்றும் விடயங்களிலெல்லாம் தங்களுக்குப் பூரணசுதந்திரம் இருக்க வேண்டுமென்று மாகாணங்களில் வதியும் மக்கள் கருத வேண்டும்.

(இ) பூகோளத் தொடர்பு அல்லது நிலத்தொடர்பு: சமஷ்டியலை விரும்பும் நாடுகள் அல்லது மாகாணங்கள் பூகோளசாஸ்திர ரீதியில் ஒன்றுக்கொன்று அடுத்துத் தொடர்புடையனவாக இருக்க வேண்டும்,

(ஈ) அளவுகடந்த வித்தியாசங்களின்மை: மாகாணங்களுக் கிடையே தரைப்பாகம், குடிசனம், செல்வவிருத்தி முதலியவற்றில் அளவு கடந்த வித்தியாசங்கள் இருக்கக்கூடாது, அங்ஙனம் இருப் பின் பெலமும், செல்வாக்கும் கூடிய ஒரு மாகாணம் மற்றைய மாகாணங்களைப் பாதிக்கும்.

(உ) அரசியலறிவும் சட்டம் முதனிலைய உணர்ச்சியும்: பொது மக்கள் மத்திய அரசாங்கத்துக்கும், மாகாண அரசாங்கங்களுக் கும் விசுவாசமாயிருக்கவும், அதிகார முரண்பாடு ஏற்படும்போது உயரதர நீதிமன்றம் வழங்கும் தீர்வைக்கு அமைந்து நடக்கவும், சமஷ்டியலை விட்டு வெளியே செல்லாமல், தொடர்ந்தும் அதற் குள் இருக்கவும் போதியளவு அரசியலறிவும், சட்டம் யாவினும் மேலே தாம் என்னும் நல்லுணர்ச்சியும் உடையவராயிருத்தல் வேண்டும்.

இப்பொழுது சமஷ்டியல் சம்பந்தமான சில வில்லங்ககரமான விடயங்களை ஆராய்வாம்.

(1) அதிகாரங்களைத் திருப்திகரமான முறையில் பிரித்தல்: தேசம் முழுவதையும் பாதிப்பவற்றை மத்திய அரசாங்கத்திடமும் அங்ஙனம் பொது ஆர்வத்திற்குரியன அல்லாதவற்றை மாகாண அரசாங்கங்களிடமும் விடவேண்டும் என்னும் விதிப்படிவெளிநாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு, வெளிநாட்டு வியாபாரம், கப்பல் போக்குவரத்து, சுங்கவரி, நாணயம் மத்திய அரசாங்கத்திற்கும், மற்றும் உள்நாட்டு விடயம், உள்ளூராட்சி, கமத்தொழில், கடற் றொழில், கல்வி, சுகாதாரம், உள்நாட்டுப் போக்குவரத்து முதலிய வற்றை மாகாண அரசாங்கங்களிடமும் விடுதல் வழக்கமாகும்.

(அ) ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து என் னும் தேசங்களின் யாப்பியல்களில் அரசாங்கத்தின் அதிகாரங் கள் வரையறுத்து விபரிக்கப்பட்டு, மீதி அதிகாரங்கள் மாகாண அரசாங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கனடாவில், மாகாணங்களின் அதிகாரங்கள் வரையறுத்து விபரிக்கப்பட்டு, மீதி அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கு விடப்பட்டுள்ளன.

மேற்கூறிய வண்ணம் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் விபரிக்கப்படும்போது, மாகாணங்களுக்கு எதிரே அதன் அதிகாரங் கள் மட்டுப்படுத்தப்படுகின்றன என்பதும், மாகாணங்களின் அதிகாரங்கள் விபரிக்கப்படும்போது அவற்றின் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கு எதிராக மட்டுப்படுத்தப்படுகின்றன என்பதும் கருத்தாகும். ஓர் அரசயாப்பியல் உண்மைச் சமஷ்டியற் தன்மை வாய்ந்ததா அல்லது இல்லையா என்பதை நிர்ணயிப்பதற்கு

மாகாண அரசாங்கங்கட்கு மீதி அதிகாரங்கள் விடப்பட்டுள்ளன என்பது மாத்திரமன்றி அம்மீதி அதிகாரங்களின் உள்ளுறையும் கருத்துக்கெடுக்கப்பட வேண்டும்.

மேற்சொல்லிய அரசியல் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாணங்களுக்குமிடையே திருப்திகரமான முறையில் பகிரப்பட்டால் மட்டும் போதாது. அவற்றுள் ஒன்றுக்கென விடப்பட்ட அதிகார எல்லையை மற்றையது ஆக்கிரமிக்காமல் தடுப்பதற்கு நீதிமன்றம் என்னும் ஓர் அதிகார பீடமும் உண்டாக்கப்பட வேண்டும்.

பெரும்பாலும் யாப்பியற் சட்டத்தை விளக்கவும் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்கட்குமிடையே எழும் ஆக்ஞை முரண்பாடுகளைத் தீர்க்கவும் இதற்கெனச் சுதந்திரம் வாய்ந்த நீதிமன்றமொன்று நிறுவப்படும். இதற்கு அமெரிக்காவிலுள்ள நீதிமன்றமும் அவுஸ்திரேலியாவிலுள்ள நீதிமன்றமும் சிறந்த உதாரணங்களாகும்.

அரசியல் யாப்பியற் சட்டம் மத்திய அரசாங்கச் சட்டசபையாலோ மாகாண அரசாங்கங்களின் சட்டசபைகளாலோ தனித்து நினைத்தவாறெல்லாம் திருத்தப்படமுடியாததாய், இறுக்கம்வாய்ந்ததாக இருக்கும். குறித்த சட்டத்தைத் திருத்தும் உரிமையில் ஒரு பங்கு மத்திக்கும் கூடியபங்கு மாகாணங்களுக்கும் அளிக்கப்படும். ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து என்னும் தேசங்களில், ஷெ சட்டத்தைத் திருத்தப் பிரேரிக்கும் உரிமை மத்திய சட்டசபைக்கு அளிக்கப்பட்டு, அத்திருத்தத்தை அரைவாசிக்குக் கூடிய (ஐக்கிய அமெரிக்காவில் முக்கால்வாசிக்கு மேற்பட்ட) மாகாணங்கள் ஊர்ஜிதம் செய்ய வேண்டும் என்னும் நியதி உண்டாக்கப்பட்டிருக்கின்றது. அது மாத்திரமன்றி, சில அடிப்படை உரிமைகள் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் முதியோர் சபையில் சம பிரதிநிதித்துவமும், அவுஸ்திரேலியாவில் மாகாணங்களின் (பிரதேச) எல்லைகளை மாற்றக்கூடாதென்னும் நியதியும் உண்டு. இவ்வடிப்படை உரிமைகளை மாற்றுவதற்கு மாகாணங்களின் சம்மதம் தேவையாகும்.

(2) பெரியமாகாணங்களுக்கு எதிராகச் சிறியமாகாணங்களைப் பாதுகாத்தல்: இதற்கு இரு உத்திகள் கையாளப்படுகின்றன. முதலாவதாக (ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து போன்ற நாடுகளில்) மத்திய அரசாங்கத்தின் மேற்சபையில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் சமபிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, குறித்த நாடுகளில் முதலாம் சபைக்குரிய அதிகாரங்களுக்குச் சமமான அல்லது ஏறக்குறையச் சமமான அதிகாரங்கள் இரண்டாம் சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

(3) மத்திக்கும் மாகாணங்களுக்கு மிடையேயுள்ள தொடர்பை ஒழுங்குபடுத்துதல்: இலட்சிய முறைப்படி சமஷ்டி இராச்சிய மொன்றில் சட்டஆக்கம், காரிய நிருவாகம் என்னும் விடயங் களில் தத்தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள வலயங்களுக்குள் மத்திய அரசாங்கமும், மாகாணஅரசாங்கங்களும் ஒன்றுக்கொன்று சுதந்திர முடையனவாயிருத்தல் வேண்டும். இந்தச் சுதந்திரமும் சமஷ்டி அரசியலின் தனிச்சிறப்பு இயல்பு அல்லது விதியாகும். தத்தமக் கென வரையறுக்கப்பட்ட வலயங்களில் மத்திய அரசாங்கம் தலை யிட முடியாதமுறையில் எவ்வளவுக்கெவ்வளவு மாகாணங்களுக்குச் சுதந்திரமுண்டோ அவ்வளவுக்கவ்வளவு அந்நாட்டின் சமஷ்டிய லாட்சி உண்மைச் சமஷ்டியரசாகும்.

எனினும், பிறநாட்டு ஆக்கிரமிப்பு, மத்திய அரசாங்கம் ஆக்கிய சட்டங்களை மாகாணஅரசாங்கங்கள் மூலம் செயலிற் கொணர்தல், மத்திய அரசாங்க மாகாணங்களின் அபிவிருத்திக்குக் கொடுக்கும் நன்கொடைப்பணங்களை மாகாணங்கள் ஏற்கின் அந்நன்கொடைப் பணங்களின் செலவழிப்பு மேற்பார்வை, மாகாணங்கள் உதவி கோரின், அம்மாகாணங்களிற் தோன்றும் உள்ளூர்க் கலகத்தை அடக்குதல் போன்ற விடயங்களில் மத்திய அரசாங்கம் தொடர் புறுவதுண்டு.

(4) மாகாணங்களுக்கிடையே தொடர்புகளைக் கிரமப்படுத்தல்: ஒவ்வொரு மாகாணமும் மத்திக்கு எதிராக மாத்திரமன்றி மற்றும் மாகாணங்களுக்கு எதிராகவும் சுதந்திரமுடைத்து. எனவே, மாகாணங்களின் தொடர்புகளைக் கிரமப்படுத்த யாப்பியலில் சேர்க்கப்படும் பிரமாணங்கள் சில முக்கிய விடங்களில் அவற்றுக் கிடையே பரஸ்பர நல்லிணக்கத்தை உண்டுபடுத்தவும் அவற்றுள் இரண்டு அல்லது கூடியன நாடு முழுவதினதும் க்ஷேமலாபத்துக்கு மாறுகச் சதியாலோசனை செய்யாது தடுக்கவும் இயற்றப்படுவன வாகும், இவ்வகையில், ஒவ்வொரு மாகாணமும் மற்றைய ஒவ் வொரு மாகாணத்தினதும் அரசியற்கருமங்களுக்கும், அரசியலேடு களுக்கும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும், முழு நம்பிக்கையும், மதிப்பும் அளிக்கவேண்டும்; ஒவ்வொரு மாகாணப் பிரசைகளும், மற்றும் ஒவ்வொரு மாகாணத்தினதும் பிரசைகளுக்குரிய உரிமை களும், பாதுகாப்புக்களும் உடையவராவர்; மாகாணம் எதிலும் வளர்க்கப்படும், உண்டாக்கப்படும், அல்லது உற்பத்தி செய்யப் படும் பொருட்கள் எதுவும் மற்றைய ஒவ்வொரு நாட்டுக்கும் வரியின்றிக் கொண்டுசெல்லப்படலாம். மாகாணங்கள் தங்களுக் கிடையே அரசியலியல்புவாய்ந்த பொருத்தங்களோ, உடன் படிக்கைகளோ செய்யமுடியாது.

(5) யாப்பியற் திருத்தத்தில், ஒரு திருப்திகரமான முறை: மத் தியோ மாகாணங்களோ யாப்பியற் சட்டத்தைத் தாம் தாம் நினைத்தபடி மாற்ற அதிகாரமளிக்கக்கூடாது. அங்ஙனம் அளிப் பின் யாப்பியலே யாவினும் மேலதாம் என்னும் சமஷ்டியற் சிறப்பியல்பு இல்லாமற் போய்விடும். ஆகவேதான், மத்தியும்,

மாகாணங்களும் ஒருங்கு சேர்ந்து யாப்பியலைத் திருத்த வேண்டுமென்பது மேலே 1ஆம், 2ஆம் பிரிவுகளில் விபரமாக விளக்கப்பட்டுள்ளது.

**(6) சமஷ்டியினின்றும் பிரிதல்**

யாப்பியற் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாற் சரி, அங்ஙனம் சொல்லப்படாவிடத்து, மாகாணமொன்று சமஷ்டியினின்றும் பிரிய இயலாது. ஐக்கிய சோவியத்துச் சமதர்மக் குடியரசு நாட்டுச் சட்டத்தில் பிரியும் உரிமை கூறப்பட்டிருப்பினும், அப் பிரியும் உரிமை சமஷ்டி அமைப்பு அடிப்படை விசுவாசத்துக்கு முற்றும் முரண்பாடானதாகும்.

இதுவரையும் கூறியவற்றை நன்கு படித்து இனிது தெளிவாகச் சிந்திப்போர் எவரும் இலங்கையிலுள்ள சிங்களரும் தமிழர்களும் தங்களுக்கிடையே இருக்கும் வேற்றுமைகளை ஒத்துக்கொண்டு, இயன்றளவு பிரிந்தும் பிரியாமல் ஒற்றுமையாய் வாழுவதற்குச் சமஷ்டிமுறையே உகந்ததென்பதையும், அங்ஙனமன்றிச் சின்னஞ்சிறிய இலங்கையை இன்னும் இரண்டாகப் பிரித்துத் தமிழர் தனிநாடு அமைத்தல் சிங்களருக்கு மட்டுமன்றித் தமிழருக்கும் கேடுவிளைக்குமென்பதையும், இப்பொழுது சமஷ்டி அரசியலை விரும்பாத சிங்களவர் அதனை விரும்பும் காலம் அதிக விரைவில் உண்டாகுமென்பதையும், தமிழர் தங்களைச் சிங்களரின் இடத்தில் வைத்து விடயத்தை நோக்கிச் சமஷ்டியினின்று பிரிந்துபோகும் உரித்தைக் கைவிட்டு உண்மைச் சமஷ்டி உண்டாக்கல் உத்தமமென்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டியவராவர்.

---

# தேசவழமைச் சட்டத்தில் சில திருத்தங்கள்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே." —பவணந்தி

சமூகநலம் பேணவே சட்டங்கள் எழுந்தன. சட்டம் பொதுசன அபிப்பிராயத்தின் பிரதிவிம்பம் என்பர். எனவே, காலத்துக்குக் காலம் பொதுசன அபிப்பிராயம் மாற, சட்டமும் அதற்கேற்ற வண்ணம் மாறவேண்டும்.

(1) ஆதியில், உலகமெங்கணும் பெண்ணடிமை நிலவியிருந்து, பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அக்குறைபாடு நீங்கி வருகின்றது. "பெண்ணே! பெலவீனம் என்பதுன் பரியாய நாமம்!" என ரெனிசன் பிரபு பாடியது பிழையென்றும், பெண்கள் ஆண்களைக் காட்டினும் குறைந்தவரல்லரென்றும் பெண்கள் ஒருங்குகூடிக் கிளர்ச்சி செய்ததன் பயனாக இங்கிலாந்தில் 1922ஆம் ஆண்டில்

இயற்றப்பட்ட ஒரு புதிய சட்டப்பிரகாரம் ஆங்கிலப்பெண்கள் சுதந்திரப் பெண்கள் (feme sole) ஆயினர். இதனைப்பார்த்து இலங்கையில் ''விவாகம் செய்த பெண்கள் சொத்துச்சட்டம் என்னு மொரு சட்டம் 1923ஆம் ஆண்டில் 18 என்னும் இலக்கத்துடன் நிறைவேற்றப்பட்டு உரோமன் — டச்சுச் சட்டத்தால் பாதிக்கப் பட்டிருந்த பறங்கிப் பெண்களும், கரைநாட்டுச் சிங்களப் பெண் களும், யாழ்ப்பாணத் தமிழரல்லாத ஏனைய தமிழ்ப்பெண்களும் பெரிதும் சட்ட சுதந்திரம் அடைந்துள்ளனர். மேற்படி சட்டத்தின் விளைவாக அப்பெண்கள் கணவரின்றித் தங்கள் தனிப்பட்ட அசை வுள்ள அசைவற்ற சொத்துக்களைப் பெறவும், ஆளவும், பாரப் படுத்தவும், பராதீனப்படுத்தவும், ஒப்பந்தங்கள் செய்யவும், நீதி மன்றத்தில் வழக்காளியாகவோ எதிராளியாகவோ தோன்றி வழக்காடவும் சகல உரிமையும் பெற்றுள்ளனர். இத்தகைய உரிமை தேசவழமைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் எங்கள் பெண் களுக்கும் அத்தியாவசியம் அளிக்கப்பட வேண்டும்.

தங்கள் தனிப்பட்ட காணிபூமிகளைத் தாங்கள் விரும்பியபடி பாரப்படுத்தவும், பராதீனப்படுத்தவும் விவாகஞ்செய்த பெண் களுக்கு உரிமை வழங்கப்பட்டால், அவர்களின் குடும்ப ஒற்றுமை பாதிக்கப்படும் எனக் கூறுவோரைப் பார்த்து, அசைவுள்ள பொரு ளைத் தாம் விரும்பியபடி கையளிக்க இப்போது உரிமை இருந்தும், அவ்வுரிமையைத் துர்ப்பிரயோகம் செய்து குடும்ப ஒற்றுமையைக் கெடுக்காத எங்கள் பெண்கள் அசைவற்ற சொத்தையும் அங்ஙனம் கையளிக்க உரிமைபெற்றவுடன், அவ்வுரிமையைத் துர்ப்பிரயோகம் செய்து குடும்ப ஒற்றுமையைக் கெடுத்துவிடுவார்கள் என்பது வீண் வெற்றுரையாகு மென்றும், மேற்கூறிய உரிமைகளை 1924ஆம் ஆண்டில் பெற்ற பெண்களின் குடும்ப ஒற்றுமையும், நல்வாழ்வும் பாதிக்கப்படவில்லையென்றும் கூறி அப்பாற் செல்லுவாம்.

(2) இப்போது, புருஷன் பெண்சாதியாயிருக்கும் காலத்தில், புருஷன் தன்பேரில் கொள்வனவு செய்த காணியைத் தான் விரும்பிய வண்ணம் ஈடுவைக்கவும், ஒற்றிவைக்கவும், அறுதி விற்கவும் எமது தேச வழமைச் சட்டம் அனுமதியளிக்கின்றது, இங்ஙனம் அனு மதியளிக்கும்போது, குறித்த புருஷன் தனது குடும்ப நன்மை கருதியே அந்தத் தேடிய தேட்டச் சொத்தைப் பாரப்படுத்துவான் அல்லது பராதீனப்படுத்துவானெனத் தேசவழமை யூகிக்கின் றது, இது பிழையாகும், ஆகவே, தேடிய தேட்டச் சொத்தைப் பாரிக்க அல்லது பராதீனப்படுத்தத் தம்பதிகள் இருவரும் சேர வேண்டுமென்னச் சட்டம் இயற்றப்படவேண்டும்.

(3) விவாக நிலைமை தொடர்ந்திருக்கும் காலத்தில், அஃதாவது சதிபதியாயிருக்கும்போது, பொதுப் பணத்தைக் கொண்டு புருஷன் பேரில் அல்லது மனைவி பேரில் அல்லது இருவரினதும் பேரில் செய்

யப்படும் கொள்விலைக்காணி தேடிய தேட்டமாகுமென்பதும், அத் தேடிய தேட்டத்தில் அரைவாசி புருஷனுக்கும், அரைவாசி மனைவிக்கும் உரியனவாகுமென்றும், அத் தம்பதிகளுள் எவராயினும் ஒருவர் இறக்கும்போது அங்ஙனம் இறந்த தம்பதியின் அரைவாசிப் பாகம் அவ்விறந்த தம்பதியின் உரிமைக்காரருக்குப் போகுமென்றும், மீதியரைவாசிப் பாகம் மாத்திரம் உயிரோடிருக்கும் தம்பதிக்குரியதா யிருக்குமென்றும் எங்கள் தேசவழமை கூற, குறித்த உயிர்வாழும் தம்பதிக்குக் குறித்த அரைவாசிப் பாகம் மட்டுமன்றி, இறந்த தம்பதியின் அரைவாசிப் பாகத்திலும் அரைவாசி உண்டாகுமென எங்கள் இலங்கை உயர் தர நீதிமன்றம் பிழையாகத் தீர்த்துள்ளது. ஆகவே, மேற்கூறிய சந்தர்ப்பத்தில் உயிர் வாழும் தம்பதிக்கு அரைவாசிப்பாகம் மட்டும் உரியதாக, மீதி இறந்த தம்பதியின் உரிமைக்காரரைச் சென்றடையுமெனத் திருத்தமொன்று செய்யப்படவேண்டும்.

(4) ''வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும் ஒன்றுபட்டு வாழுக'' எனத் தம்பதிகளை வாழ்த்துவது உலகனைத்துமுள்ள ஒரு பெரும் நல்ல வழக்கமாயிருப்ப, நன்கு செல்வச் சிறப்புடன் ஒற்றுமையாக வாழ்ந்துவந்த ஒரு குடும்பத்தில் தம்பதியொருவர் இறந்ததும், தேடிய தேட்டம் இல்லாத காரணத்தினுல், உயிர் வாழும் தம்பதி இறந்த தம்பதியின் தனிப்பட்ட சொத்தொன்றுக்கும் உரிமையில்லாது, குறித்த இறந்த தம்பதியின் உரிமைக்காரரால் தெருவிற் பிடித்துவிடப்படுகின்றூர். இது பெரும் அநியாயம்! ஆகவே, தேடிய தேட்டம் இருந்தாலென்ன இருக்காவிட்டாலென்ன முன்னர் இறக்கும் தம்பதியின் தனிப்பட்ட சொத்தில் அரைவாசி உயிரோடிருக்கும் தம்பதிக்குரியதாகுமென்னும் ஒரு நல்ல புதிய ஏற்பாடு அத்தியாவசியம் செய்யப்படவேண்டும்.

(5) யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு சொரியற்காணியில் ஒருவர் தமது பங்கை விற்க விரும்பினுல், அவர் தமது உரிமைக்காரருக்கும், உடன் பங்காளருக்கும் 21 நாள் முன்னறிவித்தல் செய்ய வேண்டுமென்றும், அவ்வறிவித்தல் பொதுசன விஷயஞானம் கருதி ஸ்தலஸ்தாபனங்கட்கு அனுப்பப்பட வேண்டுமென்றும், 1947ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட காணி வாங்கும் முன்னுரித்துச் சட்டம் விபரமாகக் கூறுகின்றது. ஆயின், குறித்த அறிவித்தல் முறையுடன், குறித்த உரிமைக்காரருக்கும், உடன் பங்காளருக்கும் குறித்த அறிவித்தல் எழுத்துமூலம் செய்யப்படவேண்டுமென வற்புறுத்தக் குறித்த சட்டம் தவறியுள்ளமையால், குறித்த அறிவித்தல் பேரளவிற் செய்யப்படும் வீண் அறிவித்தலாகின்றது. ஆகவே, தேவையாய திருத்தம் மேற்படி சட்டத்துக்குச் செய்யப்படுதல் அவசியமாகும்.

(6) ஒரு காணியின் எல்லைக்குள், ஆயின் எல்லைக்கருகே, நிற்கும் ஒரு மரத்தின் கிளையொன்று அடுத்த காணிக்குப் படர்ந்து செல்லும் போது, அந்த அயற்காணிக்காரர் அங்ஙனம் தனது காணிக்கு மேற் படரவிடாமல் அக்கிளையை வெட்டலாமென்றும், அங்ஙனம் வெட்டாமல் விட்டு அது பெருத்த பின், செய்பயிராயின், அதனை வெட்டக்கூடாதென்றும், குறித்த மரம் வேம்பு, புளி, இலுப்பை போன்ற வான்பயி (fructus naturalis) ராயின், அக்கிளையின் கனி முதலிய பிரயோசனம் குறித்த அயற்காணிக்காரனுக்குரியதாகுமென்றும், குறித்த மரம் மா, பலா போன்ற செய்பயி (fructus industrialis) ராயின் குறித்த கிளையிற் கனி முதலிய பிரயோசனம் குறித்த அடிமரமுள்ள காணிக்காரனுக்கே உரியதாகுமென்றும், குறித்த மரம் முழுவதும் தறிக்கப்படும்பொழுது குறித்த கிளை குறித்த அயற்காணிக்காரனுக் குரியதாகுமென்றும், தேசவழமை கூறுகின்றது. (இனிச் சிலர் வேப்பமரமொன்றை எட்டித் தொட்டாலும் அடிமரத்தில் அயற்காணிக்காரனுக்குப் பங்குண்டென்பர். இதற்கு ஆதாரம் 1706ஆம் ஆண்டில் ஒல்லாந்த தேசாதிபதி ஜோன் சைமன்ஸால் தொகுக்கப்பட்ட தேசவழமை விதிகளில் கிடைக்காது.) இந்தத் தேசவழமை விதிகள் ''காணியும் காணிக்கு மேலேயிருக்கும் ஆகாயமும் அக்காணிக்காரனுக்கே உரியது'' என்னும் உயர்ந்த பொதுச் சட்டமூல விதிக்கு முரண்பாடாயிருப்பதாலும், வீண் தர்க்கம் தகராற்றுக்குக் காரணமாயிருப்பதாலும், முற்றாக இரத்துச் செய்யப்படுதல் உசிதமாகும்.

---

## தனிக்குறள் சில

1. தேவன் அனைவருக்கும் மெய்த்தந்தை ஆவரெனின்
யாவேமும் சோதரர்கள் காண்.
2. சகோதர தத்துவத்தை ஏற்போர் மறுக்கார்
சகோதர ஏகசம மெய்.
3. மக்களது சேவை மகாதேவன் சேவையென
மக்களுக்குத் தொண்டுசெய்கு வாம்.
4. துன்பம் துடைத்தலே சொல்லரிய தொண்டென்று
மன்பதைக்குச் செய்வாமத் தொண்டு.
5. சமத்துவ வாழ்வென்றும் இன்பம் பயக்கும்
தமக்கும் பிறர்க்கும் ஒருங்கு.
6. தத்தம் கருமத்தைத் தாம்தாம் நிருவகித்துச்
சித்தம்போற் செய்வதே மேல்.
7. அரிதாம் ஒருவற்குத் தாய்நாடு; அஃதில்
அரிது சுதந்திர வாழ்வு!
8. அறம்செயவென் ஔவைசொல் நந்தமிழ்ப்பண் பாட்டின்
அரிவரியென்(று) ஓதல் தகும்.
9. வித்தியா தர்மம்மேல்; முன்னேற்றம் யாதுக்கும்
உத்தம ஏதாம் அது.

## தான் படித்த
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் பார்த்துப் பாடியது

**கலிவெண்பா**

அவதார மேதையாம் ஆறுமுக நாவலர்
சைவ சமயிகட்கோர் சைவநல் லாங்கில
வித்தியா லயமொன்று வேண்டுமெனச் சொல்லியசற்
புத்தியினைக் கேட்டுப் பசுபதிச் செட்டியார்
நாகலிங்கம் செல்லப்பா கைலாச பிள்ளையென்னும்
உத்தமரும் மற்றுமெங்கள் சைவாபி மானிகளும்
சேர்ந்தமைத்த எங்களது இந்துக்கல் லூரியன்னாய்!
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகவென்னும் நற்குறளைப்
போத வசனமாய்க் கொண்டுநன்கு பொற்பார
இந்துமதம் இன்றமிழ் என்பவற் றோடுநல்ல
விஞ்ஞானம் ஆங்கிலம் என்பவற்றில் நல்லறிவு
மக்களுக்கு ஊட்டி மகத்தான சேவை
புரிந்து வருகின்றாய் புகழ்ந்திட நாடுமுற்றும்!
மற்றும் கலூரிகளிற் கற்றுவெளி யேறுநர்கள்
செல்வருத்தி யோகத்தர் தம்மையே சுற்றத்தார்
என்று வறியவரைக் கைவிட்டு நின்றிடநின்
மக்களோ யார்மாட்டும் அன்புகொண்டு அன்னவர்க்கு
வாழ்க்கையிலே நல்லுதவி செய்துநிற்றல் கண்கூடாம்!
இன்னும்நின் மைந்தர்கள் எம்மொழி எம்மினம்
எம்நாடு எம்மதம் எங்கலாச் சாரமென்னும்
ஆர்வம் மிகக்கொண்டு அனேகபணி செய்கின்றார்!
முன்னையெனைக் கற்பித்த ஆசிரியர் மார்களுள்ளே
நாகலிங்கம் சங்கரப் பிள்ளையரு ணாசலம்
சோமசுந் தரம்குல சிங்கம் சிவப்பிர
காசம் கனகசபை மற்றும் இளையதம்பி
சம்பந்தர் சுப்பிர மணியம் வியாகேசு
வேங்கட ராமன் சபாரத்(தி)ன சிங்கிதுறாப்
பென்போரின் எண்ணம் நினைவுக்கு வந்திடுமே!
இன்னவர்தம் புண்ணியத்தால் எல்லாப்பா டங்களிலும்
போதிய ஞானம் வருவதாயிற் றெனக்கு!
என்னிடம் யாவேனும் நல்லவை காணினவை
நின்னிடம் கற்றதனால் வந்தனவென் றோதிடுவேன்!
ஆகலின் தாயே! நீ மென்மேலும் சீரெய்தி
நீடூழி வாழ்க நிலைத்து!

ஆசிரியர், குரும்பசிட்டி

## திரு. மா. சின்னப்பு அவர்களை நினைத்துப் பாடியது

நேரிசை வெண்பா

சின்னம் சிறுவயதில் செந்தமிழும் ஆங்கிலமும்
மன்னுதெல்லி யூனியன்கல் லூரிதன்னில் — பன்னரிய
பண்பிற் படிப்பித்துப் பல்லோரைச் சீர்செய்தோன்
திண்புகழைப் பாடுதும்யாம் சேர்ந்து!

ஆசிரியர்க் காசிரியன் ஆன்றறிஞன் எங்குரவன்
நேசமுடன் கற்பிக்கும் நீர்மையன் — மாசொரீஇ
நன்னகர மாந்தரினை நாட்டிற் படைத்துதவல்
தன்கடமை யாய்க்கொண் டவன்.

வசைபாடாய் என்னரிய மாணவனே! ஈசன்
இசைபாட வேண்டும்நீ என்றும்! — வசைபாடல்
மற்றோரைத் துன்புறுத்தும்; மக்கடுயர் தீர்த்தலன்றோ
கற்றோர் செயலென்றான் கண்டு.

மூளைத் திறனிருந்தும் முன்னுவசெய் செல்வமில்லா
ஏழைக் குடும்ப இளைஞரினை — வேளையினில்
கண்டுபிடித் தன்னவர்கள் கற்கத் துணைபுரிந்தோன்
தொண்டு புகழ்வாம் துதித்து!

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாக்கால் எனவோதிப் — பற்றுமிக
மாவைக் குமரனுக்கும் தன்னூர்க் கணேசனுக்கும்
சேவைகள் செய்தான் தெரிந்து.

முன்னாள் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர்

## திரு. P. சவிரிமுத்து அவர்களைப் போற்றிப் பாடியது

எண்சீர் ஆசிரிய விருத்தம்

சவிரிமுத்தென் முதியகலை மாணியைப்போற் கல்விநூல்
    ஆசிரிய மாணவர்க்குப் போதிப் பதற்கு
எவருமே இல்லையென விடயமறி மேதையர்கள்
    இன்றுவரை கூறுகின்றார் வியந்தன் னோனை!
அவனியிலே வறிஞருக்கும் ஒடுக்கப்பட் டோர்களுக்கும்
    ஆற்றிடுவன் அரியபல தொண்டிவ் வூர்வாழ்
விவசாய ஏழையர்தம் வெங்காயக் கொள்வனவு
    செயக்கலூரிக் கட்டிடங்கள் தந்தான் நன்றே!

முன்னர் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபராகவும்
பின்னர் பலாலி சேர் பொன். இராமநாதன் கனிஷ்ட பல்கலைக் கழகப்
பிரதமராகவும் திகழ்ந்து விளங்கிய

**திரு. சின்னப்பு கந்தசாமி, B. Sc., Dip - in - Ed.**
**அவர்களுக்குப் பாடி வழங்கிய**

# பிரிவுபசார வாழ்த்துப் பாக்கள்

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இலங்கையின் மூலை யென்று இந்திய தூத ராக
இலங்கிய குமார சாமி ஏத்திடும் வடம ராட்சி
துலங்குசின் னப்ப வள்ளல் தொகுத்தளி கந்த வேளே!
அலங்கல்நாம் அணிந்து மக்கு அளிக்கிறோம் பிரிவு வாழ்த்தே;

ஆயிரத்' தொளாயி ரத்து ஐம்பத்து நாலில் வந்து
ஆயிரத்' தொளாயி ரத்து அறுபத்தெட் டாமாண் டூறாய்
ஆயிரக் கணக்காய் நல்ல ஆசிரி யரைப்ப டைத்துத்
தாயகம் உய்யத் தந்தோய்! சாற்றுதும் நூற்றோர் ஆண்டே!

ஆதியிற் சிறுவர்க் கெல்லாம் ஆரம்பக் கல்வி ஊட்டும்
போதரைப் பயிற்றும் கல்விப் பீடத்தை விசேட பாடப்
போதரைப் பயிற்றும் சீரார் போதனு சாலை யாக
வாதித்து உயர்த்தி வைத்தீர்; மறக்கிலோம் தமிழர் நாமே!

பல்கிடும் வேலை யில்லாப் பட்டதா ரிகளின் வெற்றுப்
பல்கலைக் கழகக் கல்வி பகரேட்டுச் சுரைக்கா யென்று
நல்லகைத் தொழிலும் மற்றும் வணிகமும் நடாத்த நுட்பக்
கல்விகல் கனிஷ்ட சர்வ கலாசாலை பெற்றுத் தந்தீர்!

சாற்றிய இரண்டு கல்விச் சாலையும் தழைக்க நீவிர்
ஆற்றிய தொண்டின் சால்பு அறைந்திடும் பான்மை யாமோ?
போற்றுவ போற்றும் மேலோர் போற்றிநிற் கின்றார் நின்னை
ஈற்றிலே நின்றன் மாண்பு எவருக்கும் புலனு மன்றே!

நின்னரும் மாண வர்க்கு நீர்குரு மட்டு மன்றி
பன்னுதத் துவனு மாகிப் பரிநண்பன் தானு மாகி
அன்னவர் இடரு ருமல் அரும்வழி காட்டி யாகி
நன்னகர் மாந்த ராக்கி நாட்டுக்கு நல்கி னீரே!

பிந்திய தாரம் தன்னை முந்திய பெண்ணிற் பார்க்க
எந்தநற் புருஷன் தானும் இதமாரப் பேணு மாங்கு
சிந்தித்தெக் கணமும் ஆவ செய்யிளம் கலூரிப் பெண்ணை
இந்தநாட் பிரிய நீவிர் எங்ஙனம் இசைந்தீர்? ஐயா!

போற்றரும் உளநூல் வல்லோய்! புகலுமின் பதிலி தற்கு!
சாற்றரும் சான்ருேர் எம்மைத் தலைக்கூடி உவப்ப வாழ்ந்து
ஈற்றிலே பிரிந்தே குங்கால் ஏற்படும் இதய நோவை
மாற்றிட மருந்துண் டாமோ? மாநிலம் அறியச் சொன்மின்!

இந்நாளைய வயாவிளான் மத்திய கல்லூரி அதிபர்

**திரு. அ. இராமசாமி அவர்களை வியந்து பாடியது**

**எண்சீர் ஆசிரிய விருத்தம்**

வயாவிளான் மத்தியகல் லூரிக்கு அதிபராய்
வந்திட்டோர் பாலொவ்வோர் சிறப்புக் கண்டோம்;
வியத்தகுமவ் வியல்பெல்லாம் ஒருங்கமைந்த அதிபனுய்
விளங்குகின்ருர் இந்நாளில் இராம சாமி!
நயப்புறுநல் ஆக்கவன்மை காரியநிர் வாகவாற்றல்
நல்லாசி ரியத்துவமென் சீர்கள் வாய்ந்து
உயர்விக்கின் ருரந்தக் கலாசாலை தனையிந்நாள்!
ஓதிடுவோம் அன்னவர்க்கு வாழ்த்து நன்றே!

கல்விச் சீர்திருத்தங்கள்பற்றி

**மாண்புமிகு சனுதிபதிக்கும் மற்றும் சகாக்களுக்கும் செய்யப்படும் விண்ணப்பம்**

**வெண்பா**

இலவசக் கல்விமுதல் தர்மம்கா நாடாம்
இலங்கையிற்ருன் தோன்றிற்றுத் தாரில் — இலவச
வாய்ப்படைக் கெடுத்தேழை மாணவரைப் பாதிப்ப
ஆய்ந்தகற்றீர் வெள்ளறிக்கை யில்!

வசதிகள் இல்லாத பள்ளிகளிற் கற்போர்
வசதிதுய்க்க *மாகலூரி செல்லலாம் — விசேடப்
பெரியகல் லூரி சிறியவற்றை மேற்பார்க்கும்
புதியமுறை சித்தியாது நன்கு.

தமிழ்பேசு வோர்க்கென்ருேர் சர்வகலா சாலை
அமைக்க வளாகம் இரண்டொதுக்கீர் — சமஷ்டியின்கீழ்
இந்துமதம் இஸ்லாம் தமிழ்மொழி நாகரீகம்
என்ப விருத்திசெய நன்கு!

தரப்படுத்தும் கீழ்முறையைக் கைவிட்டு நாட்டில்
தரமுயர்த்தீர் பிற்போக்கர் கல்வி!— தரப்படுத்தின்
நல்லதரக் கல்விமான்கள் எண்ணிக்கை குன்றலொடு
செல்லுமே கெட்டொழிந்தெம் நாடு.

---

* மாகலூரி— கொத்தணிப் பாடசாலை (Unitary School)

பதின்மூன்று ஆண்டுகள்முன் நின்கட்சி நாட்டில்
*உதிப்பியிளம் சர்வகலா சாலைகளை — மீண்டுமிந்நாள்
மத்திய மட்டநிரு வாகிகளை உண்டாக்கல்
உத்தமமென் றேதிறமின் நன்கு!

விசேடா சிரிய பயிற்சியை நீட்டி
விசேடதரச் சம்பளம் நல்கீர்! — விசேட
பயிற்சி சுதேச மொழிகளுக்கும் நல்கி
உயர்சம் பளமளித்தல் நன்று.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்க்குச் செவ்வன்
தொழில்நுட்பம் ஊட்டலில்லை இந்நாள் — தொழில்நுட்பம்
ஜேர்மனி இங்கிலந்து போன்றவற்றிற் கற்றவரைத்
தேர்மின்நல் லாசிரிய ராய்!

ஆங்கிலம் கல்லூரி மாணவர்க்குக் கற்பிக்க
ஓங்குமறி வாசிரியர் வேண்டும்காண்! — பாங்காக
அன்னவரைச் சர்வகலா சாலையில் உண்டாக்கீர்
நன்கூதி பம்தருவா மென்று!

---

# வித்தியாதரும விஞ்ஞாபனம்

**''நிதிமி குத்தவர் பொற்குவை தாரீர்!**
**நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!**
**அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!**
**ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!**
**மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்**
**வாணி பூசைக் குரியன பேசீர்!**
**எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்**
**இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!''**

— பாரதியார்

**அன்புடையீர்!**

''நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என்கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது: தமிழ்க் கல்வியுஞ் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணம் செய்வித்தலுமே யாம்'' என்னும் நாவலர்பெருமானின் கருத்து சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் இடையறா உழைப்பால் மற்றைய ஊர்களிலெல்லாம் நிறைவேறி வரவும், வயாவிளானாகிய எம்மூரைப் பொறுத்தவரையில் இன்னும் நிறைவேறாமலே இருக்கின்றது. எம்மூரிற் கிறீஸ்தவ பள்ளிக்கூடங்கள் ஒன்றிரண்டன்றி மூன்றிருப்ப

* உதிப்பியிளம் சர்வகலாசாலைகளை—தோற்றுவித்த கனிஷ்ட பல்கலைக்கழகங்களை (Junior University).

வும், சைவவித்தியாசாலை ஒன்றுயினும் இல்லாதிருப்பது சைவ சமயிகட்கெல்லாம் மிகவும் துக்கத்துக்குரிய விஷயமாகும். இக் குறையை நிவிர்த்தி செய்யும்பொருட்டு யாங்கள் எமதூரிற் புறச் சமயத்தை மேன்மேலும் பரவவொட்டாது தடுத்தவரும், ''சுதேச நாட்டியம்'' என்னும் பத்திரிகையை ஸ்தாபித்து அதன்மூலம் சைவத்துக்கும், தமிழுக்குமாக உழைத்தவரும், இப்போதைய சைவ வித்தியாசாலை இயக்கத்துக்கு ஆதியில் வித்திட்டவரும், இன்னும் பல் வழிகளில் எம்மனோரை உயர்த்திவைத்தவருமாகிய காலஞ் சென்ற எங்கள் வரகவி க. வேலுப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக ''வேலுப்பிள்ளை வித்தியாசாலை'' என்னும் பெயரிய *சைவ வித்தியாசாலை யொன்றை எம்மூரில் விரைவில் அமைக்க முயலுகின்றோம். ஆகவே, யாங்கள் துணியும் இப் புண்ணிய கருமம் இனிது நிறைவேற இயன்ற பொருளுதவி புரியுமாறு சைவாபிமானம் வாய்ந்த தமிழன்பர்கள் யாவரையும் மிகவும் தயவாக வேண்டிக் கொள்ளுகின்றோம்.

பணம் அனுப்புவோர், வழக்கறிஞர் வ. இராசநாயகம், வயாவிளான், அச்சுவேலி என்னும் விலாசத்திற்குத் தயவுசெய்து அனுப்புவார்களாக.

வரவு செலவுக் கணக்குகள் யாவும் பின்னர் முறையே அச்சிட்டு வெளியிடப்படும்.

தங்கள் பேருதவியை நாடிநிற்கும்
க. வே. சுப்பிரமணியம்
(தலைவர்)

சி. தங்கசாமி ஐயர்
வ. இராசநாயகம்
(செயலாளர்)

த. சின்னத்துரை
(உபதலைவர்)

செ. சின்னத்துரை
கு. வல்லிபுரம்
(பொருளீட்டுவோர்)

(வயாவிளான் வேலுப்பிள்ளை வித்தியாசாலை அமைப்புச் செயல்புரி மன்றத்தினருக்காக)

வயாவிளான், அச்சுவேலி,
1945ஆம் ஜனவரிமீ 27உ

* இவ் வித்தியாசாலை ஒருவருடகாலத்துக்குள் நிறுவப்பட்டு ஆரம்பத்தில் நன்கு நடைபெற்றது. பின்னர், பொதுமக்களின் அபிமானக்குறைவாலும், பெற்றூர்—ஆசிரியர் சங்க உத்தியோகஸ்தரின் பொருளவாவாலும், கல்விப்பகுதியினரின் மேற்பார்வைக் குறைவாலும் இப்பாடசாலை மிகவும் சீர்குன்றி இப்பகுதிச் சிறுவர் சிறுமியர் கஷ்டப்பட்டு அயற்பள்ளிக்கூடங்களுக்குச் செல்லுகின்றனர். ஆகவே, ஊரன்பர்கள் அனைவரும் ஷ வித்தியாசாலைக்கு இன்னும் 2 வகுப்பறைகளும் 3 ஆசிரியர்களும் பெறத் தொடர்புடைய எங்கள் இரு நாடாள்மன்றப் பிரதிநிதிகள் மூலம் ஆவன செய்விப்பதுடன், தங்கள் பிள்ளைகளையெல்லாம் மேற்படி கல்விச் சாலைக்கு அனுப்புவார்களாக!

வயாவிளான்—பலாலி
சைவ பரிபாலன சபையினர்

வயாவிளான்,
1-3-82.

ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலையில்
மேற்காணும் கல்லடிவேள் மாணுக்கன்

**அமரர், சிவத்திரு. சி. நல்லதம்பி அவர்கட்கோர்**

# ஞாபகச் சின்னம்

**நேரிசை வெண்பா**

நல்லசெய்யுள் நல்லவுரை நல்லதமிழ்ப் பத்திரிகை
நல்லறிவு நல்லதொண்டு நன்குசெய்வோன் — இல்லவர்க்கு
நல்லமருந் தோடரிசி நல்குநல்ல தம்பிவரன்
நல்லவர்க்குள் நல்லவனென் றோது.

**நம்மூர் மெய்யன்பர்காள்!**

முன்னொருகால் மேற்காணும் வித்தியாசாலையில் நல்லாசிரியராகவும், பின்னர் எங்கள் ''சுதேசநாட்டிய''ப் பத்திரிகாசிரியராகவும், இன்றமிழ்ப் புலவராகவும், இலவச வைத்திய சீலராகவும், சிறந்த திருத்தொண்டனுகவும் திகழ்ந்து விளங்கிய சிவத்திரு. சி. நல்லதம்பி அவர்கட்கு நல்லதோர் ஞாபகார்த்தம் அமைக்க வேண்டுமென நாங்கள் பன்முறை ஆலோசித்தும், அது செயலளவில் இதுவரை பரிணமிக்காமை கவலைக்குரியதாகும். இப்போது மேற்படி வித்தியாசாலைப் பெற்றூர் ஆசிரியர் சங்க உத்தியோகத்தர் முன்னர் எங்கட்கு வாக்களித்த வண்ணம் ஆதாயம் கருதாது, அரசினர் தரும் 20,000 ரூபாவைக்கொண்டு ஒப்பந்தத்திற் சொல்லப்படும் இரண்டு அறைகளையும் அமைத்துவிட்டு, மிஞ்சும் பணத்தைக் கொண்டு மூன்றும் அறையிற் செய்யக்கூடிய வேலையைச் செய்ய மறுக்கின்றனர். ஆகவே, ஷ 2 அறைகளும் கட்டப்படுமிடம் கல்நிறைந்த காணியாதலால், அவர்கள் எளிதில் அடையக் கூடிய ஆதாயப் பணம் 3000 ரூபாவையும் நாங்கள் பெற்று, பொதுநலம் போற்றும் புருஷோத்தமரிடம் பணமாகவும், பனையாகவும், பாலைமரமாகவும், மற்றும் சிரமதானமாகவும் ஏறக்குறைய 5,200 ரூபா சேர்த்து ஷ கல்விச்சாலைக்கு அத்தியாவசியம் தேவையான குறித்த மூன்று அறைகளையும் அமைத்து ''ஸ்ரீ நல்லதம்பி ஞாபகார்த்தக் கட்டிடம்''எனப் பெயர் சூட்டிக் குறித்த பெரியாரின் ஞாபகத்தைக் கொண்டாட விரும்புகின்றோம்.

ஆகவே, இதுவிடயமாய் ஷ வித்தியாசாலையில், அடுத்து வரும் பூரணைத் தினமாகிய ஞாயிற்றுக்கிழமை (15 – 10 – 78) பிற்பகல் 4–30 மணியளவில், எங்கள் நாடாளுமன்றக் கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் பகிரங்கக் கூட்டத்துக்குச் சமுகமளிக்கும்படியும், மேற்கூறிய நற்கருமம் இனிது நிறைவேறத் தங்களால் இயன்ற பொரு

ளுதவி புரியுமாறும் தங்களையெல்லாம் இதனுல் தயவாக வேண்டுகின்ருேம்.

இங்ஙனம்

தங்கள் சேவைக்குரிய

**பூ. இளையதம்பி** (முன்னுளைய வாலிபர் சங்கத் தலைவர்)
**செ. சின்னத்துரை** (முன்னுளைய ஷி வாலிபர் சங்கக் காரியதரிசி)
**சி. தாயுமானவர்** (ஸ்ரீதம்பையா தருமப்பணிச் சபைத் தலைவர்)
**வ. இராசநாயகம்** (முன்னுளைய ஷி வித்தியாசாலை அமைப்புக் காரியதரிசியும், வயாவிளான்—பலாலி சைவபரிபாலன சபைத்தலைவரும்)
(வயாவிளான்-பலாலி தெற்குப் பொதுமக்களுக்காக)

குறிப்பு 1: ஷி பெற்ருர் - ஆசிரியர் சங்க உத்தியோகஸ்தர்கள் குறித்த 3 அறைகளையும் நாங்கள் விரும்பிய வண்ணம் அமைக்காமல், கோப்பாய் வட்டாரக்கல்விப் பரிசோதகரின் ஒத்துழைப்புடன் குறித்த 2 அறைகளுக்கும் மேற்சொல்லிய 20,000 ரூபாவுடன் இன்னும் 10,000 ரூபா மேலதிகமாகப் பெற்றுள்ளமையும் குறித்த கல்விப் பரிசோதகர் 4 வருடகாலமாகியும் குறித்த 2 அறைகளைத்தானும் பூர்த்தியாக்குவித்து ஷி வித்தியாசாலையின் அத்தியாவசிய தேவைக்குப் பயன்படுத்துவிக்காது வாளாவிருப்பதும் மிகக்கண்டனத்துக்கும் விசனத்துக்குமுரிய விடயங்களாகும்.

குறிப்பு 2: ஷி வித்தியாசாலையில் உள்ள ஆறு வகுப்புகளுக்கும் புதிதாகக் கட்டப்பட்ட 2 அறைகளையும் உள்ளிட்டு 4 வகுப்பறைகள் மாத்திரமே உண்டென்பதும், அதனுல் இப்பகுதியிலுள்ள சிறுவர் சிறுமிகள் ரோ. க. தமிழ்ப் பாடசாலைக்குச் சிரமப்பட்டுச் செல்கின்றனரென்பதும், எனவே ஷி வித்தியாசாலைக்கு இன்னும் இரண்டு வகுப்பறைகள் அத்தியாவசியம் தேவையென்பதும் அபிமானிகளின்(அபிமானிகள் இருந்தால்) கவனத்தை ஈர்க்குக.

*1-3-82* வ. இராசநாயகம்

---

# வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வரலாறு

வழக்கறிஞர் திரு. வ. இராசநாயகம், ஜே. பி.

நமது பகுதியிற் செவ்விய கல்லூரியொன்று இல்லாத பெருங் குறையை நிவிர்த்தி செய்யும்பொருட்டு, வயாவிளானிலும், அதன் அயலூரர்களிலும் வாழும் மக்கள் 1945ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலையில் பகிரங்கக்கூட்டமொன்று கூடி, பலாலியில் உள்ள இராணுவக் கட்டிடங்களைப் பயன்படுத்தி மத்திய கல்லூரியொன்று அமைத்துத்தரும்வண்ணம் அரசினரை வேண்டும் தீர்மான மொன்று நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தைச் செயலிற்கொணர அமைப்புக் குழுவொன்றும் தெரிந்தனர். அக்குழு அக்காலத்திய அரசாங்கசபை அங்கத்தவர் கலாநிதி சு. நடேசன், B. A., B. L., F. R. E. S. அவர்களைப் போஷகராகவும், மயிலிட்டிக் கிராம

சங்கத் தலைவர், 'ஈழகேசரி' திரு. நா. பொன்னையா, J. P. அவர்களைத் தலைவராகவும், வழக்கறிஞர் திரு. வ. இராசநாயகம் அவர்களைச் செயலாளராகவும், ஆசிரியர் திரு. த. சின்னத்துரை அவர்களைத் தனாதிகாரியாகவும், திருவாளர்கள் மா. சின்னப்பு, மு. சபாரத்தினம், சீ. தம்பிப்பிள்ளை, க. பொன்னம்பலம், சி. நாகலிங்கம், த. சீவரத்தினம், இ. சின்னத்தம்பி, வ. இராமசாமி, மு. காசிப்பிள்ளை, செ. சிவப்பிரகாசம், அ. பொன்னையா, த. சாமிநாதபிள்ளை, ஆ. வயிரவப்பிள்ளை, க. வே. சுப்பிரமணியம், மு. இராசகிருஷ்ணர், க. காங்கேசு, மு. செல்லையா என்போரையும் பிரம்மஸ்ரீ சி. தங்கசாமிஐயர் அவர்களையும் மற்றும் நிருவாகசபை உறுப்பினராகவும் கொண்டு இயங்கி, மேற்படி இராணுவக் கட்டிடங்கள், தக்ககாலத்தில் கிடையாதென்பதை அறிந்ததும், மேற்படி திரு. நா. பொன்னையா அவர்களின் பரந்த, சிறந்த முன்மாதிரியான மீனாட்சிகமத்தைப் பயன்படுத்தி ஆங்கு தேவையான கல்லூரியை அமைத்துத் தரும்படி அரசாங்க சபை அங்கத்தவர் மூலம் அரசினரை வேண்டிற்று. அத்தருணம் திரு. நா. பொன்னையா அவர்கள் தமது சொந்தச் செலவில் மேற்கூறிய கல்விச்சாலைக்கு இரு தற்காலிக கட்டிடங்கள் அமைக்கவும், தளபாடங்கள் வாங்கிக்கொடுக்கவும் முன்வந்தனர். இப் பரோபகார நன்கொடையை எடுத்துக் காட்டி மேற்படி கல்லூரியை ஆங்கிலக் கல்வியிற் பின்தங்கிய குறித்த பகுதியிலேயே நிறுவவேண்டுமென மேற்படி கல்விப்பெரியார் உயர்திரு. சு. நடேசன் அவர்கள் அரசினரை வற்புறுத்தி, தாம் விரும்பியவண்ணம் அதனை 1946ஆம் ஆண்டு தை மாதம் 3ஆம் திகதி நமது இலவசக் கல்வித் தந்தையார் கலாநிதி C. W. W. கன்னங்கரா அவர்களைக் கொண்டு மேற்படி மீனாட்சிகமத்தில் திறப்பித்துத் தந்தனர்.

பின்னர் நஷ்ட ஈட்டுப் பிரச்சினை காரணமாக இக்கல்லூரியைப் பலாலி ஆசிரியர் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள மேலதிக இராணுவக் கட்டிடங்களுக்கு மாற்ற அரசினர் எண்ணினர். அதன் விளைவாகப் பொதுமக்களிடையே இடப்பிரச்சினை உண்டாகி, மேற்படி கல்லூரிக்குச் சிறந்த மேல்மாடிக் கட்டிடமொன்றும், செவ்விய விஞ்ஞான கூடமொன்றும், மற்றும் வகுப்பறைகளும் அமைப்பதற்கென அரசினரால் ஒதுக்கப்பட்ட பெருந்தொகைப் பணம் யாழ் மாவட்டத்திலுள்ள மற்றும் மத்திய கல்லூரிகளுக்கு மாற்றப்படலாயிற்று. பின்னர் அக்காலத்திய கல்விமந்திரி நுகவலா அவர்கள் இரு இடங்களையும் பார்த்து, சாட்சியம் கூற முன்வந்த கோஷ்டிகளைத் தீர விசாரித்து, இப்போதைய இடம் கல்விக்குகந்த சாந்தமான வெளியில் இருப்பதால் இவ்விடத்திலேயே இக்கல்லூரி தொடர்ந்தும் இருக்க வேண்டுமென முடிவு செய்தனர். மேற் சொல்லிய இடப்பிரச்சினை ஈற்றில் சுமுகமாக முடிந்த போதிலும், மேற்படி விஞ்ஞானகூடப் பிரச்சினையும், மற்றும் தேவையான கட்டிடப் பிரச்சினையும் கால் நூற்றாண்டு சென்றும் இன்னும் சரிவரத் தீர்ந்தபாடில்லை.

குறிப்பு:- மேலேயுள்ளது *15-9-72* இல் ஷை மத்திய மகா வித்தியாலய வெள்ளி விழா மலரில் வெளிவந்த எமது விடயத்தின் ஆரம்ப பாகமாகும். போதிய இடமின்மையால் மீதிப்பாகம் வெளியிடப்படாமல் கைவிடப்படுகின்றது.

வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரியில்
அதன் அயலூரவர்கள் அனைவரும் ஒன்றுகூடித்

**தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் யாவரையும் வரவேற்றபோது**

**வயாவிளான் – பலாலி சமூக சேவா சங்கத்தினர்**

**கோப்பாய், உடுவில், காங்கேசன்துறைப் பிரதிநிதிகளுக்கு**

மனமுவந்து வாசித்து வழங்கிய

# வரவேற்புப் பத்திரம்

அன்பார்ந்த ஐயன்மீர் !

இன்றைய தினமே இக் கல்லூரியில் தமிழரசுக் கட்சிக் கொண்டாட்டமொன்று முதன்முதலாக நிகழுகின்றதாதலால், வயாவிளான் – பலாலி சமூக சேவா சங்கத்தினராகிய நாங்கள் தங்களை மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்பதுடன், சமூகத் தொண்டர் என்ற முறையில், இக்கல்லூரியிலுள்ள குறைபாடுகளையெல்லாம் தங்கள் திவ்விய கரிசனைக்கு எடுத்துக்காட்ட முன்வருகின்றோம்.

இக் கலாசாலை ஏழை மக்களுக்கு இலவசக் கல்வி அளிக்க, அரசினரால் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு என்னும் இரு காரியாதிகாரிகளின் பிரிவுகளையும் கொண்ட முன்னைய நாட் காங்கேசன்துறைத் தொகுதிக்கென ஆரம்பத்தில் நிறுவப்பட்டு, பின்னர் காங்கேசன்துறைத் தொகுதிக்குரியதாக நடைமுறையில் கருதப்பட்டு, இப்பொழுது பூமிசாஸ்திரப்படி கோப்பாய்த் தொகுதியில் இருக்கின்றது. தொகுதி மாற்றம் எங்ஙனம் இருந்தபொழுதிலும், இக் கல்விச்சாலை காங்கேசன்துறை, கோப்பாய், உடுவில் என்னும் மூன்று தொகுதிகளில் (அஃதாவது, ஈவினை, புன்னாலைக் கட்டுவன், அச்செழு, நவக்கிரி, வளலாய், இடைக்காடு, வயாவிளான், பலாலி, மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி தெற்கு, கட்டுவன், குப்பிளான், ஏழாலை, குரும்பசிட்டி முதலிய கிராமங்களில்) மற்றைய கல்லூரிகளில் விதிக்கப்படும் கூடுதலான விஞ்ஞானக் கட்டணம், நூல்நிலையக் கட்டணம், விளையாட்டுக் கட்டணம் முதலிய கட்டணங்களைச் செவ்வனே செலுத்த இயலாத ஏழைப் பிள்ளைகள் யாவரும் படிக்கின்ற பாடசாலை என்பது நன்கு கவனிக்கற்பாலதொன்றும்.

இக் கல்லூரி இற்றைக்கு ஏறக்குறைய இருபது வருட காலத்துக்கு முன்னே ஸ்தாபிக்கப்பட்டபோதிலும், இதுகாலைவரை இதற்கு முறையான விஞ்ஞான கூடமொன்று இல்லாமையால், இங்கு பயிலும் மாணவ மாணவிகளின் கல்வி பெரிதும் பாதிக்கப்

படுகின்றது. இப்போதைய மாணவருட் பலர் பௌதீகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் என்னும் விஞ்ஞான சாஸ்திரங்களைக் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குக் கற்கின்றார்களெனினும், இப்போதுள்ள விஞ்ஞான அறையிற் காணப்படும் சொற்ப விஞ்ஞான உபகரணங்களையும், மற்றும் விஞ்ஞானப் பொருட்களையும் கொண்டு போதியளவு செய்கைப் பயிற்சி அடைய இயலாதவர்களாய் இருக்கின்றனர். எனவே, பின்னுள் உயர்தர விஞ்ஞானக் கல்வி கற்க இந்நாள் வேண்டிய அத்திவார அறிவு அடைய இயலாது இவர்கள் மிகவும் அல்லற்படுகின்றனர். இது காரணமாக, இக் கல்லூரியிற் கல்வி கற்கும் பிள்ளைகள் சர்வகலாசாலையில் இயற்கைவிஞ்ஞானம் கற்கவோ, மேலைத்தேய வைத்தியம் கற்கவோ, அல்லது பொறியியல் கற்கவோ முடியாதவர்களாகின்றனர். ஆகவே, மற்றைய கல்லூரிகளைப்போலப் பௌதீகப் பகுதி, இரசாயனப்பகுதி, தாவரப்பகுதி, விலங்கியற் பகுதி என்னும் நான்கினையும் அடக்கிய செவ்விய விஞ்ஞான கூடமொன்று அதிவிரைவில் அமைப்பித்துத் தரும்படி தங்களையெல்லாம் தயவாக வேண்டுகின்றோம்.

அதுமாத்திரமன்றி, இப்போதுள்ள கட்டிடங்கள் போதாவாகலின், மாணவர்களுக்கு இன்னும் பத்து வகுப்பறைகளும், பத்து மலகூடங்களும், நான்கு சலகூடங்களும், பிரதம ஆசிரியருக்கு ஓர் இல்லமும், மாணவர்களுள் ஆண்பாலாருக்கு ஒரு சீரிய விடுதிச்சாலையும், இருபாலாருக்கும் செவ்விய நூல் நிலையம் ஒன்றும், வணிக வகுப்புகளுக்குத் தேவையான தட்டெழுத்துப் பொறிகளுள்ள ஒரு பெரும் வகுப்பறையும், புவியியல் கற்பதற்கு நல்லதோர் புவியியல் ஆய்வு கூடமும், மோட்டோர் நுண்தொழில், மின்சார நுண்தொழில் முதலிய தொழிற் கலைகள் பயிலத் தேவையான சகல தொழிற்சாலைகளும் காலம் தாழ்த்தாது அமைப்பித்துத் தரும்படியும் தங்களை அன்பார வேண்டுகின்றோம்.

இறுதியாக, உயர்தரக் கல்விப் பொதுத் தராதரப்பத்திர வகுப்பு வைத்துக் கலையியல், விஞ்ஞானவியல் என்னும் இரண்டும் கற்பிக்கத் தேவையான தகைமையும், திறமையும் வாய்ந்த நல்லாசிரியர்கள் போதியளவு இப்பொழுது இந்தக் கல்லூரியில் இல்லையென்பதைத் தங்களுக்கு எடுத்துக் கூறி, ஆங்கிலம், சரித்திரம், புவியியல், அரசியல் முதலிய கலையியற் பாடங்கள் கற்பிக்க ஐந்து பீ. ஏ. (இலங்கைப்) பட்டதாரிகளையும் நானாவித விஞ்ஞானமும் கற்பிக்க ஐந்து பீ. எஸ் சீ. (இலங்கைப்) பட்டதாரிகளையும் இயன்ற விரைவில் நியமிப்பித்துத் தரும்படி, மேற்

கூறிய ஏழைப் பிள்ளைகளின் பேரில், தங்களனைவரையும் மிகவும் விநயத்துடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் சேவைக்குரிய
வ. இராசநாயகம் *(தலைவர்)*
சி. சுப்பிரமணியம் *(காரியதரிசி)*
ச. பொன்னுத்துரை *(தனாதிகாரி)*
(வயாவிளான்-பலாலி சமூக சேவா சங்கத்தினருக்காக)

வயாவிளான்
*26-5-65*

## வயாவிளான் மத்திய மகா வித்தியாலயப் பெற்றார் – ஆசிரிய சங்க விசேட பொதுக் கூட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மற்றும் மத்திய மகா வித்தியாலயங்களில் செவ்விய விஞ்ஞானகூட வசதிகளும், விஞ்ஞானம், கலை, வணிகம் என்னும் பகுதிகளில் கல்விப் பொதுத்தர உயர்தர வகுப்புகளும், அவ்வகுப்புக்களுக்குப் படிப்பிக்கக்கூடிய போதியளவு பட்டதாரிகளும் இருப்ப, எங்கள் மத்திய கல்லூரி சென்ற இருபத்து நான்கு வருடங்களாக அத்தகைய வசதிகள் இல்லாதிருப்பது மிகவும் கவலைக்கு இடமாகும். இக் குறைபாட்டால் எங்கள் மாணவ மாணவிகள் இயற்கை விஞ்ஞானம், வைத்தியம், பொறியியல், விவசாயம் முதலிய துறைகளில் உயர்தரக் கல்வி கற்று முன்னேற முடியாமல் இருக்கின்றது. ஆகலின், இப் பெருங்குறைகளை அரசினருக்கு எடுத்துக்காட்டி வேண்டிய நிவாரணம் விரைவிற் பெறும் நோக்கத்துடன், எங்கள் கோப்பாய், காங்கேசன்துறைப் பராளுமன்ற உறுப்பினரை அழைத்து, எங்கள் சங்கம் இம்மாதம் *21*ஆம் திகதி *(21-2-70)* சனிக்கிழமை மு.ப. *9-30* மணியளவில் மேற்படி கல்லூரி மண்டபத்தில், விசேட பொதுக் கூட்டமொன்று நடாத்த ஒழுங்கு செய்துள்ளது. ஆகவே, அக் கூட்டத்துக்குக் காலக்கிரமம் தவறாது சமுகம் தருமாறும், மேற்கூறிய உயர்தர வகுப்புகளுக்கு அநேக பிள்ளைகளைச் சேர்த்துத் தருமாறும் தங்களையெல்லாம் மிகவும் தயவாக வேண்டுகிறோம்.

இங்ஙனம்
தங்கள் ஒத்துழைப்பை நாடும்

E. J. V. ஹென்ஸ்மன்
*தலைவர்*

வ. இராசநாயகம்
கு. பத்மநாதன்
*இணைக்காரியதரிசிகள்*

*12-2-70*

சகல பகுதியினரும் சமத்துவம் அனுபவித்துவரும்

# வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

**சகோதர சகோதரிகளே!**

மேற்படி கல்லூரி பல கிராமங்களுக்கு மத்தியில், எவ்வூரவரும் தமதென ஆதிக்கம் செலுத்த முடியாத, பொதுவான, கல்விக்கு உகந்த, அமைதிவாய்ந்த சிறந்த வெளியில், 1946ஆம் ஆண்டில் இலவசக் கல்வியின் தந்தையாராகிய முன்னுட் கல்வி மந்திரி கனம் **C. W. W.** கன்னங்கரா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நன்னுட் தொட்டு இதுகாலேவரை ஏறக்குறைய மூன்றுமைல் சுற்றளவுக்கு நல்ல வித்தியாசேவை புரிந்துவந்திருக்கின்றது. அது நிறுவப்பட்டபோது, பொது நலம் கருதிப் பரந்த மனப்பான்மையுடன் அயற் கிராமங்களிலுள்ள பாடசாலேகளே யெல்லாம் ஆரம்ப பாடசாலேகளாக்கி, ஆறும் வகுப்பிலும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் கற்கும் மாணவர்களே யெல்லாம் அவ்வயற் பாடசாலேயினர் மேற்கூறிய மத்திய கல்லூரிக்கு அனுப்பலாயினர்.

இப்போது, தப்பிதமான போலிக் கிராமாபிமானம் அயலூர் மக்களிடையே ஏற்பட்டு ஒவ்வோர் ஊர்மக்களும் தத்தம் கிராமங்களில் மகா வித்தியாலயங்கள் உண்டுபண்ண முயல்கின்றனர் எனச் சொல்லப்படுகின்றது. இவ்வொடுங்கிய மனப்பான்மை காலகெதியில் எமது பகுதி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைப் பாதிக்குமென்பது நுண்மாணுழைபுலமுள்ள பொது மக்கள் யாவருக்கும் இனிது புலனுகும். முதலாவதாக நாடு முழுவதிலும் ஏற்படும் கல்விச் செலவைக் குறைக்க விழையும் இப்போதைய அரசாங்கம் போதிய கல்வி வசதிகள் உண்டென அபிப்பிராயப்படும் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊருக்கூர் உயர்தர மகா வித்தியாலயம் உண்டுபண்ணி அவற்றை நன்கு நடாத்துமெனச் சிறிதும் எண்ண இடமில்லே. இரண்டாவதாக, இப்போது மேற்படி கல்லூரியில் உள்ள கலே, விஞ்ஞானம், வர்த்தகம், விவசாயம், நெசவு தொழில், தச்சுவேலே, உலோகவேலே முதலியவெல்லாம் கற்கக்கூடிய காணி வசதி, கட்டிட வசதி, விஞ்ஞானகூட வசதி, உபகரணவசதி, தொழிற்சாலேவசதி, விசேஷ பாட ஆசிரியர் வசதி என்பவற்றை ஏனைய பள்ளிக்கூடங்களிலும் உண்டுபண்ணுதல் எக்காலத்திலும் இயலாத காரியமாகும். மூன்ருவதாக, விஷயம் விளங்கிய ஒருவர் தனது பாடசாலேக்கு முன்னே இருக்கும் குறைந்த தரப் பாடசாலேயொன்றைத் காட்டிலும் நியாயமான தூரத்திலிருக்கும் முதலாந்தர வித்தியாலயத்தையே மனமார விரும்புவர். பொதுவாக ஆசிரியர்களும் மற்றும் உத்தியோகஸ்தர்களும் தத்தம் பிள்ளேகளே எந்தெந்தக் கல்விச் சாலேகளுக்கு அனுப்புகின்றனரென்பதை நாம் நன்கு கூர்ந்து கவனிக்கின், இவ்வுண்மை சரிவரப் புலப்படும்.

ஆகவே, மேற்சொல்லிய மத்திய கல்லூரியின் சேவைப் பாகத்திலுள்ள பெற்ரேர்களையும் பாதுகாவலர்களையும் தங்கள் பிள்ளைகளையெல்லாம் தரம்குறைந்த பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி, அப் பிள்ளைகளின் கல்வியபிவிருத்தியைப் பாழாக்காது, மேற்படி கல்லூரியில் 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம் வகுப்புகளிற் சேர்ந்து கற்க அனுப்பும் வண்ணம் தயவாக இதனல் வேண்டுகின்ரேம்.

இங்ஙனம்

தங்கள் சேவைக்குரிய

P. சபாரத்தினம் (தலைவர்)
சீ. அப்பாத்துரை (உப தலைவர்)
சி. சிவஞானம் (உப தலைவர்)
வ. இராசநாயகம் (இணைக்காரியதரிசி)
சி. தங்கவேல் (இணைக்காரியதரிசி)
சி. கனகசுந்தரம் (தனுதிகாரி)

(வயாவிளான் அரசினர் மத்திய மகா வித்தியாலயப் பெற்ரேர் ஆசிரிய சங்கத்துக்காக)

வயாவிளான்,
*10–12–71*

---

# குறள் வெண்பாக்கள் சில

## கடவுள் நிர்ணயம்

1. வெள்ளத்தைக் கண்டுமழை நிர்ணயித்தல் போலுலகை
   உள்ளியனு மானி இறை.
2. அண்டத்துக் கோள்கள் அமைப்பும் ஒழுக்கமும்
   உண்டென்னும் கர்த்தா எமக்கு.
3. உடலெனுமெம் ஏந்திர உள்ளுறுப்பை ஆய்வோர்
   படைத்தோனை ஓர்வர் வியந்து.
4. காலவிட வெல்லைகட பத்தரற்பு தச்செயல்கள்
   சாலவிறை காட்டிநிற்கும் சான்று.
5. முற்றறிவில் ஆன்மா நியாயவொளி கொண்டெல்லாம்
   உற்றறியா தீசனின்றி ஓர்.

## கடவுள் வழிபாடு

1. தேவனுண்மை ஏற்போர் அவன்சர்வ வல்லமையை
   யாவிலுமே காண்பர் இனிது.
2. யாவும் செயவல்லான் எங்குறையும் தீர்ப்பனெனத்
   தேவனுக்குச் செய்வார் செபம்.
3. வேண்டுவார் வேண்டுவன ஈவான் எனக்கண்டு
   வேண்டுவர்மெய் யின்பம் விழைந்து.
4. பேரின்பம் நாடிடுவோர் பேணுவார் தர்மநெறி
   பாரிற் பவவினைகள் விட்டு.
5. ஈசனடி சேர்தலே எம்பிறப்பின் நோக்கமெனப்
   பேசுமெல்லா மெய்ம்மதமும் சேர்ந்து.

இவ்வாண்டு நூற்றுண்டுவிழா கொண்டாடப்படும்

## மகா தேசீய கவி சுப்பிரமணிய பாரதியாரைப் போற்றிப் பாடியது

கலித்துறை

தேசீய இனமொன்றின் இதயத்தே
உணர்ச்சிபொங்கச் செய்திடுதல்
பேசரிய தொண்டாகு மெனத்திக்கின்
செனும்மேதை செப்புகின்றார்!
தேசமெங்கும் சுதந்திரநல் உணர்ச்சியொடு
மொழியார்வம் தோற்றுவித்தோன்
தேசீய கவிசுப்ர மணியபா
ரதியிதற்கோர் இலக்கியமே!

## ஈழத்து இருபெரும் புலவர்கள்

கலித்துறை

இருபதாம் நூற்றுண்டு ஈழத்துப்
புலவர்கள் இருவருள்ளார்
அருட்பாக்கள் பாடவல்ல சோமசுந்த்ரக்
கவியவருள் ஒருவராவர்
அருங்கருத்துக் கண்டனப்பாக் கல்லடிவேற்
பிள்ளைமற் றவரென்று
திருநாவுக் கரசென்னும் சட்டறிஞன்
என்நண்பன் செப்புவானே!

நேரிசை வெண்பா

செந்தமிழ்த் தீஞ்சுவையும் செம்பொருளும் சால்சோம
சுந்தரனுர் பாக்களெல்லாம் போற்றரிய — நந்தமிழர்
யார்க்கும் விளங்கும் இலேசான இன்னடையில்
பாக்கள் புனைவார் அவர்.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

கண்டனத்திற் கைதேர்ந்த காள மேகம்
கருதுதமிழ்க் கன்னிகைமோ கத்தால் ஈழ
மண்டலத்தில் வயவையென்னும் சிற்றூர் தன்னில்
வந்துதித்தான் எனக்கவிகள் ஏங்கி நிற்கத் .
தண்டமிழில் இடிகுமுற மின்னல் பாயச்
சரசரென வசைமாரி பொழிந்து நிற்கும்
வண்டமிழ்வேற் பிள்ளையென்னும் கவிஞா! நின்னை
மறந்திடுமோ? தமிழுலகம் மறவா தன்றே!

வருத்தலைவிளான்

## வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையரைப் புகழ்ந்து பாடியது

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அகத்திய முனிவர் போல அந்தணர் குலத்திற் தோன்றி
அகத்திய இருடி யொப்பக் குறுகிய உருவம் வாய்ந்து
அகத்திய அறிஞர் நேர இலக்கண அறிவு சான்று
அகத்திய முனியே வந்தார் எனக்கணே சையர் வந்தார்!

அன்னவன் மகிமை தன்னை அறிகிலா ஈழ நாட்டார்
பன்னுதொல் காப்பி யத்துச் சூத்திர மொன்றி னுக்கு
உன்னரும் உரைசெய் தற்காய் வித்துவான் பட்டம் நன்கு
மன்னுநம் மதுரைச் சங்கம் வழங்கிய பின்தான் ஓர்ந்தார்.

தமிழ்ப் பேரறிஞரும்

உலகப் பிரசித்திபெற்ற சொற்கலைப் புலவருமாகிய

## நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் ஞாபகார்த்தப் பாக்கள்

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

முன்னுளில் அகத்தியனும் முனிவன் எங்கள்
மொழிவிளங்க இலக்கணம்நன் கமைத்து வைத்தான்
பின்னுளில் பவணந்தி முனிவன் போன்றோர்
பெட்புமிகு நன்னூல்கள் யாத்துச் சென்றார்
எந்நாளி லாயினுந்தான் இணைகா ணுத
இன்றமிழ்ச்சொற் பிறப்பியல கராதி தன்னை
இந்நாளில் எமக்குதவிச் சென்றான் நல்லூர்
ஞானப்ர காசனெனும் முனிவன் தானே!

பன்மொழியும் படித்தறிந்து பதங்கள் ஆய்ந்து
பாரிலுள்ள பாஷைபல வற்று ளெல்லாம்
தொன்மொழியாய்த் துலங்குவது தமிழே என்றும்
சொல்லரிய வடமொழியிற் தானும் எங்கள்
தென்மொழியே சிறப்புடைய தென்றும் கூறித்
திருட்டாந்த தாட்டாந்தம் எடுத்துக் காட்டும்
நன்மொழிதேர் ஞானப்ர காசன் தன்னை
நாமென்றும் ஒருசிறிதும் மறக்கி லோமே!

பேரறிஞன் மதநிபுணன் தருக்க வல்லோன்
பிரசங்க மாரியெழுத் தாளர் சிங்கம்
கூரறிவு நுதிகொண்டு பண்டைச் செய்தி
குற்றமற ஆய்ந்துரைக்கும் குணவான் மேதை
ஊரறிய உலகறிய ஒடுக்கப் பட்டோர்
உயர்வுகண்டு உளம்மகிழ்வோன் இன்னோன் சீலம்
ஆரறிவார் எனவெவனும் கேட்பா னாகில்
அகிலமெலாம் அறியுமென அறைகு வேனே!

குறிப்பு: இவை 1957ஆம் ஆண்டு ஜனவரி மீ ''ஈழகேசரி''யிலும், ''சத்திய வேத பாதுகாவல''னிலும் வெளிவந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

**கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களைப் பார்த்துப் பாடியது**

தமிழர்சால் பென்னுநல்ல ஆராய்ச்சி நூலைத்
தமிழர்க்குத் தந்திட்ட சான்றோய்! — தமிழர்க்குப்
பல்கலைப் பீடத் துணைவேந்தாம் நின்னுளில்
ஒல்லுவவெல் லாம்செய்மின் ஓர்ந்து!

தமது நண்பன்

**பண்டிதர் திரு. சோ. இளமுருகனார் அவர்கள் இயற்றிய ஈழத்துச் சிதம்பர புராணத்தை நயந்து பாடியது**

**நேரிசை வெண்பா**

புலவனின் மைந்தன் புலவனே என்னும்
உலகமக்கள் கூற்றுண்மை யாக—உலகிலொளிர்
ஈழச் சிதம்பர மான்மியம்சொல் நின்புராணம்
ஆழிநிகர் அர்த்தம் உடைத்து.

மேற்காணும் பண்டிதரின் சகோதரனும்,
தமது அதிப்பிரிய நண்பனும், சிறந்த தமிழ்ப் புலவனும்,
கலைமாணியும் ஆகிய

**திரு. சோ. நடராசா அவர்களைப் பார்த்துப் பாடியது**

**ஆறுசீர் ஆசிரிய விருத்தம்**

இந்துக்கல் லூரி தந்த இன்றமிழ்ப் புலவோய்! நின்றன்
செந்தமிழ்ப் பாக்கள் செவ்வன் சுவைத்திடும்! நீவிர் ஓர்நாள்
தந்திடும் மேக தூதம் என்னுநூல் ஒன்றே போதும்
செந்தமிழ் நாடு முற்றும் நின்புகழ் தெரிக்க நன்றே!

சிறந்த தமிழறிஞனும், தொன்மை ஆராய்ச்சி வல்லுநனும்,
தமது நீண்டகால அன்பனும் ஆகிய

**முதலியார் குல. சபாநாதன் அவர்களை**
**விளித்துப் பாடியது**

**கட்டளைக்கலித்துறை**

புலவர் சரித்திரம் பொற்பார யாத்திட்ட மூதறிஞ!
புலமையை மெச்சிச் ஸ்ரீலங்கா என்னுநற் சஞ்சிகையில்
உலகினர்க் கென்பாக்கள் தம்மை வெளியிட்ட உத்தமனே!
அலகில் ஒளியினுன் நின்பிணி போக்கிட வேண்டுதுமே!

**கலித்துறை**

இலங்கையொளிர் புராதன ஆலயங்கள் என்னுநன்னூல் ஆசிரிய!
இலங்கையிற் பேரின்ப ஒளிகாலும் நமதுகதிர் காமமதை
உலகினிலே மீண்டுமெங்கள் இந்துக்க ளுக்காக்க வரலாற்று
நலங்களெலாம் நன்கொளிர ஒருநன்னூல் நனிவிரைவில் எழுதுவீரே!

முன்னுள் யாழ்ப்பாண மத்தியகல்லூரி ஆசிரியரும்,
''திராவிடச் சிற்ப வடிவங்கள்'' என்னும் சிறந்த நூல் ஆக்கியோனுமாகிய

**கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்களை**
**நோக்கிப் பாடியது**

**நேரிசை வெண்பா**

சித்தாந்த வேதாந்த சாத்திரமோ நுண்கலையோ
எத்துறையும் சாலத் துறைபோனுய்!—நத்தும்
கலைப்புலவர் பட்டமுற்றேய்! நம்கூத்தன் கோவில்
நிலைப்பூட்டும் என்றும் நினை.

முன்னுள் மோட்டோர்ப் போக்குவரத்து ஆணையாளரும்,
இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய
தமது உடன் மாணவன்

**திரு. போ. சங்கரப்பிள்ளை, M. A. அவர்களை**
**விளித்துப் பாடியது**

**நேரிசை வெண்பா**

'' நாம்தமிழர் '' என்னும் நவிலரிய நின்பனுவல்
காந்தமொப்ப என்னைக் கவர்ந்திற்று—சாந்துணையும்
நம்முடன் மக்களது நல்வாழ்வு நாடியென்றும்
நம்மால் இயல்வசெய்கு வாம்!

மயிலிட்டிதெற்கு, பண்டிதர் **திரு. இ. நமசிவாயம்** அவர்களுக்கு 'இலக்கண வித்தகர்' என்னும் பட்டம் அளிக்கப்பட்டபோது பாடியது

**நேரிசை வெண்பா**

தென்மயிலை மேதை நமசிவாயப் பண்டிதர்க்கு
மன்னும் 'இலக்கண வித்தகர்' — என்னுபட்டம்
நல்கிக் கணேசைய வித்துவானைப் பாராட்டும்
பல்கலைப் பீடம் பெரிது.

வித்தகரைப் போற்றிநன்கு வித்தகர் பாராட்டல்
வித்தையினைப் போற்றிவளர் செய்கையாம்— இத்துறையில்
வித்தியா னந்தக் கலாநிதி செய்துவரும்
வித்தியா கைங்கரியம் மேல்.

---

## வினைச்சொல் இலக்கணம்

இன்றமிழ் ஆங்கில இலத்தீன் இலக்கணம்
ஓரளவு கற்றுளேம்; ஏனைய மொழிகளின்
வினைச்சொல் இலக்கணம் தனையும் அறிந்துளேம்;
மேற்காண் உலக மொழிகள் அனைத்தும்
தொழில்நிகழ்ச்சி தன்னை உணர்த்துசொல் வினைச்சொல்
எனவரை விலக்கணம் கூறலை ஏற்று
'செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினை'யென்றும்
'பொருள்முத லாறினும் தோற்றிமுன் னுறனுள்
வினைமுதல் மாத்திரம் விளக்கல் வினைக்குறிப்பு'
என்றும் நவிலும் நன்னூல் தானும்
அதேபொருள் படவுரை தொல்காப் பியமும்
காலத்துக் கேற்ப கூறுமை கண்டு
தொழில்நிகழ்ச்சிதன்னைஉணர்த்துசொல்வினைச்சொல்லென்றும்
குறிப்புவினைச் சொற்கள் பெயர்ச்சொற்கள் என்றும்
கொள்ளுதல் தமிழ்மொழி வளர்ச்சிக்கு நன்றே!

---

## தொண்டு என்னும் தொன்மொழிக்குப் புத்துயிர் அளித்தல்

ஒன்பது பத்து தொண்ணூறு மென்றும்
ஒன்பது நூறு தொ(ள்)ளாயிரமா மென்றும்
பவணந்தி கூறும் புணர்ச்சி பிழையென்னும்
நெவின்சு சிதம்பரப் பிள்ளைசொற் பேணி
ஒன்பதைக் குறிக்கும் தொண்டெனும் சொல்லை
முன்போல் வழக்கிற் கொணர்ந்து மீண்டும்
ஒன்பது பத்தைத் தொண்பது எனவும்
ஒன்பது நூற்றைத் தொண்ணூ றெனவும்
ஒன்பதா யிரத்தைத் தொ(ள்)ளாயிர மெனவும்
ஆளுத் தமிழில் அழைப்பது முறையே!

## வயாவிளான் — பலாலிதெற்கு
## பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிரந்தர பண்டகசாலையை

யாழ்நாட்டு அரசாங்க அதிபர்

## திரு. ம. ஸ்ரீகாந்தா, C. B. E. அவர்கள்

திறந்துவைத்தவேளை

## மேற்கூறிய சங்கத்தார் அன்னாருக்குப் பாடிக்கொடுத்த

# வரவேற்புப் பாக்கள்

### வெண்பா

சீரார் சிவமதமும் செந்தமிழும் நுண்கலையும்
காரார் கிருஷிகமும் கைத்தொழிலும்—சீராகப்
போற்றுஸ்ரீ காந்தப் புரவலனை யாழ்நாடு
போற்றிநிற்கும் என்றும் புகழ்ந்து.

### ஆசிரியப்பா

மாநிலம் தன்னில் வாழ்ந்திடும் மக்கள்
சாதியம் பாஷை சமயம் வருணம்
ஆதிய வற்ருல் அநேக பிரிவாய்
வெவ்வேறு மக்களாய் வெளியே தோன்றினும்
உண்மையில் மெய்ப்பிதா ஒருவனின் மக்களே.
இப்பே ருண்மையை இனிதுண ராமல்
தன்னலம் துவேஷம் வன்பகை மிகுந்து
மனிதனை மனிதன் வருத்தி நிற்கவும்
ஓரினம் மற்ருேர் இனத்தை ஒடுக்கவும்
காணுமிந் நாளில் கருணையே உருவாய்
அன்பே சிவமெனும் அறவுரை போற்றித்
தண்ணளி சாந்தம் தயைபொறை அடக்கம்
இன்சொல் இன்முகம் இன்செயல் வாய்ந்து
காட்சிக் கெளியனுய்க் காரியத் திறத்தனுய்
வேண்டுவார்க் கெல்லாம் வேண்டுவ புரிந்து
தன்னுயிர் போல மன்னுயிர் காக்கும்
அரசாங் கதிப! அளப்பரும் சுகுண!
நின்னைக் காவல ஞகயாழ் தேயம்
பெற்றமை உண்மையிற் பெறற்கரும் பேறே!
முன்னர் பற்பல பதவிகள் வகித்து
பொதுசனம் வியந்து போற்றித் துதிக்கவும்
அரசினர் பட்டம் அளித்து நயக்கவும்
அரும்பெருந் தொண்டுகள் ஆற்றினை இனிது!
உணவபி விருத்தி அதிபராய் ஒளிருநாள்
காடு கெடுத்துக் கழனி படைத்து
உணவு பெருக்குநின் உத்தம பணியைச்

சேனநாய காவெனும் சிங்களப் பெரியார்
உண்மையிற் பெரிதும் உவந்தன ரென்ருல்
செப்பவும் வேண்டுமோ சிறந்தநின் பணிநலம்?
இந்நாள் முன்னேர் நெறிபிற ழாதுநின்
பேரனுர் செல்லப்ப பிள்ளையைப் போலவும்,
தகப்பனுர் மயில்வா கனனுர் போலவும்,
மாமனுர் முத்துக் குமாரர் போலவும்,
சைவ சமயத் தாபனம் பலவிலும்,
இன்றமிழ் பேணும் இயக்கம் பலவிலும்,
அருங்கலை வளர்க்கும் அவைபல வற்றிலும்,
சமூகநல மோம்பும் சங்கம் பலவிலும்
தலைமை தாங்கிச் சாற்றருஞ் சேவை
மகேஸ்வரி யெனும்நின் மனைவிய ளோடு
செய்து வருவது செகம்நன் கறிந்ததே!
இத்துணை பெருமை வாய்ந்த நீவிரெம்
பண்டக சாலையைத் திறந்து வைத்திட
எழுந்தமை மிகவும் இதமுறு செயலே!
ஆகலின் இனத்தொடர் புள்ளவிவ் வூர்க்கு
நல்வர வாகுக நின்வர வென்று
வந்தனம் செய்துநின் மனைவியும் மக்களும்
நீவிரும் நின்னை ஈந்த தந்தையும்
நீண்ட ஆயுளும் நிறைந்த சுகமும்
எய்தியெந் நாளும் இனிது வாழ்கென
ஏத்துதும் இறைவனை! ஏத்துதும் யாமே!!

---

## தெரிநிலைவினை விகுதிகளிற் கைவிடவேண்டியன

விளக்கமும் தெளிவும் விளக்குநல் விகுதிகள்
தமிழிற்போல் வேறெம் மொழியிலும் இல்லை;
இச்சிறப்பு இன்னும் திகழ்ந்திட ஒன்றுக்கு
மேற்படும் பொருளுடை விகுதிகள் தம்முள்
கு, டு, து, று எனும்தன்மை ஒருமை விகுதிகளும்
கும், டும், தும், றும் எனும்தன்மைப் பன்மை விகுதிகளும்
அன் எனும் தன்மை ஒருமை விகுதியும்
ஆய்எனும் முன்னிலை ஏவலொருமை விகுதியும்
ஆ எனும் இறந்தகால வினையெச்ச விகுதியும்
வான்,பான் என்னும் வினையெச்ச விகுதிகளும்
ஆல்,இல் என்னும் தொழிற்பெயர் விகுதிகளும்
அஎனும் உடன்பாட்டு வியங்கோள் விகுதியும்
அல்எனும் உடன்பாட்டு வியங்கோள் விகுதியும்
அல்எனும் எதிர்மறை வியங்கோள் விகுதியும்
அல்எனும் எதிர்மறை ஏவல் விகுதியும்
மைஎனும் எதிர்மறை வினையெச்ச விகுதியும்
குறைந்த கணக்கு உரைநடை யிலேனும்
கைவிடப் படுதலெம் வாழ்தமிழ்க்கு நன்றே!

வயாவிளான்–பலாலி ஸ்ரீ தம்பையா தருமப்பணி ஆக்கியோர் முதல்வரும் முன்னாள் மலேசியா, கோலாலம்பூர் பொதுசனத் தொடர்பு அலுவலரும் ஆகிய

# திரு. தம்பையா கந்தையா, M. B. E. அவர்களின்

## அஷ்டாப்த பூர்த்தியின்போது பாடியது

### நேரிசை வெண்பா

பாரதத்திற் காந்திஜியைப் பார்த்தயல் நாடுகளிற்
சீரியபல் மெய்த்தொண்டர் தோன்றியுள்ளார்—ஆராயின்
காந்தீயம் வாய்ந்தோனே கந்தைய அண்ணலன்னோன்
மாந்தருள்ளே மாணிக்கம் காண்.

### நிலைமண்டில ஆசிரியப்பா

போற்றுதும்! கூத்த பிரானைப் போற்றுதும்!
அகிலம் முழுவதும் அனைத்துயிர் தாமும்
படைத்துக் காத்து அழித்து மறைத்து
அருளும் உண்மையை அறிந்தமெய் யறிஞர்
சிவகதி வேண்டி நித்தமும் தியானி
உபாசித மூர்த்தியாம் அழகுசால் நடேசனைப்
போற்றுதும்! கூத்த பிரானைப் போற்றுதும்!
முன்னாள் தமிழர் அரசாள் இலங்கையில்
வண்டமிழ் விளங்கும் வயவையம் பதியில்
கடவுளென் உவமை மொழியினைத் தமது
குடிப்பெய ராகக் கொண்ட தம்பைய
வள்ளல் நோற்றளி வரப்பிர சாதம்
கந்தையா என்னும் கருணை மூர்த்தி
தெல்லி மகாஜனக் கலூரியிற் பயின்று
மலாயா அரச சேவையிற் சேர்ந்து
இறுதியிற் பொதுசனத் தொடர்பலு வலராய்ப்
பிரித்தா னியசாம் பிராச்சியப் பிரபெனும்
பட்டம் தன்னர வந்துசேர் மகிபன்,
காசினி வியக்கும் கணக்காய் வீரன்
பட்டம் பலசால் செல்லப்ப மேதை
சொல்லரும் பொதுநலம் போற்றிடும் தொண்டன்
நல்லா சிரியன் நடராச ஏந்தல்
என்னும் தம்பிமார் இருவ ருடனும்
தமது தமையன் சிரேஷ்ட லிகிதன்
சுப்பிர மணியச் சுகுணனின் தோன்றலர்
தெருக்கள் கட்டிடப் பொறியியல் நிபுணன்

கணேசனும் மற்றும் கற்றவர் ஏத்தும்
உத்தமா சிரியன் கனகசபா பதியும்
ஆகிய இரண்டு பெருமக்க ளோடும்
தாய்நாட்டுச் சொத்தெலாம் தொகுத்து வழங்கிச்
சிவமதம் புரத்தல் செந்தமிழ் வளர்த்தல்
அறிவு விருத்தி வறுமை ஒழிப்பு
முதலிய நோக்குடைச் ஸ்ரீதம் பையா
தர்மப் பணியெனும் நல்லறம் தன்னைத்
தாபித்து வைத்த தரும பூபதி
மேற்காண் முதலாம் நோக்கம் நிறைவுறக்
கிறிஸ்து மதத்தினர் போலநல் லொழுங்கு
அமைதி சாந்தம் பயபக்தி நிலவப்
பிரசங்கம் கீர்த்தனை கூட்டுத் தியானம்
சமய தீட்சை சமய வகுப்பு
சமயப் பிரசுரம் புராண படனம்
என்பன மூலம் ஈடிலா எங்கள்
சைவ சமய அடிப்படைக் கொள்கையை
அனைவரும் செவ்வனே அறியச் செய்ய
வயாவிளான் — பலாலி சைவபரி பாலன
சபையினர் கோவிற் கடவையென் வெளியில்
நிறுவிய நடராச மடாலயம் தன்னில்
எழுந்தருள் நிருத்த பிரானது பேரில்
வெம்பசி தீரன்ன தானம் செயவும்
சமய வகுப்பு நூலகம் நடாத்தவும்
தந்தையார் பேரிலோர் நன்மடம் மேற்காண்
தமரொடு அமைத்துத் தந்த புண்ணியன்
அஷ்டாப்த பூர்த்திகாண் கந்தைய அண்ணல்
இன்னுமீர் தசாப்தம் இனிது வாழ்ந்திடப்
போற்றுதும்! கூத்த பிரானைப் போற்றுதும்!!
போர்த்துக் கீசரென் பொல்லா நீசர்
தம்மதம் பரப்ப நம்சிவா லயங்களை
இடித்த வேளையில் விக்கினேஸ் வரனார்
மதாபி மானத் தோடோர் பிராய்மர
அடிப்பா கத்திற் தான்றோன்றி யாய்மற்றும்
வேலவர், வைரவர், வீர பத்திரர்,
மனையுடை முத்து மாரி, கண்ணகை,
நாகதம் பிரானெனும் தெய்வங்க ளோடு
துஷ்டநிக் கிரக சிஷ்டபரி பாலனம்
செய்தன ரெனப்பெரும் சைவாபி மானி
வைரவ நாத வைத்தியர் பகர்வர்.
அத்தகு புதுமையும் தொன்மையும் வாய்ந்த

ஐங்கரன் கோவிலே அழகுற நன்கு
பொதுமக்கள் முற்றும் புதிதாய் அமைக்கவும்,
சுப்பிர மணியர் சபையினை முன்னேன்
சுப்பிர மணியன் நினைவில் அமைக்கவும்
மேலே விளங்கும் தருமர்க ளோடு
பெருநிதி வழங்கிய கந்தைய வள்ளல்
நிறையுடல் நலத்துடன் நீடூழி வாழ்ந்து
இன்னும் பற்பல தொண்டுகள் புரிந்திடப்
போற்றுதும் விநாயகப் பெருமானைப் போற்றுதும்!
போற்றுதும் கந்த சுவாமியைப் போற்றுதும்!
போற்றுதும் மற்றுமேழ் தலத்தோரைப் போற்றுதும்!
சாற்றரும் திருவருள் சகத்தினிற் பொலியவே!

---

## தேன்பலவை

## திருவாளர்கள் மூ. நடராசா, மு. வல்லிபுரம் என்போரின் "தில்லை" என்னும் புதுமனைப் புகுவிழாவிற் பாடியது

### நேரிசை வெண்பா

#### வீட்டு நலன் வியந்து வாழ்த்தியது

கூரை அமைப்பெழிலும் கோல அறையழகும்
யாரையும் ஈர்க்குமிந்தத் 'தில்லை' யகம் — பாரிலுள்ள
போகம் பதினாறும் பொற்பார் திருவருளும்
ஈகுக என்றும் இனிது!

#### கிணற்று நலன் வியந்தது

சீதப் பனிநிகர்த்து ஜில்லென்னும் நீரென்று
கோதையர் நீராடும் கூபமிது—ஓதரிய
ஊற்றுப் பெருக்கும் உருசியும் வாய்ந்தமையால்
சாற்றுசிவ கங்கையே தான்.

#### வீடுகுடிபுகுநரை வியந்தது

ஊக்கம் உடையர்; உழைப்புடையர்; ஏர்பூத்த
ஆக்கம் உடையர்; அருளுடையர் — வாக்கினிலே
இன்சொல் உடையர்; இனிய செயலுடையர்;
வன்சொல்தான் இல்லா தவர்.

#### இறைவனை வியந்து போற்றியது

எல்லையிலா ஆனந்தன் என்றுமுளன் ஞானமுள்ளோன்
'தில்லை' யினைத் தேடிவந்து சேர்ந்ததென்னை? — நல்ல
அடியார்தம் நெஞ்சைத்தன் ஆலயமாய்க் கொள்வான்
நெடியோனென் சொல்பொய்யா வாறு.

இலங்கைப் புகையிரதப் பகுதிப் பொறியியல் வல்லுநர்
**திரு. ச. அருளம்பலம், A. M. I. C. E. அவர்கள்**
**தமது தாயார் பேரில்**
**தென்பலவை நடராஜ மடாலயத்துக்கு அமைத்து அளித்த**
**சரஸ்வதி மண்டபத்தைத் திறந்துவைத்தபோது**
மனமார வழங்கப்பெற்ற

# வாழ்த்துப் பாக்கள்

## வெண்பா

அருளம் பலமென்னும் அண்ணல்தன் அன்னை
சரசுவதி பேர்விளங்கத் தாரில்—விரவுபுகழ்த்
தென்பலவைக் கூத்தனுக்குச் செம்மண் டபமொன்று
மன்புவியிற் தந்தான் மகிழ்ந்து.

## ஆசிரியப்பா

பொன்னொளிர் செஞ்சடைப் புனிதன் புண்ணியன்
மன்னுயிர்த் தொகுதி மாட்டெழு மன்பில்
இன்னியல் வழாமல் ஈந்தசெந் தமிழ்மொழி
தன்னியல் காட்டித் தழைத்தினி திலங்கும்
யாழ்ப்பா ணத்தில் இடையரு முயற்சியால்
பொருளின் செல்வரும் புகழின் செல்வரும்
கலையின் செல்வரும் களித்தினி தொளிரும்
தாவடிப் பதியிற் தருமம் பலவிடை
சைவ வித்தியா சாலை நிறுவிய
சரவண முத்துவின் தனயன் சபாரத்
தினமெனும் சேவையர் சிவநெறிச் செல்வன்
பண்பார் பால்குடி பாபா சீடன்
கதிர்கா மத்தில் கவினுர் தெய்வத
ஆனை ஆலயம், பழனி யாண்டவர்
தேவஸ் தானம், செல்லக் கதிர்காமம்
ஆகு மிவற்றின் அருந்தர்ம கர்த்தா
ஆயமெய்ச் சைவம் அருந்தமிழ் வதியும்
வயவையம் பதியொடு மயங்கியொன் றுயொளிர்
தென்பல வைக்கண் தோன்றிய சீமான்
பசித்தோர்க் கன்னம் பரிவுடன் ஈவோன்
அரனடி அகலா அகத்தன் அறுபத்து
மூவர் பூசை முறைப்படி ஆண்டாண்டு
அறுகு நொங்க சிட்டியில் ஆற்றிய

கணபதிப் பிள்ளையாம் கமாதி பதியின்
தனிமகள் சாந்தம் தயையருள் பக்தி
வதிந்திடு சரசு வதிதனை மணந்து
பெற்ற புத்திர! பெறலரும் புகழோய்!
புகைரதப் பகுதிப் பொறியியல் வல்லுந!
ஏ. எம். ஐ. சீ. ஈ. ஆகி இலங்குவோய்!
சிங்கப் பூரிற் றிகழும் பல்கலைக்
கழகத் தின்கண் கருதுநீர்ப் பாசனப்
பொறியியல் விரிவுரை யாளராய்த் திகழ்ந்த
சண்முக நாதன் தனக்கரும் சோதர!
சீரார் பலாங்கொடை தேயிலைத் தோட்டச்
செல்வன் சிவமத சீலன் கோப்பாய்க்
கற்பக வள்ளல் கந்தையா என்னும்
ஜே. பி. தந்த இணையிலாக் குணத்துப்
புத்திரி யாய புவனேஸ் வரிக்குக்
கணவன் ஆகிய கண்ணியம் உடையோய்!
சிந்தையிற் சிவனடி சேர்த்திய சீல!
இராசா அருளம் பலமெனும் எம்மான்!
நின்தாய் ஊராய் நிலவுதென் பலாலையில்
அத்தாய் ஞாபகம் அழியா திருக்கப்
பிரசங்கம் செபம் பிரார்த்தனை நிகழ்த்தச்
சரஸ்வதி மண்டபம் எனப்பெயர் சூட்டி
ஒருபெரு மண்டபம் உவப்புற ஆக்கிச்
சைவபரி பாலன சபைக்குத் தந்தோய்!
நின்குல முதல்வர் நெறியினைப் பற்றி
நீசெய் தருமம் நிலமிசை நிலைக்கும்.
ஆன்றமைந் தடங்கிய சான்றோய்! நீயும்
நின்மனை மகாரும் நீணில மீதில்
நீடுழி வாழ்க நிம்மதி யாக
மாதொரு பாகன் மகிழ்ந்துகாத் திடவே!

## விருத்தம்

வாழிய மெய்யறம்! வாழிய திருப்பணி!
வாழிய மெய்யன்பு! வளருக பேரின்பம்!
வாழிய எம்மரு ளம்பல வள்ளலார்
வாழிய மனைமகார் தம்மொடு வாழ்கவே!

**மலாய்நாட்டுப் பிரசித்த ஆய்வு கணக்காளர்**
**திரு. த. செல்லப்பா, F.A.C.C.A., F.C.C.S., M.C.P.M. அவர்கள்**
தென்பலவை நடராஜ ஆலயக் கிழக்கு வீதியில் அமைந்திருக்கும்
**ஸ்ரீ தம்பையா தருமப்பணிக் காரியாலயத்தைத்**
திறந்துவைத்தபோது
**வயாவிளான்–பலாலிச் சைவபரிபாலன சபையினர்**
**மனமார வழங்கிய**

## வரவேற்பு வாழ்த்துப் பாக்கள்

### நேரிசை வெண்பா

சாற்றுஸ்ரீ தம்பையா தர்மப் பணிநிறுவிப்
போற்றரிய தொண்டுசெய்யும் புண்ணியனே! — போற்றியருள்
கூத்தனடி ஏத்தியாம் கூறுகின்றோம் நல்லாசி!
காத்தருள்வன் நுங்களறம் காண்.

### ஆசிரியப்பா

மாநிலம் வாழுயிர் வகைபல வற்றுள்
மானிடப் பிறவியே மகத்தது என்ப,
காரணம் மனிதன் பகுத்தறி வுடையன்:
காரணம் காரியம் காணும் வன்மையன்:
காரணம் காரியம் கண்டு முழுமுதற்
காரணம் உணர்ந்து கடவுளைத் தொழுவான்;
கடவுளே யார்க்கும் மெய்ப்பிதா ஆகலின்
உடன்பிறப் பாளரே அனைவரும் என்றும்,
சகோதரர் ஆகலின் சமத்துவர் என்றும்,
ஆதலின் வர்க்கம் சாதி சாகியப்
பேதமில் வாழ்வே பெரிதென்றும் ஓர்வான்:
தன்னுயிர் போல மன்னுயிர் மதிப்பான்;
தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வான்;
வாழு பிறரையும் வாழ விடென்பான்;
வாழ்வில் எவரும் வருந்தொணு தென்பான்;
துன்பம் துடைத்துமெய் இன்பம் பெருக்கி
அன்பே சிவமெனும் அரும்வாழ்வு வாழ்வான்.
இத்தகை சிறப்பெலாம் இயைந்து கடவுட்
பட்டம் பெற்றுயர் பண்புறு குடியில்
ஈழம் கொழிக்கும் ஈழதீ பத்தில்
வாழ்வளி சைவம் வாழுயாழ் நாட்டில்
வண்டமிழ் விளங்கிடும் வயவையம் பதியில்

தருமனுய் வந்துதி தம்பைய செம்மலும்
அருமனே யறம்புரி ஐயாத்தைப் பிள்ளேயும்
தவம்செய்து தந்த தனயர் ஐவருள்
நடுநா யகமாய் நானிலத் தொளிரும்
செல்லப் பாவெனும் செல்வா! வருக!
ஏழைகள் போற்றும் ஏந்தலே வருக!!
சிவமதம் காக்கும் சீலனே வருக!
நின்வர வென்றும் நல்வர வாகுக!
நீவிர் சோதரர் நின்பெரு மக்கள்
யாவீரும் யாங்கள் ஏத்துதற் குரியர்.
தாய்நாட்டுக் காணி தரைபூமி எல்லாம்
தாய்நாட் டவர்க்குத் தந்திட நற்பயன்
பாரிலுள் ளோர்க்குப் பதிபசு பாசம்
சீருற விளக்கிச் செந்நெறி காட்டும்
சிவமதம் தன்னேக் கிறீஸ்தவர் போல
உவப்புற மக்களே ஒருங்கு கூட்டி
வேதனே யின்றி விளங்கும் தன்மைய
போதனே தியானம் கீர்த்தனே மூலம்
வளர்க்கவும் கல்வி அறிவு பெருக்கவும்
உழவுகைத் தொழிலினே ஊக்கப் படுத்தி
அல்லல் போக்கி அனேவர்க்கும் ஆனந்த
செல்வவாழ் வளிக்கவும் ஸ்ரீதம் பையா
தருமப் பணியெனும் அருமறம் நிறுவிய
தருமா! தருமர் பிரதி நிதியே!
வணங்கி நின்னே வாயார வாழ்த்துதும்!
மனமார நின்றனக்குப் பல்லாண்டு கூறுதும்!
நீவிரும் நின்றன் குடும்பத் தாரும்
தேவப் பிறப்பெனச் செப்புதல் சாலும்!
சிரேஷ்ட அண்ணல் சுப்பிர மணியம்
இரவலர் இனத்தவர் யாவர்க்கும் ஈபவன்;
இரண்டாம் அண்ணல் கந்தைய மகிபன்
தருமம் புரிவான் தாபன ரீதியில்;
இருவர் இவர்க்கும் இடைநெறி வகுத்துத்
தருமம் புரிகுவை தகைமை அறிந்தே!
நாலாம் அண்ணல் நடராஜன் சேவை
ஞாலம் அறியும்! நல்லரே பெருமகார்!
ஆகலின் நீவிர் அனேவீரும் வாழி!
நீடுநும் தருமப் பணியும் வாழ்கவே!!

## வாழி விருத்தம்

சீர்பூத்த சிவசமயம் திகழ்ந்து வாழி!
தென்பலவைக் கூத்தபிரான் கோவில் வாழி!
ஏர்பூத்த யாழ்நாட்டு மக்கள் எல்லாம்
ஏகியங்கு போதனைகேட் டிறைஞ்சி வாழி!
பார்பூத்த கடவுள்தம் பையா தர்மப்
பணிநியமம் தவறாது பருத்து வாழி!
தார்பூத்த மக்களன்பு நெறியில் நின்று
சமதர்மம் போற்றியென்றும் வாழி! வாழி!!

பலாலி தெற்கு,
வயாவிளான், 20 - 12 - 65

வயாவிளான்—பலாலி
சைவபரிபாலன சபையினர்

---

வல்வெட்டித்துறை நீச்சல் வீரன்

## திரு. வ. நவரத்தினசாமி அவர்களை வியந்து பாடியது

சத்தியம் தர்மம் நீதி சதாசிவன் மீது பக்தி
நித்திய செல்வம் வண்மை நிரம்பிய சுதந்த்ர தாகம்
எத்துறை தனிலும் தீரம் இலங்கிடும் வீர வாழ்க்கை
நித்தமும் மிளிரும் வல்வை நீள்புகழ்க் கோமான் வாரீர்!

பாக்குநீ ரிணையை நீந்திப் பாரினிற் தமிழர்க் கெல்லாம்
ஆக்கிய புகழுக் காக அருந்தமிழ் வீரா! நின்னை
வாக்கினால் மனத்தால் மெய்யால் வாழ்த்துதும்! நின்னை மேலும்
ஊக்குநற் பணியே யல்லால் உஞற்றிடும் கைம்மா றுண்டோ?

நந்தமிழ் நாடு வாழ்க! நவரத்ன சாமி வாழ்க!
பந்தய மிட்டு நீந்திப் பாரினில் என்றும் வெல்க!
செந்தமிழ் மக்கள் முன்னாள் தீரராய் வாழ்ந்த செய்தி
சிந்தனை செய்தெந் நாளும் திகழ்கநம் தமிழ ரெல்லாம்!

---

## மக்கள் தொண்டு மகாதேவன் தொண்டெனச் செய்தல்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

சீவரா சிகளை யெத்தும் சிவபிரான் சேய்க ளென்றும்
சீவரா சிகளை யெத்தும் சிவபிரான் கோவி லென்றும்
சீவரா சிகளின் சேவை சிவபிரான் சேவை என்றும்
சீவரா சிகட்குச் சேவை சிவனையுள் நினைந்து செய்வாம்!

**இன்றமிழ்ப் புலவரும், இலவச வைத்தியருமாகத் திகழ்ந்த**

வயாவிளான் "சுதேச நாட்டிய"ப் பத்திராதிபர்

**சிவத்திரு. சி. நல்லதம்பி அவர்களை நினைந்து பாடியது**

மறத்தமிழ் மக்கள் வாழும் மயிலிட்டிப் பற்றிற் பொல்லாத்
தறுகுறும் படக்கி நான்கு தலைமுறை உடையா வேலை
திறம்படப் பார்த்த வம்சன் செருக்குற்றோர் ஆங்கி லேயன்
மிறைக்கத்தன் செருப்பு வாசி விளக்கிய வீரர் கோமான்.

சின்னத்தம் பிமன்னும் மற்றும் செந்நெறி யாளர் தாமும்
முன்னைநாட் செய்த தர்ம மொய்ம்பினால் இனிமேற் பாரிற்
பன்னரும் சைவம் ஓங்கும் பரந்தெழும் தமிழும் செவ்வன்
என்னவே நல்ல தம்பி என்னுமோர் மகிபன் வந்தான்!

செந்தமிழ் நூல்கள் கற்றுந் திறமெழுத் தாள னாகி
அந்தநாள் மக்க ளெல்லாம் அவாவுடன் படித்தின் புற்ற
சுந்தரச் செய்தித் தாளாம் சுதேசநாட் டியத்தை ஏற்று
எந்தமிழ் மொழியை நாட்டை இனத்தினைக் காத்தான் நன்றே!

இத்துணை மட்டு மன்றி எப்பொது நலமும் பேணி
ஒத்துழைத் துய்ய மக்கள் உகந்தநற் செய்யுள் யாப்பான்
உத்தமர் உரவோர் வீரர் உமாபதி அடிசேர் வேளை
நித்தமும் போற்ற நெஞ்சம் நெகிழ்ந்தலர் பாக்கள் செய்வான்.

வெளிமனி யோடர் மாற்றும் விதமறி யாத வர்க்கும்
வெளியூர்க்குச் சென்று தங்கள் விஷயத்தைப் பார்க்கி லார்க்கும்
கழிந்துசெல் மாந்தர் ஈமக் கடன்கள்செய் வோர்க்கும் இந்தக்
கிழவன்செய் பணியை அன்னோன் கிரீச்சிடும் சயிக்கிள் காட்டும்.

மன்பதை பிணியால் வாடி வருந்திடச் சகியான் தாரிற்
துன்பினை நீக்கல் தானே சொல்லரும் தொண்டென் றெண்ணி
மன்னர்முன் காத்த சித்த வைத்தியம் பயின்று மக்கள்
அன்புற அன்னோர் நோயை அகற்றினன் உணவும் ஈந்தே!

மற்றவர் துன்பம் தீரிம் மகாத்துமா ஒருகாற் காய்ச்சல்
உற்றுயிர் ஊச லாட ஊரவர் தொழிலூண் தூக்கம்
முற்றுமே துறந்து நின்றோர் முட்டிட இல்லம் காணி
நற்றவா! நல்லார் சீவன் நமக்காக நீடி என்றே!

இத்தகு சீவ் சேவை யாளனோ இறைவன் அன்பன்
அத்திமா முகனை வேண்டி அனுதினம் கோவில் செல்வன்
மத்தியா யயனப் பூசை மனமாரக் கண்டே உண்பன்
சித்தத்தில் நிதமும் அன்னோன் திருப்பணி திகழு மன்றே!

வயாவிளான் பாலர் ஞான போதன சங்கத் தாபகரும்
வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலைத் தலைவருமாகிய

## செந்தமிழ்ப் புலவர் பிரமஸ்ரீ சி. தங்கசாமி ஐயர் அவர்களை நினைவுற்றுப் பாடியது.

நேரிசை வெண்பா

புன்னைவாழ் அந்தணர்க்கும் பொற்பார் தமிழ்மொழிக்கும்
முன்னைநாட் தொட்டுறவு உண்டென்னப் — பன்னரும்பாப்
பாடுதங்க சாமியையர் பாடுகிலார் நம்வயவை
பீடுறத்தான் செய்தபணிப் பேறு.

பேனை கடிதம் அலுக்கா(து) இவரினின்றும்
தானாக வந்தொழுகும் தண்டமிழ்ப்பா — தேனொழுகும்
பிள்ளைக் கவிதொகுத்த பெம்மான் அருள்நந்தி
விள்ளரிது என்றான் வியந்து.

அந்நாளில் நல்லசெய்தித் தாளென்று மக்களெலாம்
இன்புற்றுப் பார்சுதேச நாட்டியத்தாள் — அன்னவன்
செய்யுளன்றிக் கட்டுரையும் தீட்டவல்லன் என்பதனை
மெய்யென்று காட்டும் விதந்து.

இத்தகைய பேரறிஞன் எம்வயவை சென்மமெய்தி
மெத்துதுரை யப்பரிடம் தெல்லிசென்று — உத்தியோக
ஆங்கிலத்தைக் கற்றும் அருந்தமிழ் ஓதிநின்றான்
பாங்குறப்போய் கோவை பயின்று,

வாலிபனாய் இச்சான்றோன் வாழுங்கால் தந்திமுகன்
சீலமுற முப்பூசை செய்துதினம் — கோலமுற
வாணிக்கு ஆங்கிலநெய் வண்டமிழ்நெய் வார்த்தேற்றி
மாணவர்முன் வைத்தான் விளக்கு.

துன்மார்க்கம் செல்லும் துடுக்கடக்கி மாணவரை
நன்மார்க்கம் எய்தி நலனடையச் — சன்மார்க்கம்
போதித்துச் சேவை புரியிளைஞர் சங்கமொன்று
ஏதமறத் தாபித்தான் ஈண்டு.

அச்சங்கம் தானிந்நாள் அன்னவனைப் போற்றிமிக
மெச்சுமிவ்வூர் முன்னேற்றச் சங்கமாம் — நச்சுமிவ்வூர்த்
தொண்டன் எவனுமந்தத் தொண்டன் சிருட்டியென
எண்டிசையும் போற்றும் இனிது.

முன்னரெங்கள் முன்னோர் முயன்றமைத்த பள்ளியொன்று
பின்னர் கிறிஸ்தவர்கைப் போய்ச்சேரப் — பின்னுமதைப்
பாடுபட்டுச் சைவவித்தி யாசாலை ஆக்கினான்
வீடுவீடாய்ச் சென்றுபணம் சேர்த்து.

சாற்றரும் சைவத் தொண்டனும்,
இனுபிமானியும். சமூகசேவையாளனும் ஆகிய
மலேசியா, கோலாலம்பூர் பிரபல்ய நியாயவாதி

**அமரர் திரு. செல்லப்பா தம்பையா அவர்கள்மீது பாடிய**

# நிரந்தர நினைவுப்பாக்கள்

நேரிசைவெண்பா

வாசகநேயரை நோக்கி

ஈழத்திற் தோன்றி மலாயாவி லேயொளிர்ந்து
ஆழக் கணக்காய்வோன் செல்லப்பா — வாழவையம்
தந்தமைந்தன் தம்பையா மெய்நியாய வாதிகாந்தித்
தந்தையார் சீடனென்பாம் தேர்ந்து

பாட்டுடைத் தலைவனைப் பார்த்து

தேவன் அனைவருக்கும் நித்தியமெய்த் தந்தையெனில்
யாவேமும் சோதரர்கள் ஆவமன்றோ ? — யாவேமும்
சோதரர்கள் ஆயின் சமத்துவரே என்னுநின்றன்
போதனையும் சாதனையும் மேல்.

உலகினிற் தாபன தர்மமெஞ் ஞான்றும்
பலர்க்கும் பயனளிக்கக் கண்டு — மலாயாவில்
மக்கணலம் போற்றுமெந்தத் தாபனமும் ஏற்றமுறத்
தக்கசெய்தோய் ! வாழ்கநின்றன் தொண்டு !

மலாயாவாழ் நம்மீழ நாட்டுத் தமிழர்
நலமுறவே தொண்டுசெய்த நம்பி! — பெலமருகித்
தாழ்வுறுமெம் ஈழத் தமிழர் குறைநீக்கி
வாழ்வளிக்கக் கூத்துமன்னைத் தூண்டு!

சேரசோழ பாண்டியரும் சீரியயாழ் மன்னரும்போய்ப்
பேரார் தமிழருக்கோர் ராச்சியம் — தாரிலிந்நாள்
ஒன்றுமில்லை என்று நோகோவே! இக்குறையை
நன்றுநவில் நம்மிறைய னூர்க்கு!

சைவமும் செந்தமிழும் எங்களிரு கண்களாம்
சைவ அடிப்படைக் கொள்கையினைச் — சைவரன்றி
மற்றோரும் கற்றுய்ய வேண்டுமென்போய்! வந்துசொன்மின்
நற்றிட்டம் நாவலர்பாற் கேட்டு!

நந்தமிழர் பாரிலெந்த நாட்டிலே வாழ்ந்நாலும்
நந்தமிழ்ப்பண்பாடோம்பவேண்டுமென்போய்!—நந்தமிழ்ப்பண்
பாட்டுக்கு நல்ல உதாரணம் நின்னைப்போல்
காட்டுதற்கென் செய்வாம் இனி.

துன்பம் துடைத்தலே சொல்லரிய தொண்டென்று
மன்பதைக்கு அப்பணிசெய் எங்களுக்குத் — துன்புவிளை
கூத்தபிரான் பஞ்ச கிருத்தியத்திற் தப்பேதோ
காத்திரா வண்ணமுற்ற தென்!

மக்களது சேவை மகாதேவன் சேவையெனத்
தக்கதொண் டாற்றுங்கால் அரைவயதில் — முக்கண்ணன்
தன்பணிக்கு வாவென்னல் தன்னலத்த தாயிடினும்
நின்பணியை மெச்சியமை நன்று!

கூத்தபிரான் தாள்வாழ்க! கோலமலாய் நாட்டுமக்கள்
ஏத்துசட்ட நூலறிஞன் தம்பையா — நீத்துடலம்
சென்றாலும் அன்னதர்மன் செய்பணியும் இன்முகமும்
நின்றொளிரும் நம்நெஞ்சில் நீடு!

---

## வேற்றுமை, உருபு மயக்கங்கள் தவிர்த்தல்

வேற்றுமை தெளிவு பாஷைக் களிப்பதால்
வேற்றுமை மயக்கம் தவிர்த்தல் வேண்டி,
ஆகலின் ஒப்பெனும் சொல்லைக் கைவிட்டு
உவமைப் பொருளினை இரண்டாம் வேற்றுமைக்கே
உரியதாக்கி ஐஎனும் உருபை ஒதுக்கி,
ஐந்தாம் வேற்றுமைப் பொருளாம் ஒப்பை
உறழ்வெனத் திருத்தி இல்இன் உருபுகள்
அப்பொருட்கு மட்டும் உரியன வாக்கி,
உவமைப் பொருளில் இன்னையுப யோகியாதும்,
திசைப்பொருள் எனும்புது மேலதிக பொருளை
நான்காம் வேற்றுமைக் குண்டு பண்ணி
அதற்குக் குவெனும் உருபினை மட்டும்
உபயோகித்து, மூன்றும் வேற்றுமை தன்னில்
ஆல்,ஆன் உருபுகளை உடனிகழ்ச்சிப் பொருளிலும்
ஒடு,ஓடு உருபுகளை கருவிகர்த்தாப் பொருள்களிலும்
உபயோகி யாமல் ஒண்டமிழ் விளக்குவாம்!

---

## ஐ, ஏ என்னும் எதிர்மறை விகுதிகள்

விகுதிகள் கூறிடும் நன்னூலார் பிறவும்
என்பவற்றுள் ஐ, ஏ என்னும் எதிர்மறை
ஏவலொருமை விகுதிகள் அடங்கிடும் என்னே !

## சுதுமலையிற் தோன்றிமறை அண்ணுமலைத் தெய்வத்தை நினைவுகூர்ந்து பாடியது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

இறைவனது சந்நிதியில் எல்லவரும் சமமென்னும்
இதமான இலட்சியத்தைப் பேணும் தெய்வம்!
நிறையநிதி கொடுத்தாலும் கொடுக்காமல் விட்டாலும்
நன்மருந்து எவருக்கும் கொடுக்கும் தெய்வம்!
குறையுங்கால் வருமானம் தன்காணி பூமிவிற்றுக்
குவலயத்தோர் பிணிதுன்பம் மாற்றும் தெய்வம்!
இறைவன்போற் பேரன்பும் சிவப்பொலிவும் வாய்ந்ததெய்வம்
நமதண்ணு மலைத்தெய்வம் தானென் போமே!

காலினிலே நல்லிரத்தம் பாய்விக்க இளையக்கா
கருத்துவைத்து நன்மருந்து கொடுங்கள் என்னச்
சாலவொளிர் நல்லதங்க செந்தூரம் தந்திடுங்கால்
தயவுசெய்து இதன்விலையைச் சொல்மின் என்ன
ஞாலத்திற் தொண்டாக வைத்தியம்செய் என்றனக்குப்
பணவெண்ணம் உண்டாக்கல் நன்றன் றென்றூர்;
சீலமுறு சேவையிதைச் செய்கின்ற செம்மலிவர்
செகத்தினிலே கண்கண்ட தெய்வம் தானே!

இப்பெரியார் இறந்தசெய்தி அறிந்தெட்டுத் திசைகணின்றும்
ஏராள மானவாண்பெண் திரண்டு வந்து
எப்பொழுதும் இன்முகமும் இன்மொழியும் திகழநன்கு
எங்கள்கை பிடித்துநோய் நிதானம் செய்து
ஒப்பரிய ஔடதங்கள் அளிக்குமெங்கள் உத்தமனே!
உலகிலினி எம்வருத்தம் தீர்ப்பார் யாரோ?
செப்புதி யென்(று) ஓலமிடத் தமியனன்னேன் இறைசேர
வேண்டிவைத்(தி)ய நாதனடி தியானித் தேனே!

## வட்டுக்கோட்டை
## முதலியார் ப. மு. சங்கரப்பிள்ளை அவர்களின் அந்தியேஷ்டியிற் பாடிய சரமகவியின் இறுதிச் செய்யுள்

### கட்டளைக்கலித்துறை

மண்ணில் வருந்திடும் மக்கள் வருத்தத்தை நீக்குதலே
புண்ணிய மென்றுயர் மூளாய் வயித்திய சாலையினைப்
பண்பாய் நடாத்தும் முதலியார் சங்கரப் பிள்ளையினை
விண்ணவர் தாமும் பணிநலம் மெச்சிப் புகழுவரே!

தந்தையார் திரு. நீ. வல்லிபுரம் அவர்கள்
இக்கால நியாயவாதம் இழுக்குடைய பாவத் தொழிலென எண்ணித்
தன் மகன் சட்டப் பரீட்சையிற் பிரதிகூலமடைவதை வேண்டி
செல்வச் சந்நிதியில் அன்னதானம் கொடுத்ததைக் கேள்வியுற்று
தந்தையின் தப்பிதச் செயலைத்

## தனயன் கண்டித்துப் பாடியது

### நேரிசை வெண்பா

*மாசுமனக் கண்ணிலனாய் என்மைந்தன் மெய்வழக்குப்*
*பேசுக பொய்வழக்கு விட்டெனவே — ஈசனை*
*எண்ணிநன்கு வேண்டாமல் என்பிரதி கூலமுன்னி*
*அன்னதானம் செய்தமைமா தப்பு.*

முன்னோர் அளித்த அரும்பெரும் செல்வம் தந்தமைக்குத்

## தந்தையாருக்கு நன்றிகூறிப் பாடியது

### நேரிசை வெண்பா

*முன்னோர் அளித்த அரும்பெரும் செல்வமெனப்*
*பன்னுகந்தம் பாரதம் வள்ளுவமென் — நன்னூல்கொள்*
*ஏடுகள் மூன்றும் கிடாரமும் பெட்டகமும்*
*நாடிநன்கு தந்தீர் ஸ்துதி!*

## இறுதியில் மயானத்தில் தனது தந்தையாருக்கு வாய்க்கரிசியிட்டுப் பிரியாவிடை கூறியது

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

*சொத்தியாய் நலியும் சுதனிவன் என்று*
*சோகமுற் றேகிடாய் எந்தாய்!*
*புத்தியாய் எனக்குப் பொற்புறு கல்வி*
*புகட்டிநீ வைத்ததன் பயனாய்*
*எத்தின மேனும் என்தேவைக் குழைப்பேன் ;*
*யாதுபின் வேண்டுமிம் மண்மேல்?*
*அத்தனும் அடியேற் காவன புரிவான்!*
*ஆறுதல் அடைந்துநீ செல்லே!*

இராமேஸ்வரத்தில் தந்தையாருக்கு அந்தியேஷ்டி செய்தபோது

## சிவபிரானைத் தியானித்துப் பாடியது

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

*"தாரினிற் தர்மம் சத்தியம் அகிம்சை*
*சீரிவரக் கடைப்பிடித் தொழுகின்*
*நேரினில் இறைவன் திருவருள் பெறலாம்*
*நெடுகநீ அலைந்திட வேண்டாம்*
*பாரினில்" என்று பகர்ந்ததோ டடியேன்*
*பார்த்திட அங்ஙனம் நடந்த*
*சீரியன் எந்தை நின்னடி திகழத்*
*திருவருள் புரிகுவை சிவனே!*

## தாயார் திருமதி வல்லிபுரம் நாகமுத்து அம்மையாரின் நித்திய நினைவுச் செய்யுட்கள்

### நேரிசை வெண்பா

கட்டிலிலும் தொட்டிலிலும் கால்மேலும் தோள்மேலும்
பட்டினத்துப் பிள்ளையைத் தாய்வைத்து — இட்டமுடன்
போற்றியொரு கால்வளர்த்தால் கால்சோர நாயேனைப்
போற்றியிரு கால்வளர்த்தீர் நன்கு.

கல்வியே நாயேனைக் கைதூக்கு மென்றுணர்ந்து
கல்விக்காய் மிக்கபணம் கைவிட்டுத் — தொல்லுலகில்
எந்தையும் நீரும் எனையுயர்த்தி வைத்தமைக்காய்ச்
சந்ததமும் சொல்வேன் துதி!

அன்னம் பிறர்க்கூட்டி ஆனந்தம் எய்தும்நீர்
அன்னம் அறுசுவையோ டாக்குவீர் — இன்னுமவ்வூண்
தித்திக்க அன்பாய்த் திரட்டித் தருவதனை
எத்தினமும் எண்ணுதும்யான் ஈங்கு!

கால்வலிமை இல்லாதான் கஷ்டமின்றி மாநிலத்தில்
வாழ்வதெங்ஙன் என்றுமனம் வாடாதீர்! — கால்வலிமை
இல்லாத போதும் இறைவன் திருவருளால்
எல்லாம் கிடைக்கும் எனக்கு.

முன்னைநாள் யான்செய்த நல்வினையால் இப்பிறப்பில்
அன்னையளாய் வந்துசெல்லும் அன்புருவே! — எந்நாளும்
நின்கருணை நான்மறவேன்! நேயமுள்ள சக்திதன்னில்
நின்னைத் தொழுவேன் நிதம்.

## மேற்காணும் அம்மையாரின் ஆன்மசாந்தி வேண்டி மதுரையிற் பாடியது

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

நாயினேன் தன்னை நல்வழிப் படுத்த
நன்குநீ திருவுளம் கொண்டு
தாயின ளாகத் தக்கவோர் ஆன்மா
தந்தனை தயாபரா! அந்தத்
தாயினள் மிக்க தயவுடன் என்னைச்
சாவரை பேணிநின் றதனுல்
ஆயநற் பதவி அவ்வமை அடைய
அருள்செயத் திருவுளம் கொள்ளே!

தன் மூத்த சட்டச் சகோதரன்

## திரு. வி. வேலுப்பிள்ளை அவர்களை நினைவுகூர்ந்து பாடியது

### நேரிசை வெண்பா

அத்தானே! எங்களது அன்பார்ந்த உத்தமனே!
நித்தமும்நின் ஊக்கம் நினைக்கின்றோம் — இத்தாரில்
நின்மனையும் நீவிரும் செய்துநின்ற புண்ணியத்தால்
நின்குடும்பம் வாழ்கிறது நன்கு.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

உழவர்கோன் விசுவ நாதர் வேற்பிள்ளை என்னும் தர்மன்
பழம்தரு பலாமா தோடை மாதுளை நெல்லி வைப்போன்
வளமுறக் குடும்பம் சால உழைக்குநன் முருகன் அன்பன்
பழந்தமிழ் நாக ரீகன் பரனடி வதிக நன்றே!

தனது சிரேஷ்ட சகோதரி

## திருமதி வேலுப்பிள்ளை நல்லபிள்ளை அம்மையார் சிவனடி சேர்ந்தமை குறித்துப் பாடியது

### அறுசீர் ஆசிரியவிருத்தம்

சந்தியிற் கரைச்சல் நீங்கித் தனிமையாய் வாழும் நாளில்
தந்தைதாய் இருவ ருக்கும் சரிவர உதவி செய்து
செந்திரு உருவாய் வந்த செல்வியென் றன்னோர் ஏத்த
முந்திநின் றுழைத்த எங்கள் மூத்தக்கா! மறவோம் நின்னை!

உடன்பிறந் தோர்கள் மீதும் உற்றநற் கொழுநன் மீதும்
வடதரு போலாம் நின்றன் வம்சத்தோர் அனைவர் மீதும்
திடமுற அன்பு பூண்டோய்! நினைப்போலோர் மகளை விட்டு
நடனடி செல்லிஞ் ஞான்று நல்விடை நவில்கின் றோமே!

அப்பரோ டாச்சி அன்பார் இளையக்கா அண்ணன் தம்பி
எப்படி தரணி பாடு? எனநின்னை வினவும் போது
செப்பரும் கூத்தற் கான திருப்பணி முடித்துக் கொண்டு
தப்பாது விரைவில் வந்து சாருவன் எம்மை என்னே!

தென்புலம் தனிலெம் மூரைச் சேர்ந்தமூ தாதை யர்கள்
எந்நிலே பிள்ளாய்! யாம்யா ஏரம்பர் கோவில்? என்னின்,
முன்மறு காணி யாவும் பாதுகா சபைக்குச் சாட்டிப்
பின்னரும் பெரிய தம்பி சபாபதி ஆவான் என்னே!

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

நல்லபிள்ளை மெய்யார நல்ல நங்கை
நாமமிது காரணப்பேர் எனவே ஊரார்
சொல்லுவதை நாம்கூடி ஆராய் வோமேல்
சொத்துநிதி மத்தியகீழ்த் தரமா ணுலும்,
இல்லாரை ஆதரித்து இன்சொல் கூறி
இயன்றவரை உணவளிக்கும் வண்மை கண்டு,
நல்லபிள்ளை யாய்வந்து நல்லம் மாவாய்
நாதனடி நண்ணுதியென் றேது வோமே!

தமது இரண்டாம் சட்டச் சகோதரன்

## திரு. க. வே. சுப்பிரமணியம் அவர்களை நினைத்துப் பாடியது

### நேரிசை வெண்பா

பொதுவிடயம் தன்னிற் துருவங்கள் போல
அதிபேதப் பட்டிடினும் நாங்கள் — பொதுவாக
ஒன்றுபட்டு வாழ்ந்தோம் அக்காவின் புண்ணியத்தால்
நன்றேநின் ஆந்தரங்க அன்பு.

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

மத்தியமா கல்லுரி தனைநாங்கள் மயிலிட்டி
மல்லாகப் பற்றிரண்டும் சந்திக் கின்ற
நித்தமுமே நிம்மதிவாய் வெளியிலய லாருடனே
நிறுவுவிக்க நம்நடேச அண்ணல் நேயன்
புத்தருக்குட் புத்ததர்மி துன்புறுவோர் அனுதாபி
இலவசக் கல்விபிதா கனங்க ராவென்
உத்தமனைத் தூண்டநன்கு நம்மமைப்புக் குழுவுடனே
ஒத்துழைத்தீர் நமைநாடு வாழ்த்த நன்றே!

இந்நாட்டுச் சரித்திரத்தில் நினக்குமிடம் உண்டென்று
எமரன்றிச் சிங்களரும் இயம்பு கின்றார்;
எந்நாளும் நின்னுதவி நாடிவரும் மக்களுக்கு
இயல்வசெய்வீர் நின்பணமும் செலவு செய்தே!
நின்னுலா காதவரும் கருமமெனிற் தக்கோரை
அணுகுமுறை தனிலணுகி வயப்ப டுத்தி
அன்னவரைக் கொண்டாவ செய்விப்பீர் உலகிலுள்ளோர்
காரியவேள் என்றுநினைப் போற்ற நன்றே!

### நேரிசை வெண்பா

பன்னரிய கஷ்டங்கள் நேர்ந்திட்ட போதெல்லாம்
அன்னக் கொடைநின்னைக் காத்ததென்பேன் — எந்நாளும்
ஆறுபேர்க் கேனும் அமுதூட்டி நில்வள்ளால்!
கூறரிது நின்றன் கொடை!

தமது இளையதமக்கை
ஷ சுப்பிரமணியம் அவர்களின் பாரியார்

## திருமதி அன்னமுத்து அம்மையாரின்
## ஈமக்கிரியையிற் பாடியது

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

**(துக்கசாகரத்தில்)**

அன்னையை இழந்தேன்; அப்பரை இழந்தேன் ;
அதற்கெலாம் சலித்திலன் அதிகம் ;
அன்னையில் மிக்க அன்புடன் என்னை
ஆதரித் தணைத்தவென் அக்கா!
உன்னையான் இன்றிவ் வுலகினில் இழந்தேன் !
உறுதுணை எனக்கினி யார்சொல் !
என்னையும் நீசெல் இடத்தினுக் கியன்ற
விரைவினில் அழைத்திட முயலே !

**(தேற்றம் உண்டாகி)**

அன்னையை இழந்தேன் ; அப்பரை இழந்தேன் ;
அதற்கெலாம் சலித்திடாய் என்ருய் ;
அன்னையள் ஆகி அன்புற என்னை
ஆதரித் தணைத்தவென் அக்கா!
என்னையே எண்ணி இரங்கிநீ கவலாய் !
இறையவன் இறப்பிலன் கண்டாய் !
அன்னையும் ஆவான் அப்பனும் ஆவான் !
ஆறுதல் அடைந்துநீ செல்லே!

### நேரிசை வெண்பா

அன்னையள் போலெனக்கு அன்பார ஊணூட்டும்
நின்னையின்றும் எண்ணிக் கவலுகின்றேன் — முன்னெருநாள்
வெந்நீர்வைத் தென்னைக் குளிப்பாட்டக் கண்டுசெல்வா
நின்னைப் புகழ்ந்தார் வியந்து !

தனது இளைய தம்பியாரும்
ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலைத் தலைமையாசிரியரும் ஆகிய

## திரு. வ. சிங்கநாயகம் அவர்களின்
## அந்தியேஷ்டியிற் பாடியது

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தாரினிற் தமியேற் கைந்து சகோதரம் உளரென் றெண்ணி
நேரிலா இறுமாப் புற்றேன் நீங்களொவ் வொருவ ராகச்
சீரிய அன்பார் தம்பீ! சிவனடி செல்வீ ராகில்
ஆரடா எனக்குத் தஞ்சம்? அறிவிலீ! அறைகு வாயே!

நின்னுயிர் பிரியும் போது நின்றிலன் அருகில் நாயேன் ;
இன்னுயிர் போகும் வேளை இளையக்கா என்று கூறி
இன்னுயிர் தனிலும் அக்கா இனியளென் றுணர்த்திச் சென்ருய்;
மன்னித்தேன் அதனுல் என்னை மறந்தேகல் சென்று வாவே !

தென்புலம் தன்னை நீபோய்ச் சேர்ந்ததும் இனிய அக்கா
அன்புடன் வரவேற் றுன்னை அடியேனின் செய்தி கேட்கின்
அன்புரு வான நிற்கு அமைக்கிருர் நினைவுச் சின்னம்
மன்னிய கூத்தன் கோவில் மணிக்கோபு ரமாக என்னே!

சுகாதார மேற்பார்வையாளர்

## வயாவிளான் திரு. தம்பர் முத்தையா அவர்களின் இறுதி நினைவுப் பாக்கள்

வாலிபர் சங்கம் யாத்து வயவைமுன் னேற மற்றும்
வாலிப ரோடு கூடி வாசிக சாலை சந்தை
சீலமார் மருந்துச் சாலை தபாற்கந்தோர் அமைப்ப தற்குச்
சாலவே உழைத்தோய்! நின்னைத் தாயகம் மறவா தன்றே!

தகப்பனுய் மக்கள் யார்க்கும் தயாபரன் இருத்தல் ஓர்ந்து
சகத்திலோர் குடும்பத் தார்போல் சகலரும் வாழ்வாம் என்னும்
சுகாதார மேற்பார் வைக்கோன் ஸ்ரீதம்பர் முத்தை யாவேள்
பகரரும் சமூகத் தொண்டன் பரவுக அன்னேன் கொள்கை!

துன்பினைத்துடைத்தல்தானேசொல்லரும்தொண்டாமென்று
மன்பதைக் கந்தத் தொண்டு மனமாரச் செய்கு நர்க்குத்
துன்பினைத் தேவன் நல்கின் சொல்லொணுக் கர்மம் ஓரா
இந்நிலம் தனில்மெய்த் தொண்டு இழந்திடும் மகிமை என்னே!

## தேற்றம்

கலிவிருத்தம்

ஒருகதவால் வந்தடியார் மறுகதவாற் செல்லுகின்ற
திருவனந்த புரக்கோயில் நிகருமிந்தச் செகத்தினிலே
பிரமயமர் சகலவான்மாக் களுமொழுங்காய் வந்துசெல்லத்
தருணமளி நியதியென மரணதுயர் நீக்குதுமே!

மேற்காணும் சுகாதார மேற்பார்வையாளர் நாயகியும்
தமது தலைமை மருமகளும் ஆகிய

## திருமதி முத்தையா தங்கரத்தினத்தை நோக்கிப் பாடியது

நேரிசை வெண்பா

மூத்தக்கா நோற்றளியென் மூத்த மருமகளே!
பார்த்திடுக (உ)ரோகினிக்கு மன்றலென்றேன் — நீத்துடலம்
செல்லளிந்நாள் ஆறுதலாய்ச் செய்வமென்ருய் நம்யாக்கை
நில்லாமை தன்னையுண ராது.

பெற்ருேர்கள் போயிடினும் பேணிடுவர் மாற்ருந்தாய்
சிற்றப்பன் என்னுமிரு சீரியரும் — மற்றுமன்னுள்
அண்ணன் ரவீந்திரன் ஆவவெல்லாம் செய்திடுவான்
எண்ணிக் கவலவொன்றும் இல்,

ஷை ஸ்ரீ வல்லிபுரம் குடும்பத்தினர் தங்கள் உபயமாக அமைத்துக் கொடுக்கும் கூத்தபிரான் கோயில் மணிக்கோபுரத்தின் அடிவாரத்தில் கருங்கல்லில் வரையப்பட்டிருக்கும் செய்யுட்கள்

மேன்முகத்தில்

என்னமணி! என்னேசை! எங்கிருந்து கேட்கு'தடி?
என்னஉமை பாங்கி எழுந்துநின்று — மன்னசைவம்
வல்லிபுர வம்சத்தார் வாழ்த்தியெங்கள் கூத்தனுக்கு
நல்குமணி என்றுன் நயந்து.

தென்முகத்தில்

கல்லடிவேற் பாவலன்சேய் காரியவேள் சுப்ரமண்யன்
இல்லறத்தன் அன்னமுத்தாம் உத்தமியள் — வல்லிபுர
மாவளவன் தந்தகுல நாயகவிஞ் ஞானிமுன்னள்
மேவுகநம் கூத்தனடி சேர்ந்து!

குணமுகத்தில்

விஞ்ஞானம் ஆழ்ந்துகற்று மெய்யோனின் மாண்புதெரி
விஞ்ஞான வேந்துகுல நாயகமும் — மெய்ஞ்ஞானப்
பொக்கிஷமே சைவமெனப் போதிசிங்க நாயகமும்
நக்கனடி சேர்ந்துறைக நன்கு!

வடமுகத்தில்

வல்லிபுர அண்ணலும்பெண் நாகமுத்தென் மெய்த்திருவும்
நல்லபிள்ளை அன்னமுத்தென் செல்விகளும்—வல்லகுல
ராசசிங்க நாயகங்க ளோடுநீலப் பிள்ளைமன்னும்
ஈசனடி வைக இனிது!

மேற்படி கோபுரத்தில்

தெற்கே பார்த்தபடி நடுப்பாகத்தில்

அன்னமுத்தென் அக்காவின் அன்புக்குக் கைம்மாறும்
சின்னமிது செப்பவுயிர் வாழ்த்து!

மேற்படி கூத்தபிரரன் கோவிலில்
தம்பமண்டபமாய் அமைந்திருக்கும் சரஸ்வதி மண்டபத்தில்
எழுதப்பட்டிருக்கும் ஞாபகார்த்த வெண்பா

அருளம் பலமாடும் ஆனந்தக் கூத்தன்
அருளம் பலமாகத் தாயூர் — அருளம்
பலவள்ளல் தந்தான் சரசுவதித் தாய்பேர்
இலங்கிடவே இம்மண் டபம்.

மேலே சொல்லப்பட்டிருக்கும் ஸ்ரீ தம்பையா மடத்தில்
வரையப்பட்டிருக்கும் இரு வெண்பாக்கள்

வடக்குப் பாகத்தில்

தருமவான் எம்கடவுள் தம்பையா தந்த
தருமர்தம் தாய்தந்தை பேரில் — தருமமிகு
அன்னதானம் செய்ய அமைத்தளித்தார் இம்மடத்தை;
அன்னோர் அறம்வாழ்க நன்கு!

தருமப்பணிக் காரியாலயப்பாகத்தில்

சாற்றுசிறீ தம்பையா தர்மப் பணிநோக்கம்
சாற்றுதும்யாம் வம்மினெங்கள் சைவத்தைப்—போற்றிநன்கு
கல்வி வளர்த்துழவும் கைத்தொழிலும் ஊக்குவித்து
செல்வ விருத்திசெய்வாம் சேர்ந்து!

கூத்தபிரான் கோவில் மதிலில் எழுதப்பட்டிருப்பது

கூத்தனடி வைகுசின்னன் வேலுவள்ளல் இம்மதிலை
யாத்தமைத்துத் தந்தமைக்காய் நன்றி.

முன்னுளைய வயாவிளான் பலாலி தெற்கு ப. நோ. கூ. சங்கக் கட்டிடத்தில் எழுதப்பட்டிருக்கும் குறள் வெண்பாக்கள்

1. ஒருவருக்காய் எல்லேமும் எல்லோர்க்கு மாயொவ்
வொருவரும்நாம் ஒத்துழைத்துய் வோம்!

2. பன்னேக்கச் சங்கம் பருக்கின் சமதர்ம
நன்னேக்கம் விர்த்தியாம் நன்கு.

3. பாதுகா நல்வரம் பாகும் பிரமாணம்
பாதுகாக்கிற் பங்கமுறும் நாம்.

4. ஒழுங்கழியும் மக்கள் ஒருங்கழியக் கண்டே
ஒழுங்குமுறை போற்றீர் உவந்து!

5. தன்னலத்துக் காகப் பொதுநலம் பாதிப்போன்
எந்நலமும் கெட்டொழிவான் என்!

வயாவிளான் அஞ்சல் நிலையத்துக்குத் தெற்கேயுள்ளதும்,
வயாவிளான் – பலாலி சைவபரிபாலன சபையினருக்குத்
தருமசாதனம் செய்யப்பட்டுள்ளதுமான
"கூத்தனகம்" என்னும் புதிய கட்டிடத்தில்
கருங்கல்லில் வரையப்பட்டிருக்கும் ஞாபகார்த்தச் செய்யுள்

**நேரிசை வெண்பா**

பாவமின்றி வர்த்தகத்தால் பாடுபட்டுப் பேருழவால்
ஆவனதம் மக்களுக்கு ஆக்கிவைத்துப்—பூவிலுள்ளோர்
ஏத்தவாழ் வல்லிபுர ஏந்தலும்பெண் நாகமுத்தும்
கூத்தனடி சேர்க ஒருங்கு!

ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலையில்
எழுதப்பட்டிருக்கும் நித்திய நினைவுச் செய்யுள்

**நேரிசை வெண்பா**

கல்லடிவேற் பிள்ளை கவின்கொழிக்கும் ஆசுகவி
சொல்லரிய பத்திரிகை ஆசிரியன் — எல்லவரும்
போற்றும் இதிகாசன் பொற்பார்நுண் வாக்கியிசை
சாற்றுகவிப் பள்ளி தழைத்து!

தனது பாட்டன் முறையிலுள்ள வயாவிளான் வைத்தியர்

**திரு. மு. வயிரநாதன் அவர்களை**
**நினைவு கூர்ந்து பாடியது.**

நேரிசை வெண்பா

மானம் பராய்ப்பெரியோர் எழுதலம் யாத்தமைக்கு
ஆனசான்றெம் தெய்வஞ்சீ மாவென்பீர் — ஈனராண்ட
போதுமுத்து மாரி மனையுடையா ளாய்ச்சைவம்
பாதுகாத்த செய்திசொல்வீர் நன்கு.

அன்னியர்கள் தந்திமுகன் ஆலயத்தை வந்திடிக்க
இன்னல் இழைத்தவர்க்கு மானமொடு — மன்னுபிராய்
ஒன்றினடிப் பாகத்திற் தான்றோன்றி யாயெழுந்து
தன்மதங்கா செய்திசொல்வீர் தேர்ந்து!

தனது பேரன் முறையிலுள்ள

**வயாவிளான் திரு. அம்பலவாணர் வல்லிபுரம்**

அவர்களின் தருமப் போக்கைப்
பேரப்பிள்ளைகட்கு எடுத்துக் கூறியது

பொதுமக்கள் சுகம்கருதி வீட்டிலோர் விருந்தையும்
மாடாடு பருகநீர்த் தொட்டி யொன்றும்
இதமுறவே அமைத்ததுடன் மாவிட்ட புரக்கந்தன்
கார்த்திகை விழாவன்று அன்ன தானம்
அதிகசிறப் பாய்நடாத்தித் தேர்தீர்த்தத் தினங்களில்
சருக்கரைமோர் ஊறுகாய்த் தண்ணீர்ப் பந்தல்
இதமார நடாத்தியவென் தாயாரின் தாய்மாமன்
வல்லிபுர மன்னெவர்க்கும் நல்லப் பாவே!

மலாயா, குவாந்தன் உயர்தர உத்தியோகஸ்தரும்
தனது தாய் மாமனும் ஆகிய

**அமரர் திரு. ச. கணபதிப்பிள்ளை அவர்களை**
**நினைத்துப் பாடியது**

நேரிசை வெண்பா

நின்னினத்தை நின்பதியை நின்மதத்தை நின்மொழியை
எந்நாளும் பேணிநின்ற ஏந்தலே! — அன்னியராம்
யப்பானி யர்க்கெதிராய் எம்மனோர்க்கு ஆற்றுதொண்டு
செப்பரிய தொண்டென்பாம் தேர்ந்து.

முன்னாள் குவாலாலம்பூர் புகைரதப் பொறியியலாளரும், தம் அதிப்பிரிய வளர்த்தா(ய்)ச்சியின் மூத்த மைந்தனுமாகிய

**திரு. சி. கிருஷ்ணபிள்ளை அவர்களை விளித்துப் பாடியது**

நேரிசை வெண்பா

பெரியவிரு செல்வர்நம் வம்சத்தில் உண்டு;
பெரியபுள்ளி அன்னவருள் நீரே—பெரியண்ணே!
நீவிர்போம் போதுசெல்வம் நின்னோடு வாராமல்
பாவபுண்(ணி)யம் மட்டும் வரும்.

**தமது தமையன் திரு. வ. குலநாயகம் அவர்களின் மக்களது வண்மையைப் பாராட்டி வாழ்த்தியது**

நேரிசை வெண்பா

அண்ணரது மக்காள்! அரிய பெருமக்காள்!
அண்ணருயிர் சாந்தி அடைதற்கு — அண்ணியின்
சொற்கேட்டோர் தோட்டத் தரைதந்தீர் சொக்கனுக்கு;
மிக்கவருள் செய்வான் அவன்.

ஒன்றுவிட்ட சகோதரன், நீர்ப்பாசன உதவிப் பொறியியலாளர்

**திரு. த. சின்னராசா அவர்களின் அந்தியேஷ்டியிற் பாடியது**

நின்னரும் மனைவி மக்கள் நினைந்துனை உருகு கின்றார்!
மன்னிய மாமி மக்கள் மலாயாவில் வருந்து கின்றார்!
பன்னரும் சுற்றத் தார்கள் பரிதபிக் கின்றார் ஊரில்!
கன்னெஞ்சம் படைத்த அந்தக் கண்ணிலான் செயல்தான் என்னே!

கல்வியிற் பெரியர் நம்மூர்க் கணபதிப் பிள்ளை மக்கள்
செல்வமும் உத்தி யோகச் சிறப்புஞ்சந் ததியும் உள்ளார்
வல்லிபு ரத்தார் பேரன் வண்மையின் பயனென் றாரார்
சொல்லிட மகிழ்ந்த நாங்கள் துயர்க்கடல் மூழ்கல் ஏனோ?

கூத்துடைப் பிரானை அண்டிக் கோலமார் வீடு கட்டி
ஏத்துவேன் சென்று பாடி இயலும்போ தெல்லாம் என்றாய்
கூத்தனின் காதில் அச்சொல் குளிர்ந்திடக் கேட்டோ என்றும்
கூத்தினைக் கண்டு பாடக் குதூகலித் தழைத்தான் கூறே!

வயாவிளான், சிறந்த சிவதொண்டன்

**திரு. வன்னித்தம்பி நாகமணி அவர்களின் ஆன்மார்த்த வாழ்த்துப்பாக்கள்**

அறுசீர் ஆசிரிய விருத்தம்

கூத்துடைப் பிரானைத் தில்லைக் கோயிலில் வணங்கி வந்து
நாத்தழு தழுக்க அந்த நடனருட் திறமை கூறி
யாத்திரை செல்லச் செய்து இறுதியில் அவற்குக் கோவில்
யாத்திடத் தூண்டி நின்ற ஏந்தலை நினைவு கூர்வாம்!

அந்தணர் திலகம் என்ன அழகுசால் தோற்றம் உள்ளான்;
செந்தண்மை பூண்டு வாழும் சீலமார் வேளாண் சைவன்;
பந்தமா பாசம் நீக்கப் பரனல்லல் பலசெய் வேளை
சிந்தையைச் சிவத்தில் வைத்துத் திரிந்தனன் தலங்கள் தோறும்.

இன்னருள் தேடி ஈற்றில் எங்கூத்தன் கோவில் அண்டிக்
கன்னெஞ்சும் கசியச் சாலக் கனிசிவ புராண மாதி
இன்னிசை யோடு பாடி இன்றமிழ்ப் பூசை செய்வான்;
பன்னரும் அந்தப் பூசை பார்ப்பாரும் செய்கி லாரே!

இன்னணம் மாதப் பூசை நிகழ்த்தவோர் தோட்டக் காணி
நன்கொடை யாக எங்கள் நடேசற்குத் தந்த தோடு
தன்னரும் கமத்து நெல்லு பால்பழம் பயறு தேங்காய்
அன்புடன் கொணர்ந்து பொங்கி அத்தனுக் களிப்பான் நன்றே!

இத்தகு சாமி நாக மணியரில் லறத்து ஞானி
இத்தரை தனிலெண் செல்வம் எய்தியும் நிருத்தன் தாளே
நித்திய செல்வ மென்று நித்தமும் தொண்டு செய்தான்;
முத்தியெய் திடஅன் னேன்நம் முதல்வனை வேண்டு வோமே!

வயாவிளான் "தம்பையாச் சாமியார்" என விளங்கிய

## அமரர், திரு. ஆறுமுகம் சண்முகம் அவர்களைப் பாராட்டிப் பாடிய பாக்கள்

### நேரிசை வெண்பா

முருகா! முருகா! வருவாய்! அருள்வாய்!
முருகா! எனஇவர் இல்லோர் — முருக
வழிபாடு செய்ய வழிப்போக்கர் எல்லாம்
வழிபடுவர் சண்முகர்இல் பார்த்து!

சன்னுசி மார்க்கெல்லாம் சாமியார் தன்மனையில்
அன்னுதி நன்களிப்பார் அன்பார — இன்னுமிவர்
செல்வம் திகழ்ந்தொளிர்க தீரஇல்லார் அல்லலென
எல்லோரும் வாழ்த்த இனிது!

தந்திமுக னுக்கோர் திருமஞ் சனக்கிணறும்
நந்தவன முந்தந்த சண்முகனுர் — பந்தாடும்
முன்றிலொடு பள்ளிக்கும் காணிதந்தார்; வள்ளலிவர்
சென்றடைக கூத்தபிரான் தாள்!

நல்லாசிரியனும் நவிலரிய சமூகத் தொண்டனும்
ஸ்ரீ தம்பையா தருமப்பணிச் சபைத் தலைவருமாகத் திகழ்ந்த

## திரு. தம்பையா நடராசா அவர்களின் நினைவஞ்சலி

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

காந்திஜீ ஈழம் வந்த காலம்தொட் டன்ப ரோடு
காந்தீயம் போற்றி எங்கும் கருதரும் பணிகள் செய்தோய்!
காந்திஜீ விழாக்கால் கொள்ளும் காலத்தில் அதைக்கா ணுமல்
ஆழ்ந்ததுன் பத்தில் ஆழ்த்தி அகன்றமை முறைமை யன்றே !

நாட்டினுக் கியன்ற சேவை நயம்படப் புரிந்து கல்வி
ஊட்டிய இளைஞர் தம்மை உயர்ந்தபண் பாடு பக்தி
வாட்டமில் சேவை உள்ளம் வாய்ந்தநல் மாந்த ராக்கி
நாட்டினுக் களிநின் தொண்டு நவின்றிடும் பான்மை யன்றே!

வாலிபர் சங்க மூலம் வயவையைச் சிறக்கச் செய்யும்
சீலமார் தொண்டர்க் கெல்லாம் செப்பரும் தலைவ னுகிச்
சாலவே உழைந்த சான்றேய்! தன்னிக ரிலாநின் சேவை
ஞாலமுள் ளளவும் மக்கள் ஞாபகத் தொளிரு மன்றே!

தாரினிற் தமிழும் சைவ சமயமும் புரக்கும் தொண்டும்
பாரினிற் கல்வி ஞானம் பரப்பிடும் சிரேட்ட தொண்டும்
சீரெய்தி எவரும் வாழச் செய்குநற் தொண்டும் செய்ய
ஊரில்நின் தமையன் மாரை ஊக்குநன் இனிமேல் யாரோ?

கடவுளர் குலத்து வந்தோர் கடவுளைக் கஷ்ட மின்றி
அடைவரென் றூரார் சொல்வர்; அதற்குநல் மேற்கோ ளான
நடம்பயில் கடவுள் நாமி! நாமுமவ் விறையை அங்ஙன்
அடையநின் குடும்ப மக்கள் அனுசரி மர்மம் கூறே!

வயாவிளான் ஆசிரியை,

## திருமதி போன். இராசநாயகம் வள்ளியம்மையின் நினைவு தினத்தன்று பாடியது

வள்ளியம்மை ஆசிரியை வண்மனத்தள் மங்கையர்கள்
நள்ளுதையல் பின்னல் நயந்துகற்க — விள்ளருமிக்
கட்டிடத்தை யாக்கபரன் மத்திய நூல்நிலையக்
கட்டிடமாய் மாற்றுகின்றுன் காண்.

செம்மனத்தோ(டு) எப்பணியைச் செய்தாலும் அச்சேவை
செம்மையுறும் பன்மடங்கு சீர்பொலிந்து — எம்மூர்வாழ்
மாதர்முன் னேற்றச்சங் கத்தலைவி வள்ளியம்மை
மேதினியிற் செய்தவெல்லாம் மேல்,

வயாவிளான் காலம் சென்ற

## திரு. காசிப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டியின் போது பாடியது

*பாவநாசம் செய்யும் பரமேஸ் வரன்பெயரை
நீவீர்நின் மைந்தனுக்குச் சூட்டியதில் — பாவநாசம்
எய்தும் விழைவுகண்டோம்; இன்றது கைகூடி
எய்துக முத்தி இனிது!

தக்கார் தகவிலார் என்ப(து) அவரவர்தம்
மக்களாற் காணப் படுமென்சொல் — எக்காலும்
பொய்யா மொழிஎனவோர் புத்திரனைப் பெற்றெடுத்தீர்!
மெய்யாரச் சான்றோனே நீ!

பன்றிபல குட்டி பயந்திடுதல் போலன்றிக்
கன்றென்று ஈனும் கரிநிகர்த்து — நன்றொளி
காலும் கலாநிதியைத் தந்துசெல்வோய்! நின்மைந்தன்
சீலமுற மேலும் திகழ்ந்து.

*பாவநாசசிவம்

விகடத்துணுக்கு வேள், நகைச்சுவை அரசு

## வயாவிளான் கல்லடி திரு. க. வேலுப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து வியந்து பாடியது

கோட்டினிலே கல்லடிவேள் குறும்பொன் றுக்காய்க்
கொண்டுவரப் பட்டுள்ளார் என்னும் செய்தி
நாட்டினிலே பரவிடவும் திரண்டு கூடி
நல்விகடத் துணுக்குகளை மக்கள் கேட்டு
நாட்ட(ம்)மிகக் குலுங்கவுடல் நகைக்க ஆங்கே
நீதிபதி யுடன்நியாய வாதி மார்கள்
வாட்டமுற்றுத் தலைகுனிவர் என்றால் நின்றன்
மதிநலத்தை நகைச்சுவையை வரைவார் யாரே?

முன்னாள் வயாவிளான் உப அஞ்சல் நிலைய அதிபர்

## திரு. ஆ. சரவணமுத்து அவர்களை நினைவுகூர்ந்து பாடியது

நேரிசை வெண்பா

முன்னாளில் நம்மூர்த் தெருக்கள் இருமருங்கும்
நன்னிழற் கன்றுகள் நாட்டினோம் — மன்பதையின்
துன்பம் துடைக்குமரும் தொண்டின் முதற்பாடம்
என்பாம் அதனை யுலர்க்கு!

---

## ஆறும் வேற்றுமையும் இன்னென்னும் புத்துருபும்

ஆறும் வேற்றுமை உடைமைப் பொருளுணர்த்தும்
அதுஎன்னும் உருபொடு இன்என்னும் சாரியையைப்
புதிய உருபாக ஏற்றிடுதல் நன்றாகும்.

முன்னாளைய வயாவிளான் வாலிபர் சங்கச்

**செயலாளர், திரு. சே. சின்னத்துரை அவர்களினதும் பொருளாளர், திரு. கு. வல்லிபுரம் அவர்களினதும் பழமரும் சேவைநலம் பாராட்டல்**

**நேரிசை வெண்பா**

இந்நாளிற் போலன்றி முன்னுள்மெய் ஊர்த்தொண்டு
நன்குபுரி வாலிபர் சங்கத்தீர்! — எந்நாளில்
யாரிறப்போம் என்பதறி யோமெனவே ஏகமுன்னர்
பாராட்டு கின்றும்நும் தொண்டு.

1968ஆம் ஆண்டு முன்னுள் முடிக்குரிய வழக்கறிஞர்

**திரு. வீ. நவரத்தினராஜா, J. P., U. M. அவர்கள் மறைந்தபோது பாடியது**

**கட்டளைக் கலித்துறை**

நவரத்ன ராஜாவென் நண்பனே! நாயினேன் முன்புசெய்த
பவத்தினுற் சோதரர் தம்மோடு நீவிரும் செல்லலுற்றீர்!
அவனியிற் கால்வலி இல்லான் இழந்தான் வலக்கரமும்;
கவன்றியான் நின்னுன்ம சாந்திக்குக் கூத்தனே வேண்டுதுமே!

1962ஆம் ஆண்டில் முன்னுள் யாழ்ப்பாணச்
சைவபரிபாலன சபைச் செயலாளர்

**வழக்கறிஞர், திரு. ஆ. தனபாலசிங்கம் அவர்கட்குப் பாடி அனுப்பியது**

**எண்சீர் ஆசிரிய விருத்தம்**

தனபால சிங்கமென்னும் யாழ்ப்பாணச் சைவபரி
பாலனம்செய் சபைச்செய லாளா! நண்ப!
நினதுசபை யாப்பியலை விரிவுசெய்தெச் சைவனுமே
நிருவாக சபைதன்னில் இருந்து நன்கெம்
கனவானும் ஆறுமுக நாவலர்முன் அமைத்திடவே
கருதிநின்ற சைவமிஷன் போலொன் றுக்கி
மனமாரத் தொண்டாற்ற வசதிகள் உண்டுபண்ணி
வையகத்திற் சிவமதத்தை வளர்ப்பாம் நாமே!

முன்னுள் காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சு
நிரந்தரக் காரியதரிசியும், செப்பரிய சிவதொண்டனும் ஆகிய

**சைவத்திரு. மயில்வாகனம் ஸ்ரீகாந்தா அவர்களின் ஈமக்கிரியையிற் பாடியது**

**நேரிசை வெண்பா**

இந்துக் கலூரியிலும் சர்வகலா சாலையிலும்
என்னுடன் கற்றுயர்ந்தோய்! என்னிலும் — இந்துமதம்
போற்றுதொண்டர் யாவருக்கும் ஆவநன்கு செய்தசெம்மால்!
ஆற்றுகிலம் கைம்மா றுமக்கு!

யோகர் சுவாமிகளும் ஆறுமுக நாவலரும்
தாகமுடன் தாய்நாட்டுச் செய்திகேட்கின் — வேகமாய்ச்
சிங்களர்தம் புத்தம் பரப்புகின்ருர் இந்துக்கள்
தங்கோவில் தம்மையழித் தென்!

கொழும்பு சருவகலாசாலை ஐக்கிய மாணவர் விடுதி மனேச்சர்

**வயாவிளான் திரு. கா. ஆறுமுகம் அவர்களை வியந்து பாடியது**

**வெண்பா**

கொழும்பில் வயாவிளான் வாலிபர் சங்கக்
கிளையொன்று தாபித்துச் செவ்வன் — இழுவண்டி
வாங்கியதை வாடகைக்கு விட்டுப் பணம்சேர்த்தீர்
ஈங்குநம் ஊர்திருத்த நன்கு.

முன்னுள் மாத்துறையிலும் பின்னுள் நம் வயாவிளானிலும் வணிகசீலனுகவும், பாஷாபிமானியாகவும், இனுபிமானியாகவும் விளங்கிய

**திரு. மு. வல்லிபுரம் அவர்களை நினைத்துப் பாடியது**

**நேரிசை வெண்பா**

மாத்துறையில் உங்கள் கதிர்காமத் தொண்டரவை
யாத்திரீகர்க் குச்செய்மா தொண்டுகண்டேன்—ஏத்தரிய
கந்தவேள் ஆலயத்தில் புத்தர்செல் வாக்குமிஞ்சி
இந்துக்கள் செல்லல் *குறைவு.

* இலக்கண நுணுக்கா 'அரிது' எனப் பாடம் கொள்ளலாம்

முன்னுள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர்

**வருத்தலைவிளான் திரு. இ. த. சீவரத்தினம் அவர்களை நினைத்துப் பாடியது**

**நேரிசைவெண்பா**

என்னைச் சிறுவயதில் ஊக்குவித்துக் கற்பித்த
நின்னையின்றும் நன்கு நினைப்பதுண்டு—பின்னுளில்
என்னைக் கிராம சபைத்தலைவ னுய்த்தேர்ந்து
நின்னூர்க்குச் செய்வித்தீர் தொண்டு.

பகரரும் பாஷாபிமானியும், இனுபிமானியும் ஆகிய
ஒட்டகப்புல முறிவுநோ வைத்தியர்

**திரு. அ. சந்தியாப்பிள்ளை அவர்களின் இறுதி யாத்திரை குறித்துப் பாடியது**

**அறுசீர் ஆசிரியவிருத்தம்**

சமர்த்தரின் தனயன் தாரிற் சந்தியாப் பிள்ளை என்போன்
தமிழ்மொழிஅமிழ்தம்என்போன் தமிழினப்பற்றுவாய்ந்தோன்
தமிழர்க்குக் குறைந்த பட்சம் சமட்டியல் வேண்டும் என்போன்
அமரனுய்ச் செல்லு கின்ருன்; அஞ்சலி செய்வோம் நாமே!

முன்னாள் தந்தித் தொலைபேசி மேற்பார்வையாளரும்,
தமது உடன் மாணவனும், நீண்டகால நண்பனுமாகிய
குரும்பசிட்டி, திரு. கதிரிப்பிள்ளை சுந்தரமூர்த்தி
அவர்களை நினைத்துப் பாடியது

சுந்தரா! என்றன் நெருங்கிய நண்பனே!
சந்தித் திலமிறுதிக் காலத்தில் — இந்தமண்ணில்
யாருக்கு என்னகுறை எப்பொழுது எவ்வண்ணம்
நேருமென யாரறிவார் முன்பு?

ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலைத் தலைமையாசிரியரும்
முன்னாள் வயாவிளான் – பலாலி
கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவருமாகிய

**திரு. சி. இராமலிங்கம் அவர்களை விளித்து மனம்நொந்து பாடுவது**

நங்கிராம முன்னேற்றச் சங்கமண்ட பத்தையிந்நாள்
எங்களாதி நோக்கங்கள் கைவிட்டுத் — தங்களது
சொந்தநல னுக்காய் உபயோகிக் கின்றார்கள்
அந்தோ! அறிவுவளர்க் காது.

முன்னாள் புன்னாலைக்கட்டுவன் ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர்

**திரு. க. க. சுப்பிரமணியம் அவர்களை நினைத்துப் பாடியது**

**கலிவிருத்தம்**

இலவசநற் கல்விபிதா தம்மனோர்க்கு நீரென்று
இலவசமாய் நின்னிடம்கல் உத்தியோகர் ஏத்துகின்றார்;
இலவசக் கல்வியிந்நாள் பிரத்தியேக உழைப்புன்னி
கலூரிதனிற் கற்பிக்கா உபாத்திமாராற் கெடுகு'தையோ!

முன்னாள் உதவிக் கூட்டுறவுப் பரிசோதகரும்
பின்னாள் பலாலிக் கிராமாதிகாரியும் ஆகிய தம்பியார்

**திரு. சி. தியாகராசா அவர்களுக்குச் சொல்லிய சற்புத்தி**

கெட்டித் தனத்தோடு மக்களுக்குத் தொண்டுசெய்யும்
சிட்டனாய் நீதிகழ வேண்டும்காண் — பட்டத்து
மன்னன் இறைவன் பிரதிநிதி ஆவனெனின்,
அன்னவனே நீயும் அறி!

முன்னாளைய கிராமமுன்னேற்றச் சங்கக் காரியதரிசி

**திரு. சே. சுப்பிரமணியம் அவர்களை நினைத்துப் பாடியது**

வாசிக சாலை அமைத்திட நீரும்நின்
நேசன் உலகநாத னும்நானும் — மாசுவிளை
தன்னலமில் லாமற் பகலிரவு பாடுபட்டோம்;
நன்றுங்கள் தொண்டார்வம் அன்று!

அண்ணாமலை ஆதீனம்,

## தவத்திரு குன்றக்குடி அடிகளின் சாற்றரும் சேவையை நயந்து வியந்து வாழ்த்தியது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

தமிழ்மொழியும் சிவமதமும் காக்கமுயல் கின்றபழம்
ஆதீனம் தமிழ்நாட்டில் அனேகம் உண்டு;
தமிழ்சைவம் திகழ்வதற்குத் தமிழினத்தோர் சமதர்மம்
பேணிநன்கு தழைத்தொளிர வேண்டு மென்றே
அமிழ்தனைய சொற்பொழிவு தமிழ்கூறும் நல்லுலகம்
எங்குமாற்றிக் கட்டுரைநூல் பிரசு ரித்தும்
தமிழ்நாட்டு மேற்சபை தனிலிருந்தும் மதம்மொழிகா
தவத்திருவே! வாழ்கநின்றன் தொண்டு நன்றே!

நீர்வேலி தந்த நிகரில்லாத் தொண்டனும்
நீண்டகாலக் காந்தீய நேயனுமாகிய

## திரு. சி. வேலாயுதபிள்ளை அவர்களை விளித்துப் பாடியது

### நேரிசை வெண்பா

வேலா யுதபிள்ளை என்னுநற் காந்தீயச்
சீலனே! பாகவத மாணவனே! — ஞாலத்தில்
சாற்றரும்நல் லட்சியத்தைச் சாகவேண்டி நேரிடினும்
போற்றிடுவோம் ஈறுவரை நாம்!

தோலகட்டி ஆச்சிரமம் தொண்டார் கிறிஸ்துசங்கம்
போலொன்று ஆக்கிடுவோம் சைவருக்கு! — சாலக்
கணபதிப் பிள்ளைக் கலாநிதி போன்றோர்
பணம்சேர்த்துத் தந்திடுவார் நன்கு.

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவிலதிபர்,

## சட்டத்தரணி, திரு. சி. இராசேந்திரம், J. P. அவர்களையும்

வட்டுக்கோட்டை மாவடிக் கந்தசுவாமி கோவில் மனேச்சர்

## சட்டத்தரணி திரு. ந. ஏகாம்பரம், J. P. அவர்களையும் பரிவாக வேண்டிப் பாடுவது

### நேரிசை வெண்பா

தீண்டாதார் தம்மையெல்லாம் ஆலயத்துட் செல்லவிட்ட
ஆண்டகைமை வாய்ந்தவென்றன் அன்பர்காள்! — தீண்டாதார்
தம்மைத் திருவிழாச் செய்ய அனுமதித்தல்
நும்போன்ற சான்றோர் கடன்.

## அங்கவீனருக்கு ஆவன செய்தல்

கலித்துறை

அங்கவீனர் ஆண்டாக அனைத்துலகும்
கொண்டாடும் ஆண்டிதனில்
அங்கவீனன் சென்றமகா யுத்தமகான்
உறூஸ்வெல்ற்றை அகத்திலெண்ணி
அங்கவீன ருக்கிறைஈ மேலதிக
வரமுன்னிச் சமூகத்தின்
அங்கத்த வராய்க்கருதி அவர்க்காவ
செய்துபலன் அடைகுவோமே!

வயாவிளான் உத்தரிய மாதா கோவிற் பாக்கத்தினர் மரப்பாவைகளை இயக்கிக்காட்டும் பாசுத் (Passion Show) திறனை நயந்து பாராட்டியது

நன்னூரிற் பூட்டிய சூத்திரப் பாவையினைப்
பன்னுதமிழ் நூல்களிற் பார்த்ததுண்டு — பன்னரிய
யேசுக் கிறிஸ்துதுயர் காட்டுமதி வல்லீர்! உம்
பாசுமிகப் பாராட்டற் பாற்று!

## தக்க, தகாத விவாகங்கள்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

தம்பதிகள் தம்பெற்றோர் சம்மதத்தோ டேசெய்யும்
காதல்மணம் நன்றெனயான் ஒத்துக் கொள்வேன்;
தம்பதிகள் சம்மதத்தோ டேபெற்றோர் ஒழுங்குபண்ணும்
விவாகமுமே நன்றாகும் எனயான் சொல்வேன்;
தம்பதிகள் பெற்றோரின் சம்மதமின் றிச்செய்யும்
காமமணம் பெரும்பாலும் பிழைக்கும் என்பேன்;
தம்பதிகள் வயதுசக்தி குணம்அழகு ஒழுக்கநலன்
என்பவெண்ணி வெறுத்துநிற்கும் வதுவை பாழே!

## காதல் அல்லது சாதல்

நேரிசை வெண்பா

காதலின்றேல் சாதலென்னும் கன்னியர்காள்! காளையர்காள்!
காதலென்னும் கண்ணுடி வர்ணத்து — ஆதலினால்
பெற்றோரின் சொல்லையும் பேணி முடிவுசெய்க
வெற்றியுற வேண்டின் மணம்.

# கயவனும் கன்னிகையும்

## கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கடற்கரை தன்னிற் திங்கள் கதிர்விரித் திலங்கு மோர்நாள்
நடந்துயான் இளைத்தோர் கல்லில் நலிவுடன் இருக்கும் வேளை
மடக்கொடி ஒருத்தி சேணில் அரற்றிடக் கேட்டேன் அன்னாள்
படமுடி யாத துக்கம் பயந்தனள் புலம்பல் கேளீர்!

'ஐயகோ; என்னை இந்த அவனியில் யார்தான் ஏற்பார்?
பொய்யுரை கூறி என்றன் கற்பினை அழித்தான் புல்லன்!
மெய்யென அதனை நம்பி வேசியான் மோசம் போனேன்!
ஐயனும் அடியாட் கிந்த அதோகதி விதிக்க லானான்!

பாதகன் முதலில் என்னைப் பார்த்தநாட் தொட்டு மிக்க
காதலால் வருந்தி நின்றான்; கனியவென் இதயம் தானும்
தீதிலா முறையிற் சின்னாள் சேர்ந்துரை யாடி வந்தேன்;
காதலாம் அனலை அந்தக் கயவனும் வளர்த்திட் டானே!

உண்மையில் உன்னைப் போல உலகிலோர் பெண்ணைத் தானும்
கண்கொண்டு பார்த்த தில்லை! கண்மணி! முதலில் உன்னைக்
கண்டதும் காதல்கொண்டேன்! கடிமணம் உனையான் செய்வேன்!
தண்கடல் மதியம் சாட்சி! சத்தியம் இதுகாண்! என்றான்.

தந்திரி என்னை யோர்நாள் தனியிடம் அழைத்துச் சென்று
சந்திரன் தன்னைத் தாவும் தண்கடல் வேட்கை கூறி,
சுந்தர வதனி! பாராய்! சுகம்பெறு முறைமை என்று
அந்தர விரகோ டென்னை அணைத்தனன் ஆவி சோர்ந்தேன்!

கொஞ்சியாம் இந்த வண்ணம் குலாவிடும் காலம் தன்னில்
பஞ்சினில் நெருப்பும் போலப் பண்டியிற் கருவா யிற்று;
நெஞ்சினிற் கபட மின்றி நீசனுக் கதனைச் சொன்னேன்;
வஞ்சகன் எங்கோ என்னை வருந்திட விட்டுச் சென்றான்.

மாதமும் நான்கு காத்தேன் வந்தெனைச் சேர்வா னென்று;
பாதகன் வருவ தில்லை! பழியுரை தீர்ப்ப தில்லை!
மேதினி தன்னில் உள்ளோர் வேசியென் றிகழ்வர் என்னை!
ஆதலின் உயிர்யான் வாழ்தல் அழகிலை இனிமேல்!' என்றாள்.

தீங்குரல் தனிலிவ் வண்ணம் சேயிழை புலம்பக் கேட்டுத்
தாங்கொணாத் துயர முற்றுத் தடுக்கயான் போக் முன்னம்
ஆங்கவள் கடலில் வீழ்ந்தாள் அவளுயிர் காக்க நாயேன்
வீங்குநீர் தன்னில் வீழ்ந்து நீந்திட இயலேன் அந்தோ!

—''ஈழகேசரி'' 24-7-55

# குருட்டுப்பையன் பாட்டு

[இது, திரு. C. கிபர் என்னும் ஆங்கிலப் புலவர் இயற்றிய "The Blind Boy" என்னும் செய்யுளின் மொழிபெயர்ப்பு]

எளியேன் இம்மையில் என்றும் சுகியா
ஒளியென நீவிர் உரைப்பதெத் தகைத்து?
பார்வை இலாவிப் பையற்கு நீவிரப்
பார்வையின் பாக்கியம் பகரவொண் ணுதோ?
பொற்புடைக் காட்சி பற்பல கண்டாங்கு
அற்புதம்! அற்புதம்!! எனப்பகர் கின்றீர்.
இரவி பிரபையோ டிலங்'கிருள் என்கிறீர்.
இஃது எங்ஙனம்? இவ்வுரையே அற்புதம்!
யானறிந் தளவிற் சூடே உடையன்.
இனிநீர்
இராப்பகற் கிவனே காரணன் என்கிறீர்.
இராப்பகற் கிவனே காரண னுயின்,
இவன்செயல் எங்ஙனம் நிகழு'து கூறீர்!
பாவியற்கோ இவ்விரு பாகுபா டில்லை.
எப்போ 'துயில்வனே அப்போ' என்னிரா.
எப்போ' விழித்தியான் விளையாட் டுறுவனே
அப்போ' தெனது அரும்பகல் வேளை.
எத்துணை காலம் நித்திரை ஒழிவனே
அத்துணை காலம் அனைத்தும் பகலாம்.
இனிநீர்
பெருமூச் செறிந்தென் துர்விதி நோவீர்.
பெருமூச் செறியக் காரணம் எவன்கொல்?
நானறி யாக்குறை நான்சகிக் கேனே?
நானறிந் தாலன்றே நண்ணும் பெருந்துயர்?
ஆதலால்,
பெறமுடி யாதவோர் பேற்றினை நினைத்துப்
பெறற்கரும் மனச்சந் தோஷம் இழக்கேன்!
குருட்டுப் பையன் எனநீர் கூறினும்,
பாட்டுநான் பாடுங்கால் பட்சிபோல் என்மனம்
வாட்ட மின்றி வானுறப் பறக்கையில்
நீடிலை எனக்கு நீணில வேந்தருமே!

(இது 5-8-34இல் "ஈழகேசரி" யில் வெளிவந்தது)

# புதிய சுலப திகதி அமைப்பு முறை

மனிதன் சிரமத்தைச் சுருக்க விரும்புபவன். அதுகாரணமாக அவன் புத்தம்புதிய இயந்திரங்களையும் சிரமத்தைச் சுருக்கும் மற்றும் வழிவகைகளையும் கண்டுபிடித்துக் கையாண்டு வருகின்றான். இந்த வகையிலேயே உலகம் முழுவதும் பிரெஞ்சுநாட்டு நீட்ட லளவை, நிறுத்தலளவை, முகத்தலளவை அனுசரிக்கப்படுகின்றன.

இந்தச் சிரமச் சுருக்க வழியில் நாங்கள் மாதம், வாரம், திகதி முதலியவற்றையும் மாற்றி அமைத்துக்கொள்ள ஒரு வழி உண்டு. அஃதாவது, 365 நாட்களைக் கொண்ட சாதாரண வருட மொன்றை 28 நாட்கள் கொண்ட 13 மாதங்களாகப் பிரித்து, 365ஆம் நாளைக் கிழமைப் பெயரில்லாத சர்வதேச விடுதலை நாளாகக் கொண்டாடலாம். 4 வருடத்துக்கு ஒருமுறை 366 நாட்களைக் கொண்ட லீப்பியர் வருடம் வரும்போது, 365ஆம் நாளுடன், 366ஆம் நாளும் கிழமைப் பெயரில்லாத சர்வதேச விடுதலைநாளாகலாம். (விரும்பினால், இந்நாட்களைந் தேவகிழமை என்னலாம்)

மேற்கூறிய 28 நாட்களைக்கொண்ட அஃதாவது 4 வாரங்களைக் கொண்ட மாதமொவ்வொன்றிலும் 1ஆம், 8ஆம், 15ஆம், 22ஆம் திகதிகளை ஞாயிற்றுக்கிழமையாகவும், 2ஆம், 9ஆம், 16ஆம், 23ஆம் திகதிகளைத் திங்கட்கிழமையாகவும், 3ஆம், 10ஆம், 17ஆம், 24ஆம் திகதிகளைச் செவ்வாய்க்கிழமையாகவும், 4ஆம், 11ஆம், 18ஆம், 25ஆம் திகதிகளைப் புதன்கிழமையாகவும், 5ஆம், 12ஆம், 19ஆம், 26ஆம் திகதிகளை வியாழக்கிழமையாகவும், 6ஆம், 13ஆம், 20ஆம், 27ஆம் திகதிகளை வெள்ளிக்கிழமையாகவும், 7ஆம், 14ஆம், 21ஆம், 28ஆம் திகதிகளைச் சனிக்கிழமையாகவும் சர்வதேசத்தினரும் ஒருங்குகூடி நிர்ணயித்துக்கொண்டால், திகதி அட்டவணைகளின்றி எந்தக் கிழமைக்கும் அதற்குரிய திகதியையும், எந்தத் திகதிக்கும் அதற்குரிய கிழமையையும் சுலபமாகக் கண்டுபிடித்துக் கொள்ளலாம். உதாரணமாக, முதலாம் வாரப் புதன்கிழமை என்றதும் அதற்குரிய திகதி 4ஆந் திகதியென்றும், 2ஆம் வாரப் புதன்கிழமை என்றதும், 4உடன் 7ஐக் கூட்டி 11ஆந் திகதியென்றும் சுலபமாகச் சொல்லிவிடலாம்.

மேற்கூறியவண்ணம் ஒரு மாதத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கையை 28ஆகக் குறைக்கும்போது, 29ஆம், 30ஆம், 31ஆம் திகதிகளிற் பிறந்தவர்கள் தங்கள் ஜெனனதினக் கொண்டாட்டத்தை எப்போது கொண்டாடுவது என்னும் கேள்வியைச் சிலர் எழுப்பக்கூடும். அதற்கு நாம் கூறுவது என்னவெனில், உலகில் உள்ள எல்லாப் புதிய மாற்றங்களுக்கும் இத்தகைய அற்ப பிரச்சினைகள் எழுவது சகசமாகும். இப்பிரச்சினைகள் கொஞ்சக் காலத்துக்குத்தான் (கூடியபட்சம் 100 ஆண்டுகட்கு மட்டும்) நிலைக்கும். அதுவரைக்கும் மேற்சொல்லிய 3 திகதிகளிலும் பிறந்தவர்கள் தங்கள் ஜெயந்தியைப் பொதுநலம் கருதி 28ஆந் திகதியிற் கொண்டாடலாம் என்க.

இறுதியாக, புதிதாக உண்டாக்கப்படும் பதின்மூன்றும் மாதத்துக்கு என்ன பெயரிடுவது என்னும் வினா எழும். அதனைச் சர்வதேச மக்களும் ஒருங்குகூடி நிச்சயித்துக்கொள்ளலாம். இக் கடமையை ஐக்கிய நாட்டுச் சபையிடம் விடுதல் புத்தியாகும். விரும்பினால், புதிய மாதம் (Nova Mensis or New Month) எனப் பெயர் சூட்டலாம்.

# கற்பகதரு விருத்தியும்
# மற்றும் பயன்தரு மரங்கள் வளர்த்தலும்

மரங்கள் காய் கனி அளிப்பதனாலும், தச்சுவேலைக்குப் பயன் படுவதனாலும், தண்ணிழல் தருவதனாலும், முகில்களைக் கவர்ந்து மழைவீழ்ச்சியைக் கூட்டுவதனாலும் உலகெங்கும் மக்களால் போற்றி வளர்க்கப்படுகின்றன.

அவற்றுள், பனை எளிதில் எத்தகைய காணியிலும் உண்டாகக் கூடிய ஓர் அகவளர் விருட்சமாகும். இஃது அளவிறந்த பயன்கள் நல்குவதால் கற்பகதரு எனப் பெரியோரால் கனம் பண்ணப் படுகின்றது. உண்மையில், வடமாகாணம் போன்ற வரண்ட பிர தேசங்களுக்குப் போதியளவு நீர்வள நிலவளத்தைக் கொடாத குறையை நிவர்த்திசெய்யும்பொருட்டு, ஆங்கு வாழும் மக்களுக்கு இயற்கை அன்னை நஷ்டஈடாக இவ்வுயர்தர விருட்சத்தை உவந் தளித்துள்ளாள் என்பர் ஆன்றோர். இதன் அநேக பயன்களுள், பனம்பழம், பனாட்டு, கிழங்கு, புழுக்கொடியல், ஒடியற்கூழ் என்பன சகல நோய்களுக்கும் மூலகாரணமாகும் மலச்சிக்கலை நீக்குமென்றும், அவற்றுள்ளும் பனங்கனி உண்ணுவோரைக் காச நோய் சிறிதும் தாக்குவதில்லையென்றும், கள்ளுத்தானும் உஷ்ண வியாதிகளுக்கு அளவறிந்து மருந்துபோல உபயோகிக்கற்பால தென்றும் காலம்சென்ற பிரசித்த வைத்தியக்கலாநிதி S. C. போல் அவர்கள் கூறுவர். இவைமட்டுமன்றி, பனைமரம் வீட்டுக் கூரை வேலைக்கு மிகவும் உகந்ததாகும். உண்மை இங்ஙனம் இருப்ப, பனைமரங்களையெல்லாம் இப்பொழுது எம்மனோர் தறிக்கின்றார் களேயன்றி, பனையை அபிவிருத்தி செய்யாமை மிகவும் வருந்தத் தக்கதொன்றாம். ஆகவே, இலங்கைக் காந்தி சேவா சங்கத்தினரும், யாழ்ப்பாணம் பால்வெள்ளைச் சவர்க்காரத் தாபத்தினரும், பனம் பொருள் அபிவிருத்திப் பகுதியினரும் காலத்துக்குக்காலம் புகன்று வரும் சற்புத்தியைக்கேட்டு, இவ்வருடம் பனம் பாத்திகள் போடப் படுமுன், வடமராட்சி, தீவுப்பகுதி போன்ற இடங்களுக்குச் சென்று, பணம் கொடுத்தாயினும் பனங்கொட்டை வாங்கி, கள்ளி வேலி அல்லது முட்கம்பிவேலி அமைத்து, பொதுவாக வீணே கிடக்கும் காணிகள் அனைத்திலும், சிறப்பாக மலேரியா காணப் படும் குடியேற்றங்களிலுள்ள மேட்டுக் காணியின் ஒரு பகுதி யிலும், ஆறு முழத்துக்கொன்றாக விதையிட்டுப் பன்றி, ஆடு, மாடு முதலிய மிருகங்கள் சேதம் விளைக்காவண்ணம் கவனமாகப் பேணிவளர்க்கும்படி இந்நாட்டன்பர்கள் அனைவரும் இதனாற் தயவாக வேண்டப்படுகின்றனர்.

அடுத்தபடியாக, காலம்சென்ற, சட்டசபை அங்கத்தவர், கனம் க. பாலசிங்கம் அவர்கள் நல்லாலோசனை கூறியாங்கு, எமது வெறும் காணிகளிலெல்லாம் நல்லின ஒட்டு மாமரங்களையும், சென்ற இருபது வருட காலமாக எமது வயாவிளான்—பலாலி சமூக சேவா சங்கத்தினர் போதனை, சாதனை மூலம் இந்நாட்டு

மக்களைத் தூண்டி நிற்கும் வண்ணம், நீர் வசதியுள்ள கல்லில்லா இடங்களில் தோடை, எலுமிச்சை, மாதுளை, நெல்லி, சம்புநாவல், கொய்யா, சீமைஇருப்பை, பலா, தொறியான் முதலிய கனிமரங் களையும், நீர்வசதியுள்ள மக்கித்தரைகளில் தென்னை, கொடி முந்திரிகை, வில்வம் முதலியவற்றையும், கரையோரங்களில் தென்னை, காட்டுமுந்திரிகை முதலிய தருக்களையும், கல்விடையிட்ட நீர்வசதியில்லாக் காணிகளில் முருங்கை, நாவல், விளாத்தி, இலுப்பை, புளி, வேம்பு, பாலை முதலியவற்றையும், தெரு வோரங்களில் தண்ணிழல்கருதி, ஆல், இத்தி, அரசு, மருது, உண்ணுட்டு வேம்பு, சீமை வேம்பு, வாகை, சீமையொதி, நிழல் வாடி முதலிய விருட்சங்களையும், ஊர்ப்புறத்தே இருக்கும் கல் லடர்ந்த காணிகளில் (மேற்சொல்லிய மரங்களைச் சிறுபராயத் தில் அழிக்காவண்ணம் வீடு வாயில்களில் கட்டிவளர்க்கவேண்டிய) வெள்ளாடுகளின் தீனிக்காக, இத்தி, ஆல், சீமைக்கிழுவை, வாத நிவாரணி, பூவரசு முதலிய மரங்களையும் அபரிமிதமாக உண்டு பண்ணுதல் நாட்டுநலம் கருதி நாம் செய்யவேண்டிய அதிமுக்கிய கடமையாகும்.

இங்ஙனம்
இத்துறையிற் போதிய ஈடுபாடுள்ள
வயாவிளான்-பலாலி சமூக சேவா சங்கத்
தலைவர் வ. இராசநாயகமும்
காரியதரிசி யோ. அருளானந்தமும்

---

## கூத்தபிரான் அறம்காவல் மன்றத்துக்குச் சென்றுண்டு எழுதப்பட்டுள்ள தருமசாதனம்

இல. 32423 உறுதிவரைஞர்
2–9–1981 பூ. இளையதம்பி

இச்சாதனம் எவரெவர்பாற் சேரற் பாலதோ அவரவர்க்கெல் லாம் யாழ்ப்பாண மாவட்டம். வயாவிளான் வல்லிபுரம் இராச நாயகம் ஆகிய நான் எனது மங்கல வாழ்த்துக் கூறுகின்றேன்.

இதன்கீழ் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1945ம்ஆ ஆவணிமீ 1ஆம்உ உறுதிவரைஞர், திரு. பூ.இளையதம்பி அவர்கள் முன்னிலையில் 1807ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதியுறுதிப் படியும், நெடுங்கால ஆட்சிப்படியும் எனக்குரியனவாதலாலும்,

எனது குடும்பத்தினரின் நித்திய நன்மை விருத்தி கருதி ஆவன செய்யவும், மற்றும் பொதுநலம் கருதிச் சீவசேவையும், சிவசேவை யும் புரியவும் எனது குடும்பப்பிரதிநிதிகள் மூவரையும் வயாவிளான் பலாலி சைவபரிபாலன சபைப் பிரதிநிதிகளாக மூவரையும் வயா விளான் மானம்பராய்ப்பிள்ளையார் ஆலயப் பரிபாலனசபைப் பிரதி நிதி ஒருவரையும் கொண்டு வயாவிளான் கூத்தபிரான் அறங் காவல் மன்றம் என்னும் பெயருடன் ஒரு புதிய தருமகர்த்தாக்கள்

சபையை நிறுவி, மேற் சொல்லிய ஆதனங்களை எனது சீவிய வுரித்துக்கு அமைவாகக் குறித்த கூத்த பிரான் அறங்காவல் மன்றத் துக்குப் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையத் தருமசாதனம் செய்யத் தீர்மானித்துள்ளேனுதலாலும்,

மேற்காட்டிய வண்ணம் குறித்த கூத்தபிரான் அறங் காவல் மன்றத்தினராய்க் குறித்த ஏழு பிரதிநிதிகளும் சேர்ந்து குறித்த நிபந்தனைகளுக்கு அமைந்து குறித்த ஆதனங்களைக் குறித்த மன்றத் துக்காக அங்கீகரித்துக் குறித்த அறத்தைப் புரிந்து பரிபாலிக்கப் பலாலி தெற்கு, தம்பர் சின்னத்தம்பி மனைவி இராசரத்தினமும், வண்ணார்பண்ணை தென்மேற்கு,வேலுப்பிள்ளை சபாரத்தினம்மனைவி யோகமணியும், வயாவிளான் தெற்கு கந்தையா தருமதுரை மனைவி புஷ்பநாயகியும், வயாவிளான் வல்லிபுரம் இராசநாயகமும், பலாலி தெற்கு செல்லப்பா சின்னத்துரையும், வயாவிளான் வேலுப்பிள்ளை சின்னையாவும், பலாலிதெற்கு நடராசா நாகராசாவும் இசைந்துள் ளார்களாதலாலும்,

இதனுற் சகலரும் அறிக வயாவிளான் வல்லிபுரம் இராசநாய கம் ஆகிய நான் மேற் கூறிய நோக்கங்களுக்காகப் பின்வரும் நிபந் தனைகளுக்கமைய இதன்கீழ் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங் களைக் குறித்த கூத்தபிரான் அறங்காவல் மன்றத்தினராகிய குறித்த தம்பர் சின்னத்தம்பி மனைவி இராசரத்தினத்துக்கும், வேலுப்பிள்ளை சபாரத்தினம் மனைவி யோகமணிக்கும்,கந்தையா தருமதுரை மனைவி புஷ்பநாயகிக்கும், வல்லிபுரம் இராசநாயகத்துக்கும், செல்லப்பா சின்னத்துரைக்கும், வேலுப்பிள்ளை சின்னையாவுக்கும், நடராசா நாகராசாவுக்கும் அவர்களின் பதவிகளுக்கு இனிமேல் வருபவர்கட் கும் எனது சீவியவுரித்துக்கு அமைவாய் இதனுற் தரும சாதனமாக நன்கொடையளித்தும், சாட்டுதல் செய்தும், கையளித்தும், ஒப் படைத்தும் விடுகின்றேன்.

ஆகவே, குறித்த அறங்காவல் மன்றத்தினரும் அவர்களின் பதவி கட்கு இனிமேல் வருபவர்களும் குறித்த ஆதனங்களை எனது சீவிய வுரித்துக்கு அமைவாகப் பின்வரும் நிபந்தனைகளுக்கிணங்க என் றென்றும் குறித்த அறங்காவல் மன்றத்துக்குரிய ஆதனங்களாக ஆண்டு அனுபவித்துக்கொள்க.

மேற்கூறிய ஆதனங்களுள் முதலாம் ஆதனம் 1981ஆம் மாசிமீ 14உ தொடக்கம் இலங்கை அஞ்சல் அதிபதிக்கு மாதமொன்றுக்கு ஐஞ்ஞூறு ரூபா வீதம் வாடகை பேசிக் குத்தகைக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றதைத்தவிர வேறு யாதேனும் பாரம் அல்லது பராதீனத்துக்குள் அமைக்கப்படவில்லையென்றும்,இரண்டாம், மூன் ரும் ஆதனங்கள் எத்தகைய பாரம் அல்லது பராதீனத்துக்கும் அமையாச் சுயாதீனமானவையென்றும், குறித்த மூன்று ஆதனங்க ளையும் மேற்சொல்லியவாறு தரும சாதனம் செய்ய எனக்குச் சம் பூரண உரித்தும் தத்துவமும் உண்டென்றும், குறித்த ஆதனங்களை யிட்டு யாதேனும் சோலி, குழப்பம், பிசகு, தடை ஏற்படின் நானும் என் உரிமைக்காரரும் உத்தரவாதிகளாக இருந்து,அச்சோலி,

குழப்பம், பிசகு, தடையை முற்றுறநீக்கி அவ்வாதனங்களை நன்கு தற்காத்துக் கொடுப்போமென்றும் இதனுல் உடன்பட்டுக்கொள்ளு கின்றேன்.

இத்தனுற் சகலரும் அறிக குறித்த தம்பர் சின்னத்தம்பி மனைவி இராசரத்தினமும், வேலுப்பிள்ளை சபாரத்தினம் மனைவி யோக மணியும், கந்தையா தருமதுரை மனைவி புஷ்பநாயகியும், வல்லி புரம் இராசநாயகமும், செல்லப்பா சின்னத்துரையும், வேலுப் பிள்ளை சின்னையாவும், நடராசா நாகராசாவும் ஆகிய நாங்கள் மேற்காணும் தரும சாதனத்தைப் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற் சொல்லிய கூத்தபிரான் அறங்காவல் மன்றத் துக்காக இதனுல் அங்கீகரிக்கின்ரும்.

## குறித்த நிபந்தனைகள்

*(1)* குறித்த ஆதனங்களினின்றும் கிடைக்கும் வருமானத்தில்,

*(அ)* அரைவாசியை எனது பெற்ருர் ஸ்ரீமான் நீலப்பிள்ளை வல்லிபுரம் அவர்களினதும் பாரியார் நாகமுத்துவினதும் வழித் தோன்றல்களுள் (Descendants) இயற்கைவிவேகமும், கல்விப் பிரீதியும், பொதுநல ஆர்வமும் வாய்ந்த போதிய பொருளாதாரம் இல்லாத பிள்ளைகளுக்கு உயர்தரக் கல்வி பயில உதவிபுரியவும்,

*(ஆ)* பன்னிரண்டிலொருபங்கை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூல்நிலையத்தை அபிவிருத்தி செய்யவும்,

*(இ)* இன்னொரு பன்னிரண்டிலொருபங்கை வயாவிளான் மத்திய கல்லூரி நூல்நிலையத்தை அபிவிருத்தி செய்யவும்.

*(ஈ)* மற்றொரு பன்னிரண்டிலொரு பங்கை வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையார் கோயிலில் சித்தாந்தக் கருத்துக்களைப் பொதுமக்களுக்கு நன்கு விளக்கவும்,

*(உ)* இன்னொரு பன்னிரண்டிலொருபங்கை வண்ணார்பண்ணை யில், யாழ்ப்பாணச் சைவபரிபாலனசபை ஆதரவில், சிவஞான போதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் என்னும் விடயங்களையிட்டு விசேஷபிரசங்கங்கள் நிகழ்த்துவிக்கவும்,

*(ஊ)* மீதி ஆறிலொருபங்கை பலாலியிறையிலுள்ளனவும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் P *1573*, P *4084* என்னும் நிந்தம்பிரிவிடுதல் வழக்குகளில் சொல்லப்படுவனவும், முறையே ''தோரையன்காடு'', ''வண்ணுன்காடு'' என்னும் பெயருடையனவு மான காணிகளை விற்று, நிரந்தர வைப்புப்பணமாக இலங்கை வங் கியிற் சேமித்து, அப்பணத்தினின்றும் வருடாந்த வட்டியாகக் கிடைக்கும் பணத்துடனும், பலாலியிறையிலுள்ளனவும் இதற்கு முன்னர் வயாவிளான் பலாலி சைவபரிபாலன சபைக்குத் தரும சாதனம் செய்யப்பட்டனவுமான நாணம்பி சீமாவும் கொற்றப்புல

மும், சதக்கிரி தெணிக்கடவையும் முள்ளச்சையும் என்னும் நான்கு காணிகளினின்றும், ஸ்ரீ தம்பையா தருமப்பணியின் அறக்கட்டளேயில் சொல்லப்படும் ''தம்பாளே'' எனும் காணியினின்றும் கிடைக்கும் தோட்டக்குத்தகைப் பணங்களுடனும் ஒருங்குசேர்த்துக் கூட்டித் தென்பலவைக் கூத்த பிரானுக்குத் தினசரிப்பூசை செய்யவும், பூரணே தினங்களிலும் தைப்பூசம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், ஆனிஉத்தரம், மார்கழித் திருவாதிரை என்னும் திருநாட்களிலும், சமயகுரவர் நால்வரினதும், சந்தானகுரவர் நால்வரினதும் பெரு நாட்களிலும், குறித்த தென்பலவைக் கூத்தபிரான் கோவிலில் நமது பாரம்பரிய சோடோபசாரக் கடவுள் வழிபாட்டுடன், பிரசங்கம், கீர்த்தனே, ஜெபம் என்னும் மூன்றினேயும் கொண்ட பிரமசமாஜ இறைவணக்கத்தை நடாத்தவும், நான் தேகவியோகம் எய்தும் திதியில் ஆண்டுதோறும் எனது ஆன்ம ஈடேற்றங் கருதிக் கடவுள் வழிபாட்டுடன் சிறு அன்னதானம் மேற்படி கோவிலில் செய்யவும் குறித்த அறங்காவல் மன்றம் பயன்படுத்த வேண்டும்,

(2) குறித்த அறங்காவலர் எழுவரும் ஐந்து வருடத்திற் கொருமுறை குறித்த சைவ பரிபாலனசபை இதற்கெனக் கூட்டும் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட வேண்டும். ஸ்ரீமான் வல்லிபுரம் அவர்களின் குடும்பப் பிரதிநிதிகளேக் தெரிவு செய்யும் விடயத்தில் வாக்களிக்கும் உரிமை அவர்களின் வழித்தோன்றல்களுக்கே உண்டு.

(3) குறித்த அறங்காவல்மன்றம் மூன்று மாதத்துக்கொரு முறையாயினும் கூடவேண்டும்.

(4) குறித்த மன்றத்துக்குக் குறித்த சைவபரிபாலனசபைத் தலேவர், செயலாளர், பொருளாளர் முறையே தலேவராகவும், செயலாளராகவும், பொருளாளராகவும் கடமையாற்றுவர்.

(5) குறித்த சைவபரிபாலனசபைக் காரியாலயமே குறித்த அறங்காவல் மன்றத்துக்கும் காரியாலயமாகும்.

## குறித்த ஆதன அட்டவணே

(1) வயாவிளானிறை ''நாணம்பி சீமாவும் கொற்றப்புல மும்'' நிலப்பரப்பு மூன்றும் குழி பன்னிரண்டும், மேல்மாடியுள்ள ஒரு கல்வீடும், மலகூடமொன்றும், மாமரங்களும், வேப்பமரமும், வடக்கெல்லேயில் உள்ள கிணற்றுப்பங்கும், நீரிறை இயந்திர உரித் தும், தண்ணீர்த்தாங்கி உரித்தும், மற்றும் சேர்மானங்களும்.

(இக்காணியே அஞ்சற்திணேக்களத்தினருக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.)

(2) ஷை இறை ''நாணம்பிசீமாவும் கொற்றப்புலமும்'' நிலப் பரப்பு ஒன்று குழி ஆறேகாலும், மலகூடமொன்றும், மாமரங்கள்

ஐந்தும், மேலே சொல்லப்பட்டிருக்கும் கிணறு, தண்ணீர்த்தாங்கி, நீரிறை யந்திரம் என்பவற்றில் இதற்குரிய உரித்தும்.

(இது வயாவிளான் அஞ்சல் நிலையத்துக்குத் தெற்கேயும் வயாவிளான்—பலாலி சைவபரிபாலனசபைக்கு இதற்கு முன்னர் தருமசாதனம் செய்யப்பட்ட ''கூத்தனகம்'' இருக்கும் நிலப் பரப்பு ஒன்று குழி ஒன்று விசாலமும் இதே பெயரும் உள்ள காணிக்கு வடக்கேயும், கிழக்கேயும் உள்ளது.)

(3) ஷெ இறை ''நாணம்பிசீமாவும் கொற்றப்புலமும்''. விசாலம் குழி மூன்றேகாலும் தறிபட இருக்கும் தென்னையொன்றும், தெற்கெல்லையிலுள்ள கிணற்றுப்பங்கும்.

(இது மேலே சொல்லப்பட்டிருக்கும் கிணற்றில் சரியாக அரைவாசியும் தூர்வையும் கொண்டதாகும்.)

குறிப்பு:— இடமின்மையால், உறுதி கொடுக்கற்காரன், வாங்கற்காரர், சாட்சிக்காரர், உறுதிவரைஞர் என்போரின் கையெழுத்துக்களும், நிறைவேற்றுவாசகமும், அத்தாட்சி வாசகமும் கைவிடப்படுகின்றன.

## மற்றும் தருமசாதன விபரங்கள்

யாக்கை நிலையாமையை உணராது, தன்னலத்தால் உந்தப் பெற்றுச் சிவத்துரோகத்துக்காளாகும் சில அதர்மிகள் வீண் தர்க்கம், தகராறு விளைக்கும் ஏலத்துறைக்கும் பலாலி விமான நிலையத் தம்பாலைத் தெருவுக்கும் இடையே, பலாலி தெற்கில் உள்ளதும், நிலப்பரப்பு ஐம்பது விசாலமுடையதும், 'தோரையன் காடு' என்னும் பெயருடையதுமான காணி சம்பந்தமாகவும், ஷெ பலாலியிறையில் ஷெ காணிக்கும் ஷெ தெருவுக்கும் மேற்கேயுள்ளதும், 'வடலியடிக்காடு' என்னும் பெயருடையதும், நிலப் பரப்பு இருபத்தைந்து விசாலமுடையதுமான காணிசம்பந்தமாகவும், 1981ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2ஆந் திகதி, 32220 என்னும் இலக்கத்தில் உறுதி வரைஞர் திரு. பூ. இளையதம்பி அவர்கள் முன்னிலையில் நிறைவேறிய தருமசாதனத்தையும், ஷெ இறையிலுள்ளதும், ஷெ தெரு இரண்டாகப் பிரிப்பதும், நிலப் பரப்பு நாற்பத்தைந்து விசாலமுள்ளதும், 'வண்ணான்காடு' என்னும் நாமமுடையதுமான காணிசம்பந்தமாக, உறுதிவரைஞர் க. வ. பாலசிங்கம் அவர்கள் முன்னிலையில் 1977ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 22ஆம் திகதி 10370ஆம் இலக்கத்தில் நிறைவேறிய தருமசாதனத்தையும் சைவாபிமானிகளும் மற்றும் பொதுநல நேயர்களும் பார்ப்பார்களாக.

---

## புதிய ஒரு குறள் வெண்பா

உலகினிற் தாபன தர்மம்மேல்; அஃது
பலர்க்கும் பயனளிக்கும் காண்.

## தமிழ் நெடுங்கணக்கில் சில திருத்தங்களும் நீக்கங்களும்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே." — பவணந்தி முனிவர்

இந்நாட்களில் தமிழ்நெடுங்கணக்கில் சில மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் என்னும் விடயம் பற்றிப் பல தமிழன்பர்கள் பேசியும், எழுதியும் வருகின்றனர். ஈற்றில் இவற்றை யெல்லாம் உயர்மட்டத்தில் இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள பல்கலைக் கழகத் தமிழ்மொழிப் பேராசிரியர்களும், மற்றும் தமிழ் புரக்கும் சங்கங்களின் பிரதிநிதிகளும் ஒருங்கு கூடிப் பரிசீலனைசெய்து தீர்க்கமான முடிவுக்கு வருதல் அத்தியாவசியம் என்பதை எடுத்துக் காட்டி, தமியேனும் எனது கருத்துக்களைத் தமிழ் நேயர்கள் அனைவரினதும் திவ்விய கரிசனைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

எழுத்து என்பது சொல்லுக்கு முதற்காரணமாகிய ஒலியே என்பர் இலக்கண நூலோர். ஆதியில் அந்த ஒலியைக் குறித்த "எழுத்து" என்னும் பதம் பின்னர் ஆகுபெயராகி அவ்வொலியைக் குறிக்கும் வடிவத்தையும் (Letter) குறிக்கலாயிற்று. இவ்வெழுத்து வடிவங்கள் தமிழ் மொழியில் 247ஆகும். இவற்றை யெல்லாம் கற்கவேண்டிய எமது சிறுவர், சிறுமிகட்கும், மற்றும் பிறமொழியாளருக்கும் ஏகரகம் அல்லது ஒரேதன்மை (Uniformity) இல்லாது மிக்க இடர் விளைக்கும் கீழ்க்காணும் எழுத்துக்களைப் பின்வரும்வண்ணம் திருத்தி அமைத்தல் பெரிதும் விரும்பற்பாலதாகும்.

1. ஆகாரம் சேர்ந்த உயிர்மெய் எழுத்துக்களை யெல்லாம் அரவு சேர்த்து ணா, றா, னா என்னும் முறையில் எழுதுதல்.
2. ஒகாரம் சேர்ந்த உயிர்மெய் எழுத்துக்கள் அனைத்தையும் ஒற்றைச் சுழியோடு அரவும் சேர்த்து ணொ, றொ, னொ என்னும் முறையில் எழுதுதல்.
3. ஓகாரம் சேர்ந்த உயிர்மெய் எழுத்துக்கள் அனைத்தையும் இரட்டைச் சுழியோடு அரவும் சேர்த்து ணோ, றோ, னோ என்னும் முறையில் எழுதுதல்.
4. ஐகார உயிர்மெய்யெழுத்துக்களை யெல்லாம் இரட்டைக் கொம்பு அல்லது சங்கிலிக்கொம்பு சேர்த்து ணை, லை, ளை, னை என்னும் முறையில் எழுதுதல்.

**குறிப்பு:** மேற்கூறிய நான்கு திருத்தங்களையும் திராவிடக்கழக ஸ்தாபகர் ஆகிய இராமசாமிப் பெரியாரும், "சுதேச மித்திரன்" ஆசிரியர், கனம் ஸ்ரீநிவாசன் போன்றோரும் ஆதரித்துத் தங்கள் பத்திரிகைகளிலும் மற்றும் வெளியீடுகளிலும்

அனுசரித்துள்ளனர். முன்னே வீரமாமுனிவர் உண்டுபண்ணிய "ே" என்னும் இரட்டைச் சுழியையும் "ை" என்னும் இரட்டைக்கொம்பு அல்லது சங்கிலிக்கொம்பையும் உவந் தேற்று நன்மையடைந்த தமிழுலகம் மேற்குறித்த திருத்தங் களையும் விரும்பி வரவேற்று நன்மையடையும் என்பது திண்ணமாகும்.

இப்போது சிக்கனம் கருதி தொழிற்சாலை ஒன்றில் அனுவசிய தொழிலாளர்களையே வேலைநீக்கம் செய்ய வேண்டுமென்பதையும், அங்ஙனமன்றி முக்கிய வேலையாட்கள் நீக்கப்படின் அவ்வேலைத் தலம் பெரிதும் பாதிக்கப்படும் என்பதையும் கருத்திலிருத்தி, எழுத்துச் சுருக்கம் கருதி என்ன என்ன எழுத்துக்கள் நீக்கப் படலாம் என்பதை ஆராயலாம்.

1. நம் தமிழ் மொழியில் 12 உயிர் எழுத்துக்கள் செய்யும் வேலையை ஐரோப்பிய மொழிகளிலுள்ள 5 உயிரெழுத்துக்கள் மட் டும் செய்வதனுல் தமிழிற்போல அம்மொழிகளில் எந்தச் சொல்லை யும் சரியாக உச்சரிக்கவோ, எழுதவோ இயல்வதில்லை. ஆகவே, ஔகாரம் தவிர்ந்த உயிரெழுத்துக்கள் எதனையும் நீக்க அம்மொழி களிலுள்ள அல்லல்களை உண்மையில் உணர்ந்தோர் எவரும் எட்டுணையும் இசையமாட்டார்கள். "ஔ" என்பது ஒரு தனி எழுத் தாகாமல் "OU" என்னும் ஆங்கில உயிரிணை(Dipthong)க்குச் சமமான உயிரிணையாயிருப்பதாலும் வகரத்திற்கு முன்னே வரும் ஔகார வேலையை "அவ்" என்னும் எழுத்துக்களும், மற்றும் உயிர்மெய் எழுத்துக்கு முன்னே வரும் ஔகார வேலையை "அவு" என்னு ம்எழுத்துக்களும் (எழுத்துப் போலி என்னும் முறையில்) செய்யக்கூடுமாதலாலும், ஔகாரத்துடன் ஆரம்பிக்கும் தமிழ்ச் சொற்கள் அறுபதுக்கு மேற்படாவாதலாலும், அந்த ஔகாரம் பிற மொழிகளில் இல்லையாதலாலும் அந்த எழுத்து நீக்கப்படலாம் என்பது அடியேனின் கருத்தாகும்.

201259

2. அங்ஙனம் "ஐ" என்னும் எழுத்தையும் கைவிடலாம் என எமது மதிப்புக்குரிய பிரமஸ்ரீ கி. இலட்சுமண ஐயர், சாலை இளந்திரையன் போன்றோர் கூறுவர். ஐகாரம் தமிழ் மொழியிற் பிர தான எழுத்தாய் அமைந்துள்ளதாதலாலும், அவ்வெழுத்து சிங்க ளம் தவிர்ந்த மற்றைய முக்கிய மொழிகளிலெல்லாம் திகழ்வதினு லும், உச்சரிப்பைப் பொறுத்தளவில் "ஐ" என்னும் நெட்டெழுத் தின் நீட்டோசைக்கு "அய்" என்னும் குறில் மெய்யின் குற்றோசை போலியாகுமேயன்றி, உண்மையில் சமமாகாதாதலாலும் "ஐ" என்னும் ஒரெழுத்துக்குப் பதிலாக "அய்" என்னும் ஈரெழுத்துக்கள் வரைவதற்குக் கூடிய இடமும் சிரமமும் தேவைப்படுமாதலாலும், ஐகாரம் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து ஒன்றினை எடுத்து, அது

STACKS

இன்ன மெய்யுடன் இன்ன உயிர் சேர்வதால் உண்டாகிறதெனப் பிரித்துக்காட்ட உயிரெழுத்து ஒன்று அவசியம் தேவைப்படுகின்ற தாதலாலும், ஐகாரம் சேர்ந்த உயிர்மெய்யெழுத்துக்களையெல்லாம் ''ணை'' போன்ற புதியமுறையில் எழுதக்கூடியதாயிருப்பதாலும், அவற்றை ''வய்'' என்னும் ரீதியில் எழுதல் நன்றன்றாதலாலும், கை, தை, நை, பை, மை, வை என்னும் எழுத்துக்களையும் அவ் வெழுத்துக்களை மட்டும் கொண்டியங்கும் ஒரெழுத்துச் சொற்களை யும் கைவிடுதல் கஷ்டத்தை விளைவிக்குமாதலாலும், ஐகாரம் என்னும் உயிரெழுத்துடன் தொடங்கும் தமிழ்ச்சொற்கள் ஏறக் குறைய முன்னூறு ஆகுமாதலாலும், ஒரு வாக்கியத்தில் செயப் படு பொருளைக் கண்டுபிடித்துப் பொருள் கொள்ள ஐகாரம் இரண் டாம் வேற்றுமை உருபாகிப் பெரிதும் உதவி புரிகின்றதாத லாலும், அதுவுமன்றி ஐகாரம் தொழிற்பெயர் விகுதியாகவும், பண்புப் பெயர் விகுதியாகவும், முன்னிலை ஒருமை விகுதியாகவும், கிளைமுதற் பொருள் விகுதியாகவும் பயன்படுகின்றதாதலாலும், அது மட்டுமின்றி ''ஐ'' என்னும் ஒரெழுத்தாலாய அரும் சொல் கடவுள். அரசன், குரு, தந்தை, தமையன், எசமான் முதலிய பெரு மைக் குரியவர்களைக் குறிக்குமாதலாலும், எனவே ஐகார நீங்கின் தமிழுக்குரிய பெருமை (பெரும் ஐ) இல்லாமல் போய் விடுமாதலா லும், அந்த ஐகாரம் நீக்கம் எங்கள் சாலை இளந்திரையனின் நற்பெய ருக்கு மிக்க இழுக்கை விளைவிப்பதுடன், ஐந்தெழுத்தோடு, ஐம்முகன், ஐங்கரன் என்போரையும் பாதிக்குமாகையாலும், அந்த ஐகார அக்ஷரத்தின் அருமை பெருமை அறிந்த நாம் அதனைச் சிறிதும் கைவிட ஒருபோதும் ஒருப்படோம் என்க.

3. அடுத்தபடியாக, ஆய்த எழுத்தை ஆராயுங்கால் அதனை நீக்கலாம் என்பது அடியேனின் அபிப்பிராயமாகும், ஏனெனில், அது தனிநிலையாகி வழக்காற்றினின்றும் அருகி வருகின்றது, உதாரணமாக இரும்புருக்கினை எஃகு எனச் சொல்லுவோரினதும், ''அது ஆடு'' என்றும் ''கல் தீது'' என்றும் கூறுது. ''அஃதுஆடு'' என்றும் ''கஃறீது'' எனவும், ''முள் தீது'' என்று கூறுது ''முஃடீது'' என்றும் சொல்லும் இலக்கண நுணுக்கர்களின் எண்ணிக்கை மிகவும், மிகவும் குறைந்துள்ளது.

4. ஙகர வரியை ஆராயும்போது ''ஙப்போல் வளை'' என்னும் ஔவை முதுமொழி எடுத்துக்காட்டுவது போல், ''ங'' தவிர மற்றும் வருக்க எழுத்துக்கள் சொல்லுக்குக் காரணமாகாவாதலா லும், ''ங'' தானும் இடம் அல்லது வண்ணம் எனப் பொருள் படும் ஙனம் என்னும் ஒரே ஒரு சொல்லில் மட்டும் பயிலுகின்ற தாதலாலும், அச் சொல்லுக்குப் பதிலாக இடம் அல்லது வண் ணம் என்னும் சொல்லினை உபயோகிக்கலாம் ஆதலாலும், ''ங'' என்னும் ஙகர மெய் பல அருந்தமிழ்ச் சொற்களிற் பயின்று, வருவதினாலும், அந்த ஙகரமெய்யை மாத்திரம் வைத்துக்கொண்டு ஙகர உயிர்மெய்யெழுத்துக்கள் அனைத்தையும் கைவிடலாம் என் பது எமது கருத்தாகும்.

5. ''ழ'', ''ள'' என்னும் ஈரெழுத்துக்களும் ஓரளவு ஒத்த ஓசை உடையனவாதலாலும், வாழைப்பழத்தில் யாழ்ப்பாணத் தமிழரைக் கண்டுபிடிக்கலாம் என முன்னே எள்ளி நகையாடிய தென்னிந்தியத் தமிழர் தாமும் பெரும்பாலும் இப்போது ழகரத்தைச் சரிவர உச்சரிக்காமல் யாழ்ப்பாணத்தாரைப்போல் ளகரம்போல் உச்சரிக்கின்றனராதலாலும், பேச்சு வழக்கினின்றும் அழிந்தொழியும் ழகரம் எழுத்து வழக்கினின்றும் தன்னுரை அழிந்தொழியுமாதலாலும், ழகரம் பிறமொழி எதுவிலும் இல்லையாதலாலும், ழகரத்தைக் கைவிடலாம் என மேற்படி ஐயருடன் யாமும் கருத்தொருமித்துக் கூறுகின்றேம். இக் கருத்தை எதிர்ப்போர் இனிய ஓசை யுடையதாய்த் தமிழுக்குத் தனிச் சிறப்பு விளைக்கும் ழகரத்தைக் கைவிடலாகாதென்றும் தழை, தளை போன்ற பெயர்ச்சொற்களுக்கு இடையேயும், அழி, அளி போன்ற வினைச் சொற்களுக்கிடையேயுமுள்ள ழகர, ளகர பேதம் இல்லாதொழியின் பொருள் மயக்கம் உண்டாகுமென்றும் கூறுவர். இதற்குப் பதிலுத்தரமாக உலகினிற் சிறந்த ஓசையுடைய வடமொழி பெரும்பாலும் உச்சரிப்பு வில்லங்கத்தால் இறந்தொழிந்ததென்றும், அவ்வடமொழி எழுத்துக்களைக் காட்டினும் மிக்க கஷ்டத்துடன் உச்சரிக்க வேண்டிய ழகரத்துக்கும் அதேகதி ஏற்படும் என்றும் கூறுவாம். இரண்டாவதாக, ஒரு பொருள் குறிக்கும் பல சொல் மலியும் தமிழ் மொழியில் ழகரம் பயிலும் பதங்களுக்குப் பதிலாக வேறு சொற்களை உபயோகிக்கலாம் என்னும் உண்மையை எடுத்துக்காட்டுவாம்.

இங்ஙனமன்றி ''ந்'' (nth) என்னும் மெய்யெழுத்தின் ஓசைக்கும் ''ன்'' (n) என்னும் மெல்லெழுத்தின் ஓசைக்கும் வேறுபாடு உண்டெனினும், நகர வரியிலுள்ள உயிர்மெய் யெழுத்துக்களும் னகர வரியிலுள்ள உயிர்மெய் யெழுத்துக்களும் ஒரே ஓசை யுடையனவாதலாலும், ஓசை வேறுபாடுள்ள னகர மெய் பல அருந்தமிழ்ச் சொற்களில் பயிலுகின்றதாதலாலும், அந்த னகர மெய் (n) பிற மொழிகளிலும் உள்ளதாதலாலும், நகர மெய்யோடு அந்த னகர மெய்யையும் வைத்துக்கொண்டு, னகர வருக்கங்களை விடுத்து அவற்றிற்குப் பதிலாக நகர வருக்கங்களை உபயோகித்துக் கொள்ளலாமென மேற்கூறிய அன்பர்களுடன் யாமும் ஏகோபித்துக் கூறுகின்றேம். இது ஆதியில் புது மோடியாக வெறுப்பை விளைக்கினும், காலகெதியில் சரியாகி விடும் என்பது எம்போன்றோரின் கருத்தாகும்.

**நன்கு கவனிக்குக:-** செயற்பாலன என மேலே சொல்லப்பட்டிருக்கும் திருத்தங்களும் நீக்கங்களும் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவற்றிற் கெல்லாம் ஏகரகம் அளித்து, அரிச்சுவடி கற்போர்க்கு மாத்திரமன்றி அச்சிடுவோர்க்கும், தட்டெழுத்திடுவோர்க்கும் சிரமத்தைக் குறைக்கின்றமை தமிழன்பர்கள் யாவரும் நன்கு கவனிக்கற்பாலதாகும்.

STACKS

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

University of Jaffna
201259
Library

சுன்னாகம் [illegible] திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்று வயாவிளான் - பலாலி கூத்தபிரான் அறங்காவல் மன்றச் செயலாளர் திரு. செ. சின்னத்துரை அவர்களால் வெளியிடப்பெற்றது.—4599/1-82.